
—15-8


நீங்கள் தொடும் ஒவ்வொரு
கதவின் கைப்பிடியிலுமுள்ள
அழுக்கிலும் கிருமிகளாலும்
அபாயம் ஏற்படும்!
LIFEBUOY
SOAP
லைப்பாய் சோப்பினுல் அடிக்கடி
சுத்தம் செய்துகொள்ளுங்கள்!
லைப்பாய் சோப்
அழுக்கிலிருக்கும் கிருமிகளிலிருந்து
உங்களைக் காப்பாற்றுகிறது


Body Beautiful
நமது தேகம் நுணுக்கமானது ஓய்ச்
சல் அடிக்கடி அடைகிறது. உண்ணும்
உணவால் ஓய்ச்சல் ஒழிகிறது. பித்த
நீர் சுரபியும் சரிவர உற்பத்தி செய்யப்
படாவிடின் போதுமான புஷ்டி அளிக்
கும் ஆகாரம்கூட ஓய்ச்சலை தவிர்க்க
முடியாது. ஈரல் சரிவர வேலை செய்
யாத எல்லா சமயங்களிலும் வைத்தி
யர்களால் சிபார்சு
செய்யப் படுவது
ஸ்டேர்ன்ஸ்
பை - கோலேட்ஸ்
மருந்தே.
BI-COLATES
STEARNS


மாதர்தம் மகத்துவத்தை
எளிதாக எண்ணாதே!
கவர்ச்சி மிக்க இக்
காதல் சித்திரம்
உங்கள் உள்ளத்தைக்
கொள்ளைக் கொள்ள
வெகு சீக்கிரத்தில்
வெள்ளித் திரைக்கு
வருகிறது
மோகினி
ஜூபிடர்
தயாரிப்பு
ஜூபிடர் பிக்சர்ஸ் சர்க்யூட்
மதராஸ் &

கல்கி

சுதந்திர மலர் • பொருளடக்கம்

மலர் 8 | இதழ் 3 — ஆகஸ்டு 15 — சர்வதாரி ஆடி 31


EWI LTD.
SYMBOL OF QUALITY
PRESENT TO THE NATION
CALCUTTA
Phoenix
Phoenix Fans
A.C. D.C.
RM. S. & CO., LTD., MADRAS
Sole Distributors for SOUTHERN MADRAS
including STATES and MADRAS CITY
RM. S. & Co., Ltd.
16, Broadway :: Madras
['Phone: 4060]
['Grams: "AREMESCO"]



மலர் 8 | தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 3

என்ன செய்தி?

இந்தச் சுப தினத்தில்

நாற்பது கோடி பாரத மக்கள் சுதந்திரம் பெற்ற முதலாவது வருஷ பூர்த்தி வைபவத்தைக் கொண்டாடும் இந்தச் சுப தினத்தில், கடல் கடந்து வெளிநாடுகளில் வாழும் நாற்பது லட்சம் இந்திய சகோதர சகோதரிகளை நம்மில் எவரும் மறக்க முடியாது. சுப காரியங்கள் நடைபெறும் போது தொலைவிலுள்ள நெருங்கிய பந்துக்களை நாமெல்லோரும் அடிக்கடி நினைப்பதுபோல, ஆயிரம், இரண்டாயிரம், ஐயாயிரம், பத்தாயிரம் மைல்களுக்கு அப்பாலுள்ள இந்தியர்களை இந்தச் சுபதினத்தில் நினைக்கிறோம். அவர்கள் வாழும் நாடுகளில் அவர்களுடைய துன்பங்கள் தீர்ந்து அவர்கள் இன்பம் பெற அதி சீக்கிரத்தில் வழி ஏற்படும் என்று நம்புகிறோம், வழி ஏற்பட வேண்டுமென்று பிரார்த்திக்கிறோம்.

இலங்கைத் தீவிலே

சில மாதங்களுக்கு முன் இந்தியாவின் பிரதம மந்திரி பண்டித ஜவாஹர்லால் நேருவுக்கும் இலங்கைப் பிரதம மந்திரி ஸ்ரீ சேனா நாயகாவுக்கும் புது டில்லியில் பேச்சு வார்த்தைகள் நடந்தன. மேற்படி பேச்சு வார்த்தைகளின் பலனாக இந்தியா — இலங்கைப் பிரச்னைகள் அநேகமாகத் தீர்ந்து விட்டன என்று ஸ்ரீ சேனா நாயகா தமது திருப்தியைத் தெரிவித்தார். 'இதிலிருந்து, இலங்கையிலுள்ள இந்தியர்களுக்கு இனி பெரும் சோதனைகள் எதுவும் ஏற்படாது என்றே எல்லோரும் கருதினர். ஆனால், சமீபத்தில் கொண்டு வரப்பட்டுள்ள இலங்கைப் பிரஜா உரிமை மசோதாவின் விளைவாக, இலங்கையிலே வாழும் எட்டு லட்சம் இந்தியர்களுக்கு பிரஜா உரிமை கிடைப்பது குதிரைக் கொம்பாகி விடும்போல் தோன்றுகிறது!

பர்மா, மலாய் நாடுகளிலே

கம்யூனிஸ்டு கலகங்கள் காரணமாக பர்மா சர்க்காரும் மலாய் சர்க்காரும் திணறி வருகிறார்கள். அக் கலகங்களை அடியோடு அடக்கி அந்த நாடுகளில் அமைதியை ஏற்படுத்த மேற்படி சர்க்கார்களுக்குச் சக்தியோ திறமையோ இருக்கிறதா என்பதும் சந்தேகாஸ்பதமான விஷயமாக இருந்து வருகிறது. எனினும் இந்தியர்களுக்கு விரோதமான சட்டங்கள் மாத்திரம் அந்த நாடுகளில் வெகு ஜோராக வேலை செய்து வருகின்றன! பர்மாவிலும் மலாயாவிலும் இந்தியர்களின் சொத்துக்களுக்கு ஏற்பட்டிருக்கும் ஆபத்து ஒருபுறமிருக்க, தற்போது மலாயாவில் அமுலுக்கு வந்துள்ள அவசரச் சட்டங்கள் பொது ஜனங்களுக்கும் குறிப்பாக இந்தியத் தொழிலாளர்

களுக்கும் தொல்லையைக் கொடுக்க ஆரம்பித்திருக்கின்றன. அவர்களின் நிலைமை இரு புறத்திலும் இடி என்ற கதையாகி இருக்கிறது. கம்யூனிஸ்டு கலகங்களில் ஏற்பட்டுள்ள அமைதியின்மை காரணமாக இந்திய வியாபாரிகளுக்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. அந்தக் கலகங்களை அடக்குவதற்காக மலாயா சர்க்கார் கைக்கொண்டுள்ள அவசரச் சட்டங்களும் இந்தியர்களைப் பாதிக்கின்றன. பொது உடைமைக் கட்சியுடன் சம்பந்தம் எதுவுமின்றி உண்மையிலேயே தொழிலாளர்களுக்காக உழைக்கும் தலைவர்களையும் சங்கங்களையும் மேற்படி அவசரச் சட்டங்களின் மூலம் ஒழித்துவிட சர்க்கார் முற்பட்டிருப்பதாக மலாயா இந்தியர் காங்கிரசைச் சேர்ந்த பொறுப்புள்ள அதிகாரிகளே கூறுகின்றனர்.

தென்னாப்பிரிக்காவிலே

நிலைமுறை தலைமுறையாக நிறவெறியில் இளைத்து வந்துள்ள தென்னாப்பிரிக்காவில் சமீபத்தில் நிறவெறி 'வீரரான' டாக்டர் மாலனின் சர்க்கார் ஏற்பட்டதிலிருந்து நிலைமை படுமோசமாகி விட்டது. தென்னாப்பிரிக்காவில் இந்தியர்களைக் குறிப்பிட்ட பிரதேசங்களில் ஒதுக்கி வைப்பதையே இதற்கு முன் ஸ்மட்ஸ் சர்க்கார் அனுஷ்டிக்க முற்பட்டனர். மாலன் சர்க்காரோ வென்றால், தென்னாப்பிரிக்காவிலுள்ள சகல இந்தியர்களையும் வெளியேற்றிவிடத் திட்டம் போட்டு வருகிறார்களாம்! ஏனெனில், அங்குள்ள இந்தியர்கள் தென்னாப்பிரிக்கா உள்நாட்டு சம்பந்தமான விஷயங்களையொட்டி இந்திய சர்க்காரின் உதவியை நாடுவதாகத் தென்னாப்பிரிக்கா மந்திரிகள் புகார் கூறுகின்றனர். ஒரு புறத்தில் இந்தியர்கள் கோரும் தர்ம நியாயமான உரிமைகளை மறுக்கும் மேற்படி சர்க்கார் வேறு வழியின்றி இந்தியாவின் உதவியை நாடும் இந்தியர்களின் மீது புகார் கூறுவது, ஆட்டுக் குட்டியிடம் ஓநாய் கூறிய வாதத்துக்கு ஒப்பாகவே இருக்கிறது.

இவ்விதமாக வெளிநாடுகளிலுள்ள நாற்பது லட்சம் இந்தியர்கள் பலவிதமான அல்லல்களுக்கு உட்பட்டிருக்கிறார்கள். அவையெல்லாம் நீங்கி வெளிநாட்டு இந்தியர்கள் மேன்மையுறும் காலம் அதிக தூரத்திலில்லையென்று ஆறுதல் கூறுகிறோம்.

வேறு உண்டோ?

நாமக்கல் கவிஞர்

1. சுதந்தரம் தருகிற மகிழ்ச்சியைக் காட்டிலும்
   சுகந்தரும் உணர்ச்சியும் வேறுண்டோ?
   பதம்தரும் பெருமையும் பணம்தரும் போகமும்
   பார்த்தால் அதைவிடக் கீழன்றோ?

   இதம்தரும் அறங்களும் இசையுடன் வாழ்தலும்
   எல்லாம் சுதந்தரம் இருந்தால்தான்
   நிதந்தரும் துயர்களை நிமிர்ந்துநின் றெதிர்த்திட
   நிச்சயம் சுதந்தர நிலைவேண்டும்.


2. சோறும் துணிமணி சுகங்களைக் காட்டிலும்
   சுதந்தர உணர்வே மேலாகும்
   கூறும் நலங்களை விலைகொடுத்தாயினும்
   கொள்ளத் தகுந்தது சுதந்தரமே.

   வீறும், கருணையும், வித்தக ஞானமும்
   விளைவது சுதந்தர விருப்பத்தால்
   தேறும் பொழுதினில் சுதந்தரம், தொழுதகும்
   தெய்வம் என்பது தெளிவாகும்.

3. உத்தமன் காந்தியின் மெய்த்தவ பலத்தால்
   உலகம் இதுவரை கண்டறியா
   சுத்தநல் வழிகளில் சுதந்தரம் அடைந்தோம்
   சொல்லரும் பாக்கியம் நமதாகும்

   கைத்தலம் கிடைத்துள கற்பகச் செடிஇதை
   காயவும் கருகவும் விடமாட்டோம்
   சத்திய சபதம் பக்தியில் காப்போம்
   சர்வே சன்துணை புரிந்திடுவான்!

ஆண்டு பூர்த்தி



இரு பெரியோர்களின் ஆதரவில் இந்திய சுதந்திரக் குழந்தை ஆரோக்கியத்துடன் வளர்ந்து முதல் ஆண்டு பூர்த்தியை ஆனந்தமாகக் கொண்டாடுகிறது.

கண்ணிலும் இனியது!

மனிதன் தன் வாழ்க்கையில் எல்லாவற்றையும் விடப் பெரும் பேறாகக் கருதுவது கண் பார்வை. "எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்" என்பதிலிருந்தே கண்ணின் மதிப்பை நன்கு அறியலாம். அத்தியந்த அன்புக்குரியவர்களைக் "கண்ணே!" என்றும், "கண் மணியே!" என்றும் அருமையாக அழைக்கிறோம். "கண்ணே! கண்ணிற் கருமணியே!" என்று பக்தர்கள் இறைவனையே அழைக்கிறார்கள். "உலகத்தின் செல்வங்கள் எல்லாம் வேண்டுமா? கண் பார்வை வேண்டுமா?" என்று கேட்டால், "கண் பார்வைதான் வேண்டும்!" என்று யாரும் சொல்வார்கள். கண்ணில்லாமல் பிறந்து விட்டாலும் ஒரு மாதிரி; கண் பெற்றவர்கள் அதை இழந்து விடுவதைக் காட்டிலும் கொடிய துன்பம் வேறில்லை. "கண்ணிலான் பெற்றிழந்தான்" என்று கூறிய கவி, அதைவிடப் பெருந் துயரம் இவ்வுலகில் வேறில்லையென்றே குறிப்பிடுகிறார்.

அத்தகைய விலை மதிப்பில்லாத பாக்கியமான கண்ணைக் காட்டிலும் சிறந்த பாக்கியம், இனியதான பேறு, வேறு ஒன்று உண்டா?

"உண்டு" என்று சொல்கிறார் நம் தேசிய மகாகவி பாரதியார்.

"விண்ணி லிரவிதனை விற்றுவிட்டெவரும் போய்
மின்மினி கொள்வாரோ?
கண்ணிலும் இனிய சுதந்திரம் போனபின்
கைகட்டிப் பிழைப்பாரோ?"

என்ற வரிகளில் "சுதந்திரம் கண்ணினும் இனியது" என்று பாரதியார் ஐயமறக் கூறியிருக்கிறார்.

அது மட்டுமா?

உலகத்திலுள்ள மற்ற இன்பங்கள் அனைத்தையும் அநுபவிப்பதற்குச் சாதனமாயிருப்பது சுதந்திரந்தான் என்றும் மகாகவி கூறியிருக்கிறார்.

ஓர் அழகிய சித்திரத்தைப் பார்க்கிறோம். மெய் மறக்கிறோம். அதை அடிக்கடி பார்த்துக் கொண்டிருக்க வேண்டும், பார்த்து அநுபவிக்க வேண்டும் என்று தோன்றுகிறது. சித்திரத்துக்கு என்ன விலை வேண்டுமானாலும் கொடுக்கலாம். சொத்து முழுவதையும் சித்திரத்துக்காகக் கொடுக்கலாம். ஆனால் கண்ணைக் கொடுக்கலாமா? கண்ணைக் கொடுத்து விட்டுச் சித்திரம் வாங்குவதினால் என்ன பயன்? அதைக் காட்டிலும் மடமை வேறு உண்டா?

"கண்ணிரண்டும் விற்றுச் சித்திரம் வாங்கினால்
கை கொட்டிச் சிரியாரோ?"

என்று சொல்லிப் பசு மரத்தில் ஆணி அடித்தாற்போல் சுதந்திரத்தின் பெருமையைத் தெள்ளத் தெளிவாக்குகிறார் பாரதியார்.

இன்னும் சுதந்திர தேவிக்குப் பாரதியார் பாடியுள்ள பிரசித்தி பெற்ற அஞ்சலியில் சுதந்திரப் பேற்றுக்காக என்ன கஷ்டம் வேணுமாயினும் படலாம், என்ன நஷ்டம் நேர்ந்தாலும் அநுபவிக்கலாம் என்று கூறுகிறார்.

"சுதந்திரத்துக்காக வீடு வாசலைத் துறந்து சென்று சிறையில் அவதிப் படலாம். பதவியை விடலாம்; பணத்தைத் துறக்கலாம்; எந்த விதமான பழி சுமந்தாலும் பொறுக்கலாம்; கோடி கோடி இன்னல்கள் வாழ்க்கையைத் துன்பமயமாக்கினாலும் பொறுத்திருக்கலாம். சுதந்திரம் மனிதனுக்கு அவ்வளவு தலை சிறந்த பாக்கியம்" என்று பாரதியார் வற்புறுத்துகிறார்.

"தேவிநின் ஒளி பெறாத
தேயமோர் தேயமாமோ?
* * * * * * * * *
பாவியர் அன்றோ நின்றன்
பாலனம் படைத்திலாதார்!"

என்பதாகச் சுதந்திரம் பெறாத மனிதர்களைப் பாவிகள் என்றே சபிக்கிறார்.

மகாகவி பாரதியாரைப் போலவே உலகத்தில் அவதரித்த எத்தனையோ

'பெரியார்கள் சுதந்திரத்தின் பெருமையை அறிவுறுத்தி யிருக்கிறார்கள்.

நாட்டின் சுதந்திரத்துக்காகச் சகல தியாகங்களையும் செய்து, முடிவாக உயிர்த் தியாகமும் செய்த மகா புருஷர்கள் உலகச் சரித்திரத்தில் எத்தனையோ பேர் உண்டு.

அத்தகைய பெறுதற்கரிய பெருகிய சுதந்திரத்தை ஏறக் குறைய ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்னர் இந்தியா தேசம் பெற்றிருக்கிறது.

* * *

இந்தியா அடைந்த சுதந்திரத்தைப் பற்றி அவ்வப்போது சில அபஸ்வரப் பல்லவிகள் பாடப்படுவதைக் கேட்கிறோம். அர்த்தமில்லாத வார்த்தைகளும் மௌடீகமான பேச்சுக்களும், பேசப் படுவதைக் கேட்கிறோம்.

"சுதந்திரம் வந்து என்ன பயன்? அரிசி ரேஷன் அதிகமாக வில்லையே?" என்று சிலர் சொல்கிறார்கள்.

"சுதந்திரம் வந்து என்ன பயன்? கடலைப் பிண்ணாக்கு விலை குறைய வில்லையே?" என்று சிலர் புகார் கூறுகிறார்கள்.

"சுதந்திரம் வந்து விட்டதனால் என்ன ஆயிற்று? வீட்டு வாடகை குறைந்ததா? குமாஸ்தா சம்பளம் உயர்ந்ததா? தொழிலாளருக்கு வேலை செய்யாமல் கூலி கிடைக்கிறதா?" என்று சிலர் சம்பந்தமில்லாத கேள்விகளைப் போடுகிறார்கள்.

"அரசியல் சுதந்திரம் வந்துவிட்டால் போதுமா? பொருளாதார சுதந்திரம் இல்லையே? பேசச் சுதந்திரம் இல்லையே? சாகச் சுதந்திரம் இல்லையே? கள்ளுக் குடிக்கக் கூடச் சுதந்திரம் இல்லையே?" என்று சில சாம்பிராணிகள் 'சுதந்திரம்' என்னும் வார்த்தைக்கே பொருள் தெரியாமல் பேசுகிறார்கள்.

நம்முடைய திடமான கொள்கை,—அசைக்க முடியாத நம்பிக்கை இந்த விஷயத்தில் என்ன வென்றால்:—

ஒரு நாட்டுக்கும் அந்த நாட்டு மக்களுக்கும் அரசியல் சுதந்திரம் மற்ற எந்த நன்மையைக் காட்டிலும் மேலானது.

வறுமையும் பஞ்சமும் நாட்டில் தாண்டவமாடினாலும் சுதந்திர ஆட்சிதான் மேலானது.

அன்னியர்களின் ஆட்சியில் குபேரச் செல்வமாயிருப்பதை விடச் சுதந்திர ஆட்சியில் பரம தரித்திரனாக வாழ்வதே விரும்பத் தக்கது.

அன்னிய ஆட்சியின் கீழ் தினம் நாலு வேளை வயிறார உண்பதைக் காட்டிலும், நம்முடைய சொந்த சுதந்திர ஆட்சியில், நாம் தேர்ந்தெடுத்த பிரதிநிதிகளின் ஆட்சியில், பஞ்சத்தினால் செத்துப்போவதே மேலானது.

சுதந்திரத்துக்காக இந்த நாட்டிலுள்ள பள்ளிக்கூடங்களை யெல்லாம் மூடிவிட வேண்டும் என்று சொன்னால் அதற்கு நாம் தயாராயிருக்கவேண்டும்.

சுதந்திரத்துக்காகத் தேசத்தில் உள்ள ஆஸ்பத்திரிகளை யெல்லாம் மூடிவிடலாம் என்றால் அதற்கும் நாம் தயாரா யிருக்க வேண்டும்.

சுதந்திரத்துக்காக இந்த நாட்டிலுள்ள வீடுகளை எல்லாம் இடித்துப் போடவேண்டும், மக்கள் அனைவரும் திறந்த வெளியிலோ மலைக் குகையிலோ வசிக்கவேண்டும் என்றால் அதற்கும் தயாராயிருக்க வேண்டும்.

வீட்டுக்கு ஒரு பிள்ளையை நாட்டுக்காகப் பலி கொடுக்கவேண்டுமென்றால் மக்கள் அவ்விதம் செய்யப் போட்டியிட்டுக்கொண்டு முன் வரவேண்டும்.

இப்படி யெல்லாம் சுதந்திரத்துக்காகத் தியாகம் செய்யத் தயாராயிருக்கும் மக்கள் தான் சுதந்திரத்துக்கு லாயக்கானவர்கள். அவர்கள் தான் சுதந்திரமாய் வாழ முடியும். இவ்விதமெல்லாம் தியாகம் செய்யத் தயாரா யிருந்ததினாலேதான், இங்கிலாந்து, பிரான்ஸ், அமெரிக்கா, ருஷியா, சீனா முதலிய நாடுகள் இன்று சுதந்திர தேசங்களா யிருக்கின்றன. இல்லாவிடில் அந்த நாடுகள் எல்லாம் இந்த நேரத்தில் ஜெர்மனிக்கும் ஜப்பானுக்கும் அடிமை பூண்டு வாழ வேண்டி நேர்ந்திருக்கும்.

* * *

"சுதந்திரம்" என்று சொல்லும் போது ஒரு நாட்டின் அரசியல் சுதந்திரத்தைத்தான் நாம் முதன்மையாகக் குறிப்பிடுகிறோம்.

அரசியல் சுதந்திரந்தான் மிக முக்கியமானது. மற்றப் பொருளாதார சுதந்திரம், வியாபார சுதந்திரம், தொழில் சுதந்திரம், படிக்கும் சுதந்திரம், படியாம லிருக்கும் சுதந்திரம், அம்மை குத்திக் கொள்ளுகிற சுதந்திரம், குத்திக் கொள்ளாம லிருக்கும் சுதந்திரம், கண்டதைப் பேசி எழுதும் சுதந்திரம்—இவை யெல்லாம் இரண்டாம் பட்சமானவைதான். இந்தச் சுதந்திரங்கள் எல்லாம் இல்லை என்பதற்காக அரசியல் சுதந்திரத்தைப் பற்றி அலட்சியமாகப் பேசுவது மடமை

யினும் மடமை. அரசியல் சுதந்திரம் ஒன்று இருந்தால் மற்றச் சுதந்திரங்கள் எல்லாம் நாளடைவில் கட்டாயம் பின் தொடர்ந்து வரும். அரசியல் சுதந்திரம் இல்லாவிட்டால் வேறு எந்தச் சுதந்திரமும் ஒரு நாளும் கிட்டாது. ஆகையால் ஒரு நாட்டின் அரசியல் சுதந்திரத்துக்குக் கேடு சூழும் காரியத்தை அந்த நாட்டுப் பிரஜை எவனும் செய்யக்கூடாது. எந்தக் காரணத்துக்காகவும் செய்யக்கூடாது. செய்கிறவன் தாய் நாட்டைக் காட்டிக் கொடுக்கும் துரோகியாவான்.

* * *

தாய் நாட்டின் சுதந்திரத்துக்காக மற்றத் தேச மக்கள் செய்திருக்கும் தியாகங்களை நோக்கும்போது இந்திய மக்கள் செய்த தியாகங்கள் ஒன்றுமே யில்லை என்று சொல்ல வேண்டும்.

பாரதத் தாய் செய்த பாக்கியத்தினால், நமது முன்னோர் செய்த தவத்தினால், லோகமான்ய திலகர், தாதாபாய் நவுரோஜி, லாலா லஜபதிராய், தேசபந்து தாஸ், வ. உ. சிதம்பரம் பிள்ளை, மோதிலால் நேரு, சத்தியமூர்த்தி, அஜ்மல்கான், அன்ஸாரி முதலிய தேசபக்தத் தலைவர்கள் தோன்றினார்கள். அவர்களுடைய மகா தியாகங்களினாலும் காந்தி மகாத்மாவின் ஆத்ம சக்தியினாலுமே இந்தியா இவ்வளவு சீக்கிரத்தில் இவ்வளவு குறைவான கஷ்டங்களுடன் பரிபூரண அரசியல் சுதந்திரம் அடைந்திருக்கிறது.

அப்படி நாம் பெற்ற சுதந்திரச் செல்வத்தைக் கண்ணும் கருத்துமாய்ப் பாதுகாக்க வேண்டும். அலட்சியமாயிருப்பதும், அசட்டையாய்ப் பேசுவதும் தற்கொலைக் கொப்பான காரியங்கள்.

* * *

நமது முன்னோர்கள் செய்த பூஜா பலத்தினால் இன்று புதுடில்லியில் வீற்றிருந்து இந்தியாவை ஆளுகிறவர்கள் மகா புருஷர்களாயிருக்கிறார்கள். ஜவாஹர்லால், ராஜாஜி, சர்தார் வல்லபாய், ராஜேந்திர பிரஸாத் போன்றவர்கள் தியாக வாழ்க்கைக்கும் தாய் நாட்டின் தொண்டுக்கும் தங்களையே அர்ப்பணம் செய்தவர்கள். முப்பது ஆண்டுகளுக்கு முன்பு இவர்கள் ஒவ்வொருவரும் பெரிய வருமானங்களையும் சுக போகங்களையும் அந்நாளை காலம் செய்த தொழிலையும் உதறித் தள்ளிவிட்டுச் சுதந்திரப் போரில் இறங்கியவர்கள். ஒரு காலத்தில் இந்திய சர்க்காரின் மந்திரிகளாய் விளங்கி இந்தியாவை ஆளப் போகிறோம் என்று இவர்கள் கனவிலும் கருதியிருக்க மாட்டார்கள். தாய் நாட்டின் தொண்டில் உயிரை அர்ப்பணம் செய்யவும் சித்தமாக முன் வந்தார்கள்.

நம்முடைய பாக்கியம், பாரதத் தாய் செய்த தவம், ஜவாஹர் முதலியவர்கள் இன்னும் உயிரோடிருக்கிறார்கள்.

இவர்களைப் போல் நாட்டை ஆளுவதற்குரிய சகல குணங்களும் பொருந்தியவர்களைப் பெறுவது எளிதல்ல. தற்சமயம் உலகத்தில் எந்த நாடும் இத்தகைய மாபெருந் தலைவர்களைப் பெற்றிருக்கவில்லை.

* * *

ஆயிரம் ஆண்டு அடிமைப்பட்டுக் கிடந்த பிறகு, நூற்றைம்பது வருஷம் அன்னியராகிய பிரிட்டிஷாரின் ஆட்சியின் கீழ் இருந்த பிறகு, சென்ற 1947-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 15-ந் தேதி இந்தியா பூரண அரசியல் சுதந்திரம் அடைந்தது.

அந்த மகத்தான சம்பவம் நிகழ்ந்து இன்றைக்கு ஓராண்டு ஆகிறது.

இந்த ஓராண்டிலும் இந்திய சுதந்திரம் என்னும் குழந்தைக்கு எத்தனையோ பாலாரிஷ்டங்கள் வந்தன. அவற்றையெல்லாம் நம் தலைவர்கள் அரும்பாடுபட்டுப் போக்கினார்கள்.

ஓராண்டு நிரம்பிய சுதந்திரக் குழவியை இன்றைக்கும் பல அபாயங்கள் சூழ்ந்திருக்கின்றன. அந்த அபாயங்களை நம் தலைவர்கள் போக்கி நாட்டின் சுதந்திரத்தை இரட்சிப்பார்கள் என்று நம்பிக்கையுடன் எதிர்பார்க்கலாம்.

* * *

பாரதத் தாயை வாழ்த்துகிறோம். பாரதத் தாயின் உத்தமப் புதல்வர்களை வணங்குகிறோம். பாரத தேசத்தின் சுதந்திரத்தைப் போற்றுகிறோம்.

சத்தியத்தினாலும் அஹிம்சையினாலும் ஆத்ம தபோபலத்தினாலும் இந்தியா அடைந்த சுதந்திரம் ஊழி ஊழிகாலம் நிலை பெற்று விளங்குமென்று நம்புகிறோம்; விரும்புகிறோம்; பராசக்தியைப் பிரார்த்திக்கிறோம்.

தூண்டுமின்ப வாடைவீச துய்ய தேன்கடல்
சூழநின்ற தீவிலங்கு ஜோதி வானவர்
ஈண்டுநமது தோழராகி
எம்மோடமுதம் உண்டு குலவ
நீண்ட மகிழ்ச்சி மூண்டு விளைய
நினைத்திடும் இன்பம் அனைத்தும் உதவ
வேண்டுமடி எப்போதும் விடுதலை—அம்மா!

தென்னிந்திய மில் முதலாளிகள் சங்கம்



அனைவருக்கும் சுதந்திரதின நல்வாழ்த்துக்கள் உரித்தாகுக

•

**தொழில் முன்னேற்றமே தேசத்தின் முன்னேற்றம்.
தொழில் அபிவிருத்தி பெரிய அளவில் பெருகினால்
வாழ்க்கைத் திறமும் வருவாயும் பெருகும்.**

•

தினத்திற்கு 8 மணி நேரம் விதம் மாதத்திற்கு 26 தினங்கள் வேலை செய்யும், படிப்பு எழுத்தறிவு இல்லாத ஒரு ஸ்திரீக்கு மாதம் ரூ. 82/- வருமானம் தற்காலம் கொடுக்கப்பட்டு வருகிறது.

அதைத் தவிர, பங்குதாரர்களுக்கு அளிக்கப்படும் விகிதாசாரப்படியே லாபத்தில் ஒவ்வொரு தொழிலாளிக்கும் போனஸ் வழங்கப்பட்டு வருகிறது.

தொழிலாளர்களுக்கு அளிக்கப்படும் இதர சில வசதிகள்:—

1. வேலை நேரத்தின்போது, அங்கீகரிக்கப்பட்ட டாக்டரினால் இலவச வைத்திய உதவி யளிக்கப்படுகிறது.

2. வேலையிலிருந்து விலகும்போது ஒவ்வொருவருக்கும் பிராவிடண்ட் நிதி மொத்தமாக அளிக்கப்படுகிறது.

3. தாய்மார்கள் ஆலையில் வேலை செய்யும் நேரங்களில் அவர்களது குழந்தைகளைக் கவனித்துக் கொள்ள நர்ஸ்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றனர். மேலும் இக்குழந்தைகளுக்கு, பால், ஆகாரம், துணிமணி முதலிய வசதிகள் இலவசமாக அளிக்கப்படுகின்றன.

4. வருஷத்தில் சட்டப்படி சம்பளத்துடன் பத்து நாட்கள் ரஜாவும், இதைத் தவிர மூன்று நாட்கள் கஷுவல் வியாதி காரணமான ரஜாவும் சம்பளத்துடன் அனுமதிக்கப்படுகின்றது.

5. தொழில் ஸ்தாபனத்தினாலும், தொழிலாளர்களாலும் நிறுவப்பட்டிருக்கும் கூட்டுறவு ஸ்டோர் மற்றும் பாங்க் வசதிகளும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.



பிள்ளையார் காப்பாற்றினார்

சக்ரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்
கவர்னர்-ஜெனரல்

சின்னப்பனும் அவனுடைய மகன் மாரியும் சேந்தமங்கலம் காட்டுக்கு விறகு வெட்டிக் கொண்டுவர அதிகாலையில் புறப்பட்டுப் போனார்கள். மலையடிவாரம் போய்ச் சேர்ந்ததும் "சாமியைக் கும்பிட்டுப் போகலாம்" என்று சின்னப்பன் தன் மகனையும் கூட்டிக்கொண்டு அங்கே இருந்த ஒரு குளத்தங்கரைப் பிள்ளையார் அருகில் போய் நின்றான். அரிவாளையும் மற்றச் சாமான்களையும் ஒரு பக்கத்தில் வைத்து விட்டுக் குளத்தில் கை கால் கழுவிக்கொண்டு சந்நிதிக்கு வந்தான். தான் கொண்டு வந்திருந்த ஒரு தேங்காயை எடுத்து "சாமி! நம்மைக் காப்பாற்ற வேண்டும். சேவகன் கீவகன் யாரும் நம்மை வந்து பிடிக்காமல் இருக்க வேண்டும். ஆனைமுகனே!" என்று சொல்லி விழுந்து கும்பிட்டு விட்டுத் தேங்காயை உடைத்தான். ஒரு பாதியை விநாயகர் காலடியில் வைத்து விட்டு மற்றொரு பாதியை எடுத்து உடைத்துச் சின்னப்பனும் மாரியும் சாப்பிட்டார்கள்.

"இந்தத் தேங்காயைக் கடையில் வாங்கினாயா?" என்று கேட்டான் மாரி.

"இல்லை! நேற்று ஐயா வீட்டில் மரம் ஏறிக் காய் தள்ளினேனல்லவா? அப்போது ஒரு காய் சாமிக்கென்று எடுத்து மறைத்து வைத்தேன்!" என்றான் சின்னப்பன்.

பிறகு மாரி "ஒரு மூடி சாமியண்டை வைத்தாயே, அது என்ன வாகிறது? அதையும் எடுத்துச் சாப்பிடலாமே?" என்றான்.

"சீ! சீ! அது சாமிக்கு!" என்றான் சின்னப்பன்.

"குரங்கு தின்றுவிட்டுப் போகும்" என்றான் மாரி.

"குரங்கும் சாமிதானே!" என்றான் சின்னப்பன்.

பிறகு எழுந்து மலைமேலிருக்கும் காட்டுக்குப் போனார்கள். வழியில் பேசிக்கொண்டே சென்றார்கள்.

"மூன்றணைத் துட்டு வைத்திருக்கிறேன். காட்டுக்குப் 'பாசு' எடுத்திருந்தால் அதற்கு ஒன்றரையணைக் கொடுத்திருக்க வேண்டும். நாம் பாரஸ்ட் சேவகன் கண்ணுக்கு அகப்படாமல் இருக்க வேண்டும். பிடித்து விட்டால் அவனுக்கு மூன்றணைத் தந்து விட்டுத் தப்பித்துக்கொள்ளலாம். அதிர்ஷ்டம் போல் நடக்கும். இந்த வழியாகப் போகக் கூடாது. இங்கே அந்தச் சேவகப் பாவிகளின் நடமாட்டம் அதிகமாயிருக்கும்!" என்று பேசிக் கொண்டே அடர்த்தியான காட்டில் செல்லும் வேறொரு மறைவுப் பாதையில் அப்பனும் மகனும் சென்றார்கள்.

"யாராவது கண்டு விட்டுப் 'பாசு' எங்கே என்று கேட்டால் நான் உன்னைக் கேட்பேன். 'ஐயையோ, வீட்டில் வைத்து விட்டேனே!' என்று சொல்லிக் கூச்சல் போடு!"

இவ்வாறு மகனைச் சின்னப்பன் ஜாக்கிரதைப்படுத்தினான். நடு மத்தியானம். காட்டிலிருந்து விறகுச் சுமையுடன் திரும்பி வந்தார்கள். "சாமி! இது வரையில் காப்பாற்றினாய். அப்பனே! ஏழையை விட்டுக் கொடுக்காதே!" என்று பிள்ளையார் கோவிலண்டை இருந்த ஒரு மரத்தடியில் சுமையைச் சாய்த்து வைத்துச் சின்னப்பன் களைப்பாக உட்கார்ந்தான்.

பிறகு தாங்கள் கொண்டு வந்திருந்த மூட்டையை அவிழ்த்து அதில் வைத்திருந்த பழைய சோற்றை எடுத்து இருவரும் சாப்பிட்டு விட்டு, விறகுச் சுமையை அவிழ்த்து ஒன்றைப் பெரியதாகவும் மற்றொன்றைச் சிறியதாகவும் பிரித்து இரண்டாகக் கட்டினார்கள்.

கட்டி விட்டு இருவரும் அங்கேயே சற்று நேரம் உட்கார்ந்திருந்தார்கள்.



களைப்பினால் சிறு பையன் தூங்கிப் போனான். தாகத்துக்குத் தண்ணீர் தேடிக் காட்டில் போனதாகத் தூக்கத்தில் கனவு கண்டான். காட்டிலாகாச் சேவகன் பார்த்து விட்டுத் துரத்தி வந்ததாகவும் கண்டான். அழுது கொண்டு ஓடியலைந்தான். திடீர் என்று எங்கிருந்தோ பிள்ளையார் வந்து அவனை எடுத்துத் தோள் மேல் வைத்துக் கொண்டு சேவகனுக்கு அகப்படாமல் கொண்டுபோய் அம்மனிடம் ஒப்புவித்தார்.

"இந்தப் பயலைப் பத்திரமாக வைத்துக் கொள். அந்தப்பாவி சேவகன் துரத்தி வருகிறான்!" என்று பிள்ளையார் தேவியிடம் சொன்னார். "சேவகன் இங்கே வந்து பிடித்துக் கொள்ள மாட்டானா?" என்றான் மாரி. "வந்தால் உதைத்துப் போடுவேன். நீ சும்மா இரு" என்றாள் தேவி. எல்லாம் கனவிலே நடந்ததுதான்.

பிறகு அம்மன் அவனைக் குளத்தில் குளிக்கச் செய்து உடம்பு எல்லாம் துடைத்து "இந்தா தேங்காய்! சாப்பிடு!" என்று கொடுத்தாள்.

தேங்காய் தின்னப் போனபோது அவனை யாரோ பிடித்துத் தள்ளியதால் துள்ளி எழுந்தான். பாரஸ்ட் சேவகன் யமனைப் போல் எதிரே நின்றான். அம்மன் மறைந்து போனாள். "ஐயோ!" என்று கத்தினான் மாரி. "திருட்டுப் படவா! எடு பாஸை!" என்று சேவகன் சின்னப்பனை அதட்டிக் கேட்டான்.

"திருட்டு இல்லே, எஜமான்! மாரி! சீட்டை எடுத்து ஐயாவுக்குக் காட்டு" என்று சொன்னான் சின்னப்பன்.

பிறகு முந்தி பேசியிருந்த மாதிரி நாடகம் நடத்தினார்கள். பாஸை வீட்டில் வைத்து விட்டு மறந்து போனதாகச் சொன்னான் மாரி.



பாரஸ்ட் சேவகன் இந்தக் கதையைக் கொஞ்சமும் நம்ப வில்லை.

"ஏமாற்றப் பார்க்கிறீர்களா? ஆறு மாதம் ஜெயில்; நடங்கள்!" என்று இருவரையும் பிடித்துத்தள்ளி விறகுச் சுமைகளோடு பாரஸ்ட் ஆபீசுக்கு அழைத்துச் சென்றான்.

போகும் வழியில் சின்னப்பன் "சாமி! சாமி! நான் குற்றம் செய்து விட்டேன்; மன்னித்து விடுங்கள்!" என்று கெஞ்சினான்.

"திருட்டுப் பயலே! மன்னிப்பாவது, ஒன்றாவது? ஜெயில்தான், நட!" என்றான் சேவகன்.

"இல்லேங்கோ, சாமி!—கடவுளே! இதை வைத்துக் கொள்ளுங்கள். எப்படியாவது காப்பாற்றுங்கள். நான் ஏழை!" என்று சொல்லிக் கொண்டே சின்னப்பன் தன்னுடைய மடியில் வைத்திருந்த மூன்று அணாவை எடுத்து நீட்டினான். பாரஸ்ட் சேவகன் சிரித்தான்.

"என்ன, லஞ்சம் கொடுக்கிறாயா! அந்தக் காலம் எல்லாம் போச்சு. சுயராஜ்யம் வந்து விட்டது; உனக்குத் தெரியாதா?" என்றான். "தெரியவில்லேங்கோ ஐயா! எப்படியாவது காப்பாற்றுங்கள். உங்களுக்கும் பிள்ளை குட்டி உண்டு. ஜெயிலுக்கு நான் போனால் என் பெண்சாதி குழந்தைகளை யார் காப்பாற்றுவார்கள்?" என்று சின்னப்பன் அழுதான்.

"படவாப் பயலே! பணத்தை எடுத்து வை. வா, ஆபீசுக்கு. ஒன்றரை அணாச் சீட்டுக் கொடுக்கிறேன். மறுபடி இந்த மாதிரி திருட்டுத்தனம் செய்யாதே!" என்றான். ஆபீசுக்குப் போய்ச் சீட்டு எழுதிய பிறகு அப்பனும் மகனும் விறகுச் சுமைகளோடு ஊருக்குச் சென்றார்கள்.

"பிள்ளையார் காப்பாற்றினார்!" என்று சின்னப்பன் நடந்ததையெல்லாம் மனைவிக்குச் சொன்னான்.

"அம்மா! சேவக ஐயா ரொம்ப நல்லவர்" என்றான் மாரி.

அன்று மாலை ராசிபுரம் சென்று விறகை விற்றார்கள். பெரிய சுமையை ஆறு அணாவுக்கும் சின்னச் சுமையை இரண்டரையணாவுக்கும் விற்றார்கள். விற்று விட்டு ஊருக்குத் திரும்பினார்கள். வழியில் கள்ளுக் கடையிருந்த இடத்தில் சின்னப்பன் ஒரு நிமிஷம் நின்றான். அங்கே குட்டிச் சுவர்தான் இருந்தது. கடையை எடுத்துப் போட்டு இரண்டு வருஷம் ஆனபோதிலும் சின்னப்பனுக்குக் கள்ளின் ஞாபகம் போகவில்லை. சிறிது நேரம் பழைய காலத்தை நினைத்துச் சும்மா நின்று கொண்டிருந்து விட்டுச் சின்னப்பன் வீடு திரும்பினான். காசை மனைவியிடம் கொடுத்தான்.

"கள்ளுக் கடையிருந்தால் கஷ்டப்பட்டுச் சம்பாதித்த காசு வீட்டுக்கு வருமா? பிள்ளையார்தான் காப்பாற்றினார்!" என்றான் அவன் மனைவி.

அலை ஓசை

கல்கி



நாலாம் அத்தியாயம்

சாலை முனையில்

உலாவச் சென்று திரும்பி வந்த அன்றிரவு சீதா வெகுநேரம் தூங்கவில்லை. புதுடில்லியில் புதுக்குடித்தனம் போட்ட பிறகு முதன் முதலாகத் தன் பிரிய நாயகன் தன்னை உலாவ அழைத்துச் சென்ற தினத்தில், தான் அசட்டுத்தனமாக நடந்துகொண்டு அவனுக்கு எரிச்சல் உண்டாக்கியதை நினைத்து நினைத்து வருந்தினாள். இருந்தாலும் அவர் எதற்காக 'அவள்' யார் என்பதைச் சொல்ல மறுக்கவேண்டும் என்ற எண்ணம் ஊசியினால் நெஞ்சைக் குத்துவது போல் திரும்பத் திரும்ப வந்துகொண்டிருந்தது. சென்னை பத்மாபுரத்தில் மாமனார் வீட்டில் வசித்தபோது, சில கோள்—சொல்லிப் பெண்கள் ராகவனுடைய பழைய காதலைப் பற்றி ஊரில் ஏற்பட்டிருந்த வதந்தியை அவளிடம் பிரஸ்தாபித்தார்கள். அப்போது அவள் அதை நம்பவில்லை. பொறாமையினால் சொல்கிறார்கள் என்றே எண்ணினாள். அந்த வம்புப் பேச்சு இப்போது ஞாபகத்துக்கு வந்தது. ரயிலில் பார்த்த பெண் அவள்தானோ. என்னமோ? தினம் தினம் ஆபீஸுக்குப் போகிறதாகச் சொல்லிவிட்டுப் போகிறாரே, அவளைப் பார்க்கத்தான் போகிறாரோ என்னமோ என்று தோன்றியது. சாயங்காலம் திரும்பிவர நேரம் ஆவது அதனால்தானோ என்னமோ என்றும் தோன்றியது. "ச்சீ! என்ன மூடத்தனம்! அவள்தான் எங்கேயோ போய் விட்டாளே! மேலும் ரயிலில் அவளைப் பார்த்துவிட்டு இவர் அதிசயப்பட்டதிலிருந்து அவ்வளவு பழக்கப் பட்டவளாகவே தோன்றவில்லை. அப்படியிருக்க நாமாக வீணே மனதை ஏன் புண்படுத்திக் கொள்கிறோம்? 'பெண் புத்தி பேதைமை' என்று சொல்லுவது வாஸ்தவந்தான்!" என்று தன்னைத் தானே கண்டித்துக் கொண்டாள். "எது எப்படியானால் எனக்கென்ன? என்னிடம் அவர் இவ்வளவு ஆசையாயிருக்கும்போது எதற்காக மற்ற விஷயங்களைப் பற்றிக் கவலைப்பட வேண்டும்?" என்று ஆறுதல் சொல்லிக் கொண்டாள்.

"லலிதாவைப் பார்க்க வந்த இடத்தில் அவளைப் பிடிக்கவில்லையென்று சொல்லி என்னை வலியக் காதலித்து மணந்து கொண்டாரே! அப்படி என்னை ஆட்கொள்ள வந்த உத்தம புருஷரைப் பற்றி வீண் சந்தேகம் கூடாது!" என்று தனக்குத் தானே புத்தி சொல்லிக் கொண்டாள். இனிமேல் அன்று சாயங்காலம் நடந்தது போல் நடப்பதற்கே இடங்கொடுக்கக்கூடாது என்றும், அவருக்குப் பிடிக்காத விஷயங்களைப் பற்றிக் கேட்கவே கூடாது என்றும் சங்கல்பம் செய்து கொண்டாள். இவ்வளவு திடமான தீர்மானத்துக்கு வந்தபிறகும் "ஏதோ நான் தெரியாத்தனமாகக் கேட்டுவிட்டதாகவே இருக்கட்டும்; அவள் யார் என்று சொல்லியிருந்தால் என்ன? எதற்காக மறுக்கவேண்டும்?" என்ற நினைவு தோன்றி வேதனை செய்தது.

இந்த வேதனை நிறைந்த சிந்தனையெல்லாம் மறுநாள் பொழுது விடிக்கும், தூக்கத்தில் கண்ட துர்சொப்




பனம் விழித்தெழுந்ததும் மங்கி மறைவது போல், சீதாவின் மனதிலிருந்து மறையத் தொடங்கியது. ராகவனுக்குக் காலைக் காப்பி கொண்டு கொடுத்தபோது அவன் அவளைப் பார்த்துச் செய்த புன்னகையில் அடியோடு மறைந்து விட்டது. வழக்கம் போல் ராகவன் ஆபீஸுக்குப் புறப்பட்டபோது சீதா வஸந்தியைத் தூக்கிக் கொண்டு வந்தாள். ராகவன் அவளைக் கையில் வாங்கிக் கொண்டு கொஞ்சினான்; தோளில் சாத்திக் கொண்டு தட்டிக் கொடுத்தான். கன்னத்தை மெதுவாகக் கிள்ளினான். "வஸந்தி! என்னோடு நீ ஆபீஸுக்கு வருகிறாயா?" என்று கேட்டான். "வரேன் அப்பா! இப்பவே வரேன்!" என்றாள் வஸந்தி. "சரிதான்; உன்னை அழைத்துக் கொண்டு போனால் நான் வேலை செய்தாற் போலத்தான்!" என்றான். சமையல் அறையிலிருந்து வந்த காமாட்சி அம்மாள், "வஸந்திக்கும் வயதாகும்போது உன்னைத் தோற்கடித்து விடுவாள், பார்! உன்னை விடப் பெரிய உத்தியோகம் பார்ப்பாள்!" என்றாள். "அதைப் பற்றிச் சந்தேகம் என்ன? அவளுடைய அம்மா யார்? சீதாவுக்குப் பிறந்த பெண் சோடையாகப் போய் விடுவாளா?" என்றான் ராகவன். சீதாவுக்குப் பெருமை தாங்கவில்லை. "அதெல்லாம் ஒன்றுமில்லை. நான் என்ன அவ்வளவு கெட்டிக்காரியா? வஸந்தி முழுக்க முழுக்க என் மாமியாரைக் கொண்டிருக்கிறாள். அதனால் தான் இவ்வளவு சமர்த்தாயிருக்கிறாள். நீங்கள் வேணுமானால் இரண்டு பேருடைய முகத்தையும் ஒத்திட்டுப் பாருங்கள்!" என்றாள் சீதா. காமாட்சி அம்மாளுடைய சந்தோஷத்தைச் சொல்லி முடியாது. "ஆகக்கூடி உங்கள் இரண்டு பேருக்குள்ளேயே வஸந்தியின் சமர்த்தைப் பங்கு போட்டுக் கொள்ளப் பார்க்கிறீர்கள். எனக்குக் கொஞ்சம் கூடக் 'கிரெடிட்' கொடுக்க நீங்கள் தயாராயில்லை!" என்று ராகவன் சொல்லி விட்டு வஸந்தியை அம்மாவிடம் ஒப்புவித்துவிட்டு ஆபீஸுக்குப் புறப்பட்டான்.

மேலும் ஒரு வாரம் சென்றது. ராகவனாகத் தன்னை 'வாக்கிங்' போக மறுபடி அழைப்பான் என்று சீதா எதிர் பார்த்துக் கொண்டிருந்தாள். அவன் அதைப் பற்றிப் பிரஸ்தாபிக்கிறதாகக் காணப்படவில்லை ஆகையால் சீதாவே அந்தப் பேச்சை எடுக்க வேண்டியதாயிற்று.

"வெளியே போய் அதிக நாளாயிற்றே? இன்றைக்குப் போகலாமா?" என்று சீதா கேட்டாள்.

"போகலாம். ஆனால் நீ அன்றைக்குக் கேட்டது போல் அசட்டுத்தன



மான கேள்வி ஒன்றும் கேட்கக் கூடாது. கேட்கிறதில்லை யென்று ஒப்புக் கொண்டால் போகலாம்!" என்றான் ராகவன்.

"நான் கேட்கவில்லை. அப்படி ஏதாவது நான் தப்பித் தவறிக் கேட்டாலும் நீங்கள் கோபித்துக் கொள்ளாமல் பதில் சொல்லுங்களேன்!" என்றான் சீதா.

"அதெல்லாம் முடியாது. நீ அசட்டுத்தனமாக ஏதாவது கேட்டால் எனக்குக் கோபந்தான் வரும்! அதைவிட வெளியில் போகாமலிருப்பதே நல்லது" என்றான் ராகவன்.

"நான் ஒன்றும் கேட்கவில்லை. ஊமையைப்போல் இருக்க வேண்டும் என்றாலும் இருந்து விடுகிறேன்" என்றான் சீதா.

"பார்த்தாயா? இங்கேயே ஆரம்பித்துவிட்டாயே? நான் வரவில்லை!" என்றான் ராகவன்.

சீதா பயந்து விட்டாள். "நான் சாதாரணமாகத்தான் சொன்னேன். கோபித்துக்கொண்டு சொல்லவில்லை. வாருங்கள், போகலாம்!" என்றான்.

இன்றைக்கு வேறொரு பக்கம் போனார்கள். போகும்போது பேச்சு அதிகமில்லை. தப்பாக ஏதாவது பேசிவிடக் கூடாது என்று சீதா சர்வ ஜாக்கிரதையாக இருந்தாள். ராகவனும் அக்கம் பக்கம் அதிகமாகப் பார்க்கவில்லை. சீதா தான் எதிரில் வந்த ஸ்திரீகளை யெல்லாம் உற்றுப் பார்த்துக்கொண்டு போனான்.

அரைமணி நேரம் நடந்த பிறகு பச்சைப் புல் வட்டம் ஒன்று வந்தது. அதன் இடையிடையே அழகிய பூஞ்செடிப் புதர்கள் சில இருந்தன.

"நடந்தது போதும்; இங்கே கொஞ்ச நேரம் உட்கார்ந்திருந்து விட்டுத் திரும்பலாம்" என்றான் சீதா.

பசுப்புல் வட்டத்தைச் சுற்றிச் சில பெஞ்சிகள் போட்டிருந்தன. அவற்றில் சிலர் உட்கார்ந் திருந்தார்கள். ராகவனும் சீதாவும் ஒரு பூஞ்செடிப் புதரின் அருகில் அமர்ந்தனர்.

பிடித்த கத்தியுடன் ஒரு ஸ்திரீ நின்று கொண்டிருந்தாள். இலேசான பனிப் படலம் சல்லாத் திரையைப் போல் அந்த ஸ்திரீயை மூடியிருந்தது. சாலை ஓரத்து தீப ஸ்தம்பத்தில் லாந்தர்போல் கூடு அமைந்து விளங்கிய மின்சார விளக்கின் பரந்த ஒளி பனிப் படலத்தின் வழியாகப் புகுந்து அந்த ஸ்திரீயின் வெளிறிய முக மண்டலத்தை மங்கலாக எடுத்துக் காட்டியது. நாடக மேடைகளில் சில சமயம் மெல்லிய வெள்ளைச் சல்லாவினால் மூடிய ஆவி உருவங்களைக் கொண்டு வந்து காட்டுகிறார்களே, அதைப்போல் அந்த ஸ்திரீயின் உருவம் காட்சி அளித்தது. கையில் அவள் ஒரு கத்தி வைத்திருந்தாள். முதலில் கையில் கத்தி பிடித்த பெண் உருவத்தைக் கண்டதனாலேயே சீதா தயங்கி நின்று பின்வாங்கினாள். பின்னால் அடி எடுத்துவைத்த அதே நேரத்தில் அந்த ஸ்திரீயை முன்னால் ஒரு சமயம் பார்த்திருப்பதாகச் சீதாவுக்கு நினைவு வந்தது. ஈனமான மெலிந்த 'ஓ' என்ற சத்தம் ஒன்று அவள் வாயிலிருந்து வந்தது. பின்னால் வந்த ராகவன் சீதாவைக் கையினால் தாங்கிக்கொண்டு, "என்ன?" என்றான். "அதோ!" என்று கையைக் காட்டினாள் சீதா. ராகவன் பார்த்த போது அந்தப் பெண் உருவம் விரைவாக நகர்ந்து கொண்டிருந்தது. அரை நிமிஷத்துக்குள் இருளிலும் பனியிலும் மறைந்து விட்டது.

இந்தச் சம்பவம் எந்த விதமான உணர்ச்சியையோ கிளர்ச்சியையோ ராகவன் மனதில் உண்டாக்கவில்லை. "அசடே! புது டில்லிச் சாலையில் எத்தனையோ பேர் வருவார்கள்; போவார்கள். நீ எதற்காகப் பயப்படுகிறாய்?" என்றான் ராகவன்.

"நான் பயப்படவில்லை" என்றாள் சீதா. ஆயினும் அவளுடைய உள்ளத்தில் இன்னதென்று சொல்ல முடியாத பீதி குடிகொண்டு விட்டது. அந்தப் பீதியினால் அப்போது அவளால் ஒன்றும் பேச முடியவில்லை. இராத்திரி படுக்கப் போகும் சமயத்தில் ராகவனிடம் சாவகாசமாக அந்த ஸ்திரீயைப் பற்றிய விவரங்களைச் சொல்ல வேண்டும் என்று மனதிற்குள் எண்ணிக் கொண்டாள்.

ஐந்தாம் அத்தியாயம்

ஹரிபுரா காங்கிரஸ்

ராகவனும் சீதாவும் வீட்டு வாசலுக்கு வந்தபோது உள்ளே கலகலவென்று குழந்தையின் சிரிப்புச் சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது. உள்ளே சென்றதும் சூரியா வஸந்திக்கு விளையாட்டுக் காட்டிச் சிரிக்கப் பண்ணிக் கொண்டிருப்பதைப் பார்த்தார்கள்.

"ஓஹோ! அம்மாஞ்சியா? எப்போது வந்தாய்?" என்று சீதா குதூகலத் தொனியில் கேட்டாள்.

"வந்து அரைமணி யாச்சு, அத்தங்கா! நீங்கள் திரும்பி வருவதற்கு ரொம்ப நாழிகையாகுமோ என்னமோ என்று எண்ணிக் கொண்டிருந்தேன். மாப்பிள்ளை, ஸார்! வஸந்தி உங்கள் பேரில் குறை சொல்கிறாள்! பாட்டியை ஒண்டியாக விட்டுவிட்டு நீங்கள் எங்கேயோ தொலைந்து போய்விட்டீர்களாம்! பாட்டியைப் பார்த்துக் கொள்வதற்காக வஸந்தி வீட்டிலேயே இருக்கிறாளாம்! எப்படி யிருக்கிறது கதை!" என்றான் சூரியா.

ராகவனுக்குக் கூட சிரிப்பு வந்து விட்டது. வஸந்தியைத் தூக்கிக் கொண்டு, "துஷ்டப் பெண்ணே! அப்படியா நீ சொன்னாய்?" என்று பொய்க் கோபத்துடன் கேட்டான்.

"அப்படித்தான் சொன்னேன்! பின்னே என்னை ஏன் விட்டுத்துப் போனே?" என்றாள் வஸந்தி.

"அம்மாஞ்சி! காங்கிரஸ் எப்படி நடந்தது?" என்று சீதா கேட்டாள்.

"பிரமாதமாக நடந்தது!" என்றான் சூரியா.

"உன் அம்மாஞ்சி போயிருக்கிற போது பிரமாதமாக நடக்காமல் எப்படி நடக்கும்?" என்றான் ராகவன்.

"காங்கிரஸ் நடந்ததைப் பற்றிக் கதை கதையாகச் சூரியா சொல்கிறான். முதலிலே எல்லாரும் உட்கார்ந்து சாப்பிடுங்கள். சமையல் ஆறிப் போகிறது. அப்புறம் சாவகாசமாக உட்கார்ந்து கதையைக் கேட்கலாம்!" என்றாள் காமாட்சி அம்மாள்.

பெஞ்சிகளில் ஒன்றில் ஒரு பார்ஸி கனவானும் அவர் மனைவியும் உட்கார்ந்திருந்தார்கள். அவர்களுடைய இரு குழந்தைகள் புல் தரையில் ஓடியாடுவதைப் பார்த்து அவர்கள் மகிழ்ந்து கொண்டிருந்தார்கள்!

"வஸந்தியையும் அழைத்துக் கொண்டு வந்திருக்கலாம். இங்கே ஓடி விளையாடுவாள்!" என்றாள் சீதா.

"இவ்வளவு தூரம் அவளால் நடக்க முடியுமா? அல்லது அவளைத் தூக்கிக் கொண்டுதான் வரமுடியுமா? காரிலே தான் அழைத்துக் கொண்டு வர வேண்டும்!" என்றான் ராகவன்.

"ஆமாம்" என்றாள் சீதா. சற்றுப் பொறுத்து, "அம்மாவையும் குழந்தையையும் அழைத்துப்போய் டில்லி அதிசயங்களையெல்லாம் காட்ட வேண்டாமா?" என்று கேட்டாள்.

"காட்ட வேண்டியதுதான். ஆனால் வஸந்திக்கு இந்த வயதில் ஒன்றும் தெரியாது. ஐந்து வயதாவது ஆனால் தான் பார்க்கிற விஷயம் மனதில் தங்கும். அம்மாவுக்கு ஊர் சுற்றுவதில் ஆசை கிடையாது. 'கோவில் இல்லை, குளம் இல்லை. மசூதியையும் மண்ணாங் கட்டியையும் பார்த்து எனக்கு என்ன ஆகவேண்டும்?' என்கிறாள். ஆனாலும் நாளைக்கு ஞாயிற்றுக்கிழமையாதலால் குதுப்மினருக்கும் கோட்டைக்கும் உங்கள் எல்லாரையும் அழைத்துப் போகலாமென்று எண்ணிக் கொண்டிருக்கிறேன்" என்றான் ராகவன்.

இதைக் கேட்ட சீதா, வீட்டிலிருந்து புறப்படும்போது ஏற்பட்ட மனச்சோர்வு நீங்கிக் குதூகலமடைந்தாள்.

"அம்மாவுக்குப் பிடித்தாலும் பிடிக்காவிட்டாலும் எனக்கு அதையெல்லாம் மறுபடி பார்க்க வேண்டும் போலிருக்கிறது! ஆமாம்; தாஜ் மகாலுக்கு எப்போது போகிறது? முதல் முதல் நாம் இங்கு வந்தபோதே அழைத்துப் போவதாகச் சொன்னீர்கள். அதற்குள் சிறைப்பிரயாணம் வந்து விட்டது; ஞாபகம் இருக்கிறதா?" என்றாள் சீதா.

"ஞாபகம் இல்லாமல் என்ன? அதைப் பற்றியும் யோசித்துக் கொண்டுதானிருக்கிறேன். தாஜ் மகாலுக்குப் போவதாயிருந்தால் பௌர்ணமியன்று போக வேண்டும். அப்போது அதன் அழகை நன்றாய் அநுபவிக்கலாம்!" என்றான் ராகவன்.

"ஆமாம்; நிலா வெளிச்சத்தில் தாஜ் மகாலைப் பார்த்தால் தேவலோகத்து மேனகையின் மாளிகை மாதிரி இருக்கும் என்று ஒரு தடவை நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள்."

"ஆமாம்; பகலிலே தாஜ் மகாலைப் பார்த்தால் பளிங்குக் கல் மாளிகையாகத் தோன்றும்; நிலா வெளிச்சத்தில் பார்த்தால் பூரண சந்திரனுடைய கிரணங்களைக் கொண்டே கட்டியதாகத் தோன்றும்!"

"ஏன், ஸார்! அடுத்த பௌர்ணமிக்கே போய் வரலாமே? என்ன சொல்லுகிறீர்கள்?"

"பார்க்கலாம்!"

"தாஜ் மகாலுக்குப் போனால் அம்மாவையும் வஸந்தியையும் அழைத்துக் கொண்டு தானே போக வேண்டும்?"

இதற்கு ராகவன் பதில் சொல்லவில்லை. அவனுடைய மனது வேறு எங்கேயோ அதற்குள் போய்விட்டதாகத் தோன்றியது.

சூரியாஸ்தமனமாகி இருள் சூழ்ந்து வந்தது. புதுடில்லிக்குச் சோபை அளித்த ஆயிரக்கணக்கான மின்சார தீபங்கள் ஒளிரத் தொடங்கின. அங்கேயிருந்து பார்க்கும்போது நாலாபுறத்திலும் பச்சைப் பசும் மரங்களின் இடையிடையே அந்த மின்சார தீபங்கள் ஒளிர்ந்தது அற்புதமான காட்சியாயிருந்தது.

அப்போது பனிக்காலம் முடியும் சமயம். இலேசாகப் பனி விழத் தொடங்கியது. சீதாவின் உள்ளம் அச்சமயம் குளிர்ந்திருந்ததுபோல் உடம்பும் குளிர்ந்தது.

இருவரும் பசும்புல் தரையிலிருந்து எழுந்து வீடு நோக்கி நடந்தார்கள். திரும்பி வரும்போது தூரம் அதிகமாயிருப்பது போலத் தோன்றியது.

கிட்டத்தட்ட வீட்டுக்குச் சமீபம் வந்து விட்டார்கள். வீட்டுச் சாலைக்குத் திரும்பவேண்டிய இடத்தில் சாலை ஓரத்து மேடையில் அவர்கள் வந்து கொண்டிருந்தார்கள். முதலில் வந்த சீதா திடுக்கிட்டு இரண்டு ஒரு கணம் நின்றாள்; ஒரு அடி பின்வாங்கினாள். இதன் காரணம் அவளுக்கு எதிரில் ஒரு பெரிய மரத்தோரமாகக் கையில்

யெல்லாம் பார்த்துப் பேசி ஒவ்வொருவரையும் தனித்தனியாக விசாரிப்பார்; உற்சாக மூட்டுவார். அவர்களிடம் தேசம் என்ன எதிர்பார்க்கிறது என்பதையும் அவர்கள் கடமை என்ன என்பதையும் அழகாக எடுத்துச் சொல்லுவார்.

பிரிகேடியர் உஸ்மான் வீரராகவே வளர்ந்து வீரராகவே வாழ்ந்து வீர மரணம் எய்தினார். எதிரியின் குண்டு மார்பிற் புகுந்து போர்க்களத்தில் அவர் கீழே சாய்ந்த போது கூட அவருக்கு வீர உணர்ச்சி குன்றவில்லை. "நான் பிழைக்க மாட்டேன்; நீங்கள் தளராதீர்கள்! ஒரு அங்குலம் கூடப் பகைவர்களுக்கு விட்டுக் கொடுக்காதீர்கள்!" என்று சொல்லிவிட்டு அவர் வீர சொர்க்கம் புகுந்தார்.

வீர அபிமன்யு ஒரு மூர்த்தண்யமான போருக்கு மத்தியில் பகைவர் அம்பினால் வீர மரணம் எய்திய கதையை ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக கோயில் மண்டபங்களிலும் தெருத்திண்ணைகளிலும், சத்திரங்களிலும் சாவடிகளிலும் படிக்கக் கேட்கிறோம்.

அம்மாதிரியே பிரிகேடியர் உஸ்மானது வாழ்க்கை வரலாறும் போர்க்களத்தில் அவர் வீர சொர்க்கம் புகுந்ததும் பல்லாண்டு பல்லாண்டாக நம் தேச மக்களால் பாராட்டப்படும் என்பதில் ஐயமில்லை.

பிரிகேடியரின் பிரேத ஊர்வலத்தில் பிரதம மந்திரி நேருவும் கவர்னர் ஜெனரல் ராஜாஜியும் இன்னும் பல அரசாங்க உத்தியோகஸ்தர்களும் கலந்து கொண்டார்கள். ராணுவ மரியாதையுடன் அவரை அடக்கம் செய்தபோது டில்லிப் பட்டணமே திரண்டு வந்து அந்த இணையற்ற வீரருக்கு இறுதி மரியாதையைச் செலுத்தியது.

நமது பிரதம மந்திரி ஜவாஹர்லால்நேரு பிரிகேடியர் உஸ்மானின் மரணத்துக்கு அநுதாபச் செய்தி தெரிவிக்கையில் "தளபதி உஸ்மானின் மரணம் கேட்க மிகவும் வருத்தமாயிருக்கிறது. ஆனால் அந்த வீரர் இப்போது மரணத்தைக் கடந்த மகா சிரஞ்சீவியாகி விட்டார். அவரது பூத உடலின் மறைவு குறித்து வருந்துவது தவறு!" என்று சோகமும் வீரமும் தொனிக்கக் கூறியிருக்கிறார்.

"பூதலம் உற்றிடு வரையும்
அறப் போர்விறல் யாவும்
மறப்புறும் வரையும்...."

வீர தளபதி பிரிகேடியர் உஸ்மானின் பெயர் அழியாச் சுடராக விளங்கும்.

தால் நன்றி தெரிவிக்க வேண்டிய அவசியமே இல்லை!" என்றார்.

ஒரு அதிசயம். உஸ்மானிடம் புகை பிடிக்கும் வழக்கமோ, மதுபானப் பழக்கமோ கிடையாது. இன்னொரு நம்ப முடியாத அதிசயம்! தளபதி உஸ்மான் சைவ உணவையே உட்கொண்டார். மாமிச உணவை அவர் தொட்டுப் பார்த்ததில்லை.

பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் இரண்டாகப் பிரிவினை ஏற்பட்டது. அப்பொழுது பிரிகேடியர் உஸ்மானும் அவரைச் சேர்ந்த முஸ்லிம் குரூப்புகளும் இந்திய யூனியனில் சேரவே விரும்பினர். எப்படியாவது உஸ்மான் பாகிஸ்தானில் சேர்ந்துவிட வேண்டும் என்பதற்காகப் பாகிஸ்தான் எவ்வளவோ சாகஸங்கள் செய்தது. பெருந் தொகை கொடுப்பதாகப் பசப்பி அவரை வற்புறுத்தியது. ஆனால் பிரிகேடியர் உஸ்மான் சிறிதும் தளர்ந்து கொடுக்காமல் பிடிவாதமாக இந்திய யூனியனிலேயே சேர்ந்தார்.

அஞ்சாத ஆண்மையும் வீரமும் வாய்ந்த தளபதி உஸ்மான் அகதிகளுக்குக் கண்கண்ட தெய்வமாக விளங்கினார். நௌஷேராவில் வசித்த பல்லாயிரம் அகதிகளுக்கு இன்னும் பத்திரமான இடத்துக்குப் போகும்படி அரசாங்க உத்தரவு வந்தது. அத்தனை பேரும் ஒருமுகமாக "எங்கள் பிரிகேடியர் உஸ்மான் இருக்கிற வரையில் எங்களுக்குப் பயமே கிடையாது!" என்று கூறி அவ்விடத்திலிருந்து நகர மறுத்து விட்டனர்.

இந்தியா துண்டாடப் பட்டதில் பிரிகேடியர் உஸ்மானுக்கு உண்டான வருத்தம் கொஞ்சமல்ல. 'ஒரு தேசத்திலே பிறந்தோம். ஆனால் ஒரு தேசத்து மக்களாக, ஒன்றாக ஒற்றுமையுடன் வாழக் கொடுத்து வைக்கவில்லையே!" என்று அவர் மனம் வருந்தினார்.

ஒரு பெரிய பதவியை வகிப்பதற்கு வேண்டிய அத்தனை நற்குணங்களும் வீரர் உஸ்மானிடம் அமைந்திருந்தன.

அவரிடம் வேலை செய்த சிப்பாய் ஒருவர் அவரைப் பற்றிக் கூறுவதைக் கேளுங்கள்:

"அவர் எப்பொழுது தூங்குகிறார் என்பதே எங்களுக்குத் தெரியாது. யுத்த களத்தில் எந்தப் பகுதியில் நெருக்கடி அதிகமாயிருக்கிறதோ அங்கே யெல்லாம் எங்கள் தளபதியைக் காணலாம்."

அவகாசம் கிடைக்கும் சொற்ப நேரத்திலும் கூட அவர் ராணுவ முகாம் முகாமாகச் சென்று தம் தலைமையின் கீழ் இருந்த வீரர்களை


சுதந்திர இந்தியாவின் இந்திய கவர்னர் ஜெனரல்

சாப்பிட்டுவிட்டு உட்காரும் ஹாலுக்கு வந்த பிறகு சூரியா ஸ்ரீ சுபாஷ் சந்திர போஸின் தலைமையில் நடந்த ஹரிபுரா காங்கிரஸ் விமரிசைகளை வர்ணித்தான். ராகவன் கூட வழக்கமான அலட்சியமோ வெறுப்போ காட்டாமல் சுவாரஸ்யமாகக் கேட்டுக் கொண்டு வந்தான்.

கதையை முடித்து விட்டுச் சூரியா "எல்லாம் நன்றாய்த்தான் நடந்தது. ஆனால் எங்களுக்கு மட்டும் அவ்வளவு திருப்தி இல்லை!" என்றான்.

"'எங்களுக்கு மட்டும்' என்றால், என்ன அர்த்தம்? 'நாங்கள்' என்பது யார்?" என்று ராகவன் கேட்டான்.

"சோஷலிஸ்ட் பார்ட்டியைச் சொல்லுகிறேன். நான் அந்தப் பார்ட்டியைச் சேர்ந்தவன்" என்றான் சூரியா.

"'சோஷலிஸ்ட் பார்ட்டி' என்றால் என்ன?" என்று சீதா கேட்டாள்.

சூரியா பதில் சொல்வதற்குள் ராகவன், "சோஷலிஸ்ட் பார்ட்டி என்றால் பணக்காரன் ஏழை, புத்திசாலி, மடையன், நல்லவன், கெட்டவன், கிழவன், குமரன், மனிதன், மாடு எல்லாவற்றையும் சரிமட்டமாக்கிச் சமுத்திரத்தில் அமுக்கிவிடுவது என்று அர்த்தம்!" என்றான்.

"அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. அத்தங்கா நீ பயந்துபோய் விடாதே! மாப்பிள்ளை தமாஷுக்காகச் சொல்கிறார்" என்றான் சூரியா.

"போகட்டும்; காங்கிரஸில் இப்போது மகாத்மா காந்தியின் செல்வாக்கு எப்படியிருக்கிறது?" என்று ராகவன் கேட்டான்.

"மகாத்மாவின் செல்வாக்குக்கு என்ன குறைவு? அவருடைய செல்வாக்கினால்தானே எங்கேயோ ஒரு மூலையில் உள்ள கிராமத்தில் இந்த வருஷம் காங்கிரஸ் நடந்தது!"

"காந்தியின் போக்கிலேயே விட்டால் இந்தியா தேசத்தில் ஆண்டிப் பரதேசிகள்தான் மிஞ்சுவார்கள். எல்லாரும் கையில் கப்பறையை எடுக்க வேண்டியதுதான். ஆனால் பிச்சை போட யாரும் இருக்க மாட்டார்கள். காந்தியின் செல்வாக்கு இருக்கிற வரையில் இந்தியா ஒரு நாளும் உருப்படப் போவதில்லை" என்று ராகவன் மிகவும் கோபமாகப் பேசினான்.

"வேண்டாமடா, ராகவா! காந்தியைப் பற்றி நீ இப்படியெல்லாம் பேசாதே! காந்தியை மகான் என்றும் அவதார புருஷர் என்றும் ஜனங்கள் சொல்லுகிறார்களே?" என்றாள் காமாட்சி அம்மாள்.

"ஜனங்கள் சொல்வதற்கென்ன? குருட்டுத்தனமாக எதையாவது சொல்வார்கள்! சூரியா! மகாத்மாவின் செல்வாக்கைப் பற்றி உன் அபிப்பிராயம் என்ன?" என்று ராகவன் கேட்டான்.

"மகாத்மாவைப் பற்றி உங்களைப் போல் நான் நினைக்கவில்லை. அவர் மகான்; இந்தியா தேசம் எவ்வளவோ அவரால் நன்மை அடைந்திருக்கிறது. ஆனாலும் சில விஷயங்களில் அவருடன் மாறுபடுகிறோம். உதாரணமாக, சுதேச மன்னர்களின் விஷயத்தில் மகாத்மா மிக்க பிற்போக்காயிருக்கிறார். அவர்களைப் பற்றிக் காங்கிரஸில் பேசவே கூடாது என்கிறார். நாங்களோ சுதேச மன்னர்கள் எல்லாரையும் அடியோடு ஒழித்துக் கட்டவேண்டும் என்று சொல்லுகிறோம்" என்றான் சூரியா.

"தயவு செய்து நீங்கள் இரண்டு பேரும் மகாத்மா காந்தியைப் பற்றி ஒன்றும் பேசாதீர்கள். எனக்குக் கேட்கக் கஷ்டமாயிருக்கிறது. 'மகாத்மா காந்திதான் தெய்வம்' என்று அம்மா சொல்லியிருக்கிறாள். அதற்கு விரோதமாக யார் என்ன சொன்னாலும் நான் கேட்க மாட்டேன்" என்றாள் சீதா.

"சரியாப் போச்சு; நீ வேறே அரசியல் விஷயத்தைப் பற்றி பேச வந்துவிட்டாயா?" என்றான் ராகவன்.

"அத்தங்கா! மகாத்மா காந்தி தெய்வமாகவே இருக்கட்டும். தெய்வத்திடமும் வரம் கேட்பது உண்டல்லவா? அந்த மாதிரிதான் நாங்களும் மகாத்மாவிடம் கோரிக்கை செய்கிறோம்" என்றான் சூரியா.

"தெய்வம் என்று ஒப்புக் கொண்டால் அப்புறம் வரம் கேட்பது என்ன? எந்தச் சமயம் என்ன கொடுக்க வேண்டும் என்று தெய்வத்துக்குத் தெரியாதா? நாம் கேட்டுத்தானா கொடுக்கவேண்டும்?" என்றாள் சீதா.

இந்தக் கேள்வி ராகவனுக்கு வியப்பையளித்தது. "சூரியா! உனக்

கும் உன் அத்தங்காவுக்கும்தான் சரி. அவளுடைய கேள்விக்குப் பதில் சொல்லு, பார்க்கலாம்!" என்றான்.

"அத்தங்காளின் சாமர்த்தியம் எங்களுக்கெல்லாம் அப்போதே தெரியுமே! அதனால்தான் லலிதா 'அத்தங்கா! அத்தங்கா!' என்று இன்றைக்கும் உயிரை விட்டுக் கொண்டிருக்கிறாள். இராத்திரி தூக்கத்திலேகூட அத்தங்காளைப் பற்றி உளறுகிறாளாம்!" என்றான் சூரியா.

இதிலிருந்து ராஜம்பேட்டையிலும் தேவபட்டணத்திலும் உள்ள பந்து ஜனங்களைப் பற்றிப் பேச்சு ஏற்பட்டுச் சிறிது நேரம் நடந்தது.

"சூரியா! ஹரிபுராவுக்கு நீ பம்பாய் வழியாகப் போயிருக்கலாமே? டில்லி வழியாக வந்தது தலையைச் சுற்றி மூக்கைத் தொடுவதுபோல் அல்லவா இருக்கிறது?" என்று ராகவன் கேட்டான்.

"உங்கள் தாயாரிடம் நான் வடக்கே போகப் போவதாகச் சொன்னேன். 'எங்களை டில்லியில் கொண்டுவிட்டு விட்டுப் போயேன்' என்று சொன்னார். அதனால்தான் வந்தேன்!"

"நான் என்னத்தைக் கண்டேன்? வடக்கேயென்றால் டில்லிக்குப் பக்கத்திலே இருக்கும் என்று நினைத்தேன்!" என்றாள் காமாட்சி அம்மாள்.

"இங்கேயுள்ளவர்களும் அப்படித்தான். மதராஸ்காரன் என்றால் இராமேசுவரத்தைப் பற்றி விசாரிப்பார்கள். சென்னை மாகாணம் முழுவதும் ராமேசுவரத்துக்குப் பத்து மைல் சுற்றளவில் இருப்பதாக இவர்களுக்கு எண்ணம்!" என்றான் ராகவன்.

"ராமேசுவரம் என்றதும் ஞாபகம் வருகிறது. ஏண்டா, அப்பா, ராகவா! என்னைக் காசிக்கு எப்போது அழைத்துக் கொண்டு போகிறாய்?" என்று காமாட்சியம்மாள் கேட்டாள்.

"ஆகட்டும், ஆகட்டும். மெள்ள மெள்ளப் பார்க்கலாம் முதலில் டில்லியைப் பார்த்துவைப்போம். நாளைக்கு உங்களை யெல்லாம் அழைத்துப் போய் டில்லியைச் சுற்றிக் காட்டலாம் என்று எண்ணி யிருக்கிறேன்."

"சூரியா! நீ டில்லியைச் சுற்றிப் பார்த்திருக்கிறாயா?" என்று அந்தச் சரியான சமயத்தில் சீதா கேட்டாள்.

"இன்னும் பார்க்கவில்லை. நாளைக்குத்தான் சுற்றிப் பார்க்கலாமென்று திட்டம் போட்டிருக்கிறேன்."

"பழம் நழுவி வாயில் விழுந்தது போலாயிற்று. எங்களுடன் நீயும் வா! பேச்சாவது சுவாரஸ்யமாயிருக்கும்!" என்றான் ராகவன்.

• • •

அன்றிரவு சீதா ஒரே உற்சாகமாகயிருந்தாள். சூரியாவிடம் ராகவனுக்கு இருந்த அலட்சிய பாவமும் வெறுப்பும் நீங்கி அவனுடன் சுமுகமாகப் பேசியதையும் அவனை டில்லி சுற்றிப் பார்க்க வரும்படி அழைத்ததையும் நினைத்து நினைத்து மகிழ்ந்தாள்.

தூங்குவதற்கு முன்னால் அவள், உலாவச் சென்று திரும்பி வரும்போது சாலை முனையில் பார்த்த ஸ்திரீயைப் பற்றி ராகவனிடம் சொல்ல வேண்டுமென்று உத்தேசித்திருந்தாள். ஆகையால் "இன்றைக்குச் சாலை முனையில் ஒரு பொம்மனாட்டியைப் பார்த்தோமே!..." என்று ஆரம்பித்தாள்.

"மறுபடியும் உன் 'பொம்மனாட்டி' கதையை ஆரம்பித்து விட்டாயா!" என்றான் ராகவன்.

அப்போது சீதாவின் மனதில் இருந்த ஸ்திரீ வேறு. ராகவன் எண்ணிக் கொண்ட ஸ்திரீ வேறு. ஆனாலும் ராகவன் அவ்விதம் வெடுக்கென்று பேசியதும் சீதா சிறிது தயங்கித் தனக்குள் சிந்தித்துப் பார்த்தாள். சந்தோஷமாயிருக்கிற சமயத்தில் வேண்டாத விஷயத்தைப் பற்றிப் பேசித் தொந்தரவை விலைக்கு வாங்கிக் கொள்வானேன் என்று எண்ணிப் பேசாமல் இருந்துவிட்டாள். எனினும் அவளுடைய மனதிலிருந்து கையில் கத்தியுடன் சாலை முனையில் நின்ற ஸ்திரீயின் தோற்றத்தை அடியோடு அகற்ற முடியவில்லை. அவள் எப்போது டில்லிக்கு வந்தாள், எதற்காக வந்தாள், என்ன நோக்கத்துடன் கையில் கத்தியுடன் அங்கே நின்று கொண்டிருந்தாள் என்கிற எண்ணங்கள் அடிக்கடி தோன்றிக் கொண்டிருந்தன. அந்த ஸ்திரீயைப் பற்றி நினைவு வந்தபோதெல்லாம் மனதில் ஏதோ ஒரு மர்மமான பயமும் தோன்றிக் கொண்டிருந்தது.

19 வது வாரம்

ஜெமினி

சந்திரலேகா

இதுவரை கண்டிராத அற்புத சித்திரம்



இப்பொழுது சென்னையில்

வெலிங்டன், ஸரஸ்வதி

இரு தியேட்டர்களிலும் மற்றும் ராஜதானி பூராவும் அநேக தியேட்டர்களிலும் நடைபெறுகிறது

பிரிகேடியர் உஸ்மான்

சோமாஸ்

"யானை இறந்தாலும் ஆயிரம் பொன், இறந்தாலும் ஆயிரம் பொன்" என்னும் பொன்மொழி எவ்வளவு உண்மையானது என்பது காஷ்மீர்ப் போர்க்களத்தில் தெளிவாகிறது.

'தளபதி உஸ்மானை உயிருடனே பிணமாகவோ, பிடித்துக் கொடுப்பவர்களுக்கு ரூபாய் ஐம்பதினாயிரம் பரிசு" என்று காஷ்மீர் ஆக்கிரமிப்பாளர்கள் விளம்பரம் செய்தனர். ஆனால், பாவம்! ஒருவருக்கும் அந்தப் பரிசு கிடைக்கவில்லை.

ஐக்கிய மாகாணத்தைச் சேர்ந்த ஆஜம்கட் ஜில்லாவிலே பீபூரில் உஸ்மான் பிறந்தார். காசி ஹரிச்சந்திரா ஹைஸ்கூலில் இவருக்குக் கல்வி ஆரம்பமாயிற்று. பிறகு அலஹாபாத் க்வீன்ஸ் காலேஜில் சேர்ந்து படித்தார். கல்லூரிப் படிப்பு முடிந்த பின்பு சாண்ட்ஹர்ஸ்ட் ராணுவக் கலாசாலையில் சேர்ந்து திறமை வாய்ந்த ராணுவ அதிகாரியானார்.

1935ம் வருஷத்திலிருந்து உஸ்மான் இந்திய ராணுவத்தில் சேவை செய்து வருகிறார். அவரது நீண்ட கால சேவையில் அவர் பல்வேறு அரங்கங்களிலிருந்தும் பல்வேறு முனைகளிலிருந்தும் போர்புரிந்திருக்கிறார்.

ராணுவ சேவைக்கு இன்றியமையாத கம்பீரமான கண்டிப்பும் கறாரும் உஸ்மானிடம் எவ்வளவு இருந்ததோ அவ்வளவு அவர் இருதயத்தில் அன்பும் அனுதாபமும் இருந்தன. சோம்பேறித்தனம் என்னும் பதமே அவர் அகராதியில் கிடையாது. எந்த முனைக்கு எந்தப் படையை அனுப்பலாம் என்று சதா திட்டம் போட்ட வண்ணம் இருப்பார். வேலை நேரம் தவிர மற்ற நேரங்களில் எல்லாம் தூய கதருடை யணிந்து இன்முகத்துடன் விளங்குவார்.

தளபதி உஸ்மான் குழந்தையுள்ளம் படைத்தவர். குழந்தைகளைக் கண்டாலே அவரும் ஒரு குழந்தையாகி விடுவார். வீடிழந்து வாசலிழந்து, சொத்தை யிழந்து சோர்வடைந்த வந்திருக்கும் அகதிகளின் குடும்பங்களிலிருந்து இளம் பாலகர்களைச் சேர்த்து, 'பாலக சேனை' என்ற படையொன்றை நிர்வகித்தார். அந்தப் பிஞ்சுச் சிறுவர்களின் நெஞ்சில் வீரமும் தீரமும் போர்க்களத்தில் புறமுதுகு காட்டாத ஆண்மையும் உண்டாகும்படி ராணுவக் கல்விப் பயிற்சி அளித்து வந்தார்.



சாவா, வாழ்வா என்னும் கொடிய போராட்டம் ஈடுபட்டிருக்கும் போது கூட அவர் மனம் அவரது கடமையையும் வலியுறுத்திக் கொண்டிருக்கும். போர்க்களத்தில் அவருக்குக் கிடைக்கும் இமைப்பொழுது அவகாசத்தில் பாலக சேனைக்கு ஓடோடியும் வந்து பாலகர்களிடம் அளவளாவி விட்டுச் செல்வார். கடைசியில் பிரிகேடியர் அவர்களிடம் பிரியா விடை கொள்ளும் போது கண்கள் நீர் மல்க அவருக்கு விடை தருவார்கள்.

ஒரு சமயம் தளபதி உஸ்மான் ராணுவ ஜீப் காரில் போய்க் கொண்டிருந்தார். அப்பொழுது சமீபத்தில் யாரோ ஓவென்று அழும் குரல் கேட்டது. உடனே ஜீப் கார் நின்றது. அழுகைச் சத்தம் வந்த திசையை நோக்கி உஸ்மான் விரைந்தார்.

கிணற்றங்கரைக்கு அருகில் ஒரு பெண்மணி நின்று அழுது கொண்டிருந்தாள். அவள் குழந்தை கிணற்றில் விழுந்து விட்டது. ஒரு நொடியில் விஷயத்தை புரிந்து கொண்ட பிரிகேடியர் உஸ்மான் அடுத்த கணம் கிணற்றில் குதித்து, மூச்சுத் திணறிக் கொண்டிருந்த குழந்தையைக் காப்பாற்றிக் கரைசேர்த்தார். உணர்ச்சிப் பெருக்கில் நன்றி தெரிவித்த அந்தப் பெண்மணியிடம் உஸ்மான், "அம்மா, எனக்குக் குழந்தைகளிடம் இருக்கும் அன்பை நீ அறிந்



ராணா பிரதாப் சிங்

விஷ்ணு

வீரத்துக்கும், தீரத்துக்கும், தியாகத்துக்கும் பெயர்போன மேவார் ராஜ வம்சத்திலே, பாப்பா ராவலின் பரம்பரையிலே தலை சிறந்து விளங்கியவன் ராணா பிரதாப் சிங். ராணா ஹம்மீர் சிங், ராணா கும்பகர்ணா, ராணா சங்கிராம் சிங் போன்ற மாபெரும் சுதந்திரப் பற்றுள்ள வீரர்கள் தோன்றிய வம்சத்திலே பிறந்த பிரதாப் சிங் அன்னியருடைய ஆதிக்கியத்துக்கு ஆழக் குழி தோண்டிப் புதைப்பதற்காக, அரண்மனை வாழ்வையும் அறுசுவை உண்டியையும் உதறித் தள்ளியவன். தாய்நாட்டின் சுதந்திரத்தைக் காப்பதற்காகத் தன் உடல், பொருள், ஆவி அனைத்தையும் அர்ப்பணம் செய்தவன். நாட்டுக் குடி மக்களின் விருப்பத்துக்கு இணங்க முடி சூட்டிக் கொண்டவன்.

சுக போகங்களிலே ஊறிப்போயிருந்த அவனுடைய தந்தை உதய சிங் நாட்டின் நலனை அவ்வளவாகக் கவனிக்கவில்லை. சாகும்பொழுது, தன் மூத்த பிள்ளையும் ராஜ்யத்துக்கு அடுத்த வாரிசுமான பிரதாப் சிங்கின் கையில் ஆட்சியை ஒப்படைக்கவில்லை. தன் ஆசைக் கிழத்தி ஒருத்தியின் மகனான ஜக்மல் என்பவனுக்கு அரசை அளித்துச் சென்றான்.

அவன் தந்தை அரசாண்டு வந்த காலத்திலே அக்பர் சக்கரவர்த்தி ராஜபுதனம் முழுவதையும் தன் ஆதிக்கியத்துக்கு உள்ளாக்கிக் கொண்டு விட்டார். மேவார் மட்டும்தான் எஞ்சியிருந்தது. அதையும் தனதாக்கிக் கொண்டுவிட வேண்டுமென்பது அவருடைய ஆசை.

மேவார் நாட்டு வீர மக்கள் உதய சிங்கின் அடிச்சுவட்டைப் பின்பற்றிச் சுகபோக வாழ்க்கையில் ஈடுபட்டிருந்த ஜக்மல் நாட்டை நிர்வகிக்கச் சக்தியற்றவன் என்பதை உணர்ந்து தீவிரக் கிளர்ச்சி செய்து, உரிமையாளனும் திறமைசாலியுமான பிரதாப் சிங்குக்கு முடி சூட்டி வைத்தனர்.

பிரதாப் சிங் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட காலத்தில் பெயரளவுக்குத்தான் ராஜ்யம் என்று கிடைத்ததே யொழிய, ராஜ்யமோ, பணமோ சைனியமோ ஒன்றும் இல்லை. அஞ்சா நெஞ்சம் வாய்ந்த பிரதாப் சிங் அதற்கெல்லாம் சிறிதும் கவலை கொள்ளவில்லை. தன் உணர்ச்சி மிகுந்த சொற்களால் உறங்கிக் கொண்டிருந்த மக்களைத் தட்டி எழுப்பினான். சுதந்திரத்தின் பெருமையை எடுத்துரைத்துப் பெரும் சேனை திரட்டினான். உயிரே போனாலும் சரி, அக்பருக்குத் தலை பணிவதில்லை என்று திடசங்கற்பம் செய்து கொண்டான். 'சுதந்திரம் அடையாத வரையில் அரண்மனை வாழ்வையும் அறுசுவை உண்டியையும் ஏறெடுத்துக்கூடப் பார்ப்பதில்லை. குடிசை வாழ்வு வாழ்வேன். மலர்மெத்தையில் உறங்கேன்; மண்ணில் படுத்து உறங்குவேன். இந்த மூச்சு உள்ளவரை மேவாரின் சுதந்திரத்துக்காகப் போராடுவேன்' என்று பயங்கரப் பிரதிக்ஞையும் செய்துகொண்டான். தன் வீரர்களுடைய உள்ளத்தில் அடிமைத் தளையைச் சுட்டெரிக்கும் சுதந்திரத் தீயை வளர்த்தான்.

இந்தச் சமயத்தில்தான், ஷோலாப்பூர் யுத்தத்துக்குச் சென்றிருந்த அக்பரின் சேனாபதியான ராஜா மானசிங், அக்பரின் கட்டளைப்படி அவனைப் பேட்டிகாண வந்தார். வீர ராஜபுத்திர வம்சத்தில் பிறந்து வளர்ந்து அன்னிய மதஸ்தனுக்கு அடிமைத் தொழில் புரியும் மான சிங்கைக் கண்ணெடுத்துப் பார்க்கக்கூடப் பிரதாப் சிங் விரும்பவில்லை. இருந்தாலும் பிரதாப் சிங் விருந்தினனை உபசரிப்பதற்குத் தன் பிள்ளை அமரசிம்மனை நியமித்தான். பிரதாப் சிங் தன்னை அவமதிக்கிறான் என்று ராஜா மானசிங் எண்ணினார். ஆகவே, அவர் கோபமாக, "நான் சோற்றுக்கு விக்கிப்போய் இங்கே வரவில்லை. எங்கே அந்தப் பிரதாப் சிங்? நான் அவனைப் பார்க்க விரும்புகிறேன். இந்தியச் சக்கரவர்த்தி அக்பருக்கு வலதுகையான ராஜா மானசிங்கை ஒரு குட்டி ராஜ்யத்துக்கு அதிபதியான பிரதாப்சிங் அவமதிப்பதா? இந்த மேவாரை இருந்த இடம் தெரியாமல் அடிக்கும் சக்தி இந்த மான சிங்குக்கு உண்டு என்பதை உன் தகப்பனிடம் சொல்" என்றார்.

இதைக் கேட்டுக் கொண்டே ராணா பிரதாப்சிங் உருவிய கத்தியுடன் உள்ளே நுழைந்து, "மானசிங்! உம்மைப்போல மானங்கெட்ட பிழைப்புப் பிழைப்பவன் நான் அல்ல. வீர ராஜபுத்திர ஜாதியில் பிறந்து அன்னியனுக்கு அடிமை செய்யும் உமக்குச் சக்தி எங்கிருந்து வரப்போகிறது? உம் உறவினரான சக்கரவர்த்தி

அக்பரே வந்தாலும், மேவார் காட்டு மக்களான எங்கள் கத்தி பாடம் கற்பிக்கும். இந்தப் பிரதாப சிம்மனை அன்னியன் யாரும் அடக்கியாள முடியாது. நினைவிருக்கட்டும்'' என்று கம்பீரமான குரலில் பதில் சொன்னான்.

''இருக்கட்டும். ஒரு கை பார்த்துவிடுகிறேன்'' என்று கருவிக் கொண்டு மானசிங் அவமானப்பட்டு வெளியேறினான். அக்பரிடம் சென்று ராணா பிரதாப் சிங்கைப்பற்றிக் கோள் சொல்லி மேவார் மீது போர் தொடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தான்.

ராஜதந்திரத்தில் நிபுணனான அக்பர் இரண்டாவது தடவை ராஜா பகவான்தாஸையும், மூன்றாவது தடவையாக ராஜா தோடர் மல்லையும், ராணா பிரதாப் சிங்கைப் பணிய வைப்பதற்காக அனுப்பினார். ராணா பிரதாப் சிங்கா அவர்களுடைய வார்த்தைகளுக்கெல்லாம் செவி சாய்ப்பவன்? 'யுத்த களத்தில் சந்திக்கலாம்' என்று சொல்லி அனுப்பிவிட்டான்.

ஆத்திரம் மூண்ட அக்பர் மானசிங்கின் தலைமையில் மாபெரும் சைனியத்தை மேவார் மீது ஏவிவிட்டார். போர் முறைகளை நன்கு உணர்ந்தவனான பிரதாப் சிங் ஹல்தீ பள்ளத்தாக்கை யுத்தத்துக்குத் தகுந்த இடமாகத் தேர்ந்தெடுத்தான். இரு தரப்புச் சைனியங்களும் கடும் போரில் இறங்கின.

ராணா பிரதாப் சிங் 'சேதக்' என்ற தன் குதிரை மீதேறி வீரர்களுக்கு உற்சாக மூட்டுவதிலும், எதிரிகளின் கழுத்தைத் தன் கத்திக்கு இரையாக்குவதிலும் முனைந்தான். ராணா பிரதாப் சிங்குக்கு நேருக்கு நேர் நின்று மானசிங்குடன் போர் புரிந்து பார்த்துவிட வேண்டும் என்ற ஆவல். ஆகவே வெகு அலட்சியமாகத் தன் மெய் காவலர்கள் படை சூழ, முகலாயர்களின் சைனியத்தை மின்னல் வேகத்தில் பிளந்துகொண்டு ராஜா மானசிங் இருக்குமிடத்தை அடைந்தான். யானைமீது உட்கார்ந்திருந்த ராஜா மானசிங் வீரம் மிகுந்த பிரதாப் சிங்கைக் கண்டதும் கதிகலங்கிவிட்டார். ராணா பிரதாப் சிங் ஈட்டி கொண்டு மானசிங்கைத் தாக்கலானான். ஆனால் மாபெரும் முகலாய சேனைக்கு நடுவே பிரதாப் சிங்கின் பத்துப் பதினைந்து வீரர்கள் எத்தனை நேரம் நிற்க முடியும்? பிரதாப் சிங்கின் மெய்காவலர்கள் அனைவரும் வீர சுவர்க்கம் எய்தினர். 'எசமானன் தனியனாகிவிட்டான். இனிமேல் இங்கிருந்தால் அவன் உயிருக்கு ஆபத்துத்தான்' என்பதை உணர்ந்த 'சேதக்' என்னும் அக் குதிரை வாயு வேகமாகச் சேனையைக் கிழித்துக் கொண்டு பிரதாப் சிங்கின் பிடிக்கு அகப்படாமல் ஓடிக் கீழே விழுந்து இறந்துவிட்டது.

அந்த யுத்தத்தில் பிரதாப் சிங்குக்குத் தோல்விதான். இருந்தாலும் அவன் சிறிதும் துணிவு இழக்கவில்லை. காடுகளில் மறைந்து மறுபடியும் போருக்காகப் படை திரட்டலானான். எதிரிகளின் சேனை அங்கும் அவனை நிம்மதியாக இருக்கவிடவில்லை. ஒருநாள் இருந்த இடத்தில் ஒருநாள் இல்லாமல் காடுகளில் இங்கும் அங்கும் அலைந்து சேனை திரட்டுவதில் ஈடுபட்டான். தன் தாய்நாட்டுக்காக அவன் எந்தவிதமான கஷ்டங்களையும் அனுபவிக்கத் தயங்கவில்லை. காட்டில் உள்ள 'பீல்' ஜாதி மக்கள் அவனுக்குச் சுதந்திரப் போரில் சகலவிதமான உதவிகளும் செய்தனர்.

எத்தனையோ நாட்கள் அவனுடைய குடும்பம் பட்டினி கிடக்க நேர்ந்தது. அவனுடைய சின்னஞ் சிறு குழந்தைகள் படாத கஷ்டங்கள் எல்லாம் பட்டன. அன்ன ஆகாரமின்றிக் கல்லிலும் முள்ளிலும் சிறு குழந்தைகள் படும் கஷ்டத்தைக் காணும்பொழுது 'பாதுஷா அக்பருடன் சமாதானம் செய்துகொண்டுவிட்டால் என்ன?' என்றுகூட அவனுக்



குத் தோன்றியது. தைரியத்தை இழக்தறியாத பிரதாப் சிங்கினுடைய நெஞ்சமே தைரியத்தை இழந்தது. அக்பருக்குச் சமாதானம் செய்து கொள்ளுவதாகக் கடிதம்கூட எழுதிவிட்டான். ஆனால் அடுத்த கணமே அவனுடைய மனம் மாறிவிட்டது. 'உயிரே போனாலும் சரி; நாட்டின் நலன் தான் முக்கியம். அன்னியன் ஆட்சிக்கு உட்படுவது பாபம்' என்று மறுபடியும் தீவிரமாக யுத்தத்தில் இறங்கினான். ஆனால் இந்தத் தடவையும் வெற்றி கிடைக்கவில்லை.

'இனிமேல் போரிட்டு நாம் சுதந்திரம் பெற முடியாது. சுதந்திர தேவிக்கு நம்மேல் பிரியமில்லை போலும்' என்றெண்ணித் தாய்நாட்டை விட்டு வெளியேறி விடுவது என்று தீர்மானித்தான். கடைசியாக அவன் தாய்நாட்டுக்கு வணக்கம் செலுத்திவிட்டுப் புறப்படத் தயாரானான்.

அப்பொழுது அவன் ராஜ்யத்தில் பொக்கிஷ மந்திரியாயிருந்த பாமா ஷா தன் வாழ்நாளில் சம்பாதித்த சொத்தையெல்லாம் கொண்டு வந்து அவன் காலடிகளில் வைத்துத் தாய்நாட்டின் சுதந்திரப் பணிக்காக ஏற்றுக்கொள்ளுமாறு சொன்னார். பிரதாப் சிங் அவருடைய தியாகத்தை மெச்சினான். அந்த பணத்தைக் கொண்டு பெரும் படை திரட்டினான்.

அவனுடைய வீரர்களும், 'இந்த உடலில் உயிருள்ளவரை, உடம்பில் ரத்தம் ஓடும் வரை, விரல்களில் நகம் இருக்கும் வரை, வாய்களில் பற்கள் இருக்கும்வரை எதிரியைக் கடித்துக் கிழித்தாவது சுதந்திரத்துக்காகப் போராடுவோம்' என்று பிரதிக்ஞை செய்துகொண்டு போரில் இறங்கினார்கள்.

ராணா பிரதாப் சிங்கும், உணர்ச்சி மேலிட்டு, 'ஹர ஹர மகாதேவ்! பகவான் ஏகலிங்க் கீ ஜே'' என்று கோஷமிட்டுக்கொண்டு எதிரிகளை வீராவேசத்துடன் எதிர்த்துப் போராடினான். இந்தத் தடவை அவனுக்கு வெற்றி கிட்டியது. ஒரு வருஷ காலத்துக்குள் எதிரிகளின் வசப்பட்டிருந்த தன் ராஜ்யத்துக் கோட்டைகளில் முப்பத்திரண்டைத் திரும்பவும் கைப்பற்றிவிட்டான்.

தன் வாழ்க்கையின் பெரும் பாகத்தைச் சுதந்திர யுத்தத்துக்காக அர்ப்பணம் செய்த மகாராணா பிரதாப் சிங் இந்திய சரித்திரத்தில் அழியாப் புகழ் பெற்றுவிட்டான்.

பிரிவுபசாரம்!



நேதாஜி போஸ்

“சுபாஷ் சந்திர போஸாகிய நான் இறைவன்மீது ஆணையாக என்றைக்கும் இந்தியாவின் ஊழியனாகவே இருந்து வருவேன். என்னுடன் பிறந்த நாற்பதுகோடி சகோதர சகோதரிகளின் நன்மையைக் கவனிப்பதே எனது முதற் கடமையாக இருக்கும். இந்தியா சுதந்திரம் அடைந்த பின்னரும், அந்தச் சுதந்திரத்தைக் காப்பாற்ற என் உடலின் கடைசிச் சிறு துளி இரத்தம் இருக்கும் வரை ஊழியம் செய்வேன்.”

இவ்வாறு 1943-ம் வருஷம் அக்டோபர் மாதம் 21-ந் தேதி சிங்கப்பூரில் ஆஸாத் ஹிந்த் சர்க்காரைத் தற்காலிகமாக நிறுவிய போது, சுபாஷ் சந்திரர் விசுவாசப் பிரமாணம் எடுத்துக் கொண்டார். உண்மையில் இந்தப் பிரமாணத்தை அவர் 1921-ம் வருஷமே எடுத்துக் கொண்டுவிட்டார் என்று சொல்லலாம். இதற்கு வேறு யாரும் சாட்சி சொல்ல வேண்டியதில்லை; அவருடைய சரித்திரமே சாட்சி சொல்லும்.

• • •

காந்தி மகான் மூட்டிவிட்ட ஒத்துழையாமைத் தீ தேசமெங்கும் கொழுந்துவிட்டு எரிந்துகொண்டிருந்த காலம் அது. அதிகார வர்க்கத்தின் அட்டூழியங்களால் ஆத்திரமும் ஆவேசமும் அடைந்திருந்த ஜனங்கள் ஒத்துழையாமை இயக்கத்தில் அதி தீவிரமாக ஈடுபட்டனர். சர்க்கார் அளவுக்கு மீறிய அடக்குமுறைகளைக் கையாண்டது. இந்திய அரசியல் வானில் கொந்தளிப்பு மிகுந்திருந்த இந்த நாளில் சுபாஷ் பாபு இங்கிலாந்தில் கல்வி பயின்று வந்தார். தாய் நாட்டில் அன்னியர்கள் புகுந்து செய்யும் அட்டகாசத்தை அவரால் பொறுத்துக் கொண்டிருக்க முடியவில்லை. ஐ. ஸி. எஸ். பட்டத்தை அங்கேயே உதறித் தள்ளிவிட்டு இந்தியா திரும்பினார். காந்தி மகாத்மாவின் கட்டளைக்கு இணங்கித் தேசபந்து தாஸைத் தமது அரசியல் குருவாகக் கொண்டார். இதன் பயனாக, ஒரு சமயம் உலக வாழ்க்கையைத் துறந்து சந்நியாசியாகக் காலங் கழிக்க விரும்பிய அவர், தேசப் பற்று மிகுந்த தொண்டரானார்.

ஸி. ஆர். தாஸின் யோசனையின்பேரில் வங்க தேசியக் கல்லூரியின் பேராசிரியராகச் சுபாஷ் சந்திர போஸ் பதவி வகித்து வந்த போது, வேல்ஸ் இளவரசர் இந்தியாவுக்கு விஜயம் செய்தார். அவருடைய வரவேற்பில் இந்தியர் யாரும் கலந்து கொள்ளக் கூடாது என்று காங்கிரஸ் மகா சபை கட்டளை யிட்டது. அத்துடன் ஏற்கெனவே இராணுவப் பயிற்சி பெற்றிருந்த சுபாஷ் சந்திரரைத் தொண்டர் படைத் தலைவராகவும் நியமித்தது. வங்கக் கவர்னர் லார்டு ரொனால்ட்ஷே இந்த நியமனத்தை விரும்பவில்லை. அவர் சுபாஷைக் கைது செய்யுமாறு கட்டளை யிட்டார். ஆறு மாதக் கடுங்காவல் தண்டனை கிடைத்தது. இதைத் தம்முடைய தேசத் தொண்டுக்குக் கிடைத்த முதற் பரிசாகச் சுபாஷ் போஸ் ஏற்று மகிழ்ந்தார்.

விடுதலையடைந்து வெளியே வந்ததும் வெள்ளப் பெருக்கினால் வங்க மக்கள் அடைந்த துன்பம் சுபாஷின் நெஞ்சைப் பிளந்தது. அதற்கேற்றாற்போல் காங்கிரஸ் மகாசபையும் அவர்களுக்கு உதவி செய்யும் பொறுப்பைச் சுபாஷ் சந்திரரிடம் ஒப்படைத்தது. அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட சுபாஷ், ‘சுபாஷ்!’ என்று சொல்லும்படி நடந்து மக்கள் மனதைக் கவர்ந்தார்.


இந்தச் சமயத்தில்தான் சட்ட சபை பகிஷ்காரத்தை எதிர்த்துத் தோல்வியுற்ற சித்தரஞ்சன தாஸ் ஸ்வராஜ்யக் கட்சியை ஸ்தாபித்தார். பாபு சுபாஷ் அவரைப் பின்பற்றினார். “பார்வர்டு” பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டது. சுபாஷ் பாபு அதன் ஆசிரியரானார். தேர்தல் பிரசாரம் எங்கும் எதிரொலித்தது. அதன் பயனாகத் தேசபந்து தாஸ் கல்கத்தா நகரசபையின் மேயரானார்; சுபாஷ் சந்திரர் கமிஷனரானார். இருவருடைய செல்வாக்கும் உச்சநிலை யடைந்தது. இதைக் கண்ட அதிகார வர்க்கம் திகிலடைந்தது. போஸ் கைதியானார். உள்நாட்டுச் சிறையிலே அவர் நெடுநாட்கள் வைக்கப்படவில்லை. மாந்தலே சிறைக்குக் கொண்டு போகப் பட்டார். இங்குதான் அவரைக் காச நோய் பற்றிக் கொண்டது. அத்துடன் தன்னுடைய அரசியல் குரு தேச பந்து தாஸ் காலமான செய்தியும் அவருடைய காதில் விழுந்தது. உடல் நோயுடன் மனக் கவலையும் சேர்ந்து கொள்ளவே, அவர் பேசவும் நடக்கவும் சக்தியற்றவரானார். பல பரிசோதனைகள் நடத்திய பிறகு 1927-ம் வருஷம் சர்க்கார் அவரை விடுதலை செய்தது.

1928-ம் வருஷம் கூடிய கல்கத்தா காங்கிரஸுக்குப் பண்டித மோதிலால் நேரு தலைமை வகித்தார். அந்த மகாசபையிலே 'குடியேற்ற நாட்டந்தஸ்து' திட்டத்தை மகாத்மா பிரேரேபித்தார். போஸ் அதை எதிர்த்து, "பரிபூரண சுதந்திரமே நமக்கு வேண்டும்" என்றார். காங்கிரஸ் அதை ஒப்புக் கொள்ள வில்லை.

இதற்கிடையில் தேசத்திலே பெரிய நெருக்கடி. மீரத் சதி வழக்கும், லாகூர் சதி வழக்கும் இளைஞர் பலரைச் சிறைக்கு அனுப்பி வைத்தன. அரசியல் கைதிகள் அளவிலாக் கொடுமைக்கு ஆளானார்கள். இதன் காரணமாக 1929-ம் வருஷம் ஆகஸ்ட் மாதம் 11-ந் தேதி அரசியல் கைதிகள் தினம் கொண்டாட ஏற்பாடாயிற்று. உடனே எந்தவிதமான கூட்டமும் கூட்டக் கூடாதென்று சர்க்கார் அதிகாரிகள் தடையுத்தரவு பிறப்பித்தனர். சுபாஷ் இந்த உத்தரவை மீறி ஒரு வருடக் கடுங்காவல் தண்டனை பெற்றார்.

இந்தத் தண்டனையின்போதுதான் வங்க மக்களுக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. அதைப் பயன்படுத்திக் கொண்டு அவர்கள் சுபாஷிடம் தங்களுக்குள்ள மதிப்பை வெளியிட்டனர். அதாவது தங்களிடையே அவர் இல்லாதபோது நடந்த கார்ப்பரேஷன் தேர்தலில் அவரைத் தேர்ந்தெடுத்தனர். இம்மாதிரி நடந்தது ஒரு முறையல்ல; இரண்டு மூன்று முறை நடந்தது. இதிலிருந்து உள்நாட்டில் அவருக்கிருந்த செல்வாக்கை ஒருவாறு ஊகித்துக் கொள்ளலாம். ஒரு தலைவருக்கு வெளி நாட்டில் மதிப் பிருக்கலாம். ஆனால் உள் நாட்டில் மதிப் பிருப்பதுதான் அபூர்வ மல்லவா?

1931 ஜனவரி 26-ம் தேதி. அன்று சுதந்திர தினம். மாலை நாலு மணிக்குச் சுபாஷ்போஸின் தலைமையில் ஊர்வலம் கிளம்பிற்று. போலீஸாரின் தடியடிக்குப் போஸும் தப்ப வில்லை. தலையிலும் நெற்றியிலும் பலமான காயம். அத்துடன் ஆறு மாதக் கடுங் காவல் தண்டனை!



இம்முறை காந்தி - இர்வின் ஒப்பந்தம் காரணமாகத் தண்டனைக் காலம் முடியு முன்னரே சுபாஷ் போஸ் விடுதலையானார். ஆனால் 1932-ல் பாதுகாப்புக் கைதியானார். சியோனிச் சிறையிலே பாபுவின் உடல்நிலை மிகவும் மோசமாயிற்று. வியன்னாவிலே சிகிச்சைபெறச் சர்க்கார் அதிகாரிகள் சம்மதித்தனர். அங்கே சட்டசபைக் கேசரி வித்தல் பாயைக் கண்டார். மரணத் தறுவாயில் தமக்கு அருகேயிருந்த சுபாஷ் போஸ் ஒரு லட்ச ரூபாய்க்கு அவர் உயில் எழுதிவைத்தார். அந்தப் பணத்தைக் கொண்டு வெளிநாடுகளில் இந்தியாவின் விடுதலையைப் பற்றிப் பிரசாரம் செய்யுமாறு பணித்தார்.

இந்தச் சமயத்தில் தந்தையார் சாகுந் தறுவாயில் இருப்பதாகச் சுபாஷுக்குத் தந்தி வந்தது. விமானத்தில் ஏறிப் பறந்து வந்தார். ஆனால் தந்தையை உயிருடன் பார்க்க முடியவில்லை!

ஏமாற்றத்துடன் வீடு வந்து சேர்ந்த அவரை, ஏழு வருஷம் வீட்டைவிட்டு வெளியே வரக்கூடாது என்று ஈவிரக்கமற்ற சர்க்கார் தண்டித்தது. நல்லவேளையாக உடல் நிலை அதற்கு இடம் கொடுக்கவில்லை. மீண்டும் போலீஸ் பந்தோபஸ்துடன் ஐரோப்பாவுக்குப் பிரயாணமானார். இரண்டு மாதச் சிகிச்சைக்குப் பிறகு சுபாஷின் உடல் நலம் பெற்றது. மூன்று வருஷங்கள் ஐரோப்பாவில் சுற்றுப் பிரயாணம் செய்தார். தலைவர் டிவேலரா ஆகியவர்களின் நட்புக்குப் பாத்திரரானார். அதற்குப் பின் இந்தியா திரும்பிய அவரை, "பம்பாய் துறைமுகத்தில் இறங்காதே!" என்று அதிகார வர்க்கம் மிரட்டிற்று. வழக்கம்போல் அந்தத் தடையையும் மீறிச் சர்க்கார் விருந்தாளியானார் சுபாஷ்.

சுபாஷ் வருகையை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த தேசத் தலைவர்களுக்கு இது பெரிதும் ஏமாற்றத்தை அளித்தது. அவர்கள் 1936-ம் வருஷம் மே மாதம் 10-ந் தேதியை 'சுபாஷ்

னை'மாகக் கொண்டாடுமாறு தேச மக்களுக்குக் கட்டளையிட்டனர். இந்தியா வெங்கும் கண்டனக் கூட்டங்கள் நடந்தன. இதற்கு மத்தியில் சுபாஷின் உடல் நிலை மீண்டும் கவலை தரும் நிலையை அடைந்தது. இதன் காரணமாக ஒரு வருஷத்துக்குப் பிறகு அவர் எந்த நிபந்தனையுமின்றி விடுதலையடைந்தார்.

அப்போது ஏழு மாகாணங்களில் காங்கிரஸ் மந்திரிகள் ஆட்சி செலுத்திக் கொண்டிருந்தனர். சுபாஷுக்கு ஆனந்தம் தாங்கவில்லை. காந்திமகான், நேரு ஆகியவர்களிடம் தம்முடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டார். அவருடைய மகிழ்ச்சிக்குத் திடீரென்று குந்தகம் வந்து சேர்ந்தது நோய். மீண்டும் வியன்னாவுக்குப் புறப்பட்டார். மூன்று மாதங்களுக்குப் பிறகு அங்கிருந்து இங்கிலாந்துக்குச் சென்றார். ஹரிபுரா காங்கிரஸ் அவரைத் தலைமை தாங்க அழைத்தது. திரும்பி வந்தார். அடுத்தாற்போல் நடக்கவிருந்த திரிபுரா காங்கிரஸ் தலைமைப் பதவிக்குப் போட்டியிருந்தது. அந்தப் போட்டியில் பட்டாபி சீதாராமய்யாவை எதிர்த்து நின்று வெற்றி பெற்றார். ஆனால் தலைவர்களுக்குள் ஏற்பட்ட அபிப்பிராய பேதம் காரணமாக வெகு சீக்கிரமே அவர் தமது ராஷ்டிரபதி பதவியை ராஜிநாமா செய்தார்.

பதவியைத் துறந்த பின் 'பார்வர்டு ப்ளாக்' உதயமாயிற்று. காங்கிரஸின் போக்கைக் கடிக்கடி கண்டிக்கத் தொடங்கினார். இதன் பயனாக வார்தாவில் கூடிய காங்கிரஸ் கமிட்டி அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்தது.

அதற்குப்பின் கல்கத்தா இருட்டறைக்குக் காரணமாயிருந்த ஹால்வெல் துரையின் சிலை சுபாஷின் கவனத்தைக் கவர்ந்தது. அந்தச் சிலையை அப்புறப் படுத்த வேண்டுமென்பதற்காகச் சத்தியாக்கிரகத்தை மேற் கொண்டார். சர்க்கார் அதிகாரிகளுக்கு இது பிடிக்கவில்லை; உடனே அவரைச் சிறைவாசம் மேற்கொள்ளச் செய்து விட்டார்கள்.

இரண்டாவது மகா யுத்தம் ஆரம்பித்திருந்த காலம். சிறையில் இருந்த சுபாஷ் சிந்தனையில் மூழ்கினார். இந்த யுத்தத்தை இந்தியாவின் விடுதலைக்குப் பயன்படுத்திக் கொள்ள முடியுமா என்று அல்லும் பகலும் அனவரதமும் யோசித்தார். அதன் பயனாகப் பரோலில் விடுதலை யடைந்து வீடு வந்து சேர்ந்தார். தனியறையில் மூன்று மாத காலம் தவ வாழ்க்கை நடத்தினார். இந்தத் தவம் எதற்காக? பகவானைப் பிரத்யட்சமாகக் காண்பதற்காகவா' — இல்லை, இல்லை; 'பட்டாணியன்' வேஷம் போடுவதற்குத் தாயைப் பிரத்யட்சமாகக் காண்பதற்குத்தான்!

1911 ஜனவரி 26ம் தேதி. "பாதுகாப்பிலிருந்த சுபாஷ் சந்திரர் மாயமாய் மறைந்தார்!" என்ற செய்தி நாட்டு மக்களை வியப்படையச் செய்தது; அதிகார வர்க்கத்தைத் திகைப்படையச் செய்தது.

அதற்குப் பின் ஐந்து வருடகாலம் அவரைப் பற்றிய தகவல் ஒன்றும் வெளியாகவில்லை. வாழ்நாளெல்லாம் நோய்வாய்ப் படுவதும் சிகிச்சை பெறுவதும் சிறை செல்வதுமாகவே இருந்த அவர், "எங்கு சென்றார்? என்ன ஆனார்?" என்று ஒன்றும் தெரியாமல் மக்கள் விழித்தனர்.

யுத்தம் ஒருவாறு முடிந்த பிறகு அவரைப் பற்றி வெளியான தகவல்கள் நம்மை யெல்லாம் திடுக்கிட வைத்தன. அவருடைய அஞ்சா நெஞ்சமும் ஆற்றலும் நம்மைப் பிரமிக்க வைத்தன. அவற்றை யெல்லாம் இப்போது நாம் ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டிய அவசியமில்லை. ஏனெனில் அவற்றை நாம் மறந்து விடவில்லை.

"வீரனுக்கு வெற்றியும் ஒன்றுதான்; தோல்வியும் ஒன்றுதான்!" என்ற வாக்கு அவருடைய விஷயத்தில் உண்மையாயிருக்கிறது. மகாத்மாஜியின் அஹிம்சைப் போரினால் இந்தியா விடுதலை அடைய முடியாது என்று அவர் நம்பினார். அதற்காக ஆயுதப் போரின் துணையை நாடினார். கடைசியில் மகாத்மாவின் அஹிம்சைப் போர்தான் வெற்றி பெற்றது; சுபாஷ் சந்திரரின் ஆயுதப் போர் தோல்வியுற்றது. ஆனால் அந்தத் தோல்வி சுபாஷுக்கு இகழைத் தேடிக் கொடுக்கவில்லை; புகழையே தேடிக் கொடுத்திருக்கிறது.

தேசத்துக்காக ஒரு மனிதன் உயிரைத் தியாகம் செய்வதைக் காட்டிலும், உயிரோடிருந்து தன்னுடைய ஆசாபாசம் அனைத்தையுமே தியாகம் செய்வதுதான் கடினம். அந்தக் கடினமான தியாகத்தை நேதாஜி போஸ் செய்திருக்கிறார். அவரால் தியாகம் செய்ய முடியாத செல்வம் ஒன்றே ஒன்றுதான் இருந்தது; அதுதான் அவருடைய [illegible] செல்வம்.

ஜெய் ஹிந்த்!

மகான் காந்தியடிகளின்
சுதந்திர நன்னாட்டில்
வெற்றி முரசுடன்
அசைந்தாடும்
நம் தாயின் மணிக்
கொடியின் கீழ்
கடலோசைப் போன்ற
சுதந்திர கீதத்தை பருகும்
மங்களனைவருக்கும்
நம வணக்கம் பல உரித்தாதுக!

★

பொங்கும் சுதந்திர
விழாவில் அணியும்
பட்டு பீதாம்பரத்தின்
மகிமையே
தனிச்சிறப்புடன்
விளங்கும் ரகங்கள்

★

ஆரணி ஸில்க் ஹவுஸ்

4, சன்னதித் தெரு
மயிலாப்பூர் :: மதராஸ்-4
ஆரணி & காஞ்சீபுரம்

ஹிந்தி

●

இந்திய சுதந்திர முதலாவது ஆண்டு விழாவைக் கொண்டாடும் உங்கள் ஒவ்வொருவருக்கும், இந்த சுதந்திர இந்தியாவின் ஒற்றுமை நிலை நாட்டுவதற்காக, பொது தேச பாஷையும், மத்திய அரசாங்க பாஷையுமான ஹிந்தியைக் கற்றுகொள்வது முதற் கடமையாகும். 6 மாதத்தில் ஒழிந்த நேரத்தில் குறைந்த செலவில் தபால்மூலம் ஹிந்தியை எழுதவும், பேசவும் படிக்கவும் கற்றுக் கொள்ளுங்கள். பரீட்சைக்குப் படியுங்கள். தமிழ் தெரிந்தால் போதும், ஹிந்தி கற்கலாம். தினசரி பாடங்களும் பயிற்சிகளும் கொடுக்கப்படுகின்றன பயிற்சிகள் திருத்தப்படுகின்றன. விவரத்திற்கு ¾ முக்காலணா ஸ்டாம்பு அனுப்புங்கள்.

●

ஸ்ரீரங்கம் - ஆத்தான்,
ஸ்ரீனிவாஸாச்சாரியார்,
ஸரஸ்வதி கலா மந்திர்
ஹிந்தி வித்யாலயம்
வேப்பேரி :: மதராஸ்

வீட்டைக் கட்டிப் பார்' என்ற அனுபவசாலிகளின் வாக்குக் கிணங்க, பிளான்படி கட்டி முடிப்பதிலேயே மராமத்திலாகா அதிக கவனம் செலுத்த வேண்டியிருக்கும். என்ஜினியர்கள் நிர்மாணிக்கும் திட்டப்படி கட்டுவதில் என்ஜினியர்களின் அறிவு அவ்வளவு அவசியமில்லை; கட்டுவதில் அனுபவம் மட்டும்தான் வேண்டும். எனவேதான் பிளான்படி கட்டும் வேலையை மராமத்திலாகாவே எடுத்துக் கொள்வதில்லை. ஆனால், எஸ்டிமேட்டுக்குத் தக்கவாறு ஒப்புக் கொள்ளுவதில் குறைந்த தொகைக்கு முன்வருபவர்களுக்கே வேலை கொடுக்கப்படும். இவ்வாறு வேலை ஒப்புக் கொள்ளுகிறவர்கள்தான் கண்டிராக்டர்கள்.

பொது ஸ்தாபனங்கள் நிர்வாகத்தில் பொது நன்மையே முக்கியக் கொள்கையாகும். என்ஜினியர்கள் போடும் உத்தேச மதிப்பு எதுவாயினும், அனுபவமுள்ள கண்டிராக்டர்களில் குறைந்த தொகைக்கு முன் வருகிறவர்களை ஒப்புக் கொள்ளுவதே முறையாகும். அவ்வாறே மராமத்திலாகா பகிரங்கமாக அறிவித்து, குறிப்பிட்ட காலத்திற்குள் டெண்டர் போடுகிறவர்களில் குறைந்த தொகை ஒப்புக் கொள்ளுகிறவர்களையே கண்டிராக்டர்களாக நியமிக்கின்றார்கள்.

ஆனால், மேல் நாடுகளிலுள்ளது போல், நம் நாட்டில் அனுபவமுள்ள கண்டிராக்டர் கம்பெனிகள் போதிய அளவு இல்லை. எனினும், கண்டிராக்டு ஒரு வசீகரமான தொழிலாகக் கிராமங்களிலும் காணப்படுகிறது. கண்டிராக்டு என்றால் நல்ல லாபம் சம்பாதிப்பதென்றே பொருள் தரப்படுகிறது. ஒரு மராமத்து செய்வது பொதுநலத்திற்கென்றாலும் கண்டிராக்டரைப் பொறுத்த மட்டில் அவருடைய லாபத்திற்கே அவ்வேலை ஏற்பட்டதாகக் கருதப்படுகிறது.

நான் கிராமங்களில் சுற்றுப் பிரயாணம் செய்யும் பொழுது வாய்க்கால் சுத்தம் செய்யப்படவில்லையென்று ஜனங்கள் புகார் சொல்லுகிறார்கள். என்ஜினியர்களைக் கேட்டால், எஸ்டிமேட்டு தயாராயிருக்கிறது, ஆனால் யாரும் வேலை செய்ய முன் வருவதில்லையென்று குறை கூறுகின்றார்கள். புகார் சொல்லும் கிராமவாசிகளோ, எஸ்டிமேட்டு மிகவும் குறைவு அதிகப்படுத்த வேண்டும் என்கிறார்கள் பொது நலத்துக்கு அவசியமான வேலை என்பதை மறந்து கண்டிராக்டில் எவ்வளவு அதிக லாபம் கிடைக்குமென்ற மனப்பான்மையே காணப்படுகிறது. எனவே, அக்கறையுள்ள கிராமவாசிகள் நஷ்டமில்லாமல் வேலையைச் செய்ய முன்வர வேண்டுமென்பது மராமத்திலாகாவின் கோரிக்கை.

விலைவாசிகளின் ஏற்றத்திற்குத் தக்கவாறு எஸ்டிமேட்டு விகிதங்களும் அதிகப்படுத்தப்பட்டுதான் வருகின்றன. என்னும், போதிய அளவு கண்டிராக்டு வேலை கிடைக்காதது மராமத்திலாகா சமாளிக்க வேண்டிய ஒரு பிரச்னையாகும்.

இப்பிரச்னை சென்ற ஆண்டில் மராமத்திலாகா காவிரியில் கட்டவேண்டிய ஒரு 'பெட் ரெகுலேடர்' விஷயத்தில் பெரிதாகக் கிளம்பியது. நாமக்கல் தாலுகாவிற்குப் பாயும் காவிரியின் ராஜா வாய்க்காலில் போதிய தண்ணீர் வருவதில்லை என்று வெகு காலமாகப் புகார். ஜேடர்பாளையத்தில் மண்ணிலேயே ஒரு அணை கட்டி தண்ணீரை வாய்க்காலுக்கு விவசாயிகள் திருப்புவார்கள். ஆண்டுதோறும் பல ஆயிரக் கணக்கில் செலவாகும். ஆனால் செலவு செய்தும், மண் கொரம்புத் தண்ணீரின் வேகத்தில் அடித்துக் கொண்டு போய்விடும். அட்



ஜேடர் பாளையம் அணைக்கட்டைக் கண்டிராக்டர் உதவியின்றி மெ சென்னை சர்க்கார் மராமத்து இலாகா மூலம் கட்டுகிறார்கள். வேலை நடப்பதை மராமத்திலாகா மந்திரி பார்வையிடுகிறார்.

பொழுது செய்த வேலை சேதமாவதுடன், விவசாயிகளுக்குத் தண்ணீர் கிடைக்காமல் போய்விடும். ஆகையால், காவிரியின் மீது நிரந்தரமான அணை கட்ட வேண்டுமென்ற கோரிக்கை வலுவானது. செலவில் ஒரு பகுதியைத் தாங்கள் ஏற்றுக் கொள்ளுவதாயும் விவசாயிகள் ஒப்புக் கொண்டார்கள். எனவே, சென்ற ஆண்டு முதனிலேயே, 6,19,420 ரூபாய்க்கு, விலை வாசிகளுக்குத் தக்கவாறு எஸ்டிமேட்டு தயாரிக்கப் பட்டு சர்க்காரும் சாங்க்ஷன் செய்தது. ஆனால் கண்டிராக்டர்களிடம் டெண்டர் கேட்டதில், குறைந்த டெண்டரே எஸ்டிமேட்டுக்கு இரண்டு லட்சம் ரூபாய்க்கு மேல் அதிகமாயிருந்தது. எனவே வேறு வழியில்லாமல் துணிந்து, மராமத்திலாகா, தானாகவே கண்டிராக்டரை எதிர்பாராமல் வேலையைச் செய்து முடிப்பதென்று முன்வந்தது. சர்க்காரும் இதை அங்கீகரித்தார்கள்.



காவேரியில் தண்ணீர் ஓடிக் கொண்டிருக்கும்போதே அணைகட்டு வேலை நடக்கிறது. மாதர்களும் ஓடி ஓடி வேலை செய்கிறார்கள்.

வேலை செய்வதற்கென்று சில விசேஷ திறமை வாய்ந்த என்ஜினியர்கள் நியமிக்கப் பட்டார்கள். வேண்டிய யந்திரங்களும் கருவிகளும் வாங்கப்பட்டன. வேலைக் காலத்தில் தங்கும் வசதிக்காக அவசியமான சில தற்காலிக வீடுகளும் கட்டப்பட்டன. தொழிலாளர்களும் ஆயிரக் கணக்காகச் சேர்க்கப் பட்டார்கள். உணவு ரேஷன் அமுலிலிருந்தபடியால், உணவு தானியங்கள் சௌகரியமாகக் கிடைக்க, வேலை செய்யுமிடத்திலேயே ஒரு பண்டகசாலை சர்க்காரால் ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது. என்ஜினியர்களும், வேலையாட்களும் உத்ஸாகத்துடனும் திருப்தியுடனும் வேலை செய்ததைக் கண்டேன். வேலை அனேகமாய் முடியுந் தருவாயிலிருக்கிறது. காவிரியில் தண்ணீர் வந்து விட்டதால், வேலை நிறுத்தப் பட்டிருக்கிறது. அடுத்த பருவத்திற்குள் முடிந்து விடும். இதுவரையில் செலவானதைக் கணக்குப் பார்த்ததில், எஸ்டிமேட்டுத் தொகைக்குள்ளேயே மொத்தச் செலவும் அடங்கலாமென்று பிரதம என்ஜினியர் மதிப்பிடுகிறார். இது திருப்தியையே அளிக்கிறது.

மராமத்திலாகா விரய இலாகா வல்லவென்று ஊர்ஜிதப் படுத்துகிறது. இத்தகைய வேலைகளைச் செய்வதில் அனுபவமும் வசதியுமுள்ள கண்டிராக்டர்களுக்கு எஸ்டிமேட்டுத் தொகைக்குள்ளேயே போதிய லாபமும் கிடைக்கலாமென்று ஏற்படுகிறது. உள்ள வேலையைக் கவனிப்பதற்கே போதிய என்ஜினியர்களில்லாத சமயத்தில், மராமத்திலாகா எல்லா வேலைகளையும் தானே கண்டிராக்டர்களில்லாமல் செய்து முடிப்பது இயலாத காரியம்.

கண்டிராக்டர்களும் தங்கள் தொழில் அபிவிருத்திக்கு மராமத்திலாகாவின் திட்டங்கள் மூலகாரணமென்றுணர்ந்து, இலாகாவுடன் ஒத்துழைக்க முன்வர வேண்டும். கண்டிராக்டருக்குத் தொழிலும் ஒரு பொதுப் பணியென்று கருதப் பட வேண்டும். இதுவே தொடர்பான வேலை நமக்கு வற்புறுத்துவது. திறமையும், அனுபவமும், பொதுநல உணர்ச்சியுமுள்ள கண்டிராக்டர்கள் நமக்கு வேண்டும். அவர்கள் மராமத்திலாகாவின் ஒரு முக்கிய அம்சமாவார்கள்.

> "ஒரு தேச பக்தனை அவனுடைய தேசத்திலிருந்து விரட்டி விடலாம்; ஆனால் அவன் உள்ளத்திலிருந்து அவனுடைய தேசத்தை விரட்ட முடியாது."
>
> — வால்டேர்.

மராமத்தும் கண்டிராக்டும்

கனம் எம். பக்தவத்ஸலம்

முன்பெல்லாம் ஹிந்தி கட்டாய பாடம் இல்லை; ஹிந்தி எதிர்ப்பு என்ற நூதன அரசியல் வாதத்திற்கும் இடமில்லை. மகம்மதிய ஆட்சியின் பயனாகப் பல ஹிந்துஸ்தானி வார்த்தைகள் தென்னாட்டில் நிரந்தரமாகக் குடி புகுந்துவிட்டன. இவை அயல் மொழி வார்த்தைகள் என்பது ஹிந்தி எதிர்ப்பாளருக்குக்கூட நினைவு வராதபடி தமிழோடு கலந்துபோய் விட்டன.

இவ்வாறு சர்வ சாதாரணமாகப் பிரயோகிக்கப்படும் ஹிந்தி வார்த்தைகளில் ஒன்று 'மராமத்து'. அவ்வாறே, தகுந்த தமிழ்மொழி உண்டா என்றுகூடத் தெரிந்துகொள்ள முடியாமல் எல்லோராலும் வழங்கப்படுகிற ஆங்கில வார்த்தை 'கண்டிராக்டர்'. டிராம்வேயிலும் பஸ்ஸிலுமுள்ள கண்டக்டர்கூட சில சமயங்களில் 'கண்டிராக்டர்' என்று அழைக்கப்படுகிறார். மராமத்தும் கண்டிராக்டும் நான் கவனிக்கும் இலாக்காவில் இன்றியமையாதவை. இவ்வார்த்தைகள் இந்தியாவின் பூர்வீக அரசியல் சரித்திரத்தை நினைவூட்டுகின்றன.


மராமத்து என்ற ஹிந்தி வார்த்தைக்குப் பழுது பார்ப்பது என்று அர்த்தம். ஆனால் 'பப்ளிக் ஒர்க்ஸ்' இலாகா பழுது பார்க்கும் வேலை மட்டுமல்லாமல், நிர்மாண வேலைகளையும் கவனிக்கிறது. இருப்பதைக் கவனித்தால் போதும், புதிய நிர்மாணம் வேண்டாமென்ற மனப்பான்மையில், மராமத்திலாகா என்ற பெயர் வைக்கப்பட்டிருக்க வேண்டும். சிலர் 'பப்ளிக் ஒர்க்ஸ்' என்ற வார்த்தைகளுக்கு விபரீத அர்த்தம் செய்து என்னை 'பொதுப்பணி' அமைச்சரென்று அழைக்கின்றனர். இது விசேஷ மதிப்பிற்குரிய பெயர்தான். ஆனால் இலாகாவின் தன்மையைத் தெரிந்து கொள்ளாதவர்களே அவ்விதம் சொல்கிறார்கள்.

வேறு சில தீவிர பொதுநல வாதிகள் இவ்விலாகாவை 'பப்ளிக் வேஸ்ட் டிபார்ட்மெண்டு' என்றும் பழிப்பதுண்டு. இந்த இலாகா செய்ய வேண்டிய நிர்மாண வேலைகள் பல; அவைகளைச் செய்யச் செலவு அதிகமாகிறது; அதிகச் செலவு செய்வதில் பண விரயமும் ஆகலாம். ஆனாலும் சர்க்காரின் மராமத்திலாகா மக்களுக்கு ஜீவாதாரமான வேலைகளைக் கவனிக்க வேண்டியிருக்கிறது. குளங்களையும், ஏரிகளையும், ஆற்றுப் பாலங்களையும் பழுது பார்ப்பதுடன் பாதைகளைக் கவனித்து நல்ல நிலைமையில் வைத்திருக்க வேண்டும். உணவு உற்பத்தி அதிகரிக்கப் புதிய நீர்ப்பாசனங்களையும் அமைக்க வேண்டும். உள்ள பாதைகளை வேண்டிய அளவுக்குச் செப்பனிடுவதுடன், புதிய பாதைகளையும் பாலங்களையும் அமைக்கவேண்டும்.

ஐந்நூறு ஜனத்தொகைக்கு மேற்பட்ட 12,000 கிராமங்கள் நம் மாகாணத்தில் போக்குவரத்துச் சாதனமின்றி இருக்கின்றன. கோதாவரி, கிருஷ்ணா, பெண்ணாறு, கொள்ளிடம், காவிரி, வைகை போன்ற ஜீவ நதிகளுக்கே இனிப் பாலம் கட்டியாகவேண்டும். நம் பல தேவைகளுக்குக் கட்டடங்கள் நிர்மாணித்துக் கட்டி வைப்பதும் மராமத்திலாகாவே.

மின்சாரத்தின் அருமையைக் கிராமவாசிகள் நன்குணர்ந்திருக்கிறார்கள். பெரிய பெரிய கைத்தொழிற் சாலைகளுக்கும், சிறிய குடிசைக் கைத்தொழில்களுக்கு மட்டுமல்லாமல், சிறிய சிறிய வீடுகளையும் தெருக்களையும் அழகுபடுத்த வேண்டுமென்ற கோரிக்கை எங்கும் தெரிவிக்கப்படுகிறது. இதைவிட, விவசாய அபிவிருத்திக்கு மின்சாரம் இன்றியமையாததாகக் கிராமங்களில் கருதப்படுகிறது. எனவே, ஜீவாதாரமான மின்சாரத்தைத் திரட்டுவது மராமத்திலாகாவின் சிறந்த பொதுப் பணியே யாகும்.

இவைகளையெல்லாம் செய்து வைப்பதற்கு, நம் என்ஜினியர்கள் தங்கள் அறிவையும் அனுபவத்தையும் கொண்டு வழிகளும் திட்டங்களும் அமைக்கலாம். ஆனால் அவைகள் நிறைவேற்றப்பட வேண்டும். ஒரு கட்டடமோ, ஒரு அணையோ அமைப்பதில் அடிப்படையானது பிளானும் எஸ்டிமேட்டுமாகும். ஆனால் இதன்படி கட்டி முடிப்பதுதான் மராமத்திலாகாவின் முக்கிய வேலையாகும். கட்டுவதில் என்ஜினியர்களுடைய உதவி இன்றியமையாததுதான். ஆனால் தாம் நிர்மாணிக்கிறபடி தாமே கட்டியமைப்பதென்றால், நிர்மாணிக்கும் வேலையில் போதிய கவனம் செலுத்தமுடியாது.



மௌரியப் பேரரசு

அன்று சித்திரா பௌர்ணமி. நிலவு பால் போலக் காய்ந்து கொண்டிருந்தது. பாஞ்சாலத்திலுள்ள ஒரு அடர்ந்த கானகத்திலே அங்கு குடி கொண்டிருந்த அமைதியைக் குலைத்துக் கொண்டு ஒரு பேச்சுக் குரல் கேட்டது.

'ஆம், இன்னும் சரியாக ஒரு வாரம் இருக்கிறது; அடுத்த புதன்கிழமை காலை யுத்தத்தை ஆரம்பித்துவிட வேண்டும்."

"உத்தரவு, சுவாமி! தங்கள் ஆசிர்வாதமும் அனுக்கிரகமும் இருக்கும்போது எனக்கு என்ன குறைவு?"

அங்கே பேசிக் கொண்டிருந்தவர்கள், நந்த வம்சத்து அரசனால் தேசப் பிரஷ்டனாகத் துரத்தியடிக்கப்பட்ட சந்திர குப்த மௌரியனும் அவனுடைய மந்திரியாக விளங்கிய சாணக்கியனுந்தான், வேறு யாருமல்ல.

• • •

ஏறக்குறைய இரண்டாயிரத்து ஐநூறு வருஷங்களுக்கு முன்பு நம்முடைய பாரத தேசத்தின் பெரும் பகுதி கிரேக்க ஆதிக்கத்துக்கு உட்பட்டிருந்தது. மகா வீரனான அலெக்ஸாந்தர், ஜீலநதியில் நடந்த யுத்தத்தில் இந்திய மன்னனாகிய புருஷோத்தமனைத் தோற்கடித்த பிறகு, தன்னுடைய பிரதிநிதிகளை பாரத தேசத்தை ஆளும்படியாக நியமித்து விட்டுப் போனான். அவர்களிடமிருந்து விடுதலை யடைவதற்காகப் பாரத தேசம் எவ்வளவோ ஏங்கிக் கொண்டிருந்தது.

சந்திரகுப்தனுக்கும் சாணக்கியனுக்கும் ஒரே ஒரு இலட்சியம், ஒரே ஒரு சிந்தனை: கிரேக்க சாம்ராஜ்யத்தை எப்படியாவது இந்தியாவிலிருந்து ஒழித்து விட வேண்டும் என்பதுதான்.

சாணக்கியனுடைய புத்திக் கூர்மையும் சந்திரகுப்தனுடைய வீர பராக்கிரமமும் ஒருங்கு சேர்ந்தபோது கிரேக்க ஏகாதிபத்தியம் தவிடுபொடி யாகிவிட்டது.

கி. மு. 3206 வருஷம் சந்திரகுப்தனுக்கும் கிரேக்கர்களுக்கும் நடந்த கடுமையான யுத்தத்தில் கிரேக்க சைனியம் புறமுதுகிட்டோடியது. சந்திரகுப்தன் ஜய பேரிகையை முழக்கினான். அந்த ஜயபேரிகையை முழக்கிக் கொண்டே கிழக்கே பாடலிபுரத்துக்குச் சென்றான். தன்னுடைய ஜன்ம விரோதியாகவும் கொடுங்கோலனாகவும் விளங்கிய நந்த அரசனைத் தோற்கடித்து விட இந்தியா முழுவதற்கும் சக்கரவர்த்தியானான்.

சந்திரகுப்தனுடைய சாம்ராஜ்யம் விசாலமானது. அது பாரசீகத்தின் ஒரு பகுதி வரை வியாபித்திருந்தது.

சந்திரகுப்தனுடைய ஆசையும் சாணக்கியனுடைய இலட்சியமும் அத்துடன் முடிவடைந்து விடவில்லை. அவர்களுக்கு வேறு ஒரு இலட்சியமும் இருந்தது. தேசத்தை நன்றாக ஆளவேண்டும், மகத சாம்ராஜ்யத்தை ஒரு இலட்சிய சாம்ராஜ்ய மாக்க வேண்டும் என்று நினைத்து அதற்காக உழைத்தார்கள். அதில் அவர்கள் வெற்றியும் அடைந்தார்கள். மகத சாம்ராஜ்யம் சில விஷயங்களில் இன்னும் நமக்கு வழி காட்டியாக விளங்குகிறது.

மௌரிய ராஜ்யத்திலே மக்களுடைய சுகாதாரமும் பந்தோபஸ்தும் எவ்வளவு அக்

> "நம் மனத்துக்குத் தோன்றியதைச் செய்து, மனம்போன போக்கில் போவது சுதந்திரமல்ல; எந்தச் சந்தர்ப்பத்தில் எதைச் செய்ய வேண்டுமோ அதைத் தீர ஆலோசனை செய்து அதன்படி நடப்பதுதான் உண்மையான சுதந்திரம்."
>
> —கரிபால்டி

விக்க முடியவில்லை. பிரிட்டன் ரோமிய சாம்ராஜ்யத்தின் பிடியிலிருந்து விடுபட்டதெனினும், அதன் ஸ்தானத்தில் பிரிட்டிஷ் மன்னர்களின் ஏதேச்சாதிகாரம் ஏற்பட்டதே அத்தகைய நிலைமைக்குக் காரணமாகும். எனவே மன்னர்களின் ஏதேச்சாதிகாரத்தை ஒழிப்பது எப்படி என்பதில் பிரிட்டிஷார் கவனம் செலுத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

பிரிட்டிஷ் மன்னர்களின் ஏதேச்சாதிகாரத்துக்குப் பரிகாரம் தேடுவதற்காக ஏற்பட்ட சில பிரதிநிதிகள் அடங்கிய ஒரு சிறிய சபையே பின்னர் பார்லிமெண்டாயிற்று. அந்தக் காலத்தில் பிரிட்டிஷ் பார்லிமெண்டுக்கு அதிகாரமே இல்லை. அது மன்னர்களின் தயவிலேயே வாழ வேண்டியிருந்தது. எனினும் பார்லிமெண்டு மன்னர்களை முற்றிலும் விரோதித்துக் கொள்ளாமல் கொஞ்சம் கொஞ்சமாக அதிகாரத்தைக் கைப்பற்றத் துவங்கியது.

அப்படியிருக்கும் முதலாவது ஜேம்ஸ் பட்டத்துக்கு வந்த பின் அந்த மன்னனுக்கும் பார்லிமெண்டுக்கும் அடிக்கடி தகராறு ஏற்படலாயிற்று. மேற்படி மன்னனின் ஏதேச்சாதிகாரம் சகிக்க முடியாமல்தான் அந்தக் காலத்திலிருந்து, அதாவது 1620-ம் வருஷத்திலிருந்து ஏராளமான ஆங்கிலேயர்கள் நாட்டை விட்டு ஓடி அமெரிக்காவில் குடியேறினர்.

முடியிழந்தான், தலையையும் இழந்தான்!

பின்னர் முதலாவது ஜேம்ஸின் மகனை முதலாவது சார்லஸ் பட்டத்துக்கு வந்த பின் இங்கிலாந்தின் நிலைமை இன்னும் அதிக மோசமாகியது. பார்லிமெண்டு அங்கத்தினர்கள் சரித்திரப் பிரசித்திபெற்ற தங்களுடைய 'உரிமைப் பிரகடன'த்தைச் சார்லஸ் மன்னனிடம் சமர்ப்பித்தனர். மன்னனின் அதிகாரத்தை வரையறுத்திருந்த அந்தப் பிரகடனம் சார்லஸுக்கு ஆத்திரத்தை உண்டு பண்ணியது. "எனக்குப் புத்திமதி கூற வந்தவர்கள் எல்லாரையுமே தொலைத்து விடுகிறேன்" என்று கூறி சார்லஸ் மன்னன் பார்லிமெண்டையே கலைத்து விட்டான். அவ்வாறாகச் சில வருஷங்கள் வரையில் சார்லஸ் மன்னனின் கலப்பற்ற ஏதேச்சாதிகார ஆட்சி நடந்து வந்தது. மன்னனின் பொக்கிஷமும் கரைந்து வந்தது. பார்லிமெண்டு இராமல் தன்னுடைய பொக்கிஷம் மீண்டும் நிறைவதற்கு வேறு திக்கில்லை என்பதை உணர்ந்த சார்லஸ் திரும்பவும் பார்லிமெண்டைக் கூட்டினான். ஏற்கனவே தங்களை அவமதித்ததற்காக சார்லஸ் மீது வஞ்சம் தீர்க்க வேண்டும் என்று துடித்துக் கொண்டிருந்த பார்லிமெண்டு அங்கத்தினர்களுக்குச் சரியான சந்தர்ப்பம் கிடைத்தது!

மன்னன் மீது எழுந்த ஆத்திரம் இங்கிலாந்தில் உள்நாட்டு யுத்தமாக உருவடைந்தது. பிரபுக்களும் ராணுவத்தில் பெரும் பகுதியினரும் மன்னன் பக்கத்தில் சேர்ந்து கொண்டனர். மேற்படி யுத்தம் பல வருஷங்கள் வரையில் இழுத்துக் கொண்டு போயிற்று. பார்லிமெண்டு கட்சியைச் சேர்ந்தவர்கள் நம்பிக்கை இழந்து சோர்வடைந்த சமயத்தில் அவர்களிடையே ஆலிவர் கிராம்வெல் என்ற சிறந்த தலைவன் தோன்றினான். அணையும் தறுவாயிலிருந்த ஆவேசத் தீ அவனுடைய அபார நாவன்மையினாலும் திறமையினாலும் விடாமுயற்சியினாலும் மீண்டும் கொழுந்து விட்டெரிய ஆரம்பித்தது. கிராம்வெல் வெற்றி பெற்றான். சார்லஸ் மன்னன் கைதியானான். பார்லிமெண்டின் தீர்ப்புக்கு இணங்க சிரச்சேதம் செய்யப்பட்டான்.

அதிலிருந்து பிரிட்டனில் குடியரசு ஏற்பட்டதெனினும், கிராம்வெல் மாண்ட பின் இரண்டொரு வருஷங்களில் குடியரசும் மறைந்தது. அது வரையில் அன்னிய நாடுகளில் அடைக்கலம் புகுந்திருந்த இரண்டாவது சார்லஸ் பட்டத்துக்கு வந்தான். அவன் தலையை இழந்த முதலாவது சார்லஸ் மன்னனின் மகன்தான். இரண்டாம் சார்லஸுக்குப் பிறகு பட்டத்துக்கு வந்த அவனுடைய சகோதரனான இரண்டாம் ஜேம்ஸும் பார்லிமெண்டின் கோபத்துக்குப் பயந்து பிரான்ஸுக்கு ஓடி அடைக்கலம் புக நேர்ந்தது. இவ்வாறாக தட்டுத்தடுமாறிக் கடைசியாகப் பிரிட்டனில் முடியாட்சி ஸ்திரமாயிற்று. பிறகு அந்த முடியாட்சி நாளடைவில் ஜனநாயகத்துக்கு உட்பட்ட ஆட்சியாயிற்று. (தொடரும்)

விளக்கியது. "எந்த நேரமானாலும் சரி, எந்த இடமானாலும் சரி, நான் சாப்பிட்டுக் கொண்டிருந்தாலும் சரி, அந்தப்புரத்திலிருந்தாலும் சரி, ரதத்தில் போய்க் கொண்டிருந்தாலும் சரி, அரண்மனைப் பூங்காவில் உலாவிக்கொண்டிருந்தாலும் சரி, யாரும் தாராளமாக வந்து என்னிடம் தங்கள் குறைகளைச் சொல்லலாம்"—இது அசோக சக்கரவர்த்தியினுடைய உத்தரவு.

அசோக சக்கரவர்த்தி வாழ்ந்த காலத்தில் அவரைப்போல அவ்வளவு பரந்த தேசத்துக்கு மன்னராக உலகத்தில் இருந்தவர்கள் அருமை. அவ்வளவு பெரிய ஒரு மன்னர், ராஜ போகங்களை எல்லாம் துறந்துவிட்டு, மக்களின் நன்மை ஒன்றையே பெரிதாகக் கருதி சத்தியத்துக்கும் தர்மத்துக்கும் பயந்து செங்கோல் நடத்தியது அருமையிலும் அருமை.



சந்திரகுப்த விக்ரமாதித்யனின் இரும்பு விஜயஸ்தம்பம்

அசோகச் சக்கரவர்த்திக்குப் பின்னும் மௌரிய சாம்ராஜ்யம் கொஞ்சம் கொஞ்சமாகச் சிறுத்துக் கொண்டே வந்தது. கடைசியில் அதன் பெருமையும் புகழும் மறைந்தே போய்விட்டது. ஏறக்குறைய அறுநூறு வருஷத்துக்குப் பின்னும் மற்றொரு சாம்ராஜ்யம் தோன்றியது. அதற்குள் சற்று நுழைவோம்.

குப்த சாம்ராஜ்யம்

ஆஹாஹா, என்ன தேஜோமயமாக இருக்கிறது! இது பூலோகமா கைலாசமா, தெய்வலோகமா, வைகுண்டமா, பொன்னுலகமா, நாகலோகமா? இது எந்த லோகம்? இதற்கு அதிபதி யார்? மாடமாளிகைகளும் கூட கோபுரங்களும் கோட்டை கொத்தளங்களும் பொன்னும் முத்தும் மணியும் குவிந்து கிடக்கும் இந்த தேசத்தின் பெயர் என்ன?

இதோ இந்தக் கோட்டைக்கு வெளியே நிற்கும் காவலாளியைக் கேட்போம்.

"அப்பா, இது எந்த தேசம்?"

காவல்காரன் கை கொட்டிக் கலீரென்று நகைத்து "அகோ வாரும் பிள்ளாய், அஞ்ஞான சிகாமணியே! எங்கள் மகாராஜாதிராஜ ராஜஸ்ரீ மார்த்தாண்ட கம்பீர அதி வீர பராக்கிரம விக்கிரமாதித்ய மகாபூபதியைத் தெரியாதவர்கள் இந்த ஈரேழு புவனங்களில் ஒருவர் கூடக் கிடையாதே! அவருடைய வீரதீரப் பிரதாபம் பரவாத மூலை முடுக்கே இந்த தேசத்தில் கிடையாதே! நீர் எந்த ஊர்? எந்த தேசம்?

"அதை முதல்வது சொல்லும்?" என்று சொல்லி விட்டு மீண்டும் கை கொட்டிக் கலீரென்று நகைக்கிறான்.

* * *

உண்மைதான்; விக்கிரமாதித்தனுடைய வீரப்பிரதாபத்தைக் கேள்விப்படாத மக்கள் யார் இருக்கிறார்கள்? அவனுடைய வீர பராக்கிரமத்தைக் கூறும் கதைகளைக் கேட்டு மயங்காதவர்கள் யார் இருக்கிறார்கள்?

ராமன், கிருஷ்ணன், அர்ஜுனனைப் போல விக்கிரமாதித்தன் இதிஹாச புருஷனாகி விட்டான். நூற்றுக் கணக்கான வருஷமாக அவன் சிரஞ்சீவிச் சக்கரவர்த்தியாக விளங்கிக் கொண்டு வருகிறான்.

விக்கிரமாதித்தன் ஒரு பிறவி வீரன். ஒரு பெரிய ராஜ்யத்தை ஏற்படுத்த வேண்டும் என்று அவனுக்கு வெகு காலமாக ஆசை இருந்து வந்தது. பட்டத்துக்கு வந்ததும், உஜ்ஜயினியை ஆண்டுவந்த ருத்ரஸிம்மன் என்ற மன்னனை யுத்தத்தில் வென்று அந்த தேசத்தைத் தன்னுடைய நாட்டுடன் சேர்த்துக் கொண்டான்.

பிறகு மாளவம், கூர்ஜரம் சௌராஷ்டிரம் முதலிய நாடுகளையும் வென்று அங்கும் தன்னுடைய ஆட்சியை ஸ்தாபித்தான். பிறகு, வங்காளத்தின் மீது படை யெடுத்துச் சென்று அங்கு கடும் போர் நிகழ்த்தி வங்கத்தையும் தன்னுடைய ராஜ்யத்தின் ஒரு பகுதியாக்கிக் கொண்டான். விக்கிரமாதித்தன் வங்காளத்தில் அடைந்த வெற்றியைப் பற்றி டில்லியில் குதுப்மினாருக்கு அருகில் உள்ள இரும்பு தூணில் தெளிவாகப் பொறிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், விக்கிரமாதித்தன் அடைந்த அந்த மாபெரும் வெற்றியைக் காட்டிலும், அந்தப் பிரமாண்டமான ஜெயஸ்தம்பத்தைப் பார்த்துத்தான் எல்லோரும் மூக்கின்மேல் விரலை வைக்கிறார்கள். அந்தக் காலத்திலே இந்தியாவில் இரும்பு வார்க்கும் தொழில் எவ்வளவு உன்னதமான நிலைமையில் இருந்தது என்பதற்கு இது ஒரு எடுத்துக் காட்டாகும். நூற்றுக்கணக்கான வருஷங்களாகியுங்கூட அந்த இரும்புத் தூண், கொஞ்சங் கூடத் துருப் பிடிக்காமல் இன்னும் அப்படியே இருப்பது விந்தையிலும் விந்தை.

விக்கிரமாதித்த சாம்ராஜ்யம் இருந்த காலத்தைப் பாரத தேசத்தின் பொற் காலமாகவும் புது யுகமாகவும் கருத வேண்டும். அசோக சக்கரவர்த்திக்குப் பிறகு, அப்போதுதான் இந்தியா சுபிட்சமாகவும் செல்வம் கொழிக்கும் நாடாகவும் அமைதியாகவும் விளங்கியது. சிற்பமும் ஓவியமும் காவியமும் செல்வச் சீமான்களுடைய ஆதரவு பெற்றுச் சிறப்படைந்தன. புகழ் பெற்ற கவி காளிதாசன் சாகுந்தலம் விக்கிரமோர்வசீயம், மாளவி காக்னிமித்திரம் முதலிய சிரஞ்சீவி நாடகங்களை எழுதி சமஸ்கிருத இலக்கியத்துக்குப் புத்துயிர் கொடுத்தார். பாஸ்கராச்சாரியார் என்ற பிரபல வானசாஸ்திரி பூமியின் ஆகர்ஷண சக்தியைப் பற்றிப் பல உண்மைகளை வெளியிட்டு எல்லோரையும் பிரமிக்க வைத்தார்.

ஹிந்து மதத்திற்கும் ஹிந்துக் கலைக்கும் ஹிந்துப் பண்புக்குமே ஒரு பெரும் புகழும் வாங்கிக் கொடுத்து, குப்தப் பேரரசை சொர்க்க பூமியாகவும் பொன்னுலகமாகவும் செய்த விக்கிரமாதித்த மகாராஜனை இந்தியர்கள் இதிஹாச புருஷனாகவோ தெய்வமாகவோ கருதுவதில் வியப்பு இல்லை.

ஹர்ஷர் பேரரசு

பதினாறு வயது இளைஞன் ஒருவனிடம் சென்று, "அப்பா நீ எங்களுக்கு ராஜாவாக இருக்கவேண்டும்" என்றால், அவன் "மாட்டேன்" என்று சொல்வான்? "கொண்டு வா, கிரீடத்தை!" என்று தானே சொல்லுவான்? ஆனால், ஹர்ஷ சக்கரவர்த்தி பதினாறு வயது இளைஞனாயிருந்தபோது, தானேசுவர நாட்டு மக்கள் அவரிடம் சென்று அவரைத் தங்கள் அரசனாக இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டபோது, அவர் "மாட்டேன்" என்றும் சொல்லவில்லை. "கொண்டு வா, கிரீடத்தை" என்றும் சொல்லவில்லை. "யோசித்துச் சொல்கிறேன்!" என்றார்.

ஆனால், அவரை மக்கள் யோசிக்கவிடவில்லை. "முதலில் ராஜாவாகி விடும்; அப்புறம் யோசித்துக் கொள்ளலாம்" என்று சொல்லிவிட்டார்கள்.

கி. பி. 606-ல் ஹர்ஷர் தானேசுவர நாட்டு மன்னனாக முடி புனைந்து கொண்டார். தானேசுவரம் மிகச் சிறிய நாடு. புஜபல பராக்கிரமம் மிகுந்த ஹர்ஷர்

ஆறு வருஷங்கள் வரை இடைவிடாமல் யுத்தம் நடத்தி வட இந்தியாவில் பல நாடுகளைக் கைப்பற்றி ஒரு சாம்ராஜ்யத்தை ஏற்படுத்தினார்.

ஆறு வருஷ காலம் சண்டை போட்டுச் சம்பாதித்த ராஜ்யத்தை, ஹர்ஷர் முப்பது வருஷம் வரை வெகு அமைதியாக ஆண்டு வந்தார்.

விக்கிரமாதித்த சந்திரகுப்தன் காலத்திலே தேசம் இருந்த மகோன்னத நிலைமையைக் கொஞ்சங்கூடக் குறையாமல் பார்த்துக் கொண்டார் ஹர்ஷர். கல்வி கேள்விகளிலும் சிற்ப சாஸ்திரத்திலும் இந்தியாவின் பெயர் வெளிநாடுகளிலெல்லாம் பரவியது. தக்ஷசிலா, நாளந்தா முதலிய இடங்களில் இருந்த சர்வகலாசாலைகளில் சீனா, திபேத் முதலிய தேசங்களிலிருந்து வந்து பல்லாயிரக் கணக்கான மாணவர்கள் கல்வி கற்றுக் கொண்டு போவார்களாம்.

ஹர்ஷ சக்கரவர்த்தி ஒரு பெரிய ரசிகர், கவி. அவர் சமஸ்கிருதத்திலே பல நாடகங்கள் எழுதியிருக்கிறார்.

சோழர் பேரரசு

சந்திரகுப்தனும் அசோகரும் விக்கிரமாதித்தனும் பாரத தேசத்திலே மாத்திரம் ஒரு பேரரசை ஏற்படுத்தி அதை ஆண்டு வந்தார்கள். ஆனால் கடல் கடந்து வெளி நாடுகளுக்கெல்லாம் போய் அங்கும் ஒரு பேரரசை ஏற்படுத்திய பெருமை சோழ வம்சத்து அரசனாகிய ராஜராஜ சோழனுக்கும் அவனுடைய புதல்வனாகிய ராஜேந்திர சோழனுக்குமே உரியதாகும்.

ராஜேந்திரனுடைய காலத்திலே தமிழ் நாட்டுக்கு ஒரு சிறந்த கப்பல் படை இருந்தது. ஆழ் கடலெல்லாம் சோழனுடைய புலிக் கொடி கம்பீரமாகப் பறந்து கொண்டிருந்தது. வங்காளக் குடாக் கடல் சோழப் பேரரசுக்குக் கொல்லைப் புறக் கிணற்றைப்போல் விளங்கியது.

ராஜேந்திர சோழன் இலங்கைமீதும் வங்காளத்தின்மீதும் படையெடுத்துச் சென்று அவற்றைச் சோழ சாம்ராஜ்யத்தின் ஒரு பகுதியாக்கினான். பின்பு கடாரத்தின்மீது படையெடுத்துச் சென்று அதையும் சோழ சாம்ராஜ்யத்துக் குள்ளாக்கினான்.

மௌரிய சாம்ராஜ்ய காலத்திலும் விக்கிரமாதித்ய பேரரசு காலத்திலும் பாரத தேசம் எப்படிப் பெரும் புகழும் அடைந்திருந்ததோ அப்படியே ராஜ ராஜ சோழன் காலத்திலும் அவனுடைய குமாரனாகிய ராஜேந்திர சோழன் காலத்திலும் தென்னாடு உன்னத நிலைமையை அடைந்தது.

அரசன் எதேச்சாதிகாரியாகவோ சர்வாதிகாரியாகவோ இல்லாமல் சட்டத்துக்குக் கட்டுப்பட்டு நடந்தான். அன்றைய அரசாங்க நிர்வாகத்தில் மக்களுக்கும் பங்கு இருந்தது. பல கிராமங்களைச் சேர்த்து ஒரு நாடாகவும் பல நாடுகளைச் சேர்த்து ஒரு கோட்டமாகவும் வகுக்கப் பட்டது.

சோழராஜ்யம் மொத்தம் ஆறு மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது.

அரசன் ஆறில் ஒரு கடமை வாங்கி வந்தான். வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யும் பொருள்களுக்கு வரி விதிக்கப் பட்டது. இதன் மூலம் அரசாங்கத்துக்குப் போதிய வருமானம் கிடைத்து வந்தது.

கலையும் சிற்பமும் காவியமும் ஓவியமும் சிறப்படைந்து விளங்கின. அந்தக் காலத்தில் சோழ மன்னர்கள் கட்டிய அணைகளையும் மாபெரும் கோவில்களையும் கண்டு இப்போதும் நாம் பிரமிக்க வேண்டியதாக இருக்கிறது.

விஜய நகர சாம்ராஜ்யம்

ராஜ ராஜ சோழன் தென்னாட்டை ஆண்ட தமிழ் வேந்தர்களில் மிகவும் முக்கியமானவன். அவன் மூலம் தமிழும் தமிழ் நாடும் பாரத தேசமும் சிறப்படைந்தது. அவனுக்குப் பிறகு வெகுகாலம் வரை, ஒரு பெரிய சாம்ராஜ்யம் என்று சொல்லத்தக்க முறையில் அளவிலோ சிறப்பிலோ ஒரு ராஜ்யமும் தென்னாட்டில் ஏற்படவில்லை.

ஏறக்குறைய ஐந்நூறு வருஷத்துக்குப் பின்னால் துங்கபத்திரா நதிக்கரையருகே மற்றொரு பேரரசுக்கு அடிகோலப் பட்டது. அதுவே விஜயநகர சாம்ராஜ்யம்.

"என்ன அண்ணா, இங்கே செடியும் கொடியும் புதரும் மரமுமாக ஒரே காடாக இருக்கிறதே, போயும் போயும் இங்கே தானா நம்முடைய ராஜ்யத்தை அமைக்க வேண்டும்?"

'வைத்தியக்காரா, உனக்குத் தெரிந்தது அவ்வளவுதான். இன்னும் ஒரு நூறு வருஷத்துக்குப் பின்னால் இந்த காடும் மலையும் இருக்கும் இடத்திலே எவ்வளவு பெரிய சாம்ராஜ்யம் ஏற்படப் போகிறது தெரியுமா?'

ஹக்கன் சொன்னது சரியாகப் போய் விட்டது. நூறு வருஷத்துக்குப் பின்னால் அங்கே ஒரு மகத்தான சாம்ராஜ்யம் தோன்றத்தான் தோன்றியது. ஆனால் அதைக் காண்பதற்கு புக்கன் அங்கே இல்லை.

ஹக்கன், புக்கன் என்ற விசித்திரப் பெயர்களைக் கொண்ட இரு சகோதரர்கள் தான் ஆதியில் அந்த விஜய நகர சாம்ராஜ்யம் ஏற்படுவதற்கு மூலகாரணமாக இருந்தார்கள்.

அப்போது தென்னாட்டிலேயும் முஸ்லிம் ஆதிக்கம் இருந்தது. அவர்களுடைய ஆட்சியின் கீழ் மக்கள் சொல்ல முடியாத கஷ்டங்களை அனுபவித்து வந்தார்கள். ஹிந்து தர்மத்தை எப்படியாவது பாதுகாப்பது என்று கங்கணம் கட்டிக் கொண்டு ஹக்கன் என்ற அந்த இளைஞன் தன தம்பியுடன் துங்கபத்திரா நதிக்கரைக்கு வந்தான்.

வந்ததும் வராததுமாக அந்தக் காட்டிலே ஒரு குடிசையைப் போட்டான். உடனே தன ராஜாங்கத்துக்கு வேண்டிய தங்க நாணயங்களையும் போட ஆரம்பித்தான்!

* * *

விஜயநகரம் சிறப்படைந்து ஒரு பெரிய சாம்ராஜ்யமாய் விளங்கியது கிருஷ்ண தேவராயன் காலத்தில்தான்.

கிருஷ்ண தேவராயன் சிறந்த வீரன். அவன் பட்டத்துக்கு வந்ததும், பக்கத்திலிருந்த பீஜப்பூர் முஸ்லிம் ராஜ்யத்தின் மீது படையெடுத்துச் சென்று அந்த ராஜ்யத்தின் ஒரு பகுதியைக் கைப்பற்றினான். கொஞ்ச காலத்துக்குள் சென்னை மாகாணம் முழுவதும் விஜய நகர சாம்ராஜ்யத்துக்கு உட்பட்டது.

மக்களுக்கு ராஜாவிடம் அளவு கடந்த பயமும் விசுவாசமும் இருந்து வந்தது. தெருவில் போய்க் கொண்டிருக்கும் ஒருவனை அழைத்து, ஒரு பெரிய பாராங்கல்லைச் சுட்டிக் காட்டி, "இதை இன்று முழுவதும் உன் தோளில் சுமந்து கொண்டே இருக்க வேண்டும். இது ராஜாவின் ஆணை" என்று சொன்னால் அவன் பதில் பேசாமல் அதை அப்படியே சுமந்து கொண்டிருப்பானாம்.

விஜயநகரம் ஈடு இணையில்லாத செளந்தரிய நகரமாக விளங்கியது. நகரத்தைச் சுற்றி ஒன்றன் பின் ஒன்றாக ஏழு அரண்கள் இருந்தனவாம். நகரத்தைச் சுற்றியிருந்த மதில் சுவர்களின் சுற்றளவு மொத்தம் அறுபது மைல்களிருக்குமாம். தெருவெல்லாம் ஒரே யானையும் குதிரையுமாக இருக்குமாம். முத்தும் மணியும் கோமேதகமும் வைடூரியமும் தெருக்களில் குவித்து விற்கப்பட்டதாம்.

தெய்வபக்தி மிகுந்த கிருஷ்ண தேவராயன் பல கோவில்களைக் கட்டினான். கலைகளையும் இலக்கியத்தையும் வளர்த்தான்.

கொடுங்கோன்மையும், அநீதியும், வகுப்புத் துவேஷமும் மிகுந்திருந்த அந்தக் காலத்திலே, விஜயநகர சாம்ராஜ்யம் தென்னிந்திய மக்களுக்கு ஒரு புகலிடமாகவும் பந்தோபஸ்து மிகுந்த கோட்டையாகவும் விளங்கி வந்தது.


அக்பர் பேரரசு

ஹர்ஷ சக்கரவர்த்திக்குப் பின்னால் ஏறக்குறைய ஆயிரத்தைந்நூறு ஆண்டுகள் வரை எத்தனையோ முஸ்லிம் மன்னர்கள் இந்தியாவின் மீது படையெடுத்து வந்து இந்தியாவின் பெரும் பகுதியைக் கைப்பற்றினார்கள். கொஞ்ச காலம் தேசத்தை ஆளவும் ஆண்டார்கள். ஆனால் அவர்களை எல்லாம் மன்னர்கள் என்றோ வெற்றி வீரர்கள் என்றோ சொல்வதைவிடக் கொள்ளைக்காரர்கள் என்றுதான் சொல்ல வேண்டும்.

அவர்கள் வந்தார்கள். கோவில்களையும் கோட்டைகளையும் தகர்த்தார்கள். சீரும் செழிப்பும் மிகுந்த பல நகரங்களைப் பொசுக்கிச் சாம்பலாக, சுடுகாடாக ஆக்கினார்கள். அகப்பட்டதைச் சுருட்டிக் கொண்டு ஓடிப் போனார்கள். ஆனால் இதற்கெல்லாம் விதி விலக்காக விளங்குபவர் அக்பர். அவர்

ஒருவரைத்தான் மன்னர் என்று சொல்ல முடியும்.

அக்பர் பட்டத்துக்கு வந்தபோது அவருக்கு வயது பதின்மூன்று. சுற்றிலும் எங்கு பார்த்தாலும் ஒரே பகைமை, துவேஷம் குடி கொண்டிருந்தது. அவருடைய நாட்டைப் பிடுங்கிக் கொள்ளப் பலர் காத்திருந்தார்கள். அக்பர் அந்தச் சிறு வயதிலேயே அளவு கடந்த தைரியத்துடன் நிலைமையைச் சமாளித்தார்.



அவருடைய தந்தை ஹுமாயூன் ஒரு பெரிய பேரரசைத் தன் மகனுக்குத் தேடி வைத்து விட்டுப் போகவில்லை. அப்போதிருந்த மொகலாய ராஜ்யம் மிகச் சிறியது. இருபத்தைந்து வருஷம் வரை அக்பர் உருவிய வாளை உறையில் போடாமல் கிழக்கே வங்காளத்திலிருந்து மேற்கே பலுசிஸ்தானம் வரையிலும் தெற்கே அஹமது நகரம் வரையிலும் சென்று தம்முடைய வெற்றிக் கொடியை நாட்டி ஒரு பெரிய சாம்ராஜ்யத்தை ஏற்படுத்தினார். ஏறக்குறைய இந்தியா முழுவதும் மொகலாய சாம்ராஜ்யத்துக்கு உட்பட்டு விட்டது.

ஒரு பெரிய ராஜ்யம் கிடைத்து விட்டது. அதை எப்படி ஆள்வது? வாளால் வென்றதை வாளாலேயே ஆளமுடியாது என்பது அக்பருக்கு நன்றாகத் தெரியும். அக்பர் யோசித்துப் பார்த்தார். சிறந்த மதிநுட்பமும் ராஜதந்திரியுமான அவருக்கு ஒரு விஷயம் தெளிவாக விளங்கி விட்டது. இவ்வளவு பெரிய பேரரசை ஆளுவதென்றால், அதற்கு மக்களுடைய அன்பும் ஒத்துழைப்பும் அவசியம் இருக்க வேண்டும்; முக்கியமாக ஹிந்துக்களுடைய ஒத்துழைப்பு அவசியம் இருக்க வேண்டும்; ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையே வேற்றுமை காட்டுவது ஆபத்து என்பதை அவர் நன்கு தெரிந்து கொண்டார்.

அவ்வளவுதான்; அப்புறம் ஐம்பது வருஷத்துக்கு மொகலாய சாம்ராஜ்யம் சிமெண்டினால் கட்டப்பட்ட கான்கிரீட் கட்டிடமாக விளங்கியது. பெரும்பான்மை மக்களாகிய ஹிந்துக்களுடைய ஒத்துழைப்பையும் நல்லெண்ணத்தையும் பெறுவதற்காக அவர் என்ன செய்தார்?

ஹிந்துக்களுக்கு மதிப்பும் மரியாதையும் கொடுத்தார். ராணுவத்திலும் அரசாங்கத்திலும் மிகவும் பொறுப்புவாய்ந்த பதவிகளுக்கெல்லாம் அவர்களை நியமித்தார். சுருங்கக் கூறினால், மொகலாய ராஜ்யத்தை ஹிந்துக்கள் தங்களுடைய சொந்த ராஜ்யமாக நம்பும்படி செய்வதற்கு என்னென்ன செய்ய முடியுமோ அவ்வளவையும் செய்தார்.

அக்பர் பெரிய ரசிகர். சங்கீதத்திலும் ஓவியக் கலையிலும் இலக்கியத்திலும் அவருக்கு அளவு கடந்த விருப்பம் உண்டு. ஆனால், அவ்வளவு பெரிய பேரரசை ஸ்தாபித்த பாதுஷா அக்பருக்கு எழுதப் படிக்கவே தெரியாதாம். என்ன அதிசயம்!

அக்பருடைய பேரரசு ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமைக்கு ஒரு சிறந்த உதாரணமாகும்.

மகாராஷ்டிர சாம்ராஜ்யம்

பாதுஷா அக்பர் எவ்வளவோ சிரமத்துடனும் மதிநுட்பத்துடனும் ஸ்தாபித்த மொகலாய சாம்ராஜ்யத்தைக் குலைத்து, அது இருந்த இடம் தெரியாமல் போவதற்கு வேண்டிய அருந்தொண்டு செய்த பெருமை ஔரங்கஜீப்பைச் சேரும்.

ஔரங்கஜீப் எவ்வளவோ அருமையான வேலைப்பாடுகளமைந்த மசூதிகளைக் கட்டியிருக்கிறார். அவைகள் எல்லாவற்றையும் விட மொகலாய சாம்ராஜ்யத்துக்கு அவர் கட்டிய கல்லறை இருக்கிறதே, அதுதான் ரொம்பப் பிரசித்தியானதாகும்.

மத வெறி பிடித்த ஔரங்கஜீப் நூற்றுக் கணக்கான ஹிந்துக் கோவில்களை இடித்தார். சீக்கிய குருக்களை உயிரோடு சித்திரவதை செய்து கொன்றார்.

இதனால் தேச முழுவதும் ஒரு கொந்தளிப்பும ஆத்திரமும் உண்டாகிறது. அந்த ஆத்திரமும் கொந்தளிப்பும் சிவாஜியாக உருவெடுத்தது.

சிவாஜி தம் பத்தொன்பதாவது வயதிலேயே ஒரு கோட்டையைப் பிடித்தார்.

சிவாஜியிடம் பெரிய ராணுவம் எதுவும் கிடையாது, பணம் கிடையாது, பக்கபலமும் கிடையாது. தேசத்தைக் கொடுங்கோன்மையிலிருந்து காப்பாற்ற வேண்டும் என்ற ஒரு திடசங்கல்பமே அவருக்குப் பெரும் பக்கபலமாக இருந்து வந்தது.

சிவாஜி தனக்குப் பக்கத்திலிருந்த பல கோட்டைகள் மீது படையெடுத்து ஒன்றன் பின்னொன்றாக அவற்றைக் கைபற்றினார்.

சிவாஜியின் பிரதாபம் டில்லிக்கு எட்டியது. ஒளரங்கசீப் யோசித்துப் பார்த்தார். "சீ, இது ஆபத்து! முளையிலேயே கிள்ளி எறியவேண்டும்" என்று கருதி ஒரு மாபெரும் படையை அனுப்பினார்.

* * *

சிவாஜியின் சிறு படை எங்கே? அந்தப் பிரமாண்டமான ராணுவம் எங்கே? சிவாஜி அதை நேருக்கு நேர் யுத்தத்தில் எதிர்ப்பது ஆபத்து என்பதை உணர்ந்து அதைத் தந்திரத்தால் வென்றார். மொகலாய சைனியம் படுதோல்வி யடைந்து டில்லியை நோக்கி ஓட்டம் பிடித்தது. இந்த யுத்தத்தின் மூலம் சிவாஜிக்குப் பெரும் புகழ் கிடைத்தது.

சிவாஜியை வெல்லுவது கஷ்டம் என்பது ஒளரங்கசீப்புக்கு விளங்கிவிட்டது. உடனே அவருடைய மனதில் ஒரு வஞ்சக எண்ணம் தோன்றியது. சிவாஜியை ஏமாற்றி ஆக்ராவுக்கு வரவழைத்து அவரைக் கைது செய்தார். ஆனால், சிவாஜி அந்தச் சிறையிலிருந்து சாமர்த்தியமாகத் தப்பியோடி வந்து விட்டார்.

கொஞ்ச காலத்துக்குள் சிவாஜி மகாராஷ்டிர சாம்ராஜ்யம் ஒன்றை அமைத்து விட்டார். அந்தச் சாம்ராஜ்யத்துக்கு அரசராக முடி புனைந்து கொண்டார்.

சிவாஜி ஒளரங்கசீப்பை வெறுத்தார். மொகலாய சாம்ராஜ்யத்தை வெறுத்தார். ஆனால், முஸ்லிம்களை வெறுக்கவில்லை.

சிவாஜி தம்முடைய குருவாகிய ராமதாஸைத் தெய்வமாகக் கருதி வந்தார். ஒரு நாள் அவருடைய அரண்மனைக்கு வெளியே "பிச்சை போடுங்கள், மகாராஜா" என்று ஒரு குரல் கேட்டது. சிவாஜி திடுக்கிட்டு வெளியே வந்து பார்த்தார். அவருடைய குரு ராமதாஸ் பிக்ஷா பாத்திரத்தைக் கையில் ஏந்திக்கொண்டு நின்றிருந்தார். சிவாஜி அவரைப் பார்த்து, "சுவாமி, தங்களுக்குப் பிச்சையா வேண்டும்? இதோ, என்னுடைய ராஜ்யத்தையே தங்களுக்குப் பிச்சையாகக் கொடுத்து விட்டேன். பெற்றுக் கொள்ளுங்கள்" என்றாராம்.

ஜனநாயகப் பேரரசு

சந்திரகுப்தனும் அசோகரும் விக்கிரமாதித்தனும் ஆட்சிபுரிந்த நம்முடைய அருமை பாரத தேசத்தில் இப்போது புதிதாக மற்றொரு சுதந்திரப் பேரரசு ஸ்தாபிதமாகியிருக்கிறது. காந்தி மகாத்மாவின் ஆத்ம சக்தியினாலும் அவருடைய தலைமையில் எண்ணற்ற தேச பக்தர்கள் செய்த தியாகங்களின் மகிமையினாலும் இந்தப் பேரரசு ஸ்தாபிதமாகி யிருக்கிறது. இதற்கு முன்னெல்லாம் இந்தியாவில் நிலைபெற்றுச் சரித்திரப் புகழ் பெற்ற சாம்ராஜ்யங்களுக்கும் இப்போதுள்ள சாம்ராஜ்யத்துக்கும் ஒரு முக்கிய வித்தியாசம் உண்டு. ஜனநாயக அடிப்படையில் பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் இப்போதுள்ள பேரரசை நடத்துகிறார்கள். ராஜாஜி, ஜவாஹர்லால்ஜி, சர்தார் படேல் முதலிய ஒப்பற்ற தியாக மூர்த்திகளினால் பொது ஜன சம்மதத்தோடு இந்தப் பேரரசு இப்போது சிறப்பாக நடந்து வருகிறது.

"முப்பது கோடி ஜனங்களின் சங்கம்
முழுமைக்கும் பொது உடைமை
ஒப்பிலாத சமுதாயம்
உலகத்துக்கொரு புதுமை"

என்ற மகா கவியின் வாக்குக்கு இலக்கியமாய் விளங்கும் சுதந்திர இந்தியப் பேரரசு நீடூழி நிலைத்து வாழ்வதாக!




ஆதாரபூர்வமான சரித்திர காலத்தில் இந்தியாவில் பெயர் பெற்று விளங்கிய முதல் பேரரசு சந்திரகுப்த மௌரியன் ஸ்தாபித்தது. சந்திரகுப்தனுக்கு ஆரம்பகாலத்தில் துணை புரிந்து பிற்காலத்தில் மதி மந்திரியாகவிளங்கியவர் 'அர்த்த சாஸ்திர' ஆசிரியரான கௌடில்ய சாணக்கியர். விறல் வீரனும் மதியூகியுமான இவ்விருவரும் சேர்ந்து அலெக்ஸாண்டருக்குப் பிந்தைய கிரேக்க மகா வீரனை செல்யூகஸைத் தோற்கடித்து மகத சாம்ராஜ்யத்தை இணையற்ற மகோன்னதத்துக்குக் கொண்டுவந்தார்கள். ★ ★ ★ ★



சந்திரகுப்த மௌரியனுடைய பேரன் அசோகன் ஏறக்குறைய பாரத தேசம் முழுவதையும் ஒரு குடை நிழலில் அரசாண்டான். கலிங்கத்துப் போரில் நிகழ்ந்த பயங்கர மனித வதைகளைக் கண்ட பிறகு அசோகன் ஹிம்சை வழியை வெறுத்து புத்த பகவானுடைய அஹிம்சா தர்ம போதனையை மேற்கொண்டது உலக சரித்திரத்திலேயே ஒப்பற்ற சம்பவமாகும். அசோகனுடைய ஆட்சியில் பாரத தேசம் தர்மம், சத்தியம், ஜீவகாருண்யம் ஆகியவற்றால் தலை சிறந்து விளங்கியது. அசோகன் அனுப்பிய புத்தமதப் பிரசாரகர்கள் சிங்களம், புட்பகம், சாவகம், சீனம் முதலிய நாடுகளில் புத்த தர்மத்தைப் பரப்பினார்கள்.



இந்தியாவில் விக்ரமாதித்யன் கதைகளை அறியாதவர் யார்? உஜ்ஜயினியைத் தலைநகராகக் கொண்டு பாரத தேசம் முழுவதும் பரந்து பரவியிருந்த பேரரசைச் சந்திரகுப்த விக்ரமாதித்யன் கீர்த்தியுடன் ஆண்டான். போர்க்கலையில் வல்லவனாயிருந்தது போல் அரங்கலைகளில் ஆர்வம் மிக்கவனாயிருந்தான். விக்ரமாதித்யனுடைய சாம்ராஜ்ய கவியாகிய காளிதாஸனுடைய சாகுந்தல நாடகம் அவனுடைய காலத்திலேயே அரங்கமேடையில் நடிக்கப்பட்டது. புவிச்சக்ரவர்த்தியும் கவிச்சக்ரவர்த்தியும் சரியாசனத்தில் வீற்றிருந்து சாகுந்தல நாடகம் பார்க்கிறார்கள். ★ ★ ★ ★ ★



ஏழாம் நூற்றாண்டில் காஞ்சியில் மகேந்திர பல்லவ சக்கரவர்த்தி அரசு புரிந்த போது விந்திய பர்வதத்துக்கு வடக்கேயுள்ள உத்தர ஹிந்துஸ்தானம் முழுவதும் ஹர்ஷவர்த்தனனின் பேரரசுக்கு உட்பட்டிருந்தது. நாலு வருஷங்களுக்கு ஒரு முறை புத்தர், மகா வீரர், சூரியநாராயணர் ஆகிய மூன்று சமய மூர்த்திகளையும் தங்க ரதத்தில் ஏற்றிவைத்து ஹர்ஷன் பெருவிழா நடத்தினான். அந்த விழாவின் போது தன் பொக்கிஷத்திலுள்ள சகல செல்வங்களையும் எளியவர்களுக்குத் தானம் செய்தான். எல்லாவற்றையும் கொடுத்தபிறகு வந்த ஏழைக்குத் தன் மேனியை அலங்கரித்த பீதாம்பரத்தை எடுத்து அளித்தான்.



பாரத தேசத்தின் சரித்திரத்தில் தமிழகத்துக்கு எப்போதும் தனிச் சிறப்பு உண்டு. தஞ்சாவூர்ச் சோழர்களின் சந்ததியில் வந்த ராஜராஜனுடைய காலத்திலும் அவனுடைய குமாரன் ராஜேந்திர சோழனுடைய காலத்திலும் தமிழகம் இணையற்ற பெருமையடைந்தது. இராஜேந்திர சோழன் வடக்கே கங்கைக்கரை வரையிலுள்ள நாடுகளிலும் தெற்கே இலங்கைத் தீவிலும் கிழக்கே மலாய் நாட்டிலும் சாவகத் தீவிலும் புலிக் கொடியை உயர்த்தினான். கங்கை கொண்ட சோழன் என்றும், கடல் கடந்து கடாரம் கொண்ட சோழன் என்றும் சரித்திரப் பட்டங்களைப் பெற்றான்.



வடக்கு நோக்கிப் பரவிவந்த பட்டாணிய ஆக்கிரமிப்பை எதிர்த்து நிற்பதற்காகத் தெற்கே தோன்றிய வல்லரசு விஜயநகர சாம்ராஜ்யம். கிருஷ்ணதேவ ராயரின் காலத்தில் விஜயநகரம் எல்லாத் துறைகளிலும் புகழின் கொத்தை அடைந்தது. கிருஷ்ணதேவ ராயர் தென்னாடு முழுவதையும் ஒரு குடையின் கீழ் ஆண்டார். காஞ்சிபுரம், மதுரை முதலிய க்ஷேத்திரங்களில் உள்ள முன் வாசல் பெரிய கோபுரங்களைக் கட்டினார். தென்னாட்டுக்கு ஒரு முறை அவர் விஜயம் செய்தபோது பட்டத்து யானை மதம் பிடித்து ஓட, அதை அடக்கிக் கொண்டு வந்து ராயர் முன்னால் நிறுத்தினான் புதுக்கோட்டைத் தொண்டைமான். வீரத்தைப் பாராட்டும் பெருந்தகையாளரான கிருஷ்ணதேவ ராயர் தொண்டைமானைப் புதுக்கோட்டை மன்னனாகச் செய்தார்.



ஏறக்குறைய அறுநூறு வருஷம் இந்தியாவில் முஸ்லிம் மன்னர்களின் அரசாட்சி ஓங்கி யிருந்தது. கோரி முகம்மது முதல் பகதூர் ஷா வரையில் பல வம்சங்களைச் சேர்ந்த பாதுஷாக்களும் சுல்தான்களும் ஷா இன் ஷாக்களும் அரசு புரிந்தார்கள். அவர்களிலே யெல்லாம் ஒப்பும் உயர்வும் அற்று விளங்கியவர் மொகலாய வம்சத்து அக்பர் பாதுஷா. இந்தியா தேசத்தில் ஹிந்துக்களும் முஸ்லிம்களும் ஒற்றுமையாகச் சகோதர தர்மத்துடன் வாழலாம் என்று கனவு கண்டு காரியத்திலும் அவர் சாதித்தார். விக்ரமாதித்யனுடைய சபையில் இருந்ததுபோல் அக்பரின் சபையிலும் கலைவல்லோர் பலர் புகழ் பெற்று விளங்கினார்கள். அவர்களில் தான்ஸேன் என்னும் சங்கீத வித்வான் அமர கீதங்களைப் பாடியபோது அக்பர் சக்கரவர்த்தி சிம்மாசனத்திலிருந்து கீழே இறங்கித் தாள வாத்தியம் வாசித்து மகிழ்வது வழக்கம்.



குருக்ஷேத்திரத்தில் மகாபாரதப் போர் எப்போது நடந்தது? ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் துவாபர யுகத்தின் முடிவில் நடந்தது என்று சொல்வார்கள். ஆனால் அந்த மகா யுத்தம் முந்நூற்றைம்பது வருஷங்களுக்கு முன்னாலும் ஒரு தடவை நடந்தது! அன்னை ஜீஜீ பாய் பாரதக் கதை சொன்னபோது அர்ச்சுனனும் கர்ணனும் பீமனும் துச்சாதனனும் பீஷ்மப் பிதாமகரும் சாத்யகியும் துரோணரும் திருஷ்டத்துய்மனும் பால சிவாஜியின் மனக் கண் முன்னால் நின்று மீண்டும் தங்களுடைய வீர தீர சாகசச் செயல்களை நடத்தினார்கள். அதன் பயனாகத்தான் பிற்காலத்தில் சத்ரபதி சிவாஜி மத்திய இந்தியாவில் மகாராஷ்டிர சாம்ராஜ்யத்தை ஸ்தாபித்தார்.

அழேன் மூக்கே

ஸ்ரீ வ.வே.சு. ஐயர்

ஜயலக்ஷ்மியானவள் தன்னை விரும்புவோரை ரத்தபலி கேட்கிறாள். இது நமது நாட்டில் மாத்திரமில்லை; பண்டை நாட்களில் மாத்திரமில்லை. ஆதி நாளிலும் இதே விதிதான்; இந்நாளிலும் இதே விதிதான். நம் நாட்டிலும் இதுதான் விதி; இதர தேசங்களிலும் இதுதான் விதி.

பலியிலும் சாமானியமான ரத்த பலியில் அவள் திருப்தியடைவதில்லை. பாரத யுத்தத்தின் துவக்கத்தில் முப்பத்திரண்டு லக்ஷணங்களும் பொருந்திய ஒரு புருஷனைப் பலியிட வேண்டும் என்று பாண்டவ கௌரவர் முயன்றதாகச் சொல்லுவது வெறும் விளையாட்டுக் கதையல்ல. அதில் ஓர் ஆழமான, சநாதனமான சத்தியம் பொதிந்து கிடக்கிறது. மகா உத்கிருஷ்டமான பொருளைத் தியாகம் செய்வதுதான் தியாகம். திரிகரண சுத்தியாக அதைக் கொடுக்கத் துணிந்தவர்களைத்தான் வெற்றித் தேவி மணக்கச் சம்மதிக்கிறாள்.

ரோமாபுரியிலே பூமி வெடித்து, எவ்வளவு மண் கொட்டியும் நிரப்ப முடியாமல் ஒரு பிரும்மாண்டமான பள்ளம் நின்றுபோய் விட்டது. நகரத்துத் தலைவர்கள் ஓர் ஆலயத்துக்குச் சென்று அங்கே குறி கேட்டார்கள். அந்தக் கோவிலிலுள்ள தெய்வமானது, நகரத்துக்குள் மிகச் சிறந்த பொருள் எது இருக்கின்றதோ, அதைப் பள்ளத்தில் போட்டுவிட்டால் உடனே அது மூடிப் போய்விடும் என்று வாக்குக் கொடுத்தது. தலைவர்கள் தங்கத்தையும் பொன்னையும் மாடுகளையும் கன்றுகளையும் அதில் போட்டுப் பார்த்தார்கள். அது நிரம்பவில்லை. ஆனால் குவிந்தக் கூர்ஸியஸ் என்னும் ஓர் இளஞ்சிங்கத்தின் இதயத்தில் அந்த வாக்கின் அந்தரார்த்தம் ஸ்புரித்து விட்டது. ரோமாபுரியின் சிரேஷ்டமான தனம் மகா சௌரியம் நிறைந்த போர் வீரனே யாகையால், ஒரு போர் வீரன் அந்தப் பள்ளத்தில் வீழ்ந்தால்தான் அது நிரம்பும் என்று அவனுக்கு வெட்ட வெளிச்சமாய்த் தோன்றிற்று. அந்த எண்ணத்தை வேறு யாரிடமாவது அவன் சொன்னானா? வேறு யாராவது போய் விழட்டுமே என்று காத்திருந்தானா? இல்லை. மனத்தில் அவ்வெண்ணம் பிறந்ததுதான்; உடனே கவசம் தரித்து, ஆயுதம் பூண்டு, தன் போர்க் குதிரையின் மீது ஏறிப் புறப்பட்டு விட்டான். பள்ளத்தில் விழப்போகிற நிமிஷத்தில்தான், என்ன செய்கின்றாய் என்று சொல்லித் தேக்கினவர்களிடம் "ரோமாபுரியின் உத்கிருஷ்டமான செல்வத்தைப் பள்ளத்தில் போட்டு நகரத்தைக் காக்கின்றேன்" என்று சொல்ல அவனுக்குத் தயவு வந்தது. அவ்வளவுதான், குதிரையைத் தட்டி விட்டான்; அடுத்த நிமிஷம் குதிரையும் அவனுமாகப் பள்ளத்தில் குதித்து விட்டார்கள். என்ன ஆச்சரியம்! சென்ற நிமிஷம் இடுகிடு பாதாளமாக இருந்த நிலம், கிழிந்த நீர் மூடுவதுபோல உடனே மூடிவிட்டது!

• • •

இந்தக் கதையை நாம் இங்கே எதற்காகச் சொன்னேனும் என்றால், மேகோன்னதமான லாபம் வேண்டுமானால் சிரேஷ்டர்கள் தங்களைத் தாங்களே பலி கொடுத்துக் கொள்ள முன் வரவேண்டும் என்பது ஒரு நாட்டின் கொள்கை அல்ல, ஒரு காலத்தின் நம்பிக்கை அல்ல என்று காட்டும் பொருட்டுத்தான். ஆழமாகப் பார்த்தால் ஒரு மனிதனுக்காகட்டும், ஒரு ஜாதிக்காகட்டும்; இந்த ஆத்ம சமர்ப்பணம்தான் பரம தர்மம். "பிராணனை விட்டவன் வாழ்வான், விடாதவன் வீழ்வான்" என்றார் ஏசு கிறிஸ்துவும்.

அழேன் மூக்கே என்பவனும் நாம் மேலே கூறிய மகாபுருஷர்களின் ஜாதியைச் சேர்ந்தவன். அவன் தன் நாட்டுக்காக, தன் தேச சேவைக்காகத் தன்னைப் பலி கொடுக்கத் துணிந்த மகா வீரன்.



அவன் லீல் நகரத்தில் ஒரு மது வியாபாரியாக இருந்தான். அவனுக்குச் சிறு வயதிலேயே விவாகமாகியிருந்தது. அவன் பத்தினியும் அவனுக்கு அனுகுணமானவளாகவே அமைந்திருந்தாள். இருவரும் ஒருவரை யொருவர் மிக அன்னியோன்னியமாகக் காத

வித்து வந்தார்கள். அவர்களுக்குக் காலக் கிரமத்தில் ஐந்து குழந்தைகள் உண்டாயின. தலைச்சன் குழந்தையான பெண்ணுக்கு அப்பொழுது பதினெட்டு வயது. அவள் பெயர் ழெனிவியேவா. மற்றக் குழந்தைகளெல்லாம் சின்னஞ் சிறியவைகள்.

இந்தக் குடும்பமானது யாதொரு கஷ்டமும் வியாகூலமும் விசாரமும் இன்றி இருபது வருஷ காலம் சுகமாக வாழ்ந்து வந்தது. ஆனால் ஆனந்த வருஷம் ஆடி மாதத்தில் மூண்ட ஐரோப்பிய மகாயுத்தம் இவர்களையும் பிடித்துவிட்டது.

லீல் கோட்டையானது ஆனந்த வருஷம் ஐப்பசி மாதம் முதலிலேயே ஜெர்மானியரிடம் பணிந்துவிட்டது. அதற்கு முந்தியே ஜெர்மானிய வெள்ளம் கரை புரண்டோடிப் பிரான்ஸின் வடகீழ்ப் பாகம் முழுவதையும் அமிழ்த்திவிட்டது. தலைநகரான *பாரீ கூட ஒருவேளை சத்துரு வசமாகிவிடுமோ என்ற பயத்தினால் பிரெஞ்சு அரசாங்கமே போர்தோ நகருக்கு மாற்றப்பட்டுப் போய் விட்டது. இந்த நிலைமையில் பிரான்சு ஜனங்கள் மனத்தில் உண்டான கிளர்ச்சியை எவ்வாறு வர்ணிக்கலாகும்? தாயினும் இனியதான ஜன்ம பூமியில் அன்னியன் புகுந்து அட்டகாசம் செய்து கொண்டிருக்கையில், எந்த ஆண்பிள்ளையின் மனம் துடிக்காதிருக்கும்?

தேசபக்தியுள்ள பிரெஞ்சுக்காரர்களுக்கு இந்தக் காட்சியைக் காணச் சகிக்கவில்லை. ஆனால் நம்மால் என்ன செய்ய முடியும் என்கிற ஏக்கந்தான் எல்லோருடைய நெஞ்சிலும் நிரம்பி யிருந்தது.

இந்தப் பொதுப்படையான ஏக்கத்தினிடையில் ஒருவன் மாத்திரம், இந்தச் சமயத்தில் தாய்நாட்டுக்கு நாம் செய்யக்கூடிய உதவி என்னவென்று இடைவிடாது சிந்தனை செய்துவந்தான். அவன்தான் நம் கதாநாயகனான மூக்கே.

பலவிதமாக யோசித்துப் பார்த்ததில், லீல் கோட்டைக்குள் கைதிகளா யிருக்கும் தேசக் கட்சிச் சிப்பாய்களைத் தன்னால் இயன்ற அளவுக்குத் தப்புவித்து விடுவது தான் தற்பொழுது தன்னா லாகக்கூடிய காரியம் என்று மூக்கே நிச்சயித்துக் கொண்டான்.

ஆனால் இது லேசான காரியமா? அகப்பட்டுக் கொண்டாலோ? சத்துருக்கள் எங்கு பார்த்தாலும் கண்குத்திப் பாம்புகள் போலப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஒரு நாள் தப்பலாம், ஒரு மாதம் தப்பலாம், ஒரு வருஷம் வேண்டுமென்றாலும் தப்பலாம். எவ்வளவு ஜாக்கிரதையாக இருந்தாலும் ஒரு நாள் அகப்பட்டுக் கொண்டு தானே தீருவோம்? அப்பொழுது நம் கதி என்ன ஆகும்? அகப்பட்டுவிட்டால் மரணத்தைத் தவிர வேறு தண்டனை இல்லை. அப்படி ஏதாவது நேர்ந்துவிட்டால், அதைப் பத்தினி எப்படிச் சகிப்பாள்? குழந்தைகள் என்ன கதி அடையும்? அவர்களை யார் தேற்றுவார்கள்?—என்ற நினைவுகள் அவன் நெஞ்சில் உதித்தன.

அடுத்த நிமிஷம் நம் தேசத்தின் க்ஷேமத்தைவிடக் குடும்பத்தின் சுகம் அத்தனை பெரிதா? நாடு அன்னியன் வசம் ஸ்திரமாய்ப் போய் விட்டதானால் பிறகு நாமாவது, குடும்பமாவது? உயிரை வேண்டுமென்றால் வைத்துக்கொண்டிருக்கலாம். ஆனால் நாட்டுக்காவது தனி மனிதனுக்காவது ஒளி யிருக்குமா? புகழிருக்குமா? கௌரவ மிருக்குமா? தெருவில் திரியும் நாயானது அடிமை நாட்டின் மனிதனை விட எண்ணிறந்த மடங்கு மேலல்லவா? பிறகு, என்றென்றைக்கும் நம் நாட்டில் நாட்டான் கை கீழ், அன்னியன் கைதான் மேல் என்றாகி விடாதா? இப்படி யாவதைத் தடுக்க நம்மாலான அளவுக்கு முயலாமல் அப்படி ஒரு பிழைப்பா?—என்கிற எண்ணங்கள் அவன் மனத்தில் எழும்பின. கடைசியில் என்ன வந்தாலும் வரட்டும், நாட்டுக்குச் செய்ய வேண்டிய கடமைதான் பிரதானமானது என்று நிச்சயித்துவிட்டான்.

2

அன்று முதல் மூக்கே தன்னுடைய நிச்சயத்தின்படி நடக்க ஆரம்பித்து விட்டான். பல பிரெஞ்சு நாயகர்களையும் சிப்பாய்களையும் ஜெர்மானியரின் சிறைப் பாசறையினின்று தானே தப்புவித்துவிட்டான். தவிர, தானே காவலாளருக்கு அற்றஞ் செய்து விட்டுத் தப்பியோடும் சிப்பாய்களுக்குத் தங்க அங்கங்கே ரகசியமான வசதிகள் ஏற்படுத்தித் தந்தான். இன்ன இன்ன இடங்களில் ஒளிந்து கொள்ளலாகும் என்ற

* ஆங்கிலேயர் சொல்லுவதைப் பார்த்து நாமும் இதைப் பாரிஸ் என்று சொல்லி வருகிறோம். ஆனால் பிரெஞ்சுக்காரர் உச்சரிப்புத்தான் இதற்குப் பிரமாண மானதால் பாரீ என்றே எழுதியிருக்கிறோம்.

சங்கதியைச் சத்துருவின் காவலிலுள்ள பிரெஞ்சுச் சிப்பாய்களுக்குள் நம்பிக்கையானவர்களுக்குத் தெரிவித்து, தப்பியோடும் சிப்பாய்களுடைய கஷ்டங்களையும் கலக்கங்களையும் மிகவும் குறைத்து வைத்தான்.

அவர்களில் பெரும்பாலோரை முதலில் தன்னிடமே மறைத்துவைத்துக் கொள்ளுவான் முக்கே. வீட்டில் அவன் மனைவியும் மகளும் அந்தச் சிப்பாய்களுக்குச் சந்தோஷமாய் விருந்தளிப்பார்கள்.

இந்தக் காரியங்களெல்லாம் செய்ய அவனுக்குத் துணையாக நின்று வேலை செய்தவர்கள் மூவர். அவர்கள் பெயர்களும் நினைவில் வைத்துக்கொள்ளத் தக்கன. அவர்களில் ஒருவன் உடைகளுக்குச் 'சப்ஜி' வைத்துத் தைப்பவனான ழேயோழ் யோத்தேன்னன் என்பவன். பெல்ஜியப் படையில் உபஸ்தானிகனான (ஸப்-லெப்டினண்ட்) எர்னெஸ்நதேகோனிங்கன் என்பவன் மற்றொருவன். மூன்றாமவன் பெயர் வில்வேரப் பெருலஸ்தன். இவனும் பெல்ஜியத்தான். சண்டைக்கு முன் இவன் சுங்கச் சாவடிகளை ஏமாற்றி, சுங்கம் கொடுத்து வர வேண்டிய சரக்குகளைச் சுங்கமின்றித் திருட்டுத்தனமாய் ஊருக்குள் கொண்டு வந்து விற்றுப் பிழைப்பது வழக்கம். ஆனால் தெய்வமணி தொட்டதையெல்லாம் பொன்னாக்குவதுபோல, தேசபக்தியானது இவனையும் வீரனாக்கிவிட்டது. சமாதான காலத்தில் இவனுக்கிருந்த ஒற்றையடிப்பாதைகள், காட்டுப் பாதைகள், திருட்டு வழிகள் இவற்றின் அனுபோகம், இப்பொழுது இவனுக்குச் சத்துரு அறியாமல் சிப்பாய்களை அழைத்துப்போவதற்கு மிக்க உதவியாக இருந்தது.

இவ்விதம் முக்கேயும் அவன் மூன்று சகாயர்களும் பலநாள் செய்து வந்தார்கள். ஒருநாள் லீல் நகரத்திலுள்ள பகைவர் பாசறைகளின்மீது வெடிகுண்டுகள் போடவந்த ஆங்கில ஆகாய விமானங்களில் ஒன்றின் மேல், ஜெர்மானியர் சுட்ட பீரங்கிக் குண்டு ஒன்று பட, அது கீழே இறங்கும்படியாகி விட்டது. அது இறங்கின செய்தி ஜெர்மானியருக்கு எட்டியதும், அவர்கள் அது இறங்கிய இடத்தைக் கண்டுபிடித்து அதை ஓட்டி வந்தவனையும் காவலில் வைப்பதற்காக அங்கு மிங்கும் தேடினார்கள். கடைசியாக விமானத்தைக் கண்டுபிடித்தார்கள். ஆனால் விமானியை மாத்திரம் காணோம். பக்கத்திலுள்ள வீடுகளில்தானே ஒளிந்து கொண்டிருப்பான் என்று வீடு வீடாய்ச் சோதித்துப் பார்த்தார்கள். ஊரில் ஒற்றர் குழாமும் வேட்டை நாய்களின் கூட்டமும் நிறைந்து விட்டது. எட்டு நாட்கள் வலை போட்டுத் தேடியும் விமானி அகப்படவில்லை. ஆள் போனவன் போனவன்தான்!

போன் ஹென்ஸிஃஸுக்கு (இவன்தான் கைஸர் நியமித்த ராணுவ அதிகாரி) வந்த கோபத்துக்கு எல்லையில்லை. அடியிற்கண்ட விளம்பரத்தை லீல் தெருக்களிலெல்லாம் ஒட்டுவித்தான்.

விளம்பரம்

இரண்டு ஆங்கில விமானிகள் நகரத்துத் தெற்குப் புற வீதியில் மார்ச்சுமீ ௧௧௨- இறங்கினவர்கள் ஊரில் இதுவரையில் ஒளிந்திருக்கும்படியாகிவிட்டது.

இவர்களை ஒளித்து வைப்பவர்களும் இவர்களுக்கு ஒளிய உதவி புரிபவர்களும் மரண தண்டனைக் குள்ளாவார்கள். இவர்களைப் பற்றிய விவரங்களை நமக்குத் தெரிவிப்பவர்களுக்கு, அவ்விவரங்களின் தன்மைக் கேற்றபடி இனாம் அளிக்கப்படும்.

அங்க அடையாளம்: ஏறத்தாழ ௫ அடி ௭ அங்குலம் உயரம்; கறுப்புத் தோல் மேற்சட்டை; ஆயுதம், சாமான் சட்டு ஒன்றுமிராது.

மகாமாத்தியன் (குவர்னர்.)

இதில் இரண்டு விமானிகள் என்றது தவறு. ஒரு விமானிதான் இறங்கினான். அவன் பெயர் மாப்பின் பெக்கன். அவன் இறங்கிச் சற்று நேரத்துக்கெல்லாம் தேசபக்தி நிறைந்த பிரெஞ்சு ஜனங்கள் அவனை மறைத்து மெல்லக் கொண்டுபோய் முக்கே வீட்டில் சேர்த்து விட்டார்கள். முக்கே வீட்டில் அவன் எட்டு நாட்கள் இருந்தான். தங்கள் நாட்டைப் பகைவனிடமிருந்து மீட்பதற்காக வந்த துணை நாட்டு வீரனானதால், முக்கேயும் அவன் மனைவியும் மக்களும் அவனிடம் பேரன்பு செலுத்தினார்கள். கடைசியில் சமயம் பார்த்து அவனை முக்கேயின் தோழர்களில் ஒருவனான வில்வேரப் பெருலஸ்தன் வசம் ஒப்புவித்து விட்டார்கள். வில்வேரனும் அவனைக் கள்ள வழிகளால் அழைத்துச் சென்று, சத்துருவின் வசம் வந்துவிட்ட மாகாணங்களைக் கடந்து சென்று, பிரெஞ்சு எல்லையில் கொண்டுபோய்ச் சேர்த்து விட்டான்.

மூன்று வாரங்கள் ஆயின. ஒருநாள் காலை வானத்திலிருந்து லீல் நகரத்துச் சதுக்கத்

தில் மூன்று துண்டுப் பிரசுரங்கள் வீழ்ந்தன. அவைகளை ஜெர்மன் சிப்பாய்கள் மகாமாத்தியனிடம் கொண்டுபோய்க் கொடுத்தார்கள். அவைகளில்,

"லீல் நகரத்து ஜெர்மன் மகாமாத்தியனுக்கு மாப்பின்பெக்கன் வந்தனம். உமக்கு அத்தனை பக்கத்தில் சில நாட்கள் சுகமாகக் கழித்தும் உம்முடைய பரிசயத்தைப் பெறாததைப் பற்றி மிகவும் வருந்துகிறேன்."

என்று வரையப்பட்டிருந்தது. அதைக் கண்டதும் போன் ஹென்றிக்ஸுக்கு அடங்காத கோபம் வந்துவிட்டது. இந்த ஆங்கில விமானி எவ்விதம் லீலினின்று தப்பிச் சென்றான் என்று கண்டுபிடிக்கும்படி மறுபடியும் தன் ஒற்றர்களையும் சிப்பாய்களையும் ஏவினான்.

ஜெர்மானியச் சிப்பாய்களும் ஒற்றர்களும் நினைத்த இடங்களிலெல்லாம் சோதனை போட்டார்கள். நினைத்த பேர்களை யெல்லாம் சிறையில் பிடித்தடைத்தார்கள். முக்கேயையும் அவன் மகளையும்கூடச் சிறை செய்தார்கள். ஆனால் சரியான சாட்சியமில்லாததினால் அவர்களை ஜெர்மானியர் விட்டு விட்டார்கள். இருப்பினும் மகாமாத்தியனான போன் ஹென்றிக்ஸ் அவர்களைக் கண் காணிப்பிலேயே வைத்து வந்தான்.

கடைசியாகச் சில துரோகிகள் ஜெர்மானியரின் காசுக்கு ஆசைப்பட்டு முக்கேயையும் அவனுடைய மூன்று நண்பர்களையும் காட்டிக் கொடுத்துவிட்டார்கள். நால்வர் பேரிலும் ராணுவ நியாயஸ்தலத்தில் ராஜத் துரோகம், ஒற்றுப் பார்த்தல் என்னும் குற்றங்களைச் சாட்டி அவர்களை விசாரித்தார்கள்.

விசாரணை கேவலம் சடங்குதான். விசாரிக்கு முன்னரே நியாயாதிபதிகள் எதிரிகளைக் குற்றவாளிகள்தாம் என்று தீர்மானித்து விட்டார்கள். பிரதிவாதிகளுக்கும் தங்களுக்கு மரண தண்டனைதான் விதிக்கப் போகிறார்கள் என்று தெரியும். இருப்பினும் ஒரு சடங்கு விடாமல் எல்லாம் நடைபெற்றது. கடைசியில் நால்வருக்கும் அவர்கள் எதிர்பார்த்தபடியே மரண தண்டனை கிடைத்தது. தீர்மானத்தைப் படித்ததும் முக்கே, "என் மனச் சாட்சியின் படியேதான் நான் நடந்திருக்கிறேன். பிரெஞ்சுப் பிரஜைகளுக்குள்ள உரிமைகளையும் கடமைகளையும்தான் நான் செலுத்தி



3

ஆங்கில விமானி மாப்பின்பெக்கனும் ஒரு மாத காலம் வரையில் தினம் சாயங்காலம் ஐந்து மணிக்கு லீல் நகரத்தின் மேலே பறக்கிறதும், நாம் மேலே எழுதியுள்ள விளம்பரத்தைப் போடுகிறதுமாகவே இருந்தான். இது ஜெர்மானிய மகாமாத்தியனுக்கு முகத்தி லடிப்பது போலிருந்தது. ஆனால் உயரப் பறக்கிறவனை எப்படிப் பிடிக்கிறது? ஆகையால் அவன் மீது செலுத்த முடியாத கோபத்தை யெல்லாம் பாவம், லீல் நகரத்து ஜனங்களின்மீது செலுத்திக் கொடுமை செய்து வந்தான்.

விருக்கிறேனே ஒழிய வேறில்லை. என்னால் செய்யப்பட்ட எந்தக் காரியத்துக்காகவும் நான் வருத்தப்பட வில்லை. மரணத்தைப் பற்றிய பயமோ எனக்குக் கிடையாது. ஆனால் ஒரே ஒரு வரம்தான் நான் கேட்பது. அதாவது என்னோடு குற்றம் சாட்டப்பட்ட தோழர்களைக் கொல்லாதிருக்க வேணும் என்பதே!'' என்று கூறித் தன்னுடைய தீரத்தையும் பெருந்தன்மையையும் காட்டி விட்டான்.

ஆனால் மற்ற மூவரும், "நாங்கள் அனைவரும் சேர்ந்துதான் இக்காரியம் செய்தோமாகையால், எங்களுக்கு ஒரே மாதிரி தண்டனையே விதிக்கவேண்டும். எங்கள் அனைவரையும் ஏககாலத்தில் சுட்டு விடுங்கள்!'' என்று சொன்னார்கள். தேச பக்தி நிறைந்த வீரர்கள் வீரத்தில் ஒருவருக்கொருவர் பின்னடைய மாட்டார்களல்லவா?

என்னதான் எதிர்பார்த்திருந்தாலும் மரண தண்டனை விதிக்கப்பட்டது என்று அறிந்ததும், மூக்கேயின் மனைவிக்கும் மக



ளுக்கும் துக்கம் நெஞ்சை யடைத்துக் கொண்டு வந்துவிட்டது. இந்தத் துக்கத்துக் கிடையிலும் முயற்சியைக் கைவிடக் கூடாது என்று ஜெனெவியேவா. மூக்கேயின் உயிரைக் காப்பாற்ற வேண்டுமென்று ஜெர்மானிய மகாமாத்தியனுக்கு ஒரு மனுக் கொடுத்தாள்.

மூன்றும் நாள் சாயங்காலம் ஒரு ஜெர்மானியச் சிப்பாய் வந்து, "அமேன் மூக்கேயை நீங்கள் போய்ப் பார்க்கலாம்'' என்று சொன்னான். அந்தச் சமயத்தில் அவர்களுக் குண்டான சந்தோஷத்துக்கு அளவில்லை. மரண தண்டனையை மன்னித்துவிட்டு, அதைச் சிறைத் தண்டனையாக மாற்றி விட்டிருப்பார்கள் என நினைத்துக்கொண்டு, அவர்கள் மூக்கேயை வைத்திருந்த கோட்டையை நோக்கிப் புறப்பட்டு விட்டார்கள்.

ஆனால் மூக்கேயிடம், "அடுத்த நாள் காலை ஆறு மணிக்கு உன்னைச் சுட்டுவிடப் போகிறோமாகையால், உன் விருப்பத்தைத் தெரிவி'' என்று சிறைச்சாலைத் தலைவன் சொன்னதின்பேரில், அவன் தன் மனைவியையும் மகனையும் சாகுமுன் ஒரு முறை பார்க்க வேண்டும் என்று சொல்லி யிருந்தான். அதன்பேரில்தான் மகாமாத்தியன் உத்தரவுப்படி சிப்பாய் அவன் வீட்டுக்குச் சென்று அவனுடைய மனைவியிடம் மூக்கேயைப் பார்க்கலாம் என்று சொன்னான்.

மூக்கே அவர்கள் வரவை ஆவலோடு எதிர் பார்த்துக் கொண்டிருந்தான். வந்த மனைவியையும் மகனையும் மற்ற மக்களையும் அவன் அன்பும் இரக்கமும் நிறைந்த மனத்தோடு ஆலிங்கனம் செய்துகொண்டான். பிறகு சற்று நேரத்துக்கு ஒருவரும் ஒன்றும் பேச வில்லை. பிரமித்துப் போய் நின்றார்கள். மூக்கேயின் மரண தண்டனை ஒருவேளை மாற்றப்பட்டிருக்கலாம் என அவன் மனைவி நினைத்திருந்தா ளல்லவா? ஆனால் கேட்டு விட்டால் ஒருவேளை இல்லையென்று ஏற்பட்டு விடுமோ என்று அவள் அதைப் பற்றி ஒன்றும் கேட்கத் துணியவில்லை. கடைசியில் மூக்கே தழுதழுத்த குரலோடு, "இன்றுதான் நாம் ஒருவரையொருவர் கடைசியாகச் சந்திப்பது. ஆனால் என் செல்வப் பத்தினியே, சுவர்க்கத்திலும் நான் உன்னை இடைவிடாது நினைத்துக் கொண்டிருப்பேன். குழந்தைகளைப் பத்திரமாகப் பார்த்துக்கொள்!'' என்றான்.

அவ்வளவுதான்; அவள் மூர்ச்சை போட்டுக் கீழே விழுந்து விட்டாள். அதற்குள்

ஜெர்மானியக் காவலாளி, "நேரமாகி விட்டது. நீங்கள் இனிப் போய்விட வேண்டியதுதான்" என்றான்.

உயிரை விட்டு விட்டு உடல்கள் போவது போலத் தாயும் மகளும் பிரளயமாகக் கண்ணீர் விட்டுக்கொண்டும் காவலாளிகள் கதவை அடைத்த பிறகும் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டும் போய் வீடு சென்று மூன்னிலும் பதின்மடங்கு கதறினார்கள்.

3

அன்றிரவு அமேன் முக்கே தூங்கவில்லை. அவர்கள் போனவுடன் அவன் பின்வரும் கடிதத்தை எழுதினான்:—

"என் அன்புக் கன்பான மனையாளே, என் செல்வக் குழந்தைகளே!

உங்களை ஆலிங்கனம் செய்து கொண்டறிருந்தும், என் மனத்திலுள்ளவைகளை உங்களிடம் சொல்லியறிருந்தும், இந்த இந்த கஷ்டங்களுக்கு மத்தியிலும் என் மனத்துக்கு ஓர் ஆறுதலுண்டாகியிருக்கிறது. நீங்கள் தைரியசாலிகள். இந்தக் கடிதம் உங்களுக்குச் சேரும்போது நான் வீரனைப்போல இறந்தேன் என்று நினைத்துக் கொள்ளுங்கள்.

ஏழைக் குழந்தைகளே! உங்களை எல்லோரும் எவ்வளவு கொண்டாடுவார்கள், புகழுவார்கள், போற்றுவார்கள், துதிப்பார்கள், மதிப்பார்கள்! இது எனக்கு ஒரு பெரிய ஆறுதலைத் தருகிறது. உங்களுக்குச் செய்யக்கூடியது அனைத்தும் நம் நாட்டார் செய்வார்கள். தேகோஸிங்கள், மேர்த்தென்ஸன், வில்வோரன் ஆகிய இவர்களுடைய குடும்பங்களுக்கும் நம் நாட்டார் உதவி செய்யக் கடமைப் பட்டவர்கள் என்று அவசியம் நேரும்போது நினைவுறுத்துங்கள்.

என் கண்களே! உங்கள் ஒவ்வொருவருக்கும் பத்து லக்ஷம் முத்தம் கொடுக்கிறேன்.

இங்ஙனம்,
அமேன் முக்கே."

இந்தக் கடிதத்தை முக்கே, வில்வோரனைப் பார்க்க வந்த அவனுடைய மனைவியிடம் கொடுத்து மூனிடம் சேர்த்துவிடச் சொன்னான். இரவு பதினொரு மணியாயிற்று. எல்லோரும் இன்றுதான் கடைசித் தடவை ஒருமித்துச் சாப்பிடுவதென்று சொல்லிக் கொண்டு சாப்பிட்டார்கள். பிறகு வில்வோரனும், தேகோஸிங்கனும், மேர்த்தென்ஸனும் ஒவ்வொருவராக நித்திரை போய்விட்டார்கள். முக்கேக்கு மாத்திரம் தூக்கம் வரவில்லை. கையில் இறகை எடுத்துப் பின்வருமாறு இன்னொரு கடிதம் எழுதினான்.

"என் அன்புள்ள மனைவி, என் அருமைக் குழந்தைகளே!

நீங்கள் போன பிறகு ஒரு கடிதம் எழுதி வில்வோரன் மனைவி மூலமாய் உங்களுக்கு அனுப்பினேன். இன்னொரு கடிதம் இதோ எழுதுகிறேன். இதுதான் கடைசிக் கடிதமாயிருக்கும்.

சாகும்போது நாங்கள், "குடியரசு வாழ்க!" "பிரான்சு வாழ்க!" என்று கூவிக்கொண்டே சாவோம்.

* * *

என் அன்பிற்குரிய மனையாளே, உனக்கு மறுபடியும் ஒரு வார்த்தை எழுதுகிறேன். இந்தத் துக்கத்தைச் சகித்துக்கொண்டு நீ தைரியமாயிரு. உன் குழந்தைகளை உத்தேசித்து நீ உன்னைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும். அவர்களை நல்ல வழியில் கொண்டு வா.

நமது அருமைக் குழந்தைகள் உன்னைச் சுற்றியிருக்கையில் உனக்குச் சந்தோஷமும் பிறக்கும்.

உன்னை எல்லோரும் கௌரவிப்பார்கள். எங்கும் நீ தலை நிமிர்ந்து நடக்கலாம்.

என் செல்வங்களே, செல்லுகிறேன்; கடைசியாக உங்கள் ஒவ்வொருவருக்கும் என் அன்பு நிறைந்த முத்தம் தருகிறேன்.

என் அழகு குழந்தைகளே, செல்லுகிறேன்;

என் அன்புள்ள மூனே, செல்லுகிறேன்!

அ. முக்கே."

காலை ஐந்து மணி அடித்துவிட்டது. முக்கே தன் சிறிய பெட்டியில் உள்ள துணிமணிகளைச் சிக்கென மடித்து வைப்பதையும், புஸ்தகங்களையும் மற்று முள்ள சாமான்களையும் தட்டி வைப்பதையும் பார்த்தால், அவன் ஏதோ ஓர் ஊருக்குப் புறப்படுகிறான் போலிருக்கிறது என்றுதான் தோன்றுமே ஒழிய, இன்னும் ஒருமணி நேரத்தில் பகைவரால் சுடப்படப் போகிறோம் என்கிற எண்ணம் அவன் மனத்தில் இருக்கிறது என்று ஒருவரும் சொல்லமாட்டார்கள்.

அதற்குள் மேர்த்தென்ஸன் எழுந்து, "நண்பர்களே, இன்னும் நமக்கு இகலோக வாழ்க்கை கால் மணி நேரம்தான் இருக்கிறது!" என்று சொல்லிவிட்டு, உடம்பு குளித்துவிட்டுக் கலியாண மாப்பிள்ளை போல உடை உடுத்திக்கொண்டு நின்றான்.


சற்று நேரத்துக்கெல்லாம் ஜெர்மானிய நாயகன் ஒருவன் அவர்கள் அறையைத் திறந்து அவர்களை அழைத்துச் சென்றான். கொலைக்களம் வந்து சேர்ந்ததும் நான்கு பேரையும் வரிசையாய் நிறுத்தினான். மரணத்துறுவாயில் கொலையுண்போருக்குச் சுடுகிறவர்களைக் காணும்போது தம்மை அறியாமல் பயமுண்டாகு மாதலால், அவர்கள் பேரில் கொஞ்சம் இரக்கம் வைத்து அவர்களுடைய கண்களை ஒரு துணியால் கட்டி விடுவது வழக்கம். ஆனால் இந் நால்வரும் தங்கள் கண்களைக் கட்டவேண்டிய தில்லை என்று சொல்லி விட்டார்கள்.

சுடும் சிப்பாய்கள் இவர்களுக் கெதிரே நிறுத்தப் பட்டார்கள். நாயகன் "துப்பாக்கிகளைக் குறி வையுங்கள்!" என்று உத்தரவு செய்கிறான். சிப்பாய்கள் குறி வைக்கிறார்கள். "பிரான்ஸ் வாழ்க! குடியரசு வாழ்க! சுதந்திரம் வாழ்க!" என்று ஏக காலத்தில் நமது நண்பர்கள் கோஷிக்கிறார்கள். "சுடுங்கள்!" என்று நாயகன் உத்தரவிடுகிறான். அவ்வளவுதான். நான்கு வீரர்களும் சுதேசமாகிற தாயை ஆலிங்கனம் செய்து கொள்ளுகிறவர்கள் போலக் கீழே விழுந்து விடுகிறார்கள்!


முக்கே எழுதிய கடிதங்களைக் கண்ணுற்றவர்கள், தன் மனைவி மக்கள் விஷயத்தில் இத்தனை வாஞ்சை வைத்திருந்த மனிதன் இவ்வபாயகரமான காரியத்தில் எவ்வாறு பிரவர்த்தித்தான் என்று நினைப்பார்கள். ஆனால், தன் தாய் நாட்டின் க்ஷேமத்தோடு தன் குடும்பத்தின் சௌக்கியத்தைச் சீர்தூக்கிப் பார்த்து, "குடும்பம் எவ்வாறு ஆகினும் ஆகுக, நாட்டின் க்ஷேமத்தைத்தான் முதலில் பார்க்கவேண்டும்" என்று மனப்பூர்வமாய் நினைத்து, அவ் வெண்ணத்தின் படியே நடந்ததனால்தான் நாம் முக்கேக்கு இத்தனை கௌரவம் கொடுக்கிறோம். அவனைச் சிறையில் வைத்திருந்த பகைவரும்கூட அவனுடைய தீரத்தையும் பெருங் குணங்களையும் கண்டு வியந்து எழுதுகிறார்கள்.

முக்கேயின் மனைவியும் மக்களும் லீலிவிருந்து புறப்பட்டுப் பரீக்கு வந்து அங்கே தங்கள் நாட்டாரால் போற்றப்பட்டு வாழ்ந்து வருகிறார்கள். முக்கேயின் ஆத்ம சமர்ப்பணம் அவர்களின் மீது ஒரு ஒளியை வீசி விருக்கிறது. இப்பேர்ப்பட்ட வீரன் முன் ஏழு தலைமுறைகளுக்கும் பின் ஏழு தலைமுறைகளுக்கும் அழியாத புகழைத் தருகிறான்.

விடுதலை!



சுதந்திர இந்தியாவின்



முதல் பிரதம மந்திரி



தென்னாட்டுத் திலகர்

பி. சுப்பிரமணியம்


தமிழ்நாடு பழங்காலத்தில் பல்வேறு துறைகளிலும் சீரும் சிறப்பும் பெற்று விளங்கியது. கடலில் முத்துக் கொழிப்பதும், கப்பல்களில் மேல் நாடுகளுக்கு வியாபாரம் செய்யச் செல்வதும் தமிழர்களின் சிறந்த தொழிலாக விளங்கியது. ஆனால் துர்ப்பாக்கிய வசமாக ஆங்கில சாம்ராஜ்யம் இந்தியாவில் ஏற்பட்ட பிறகு தமிழர்களின் கப்பல் வியாபாரம் அப்படியே க்ஷீணித்து விட்டது. அதை உய்விக்க ஒருவர் தோன்றினார் தமிழ் நாட்டில். அவர்தான் தென்னாட்டு வீரர் வ. உ. சிதம்பரம் பிள்ளை.

அக்காலத்தில் தூத்துக்குடிக்கும் இங்கிலாந்துக்கும் வாணிபப் பொருள்களை ஏற்றிச் சென்று கொள்ளை கொள்ளையாகப் பணம் சம்பாதித்தார்கள் வெள்ளையர்கள். 'பிரிட்டிஷ் இந்திய ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி' என்பது அவர்கள் நடத்திவந்த கம்பெனியின் பெயர். இக்கம்பெனியார் இந்திய வியாபாரிகளுக்குச் சரியான வசதிகள் அளிப்பதில்லை. மேலும் நிற பேதத்தையும் ஆதிக்க வெறியையும் பல வழிகளில் காட்டினர். இதைக்கண்ட ஸ்ரீ சிதம்பரம் பிள்ளை வெள்ளையர்களுக்கு எதிராக 1906-ம் வருஷத்தில் இந்தியர்களின் மூலதனத்தைக் கொண்டு சுதேசிக் கப்பல் கம்பெனியை ஆரம்பித்தார்.

கப்பலோட்டிய தமிழரும், தென்னாட்டுத் திலகர் எனப் பெயர் பெற்ற தேச பக்தருமான ஸ்ரீ வ. உ. சிதம்பரம் பிள்ளை அவர்கள் தமிழ் நாட்டிலே திருநெல்வேலிச் சீமையிலுள்ள ஒட்டப்பிடாரம் என்னும் ஊரில் 1872-ம் வருஷம் நவம்பர் மாதம் பிறந்தார். அவர் தந்தையார் உலகநாத பிள்ளை அவர்கள் எட்டையாபுரம் சமஸ்தானத்தில் வக்கீலாகச் சேவை செய்து வந்தார்.

சிதம்பரம் பிள்ளை அவர்களின் பால்ய வாழ்க்கை திண்ணைப் பள்ளிக்கூடத்திலிருந்து ஆரம்பமாயிற்று. தமிழ்மொழியைத் திறமையுள்ள ஆசிரியரிடம் ஐயந்திரிபறக் கற்றார். மேல் படிப்புக்காகத் தூத்துக்குடி சென்று கால்டுவெல் கல்லூரியில் சேர்ந்து பட்டம் பெற்றார். சிறிது காலம் தாலுக்கா ஆபீஸ் குமாஸ்தாவாக இருந்தார். அந்த வேலை அவருக்குப் பிடிக்கவில்லை. அதை விட்டுவிட்டுச் சட்டப் பரீட்சையில் தேறி தூத்துக்குடியில் வக்கீல் தொழிலை ஆரம்பித்தார். வழக்கறிஞர் தொழிலில் அவருக்குப் பெரும் புகழ் கிடைத்தது.

வழக்கறிஞர் சிதம்பரம் ஒரு தடவை சென்னைக்குச் செல்ல வேண்டி நேர்ந்தது. தற்செயலாக இராமகிருஷ்ண மடாலயத்தைச் சேர்ந்த இராம கிருஷ்ணானந்தரைச் சந்தித்தார். அவர் ஸ்ரீ சிதம்பரம் பிள்ளையைப் பார்த்ததும் வரவேற்றுப் பல நேரம் பல விஷயங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார். பின் இராமகிருஷ்ணானந்தர் "தாங்கள் இந்தியாவின் விடுதலைக்காக எப்பொழுதாவது பாடுபட்டதுண்டா?" என்று வினவினார். அவ்வளவு தான்! அவரால் ஒன்றும் பதில் கூற முடியவில்லை.



அப்பொழுது அவருக்கு ஏற்பட்ட சுதந்திர உணர்ச்சியானது சென்னையில் "இந்தியா" பத்திரிகைக்கு ஆசிரியராக இருந்து வந்த கவியரசர் பாரதியாரின் நட்பினால் வளர்ந்து பிள்ளை அவர்களை நாட்டின் விடுதலைக்காகத் தனது உடல், பொருள், ஆவி அனைத்தையும் துறக்கும்படி செய்தது.

1907-ம் ஆண்டில் காங்கிரஸ் மகா சபை கூடியது. வெள்ளையர்களை இந்தியாவை விட்டு விரட்டுவதற்குரிய வழிகளை

ஆலோசனை செய்வதற்காகவே அக்கூட்டம் கூடியது. மிதவாதிகள், வெள்ளையர்கள் அளிக்கும் அரசியலை ஏற்க வேண்டும் என்றனர். ஆனால் தீவிரவாதிகள் வெள்ளையர்களை அடியோடு இந்தியாவை விட்டு விரட்டுவதே தங்கள் நோக்கம் என்று எடுத்துரைத்தனர். இவ்வாறு தீவிரவாதத்தை எடுத்துரைத்தவர் பாலகங்காதர திலகர். ஸ்ரீ சிதம்பரம் பிள்ளைக்கும் தீரர் திலகரின் கொள்கையே பிடித்திருந்தது.

திலகரின் முற்போக்குக் கருத்துக்களை அவர் தென்னாடு முழுவதும் பரப்பினார். ஊர் ஊராகச் சென்று மேடையேறி வெள்ளையர்களின் ஆட்சி வெறியையும், அநீதிகளையும் எடுத்துக் காட்டினார். அவருக்குத் துணையாக மேடைகளில் ஏறி ஆங்கில ஏகாதிபத்தியத்தைத் தாக்கித் துணிந்தவர்களில் சுப்பிரமணிய சிவாவும் ஒருவர். வெள்ளையர் ஆட்சியின் கொடுங்கோன்மையை வெளிப்படையாகக் காண்பித்தனர். அந்தக் காலத்தில் வந்தேமாதரம் என்று சொல்லிவிட்டால் வாய்ப்பூட்டு போட்டு விடுவார்கள் அதிகாரிகள். என்று ஒழியும் இந்த ஆங்கிலேயர் ராஜ்யம் என்று யாராவது பேசிவிட்டால் உடன் அவர்கள் கைக்கு இரும்புக் காப்பு வந்துவிடும்! இப்படிப்பட்ட சமயத்தில் சிதம்பரம் பிள்ளை பிரிட்டிஷ் அரசாங்கத்தை வெளிப்படையாகக் கூட்டங்களில் கண்டிக்க ஆரம்பித்தால் ஆங்கிலேயர்கள் அவரை வெளியில் விடுவார்களா? அவரை எப்படியாவது சிறையில் பிடித்துத் தள்ள சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். சந்தர்ப்பம் கிடைத்தது.

ஆங்கில அரசாட்சியின் வாய்ப் பூட்டுச் சட்டத்தை மீறித் திருநெல்வேலியில் விபின் சந்திர பாலரின் விடுதலை தினத்தன்று பதினாயிரக் கணக்கான ஜனங்கள் சூழ்ந்திருந்த ஒரு கூட்டத்தில் ஸ்ரீ சிதம்பரம் பிள்ளை பேசினார். அந்தப் பேச்சு ராஜத் துவேஷமானதென்று குற்றம் சாட்டி அவருக்கு பிரிட்டிஷ் சர்க்கார் இருபது வருஷம் தீவாந்தர தண்டனையை அளித்தனர்.

சிறையில் சிதம்பரம் பிள்ளை எண்ணரிய துன்பங்களை அனுபவிக்க நேர்ந்தது. காலில் நல்ல கனத்த சங்கிலியை மாட்டி வைத்தனர். செக்கு இழுக்கச் செய்தனர். இவ்வளவு துன்பங்களையும் சிறிதும் சலியாது நாட்டின் சுதந்திர நலனுக்காக ஏற்றுக் கொண்டார். 1912ம் வருஷம் டிசம்பரில் விடுதலையடைந்தார். பல வருஷங்கள் சிறைக் கொடுமைகளை அனுபவித்து விட்டு வந்த தீரர் சிதம்பரனாரை ஆறுதல் கூறி அவரைச் சந்தோஷத்துடன் வரவேற்றவர் அவருடைய நண்பர் சுப்பிரமணிய சிவா ஒருவர் தான்.

இராஜத்துரோக குற்றத்திற்குத் தண்டனை பெற்றதால் ஸ்ரீ சிதம்பரம் பிள்ளை தன் வக்கீல் 'சன்னத்'தை இழந்தார். வந்தவருக்கெல்லாம் வரையாது வழங்கும் நிலையிலிருந்தவர் அப்பொழுது வறுமையினால் வாட வேண்டி நேரிட்டது. அவர் வறுமையை நினைத்து மனம் பதைக்கவில்லை. நீதிபதி வாலஸ் என்பவர் இவரது பறிபோன வக்கீல் சன்னத்தை மறுபடியும் வாங்கிக் கொடுத்தார். ஸ்ரீ சிதம்பரம் பிள்ளை தூத்துக்குடிக்குச் சென்று தமது வக்கீல் தொழிலை மீண்டும் ஆரம்பித்தார்.

பிறகு 1920ம் வருஷம் கல்கத்தா காங்கிரஸ் மகாசபைக் கூட்டத்துக்குச் சிதம்பரம் பிள்ளை பிரதிநிதியாகச் சென்றார். மகாத்மா காந்தியடிகள் அஹிம்சா முறையையும் ஒத்துழையாமை இயக்கத்தையும் மேற்கொள்ள வேண்டும் என்று கூறினார். ஆனால் வீரர் சிதம்பரம் தீவிர வாதியல்லவா? திலகர் கோஷ்டியைச் சேர்ந்த சிதம்பரம் பிள்ளைக்கு மகாத்மாவின் கருத்துக்கள் பிடிக்கவில்லை. கடைசியில் தேசிய மகாசபையிலிருந்தே விலகி விட்டார்.

ஸ்ரீ சிதம்பரம் பிள்ளை நீண்டகாலம் சிறையிலிருந்து அவதியுற்றதால் உடல் மெலிந்து நோய்வாய்ப் பட்டு 1936 ம் வருஷத்தில் விண்ணுலகு எய்தினார்.

ஸ்ரீ சிதம்பரம் பிள்ளை இந்திய விடுதலை இயக்கத்தில் சேர்ந்து எண்ணரிய தியாகங்கள் செய்தார். இந்திய விடுதலைக்காகத் தன் உடல், பொருள், ஆவி அனைத்தையும் துறந்தார். அன்னியர்களால் நசுக்கப்பட்ட கப்பல் தொழிலை மீண்டும் நமது நாட்டில் உய்விக்க முயற்சி செய்த கப்பலோட்டிய தீரர் சிதம்பரனாரை இந்திய மக்கள் உலகம் உள்ளளவும் மறக்க முடியாது.

> "என்னுடைய தாய்நாடு எனக்கு எவ்வளவோ அருமையானது; ஆனால் தாய்நாட்டின் சுதந்திரம் எனக்குத் தாய்நாட்டை விட அருமையானது."
>
> —வால்டேர்.

ஸ்தாபகர்



டி. ஆறுமுக முதலியார்

சுதேசி

ஸ்தாபனம்: 1906

•

டெலிபோன்: 8291

தந்தி: 'புவன'

•

இதர, எந்த தயாரிப்புகட்கும், தலை சிறந்ததும், நீடித்து உழைக்கக் கூடியதும், அழகும், கவர்ச்சியும் பொருந்தியனவாகும் விலையுயர்ந்த நவீன யந்திர சாதனங்களால், மேனாட்டு முறைப்படி தயாரிக்கப்பெற்ற எங்கள் "கணபதி" புதிய தமிழ் எழுத்துக்களும், "ஆறுமுகம்" புதிய தெலுங்கு எழுத்துக்களும் புகழ் சிறந்த பல்லோராலும் பாராட்டப் பெற்றுள்ளன. மேலும் அச்சாபீஸ் நிர்வாகிகள் அனைவருடைய நன்மதிப்பையும், ஆதரவையும் பெற்றவையாகும்.

•

பூரா விவரங்களுக்கு எழுதவும்

•

டி. ஏ. சுப்பிரமணிய முதலியார்

- பூரண உரிமையாளர் -

அடிமை வாழ்வைத் தகர்த்த புரட்சி பூகம்பங்கள்

1. அமெரிக்கா

"பாரத நாடு சுதந்திரம் பெற்றுச் சரியாக ஒரு வருஷம் ஆகின்றது. சுதந்திரம் பெற்றபின் இந்தியாவில் பாலும் தேனும் வழிந்தோடும் என்று நமது தலைவர்கள் கூறினர். பாலும் தேனும் வழிந்து ஓடாவிட்டாலும் பஞ்சமும் பிணியுமாவது நின்றனவா? அரிசி ரேஷன் ஒழிந்ததா? அரிசி ரேஷன் அடியோடு ஒழியாவிட்டாலும் ரேஷன் அளவாவது உயர்ந்ததா? தோலும் எலும்புமாகக் கிடந்த தொழிலாளர்கள் தோள் வலிவும் செருக்கு உறுதியும் பெற்றார்களா? வாழ்க்கையில் துன்பத்தைத் தவிர வேறெதையும் அறியாத விவசாயிகள் இன்பம் பெற வழி ஏற்பட்டதா? பொதுவாக ஜனங்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்ததா? பிரிட்டிஷாரின் ஆட்சி காலத்தில் இருந்ததைக் காட்டிலும் பாரத நாட்டு மக்கள் இப்போது அதிக சந்தோஷத்துடன் இருக்கிறார்களா?"


பலர் மேற்கூறியவாறு பகிரங்கமாகக் கேட்கிறார்கள். மற்றும் பலர் அவ்விதம் முணுமுணுக்கிறார்கள்.

சுதந்திரம் பெற்ற ஒரு வருஷத்துக்குள் தேசத்தின் கஷ்டங்களும் துன்பங்களும் தொலைந்து, பாரத பூமியெங்கும் பாலும் தேனும் வழிந்து ஓட வேண்டும் என்று ஒருவர் எதிர்பார்ப்பதற்கும் சூரியன் மேற்கே உதயமாகிக் கிழக்கே அஸ்தமனம் ஆக வேண்டும் என்று எதிர்பார்ப்பதற்கும் அதிக வித்தியாசமில்லை!

நாலு நாள் ஜுரத்தினால் கஷ்டப்பட்ட ஒருவருடைய உடம்பு தேற நாலு வாரங்கள் ஆகின்றன. ஒரே நாளில் அவரது உடலைத் தேற்றும் மந்திர சக்தியோ அல்லது தந்திர சக்தியோ இந்த உலகில் இல்லை. அது போலவே பல ஆண்டுகள் அடிமை ஜுரத்தினால் அல்லல் பட்ட தேசம் தேறுவதற்குச் சில ஆண்டுகளாவது செல்ல வேண்டாமா? அவ்விதமின்றி ஒரே வருஷத்தில் சீர்ப்படுத்த இயற்கையினாலும் முடியாது, செயற்கையினாலும் முடியாது, மந்திர சக்தியினாலும் முடியாது, மாய சக்தியினாலும் முடியாது.

உலகிலுள்ள எந்த நாடும் சுதந்திரம் பெற்ற ஐந்து அல்லது பத்து வருஷங்களுக்குள்ளாகக்கூட முன்னேற்றம் அடைந்ததில்லை. அமெரிக்கா சுதந்திரம் பெற்று நூற்றுஎழுபது ஆண்டுகளுக்கு மேல் ஆகின்றன. பிரான்ஸ் சுதந்திரம் பெற்று ஒன்றரை நூற்றாண்டுக்கு மேல் ஆகிவிட்டது. இத்தாலி சுதந்திரம் பெற்றுச் சற்றேறக் குறைய நூறு வருஷங்கள் ஆகிவிட்டன.

இவற்றைப்போலவே உலகிலுள்ள மற்றும் பல நாடுகள் அன்னியர் ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெறறுச் சுதந்திரம் அடைந்தன. எனினும் அந்த நாடுகள் சுதந்திரம் பெற்ற உடனேயே அவற்றின் இன்னல்கள் தீர்ந்து விடவில்லை. பெறற சுதந்திரத்தைக் காப்பாற்றிக் கொள்ளவும், பொருளாதார சுபிட்சம் அடையவும் அந்த நாடுகள் பல பல ஆண்டுகள் போராட நேர்ந்தது.



ஜார்ஜ் வாஷிங்டன்

ஏழு வருஷ யுத்தம்


பெற்ற சுதந்திரத்தைப் பாதுகாக்கவும் தனித் தனியாகப் பிய்த்துக் கொண்டு கிளம்பிய மாகாணங்களை

ஒன்று சேர்ந்து ஒற்றுமையை நிலை நிறுத்தவும் அமெரிக்கா அநேக ஆண்டுகள் வரை கோர யுத்தம் புரிந்தது.

ஒரு காலத்தில் பிரிட்டிஷ் மன்னர்களின் எதேச்சாதிகாரத்துக்குப் பயந்து பிரிட்டிஷார் கொஞ்சம் கொஞ்சமாக அமெரிக்காவில் குடியேறி வந்தனர். எனவே அமெரிக்கா பல்லாண்டு பல்லாண்டாக பிரிட்டிஷாரின் காலனியாகவே இருந்து வந்தது. எனினும் அங்கு தேசிய இயக்கம் நாளுக்கு நாள் வலுப்பெற்று வந்ததால், அமெரிக்கர்கள் தங்களுடைய உள்நாட்டு விஷயங்களில் பிரிட்டிஷாரின் தலையீட்டை விரும்பவில்லை. தாங்கள் என்ன என்ன வரி கொடுக்க வேண்டும் என்பதை பிரிட்டிஷ் பார்லிமெண்டு நிர்ணயிப்பதா என்று அமெரிக்கர்களிடையே மனக் கொதிப்பு ஏற்பட்டது.

அமெரிக்கா இறக்குமதி செய்யும் பல சாமான்களுக்கும் பிரிட்டிஷ் பார்லிமெண்டு தீர்வை விதித்ததால், அந்தத் தீர்வைகளையெல்லாம் அமெரிக்கர் பலமாகக் கண்டித்ததுடன் பிரிட்டிஷ் சாமான்களையும் பஹிஷ்காரம் செய்யத் துவங்கினர். பஹிஷ்காரம் பலமாக இருந்ததால் மேற்படி தீர்வைகளை ரத்துச் செய்வதைத் தவிர பிரிட்டிஷாருக்கு வேறு வழி எதுவும் இல்லை.

எல்லாத் தீர்வைகளையும் பிரிட்டிஷார் ரத்துச் செய்திருந்தால், அமெரிக்காவின் சரித்திரம் வேறு விதமாக இருக்கலாமோ, என்னவோ! ஆனால் பிரிட்டனைப் பிடித்த துரதிர்ஷ்டம் அவர்கள் தேயிலைக்கு விதித்த தீர்வையை மாத்திரம் ரத்துச் செய்யவில்லை. அந்த ஒரு தீர்வையையாவது அமுலுக்குக் கொண்டு வந்து தங்களுடைய எஜமான ஸ்தானத்தை ஸ்தாபித்துக் கொள்ள வேண்டும் என்று அவர்கள் உறுதி கொண்டனர். அந்த ஒரு தீர்வையையும் ஒழித்துக் கட்டியே தீருவது என்று அமெரிக்கர்களும்திட சங்கற்பம் கொண்டனர்.



அமெரிக்க சுதந்திரப் பிரகடன தினத்தன்று ஒலித்த இந்த மணியை இன்றுவரை பத்திரமாகப் பாதுகாத்துவருகிறார்கள்.

அமெரிக்காவுக்கு ஏராளமாக பிரிட்டிஷார் தேயிலை அனுப்பினர். தீர்வை குறைவானதால் அதைச் செலுத்த அமெரிக்கர்கள் ஆட்சேபிக்க மாட்டார்கள் என்று பிரிட்டிஷார் கனவு கண்டு வந்தனர். ஆனால் அந்தக் கனவில் மண் விழுந்தது. அதன் காரணமாக அமெரிக்காவுக்கும் பிரிட்டனுக்கும் கடுமையான யுத்தம் ஆரம்பமாயிற்று. 1776-ம் வருஷம் ஜூலை மாதம் 4-ம் தேதி அமெரிக்கர்கள் பிலடெல்பியா நகரில் சுதந்திரப் பிரகடனம் செய்தனர். (மேற்படி பிரகடன தினம் இன்றளவும் அமெரிக்காவில் பிரதி வருஷமும் அமோகமாகக் கொண்டாடப் பட்டு வருகிறது.) ஆனால் மேற்படி சுதந்திரப் பிரகடனத்தை பிரிட்டிஷார் ஒப்புக் கொள்ளவில்லை.

அன்றிலிருந்து ஏழு வருஷ காலம் வரையில் அமெரிக்காவுக்கும் பிரிட்டனுக்கும் கடுமையான யுத்தம் நடந்தது. அமெரிக்காவின் ஆதி தலைவரும் சிறந்த உதாரண புருஷருமான ஜார்ஜ் வாஷிங்டன் தலைமையில் யுத்தம் உக்கிரமாக நடந்தது. பல இடங்களில் தோல்வி யடைந்தும் வாஷிங்டன் சோர்வின்றி விடாமுயற்சியுடன் போரை நடத்திச் சென்றார். இறுதியில் அமெரிக்கர் பூரண வெற்றி பெற்ற பிறகுதான் 1883-ம் வருஷம் அமெரிக்காவின் சுதந்திரத்தைப் பிரிட்டிஷார் அங்கீகரித்தனர்.

II

இங்கிலாந்து

பிரிட்டிஷார் இந்தியர்களை இரண்டு நூற்றாண்டுகள் அடிமைப் படுத்தி வைத்திருந்தார்கள் அல்லவா? பிற நாடுகளுக்கு எஜமானர்களாக இருக்கவே தாங்கள் படைக்கப்பட்டிருப்பதாகவும் பிரிட்டிஷார் பெருமை யடித்துக் கொண்டது உண்டு. ஆனால், அதே பிரிட்டிஷார் முந்நூறு ஆண்டுகள் வரையில் ரோமிய சாம்ராஜ்யத்தின் அடிமையாக இருந்தார்கள் என்பதை மறந்துவிடக் கூடாது.

பின்னர் காலச் சக்கரம் சுழன்றது. ரோமிய சாம்ராஜ்யம் வீழ்ச்சியுற்றது. பிரிட்டிஷார் சுதந்திரம் பெற்றனர். எனினும் சுதந்திரத்தின் பலனை அவர்கள் அனுப

> "நம் மனத்துக்குத் தோன்றியதைச் செய்து, மனம்போன போக்கில் போவது சுதந்திரமல்ல; எந்தச் சந்தர்ப்பத்தில் எதைச் செய்ய வேண்டுமோ அதைத் தீர ஆலோசனை செய்து அதன்படி நடப்பதுதான் உண்மையான சுதந்திரம்." —கரிபால்டி

விக்க முடியவில்லை. பிரிட்டன் ரோமிய சாம்ராஜ்யத்தின் பிடியிலிருந்து விடுபட்டதெனினும், அதன் ஸ்தானத்தில் பிரிட்டிஷ் மன்னர்களின் எதேச்சாதிகாரம் ஏற்பட்டதே அத்தகைய நிலைமைக்குக் காரணமாகும். எனவே மன்னர்களின் எதேச்சாதிகாரத்தை ஒழிப்பது எப்படி என்பதில் பிரிட்டிஷார் கவனம் செலுத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

பிரிட்டிஷ் மன்னர்களின் எதேச்சாதிகாரத்துக்குப் பரிகாரம் தேடுவதற்காக ஏற்பட்ட சில பிரதிநிதிகள் அடங்கிய ஒரு சிறிய சபையே பின்னர் பார்லிமெண்டாயிற்று. அந்தக் காலத்தில் பிரிட்டிஷ் பார்லிமெண்டுக்கு அதிகாரமே இல்லை. அது மன்னர்களின் தயவிலேயே வாழ வேண்டியிருந்தது. எனினும் பார்லிமெண்டு மன்னர்களை முற்றிலும் விரோதித்துக் கொள்ளாமல் கொஞ்சம் கொஞ்சமாக அதிகாரத்தைக் கைப்பற்றத் துவங்கியது.

அப்படியிருந்தும் முதலாவது ஜேம்ஸ் பட்டத்துக்கு வந்த பின் அந்த மன்னனுக்கும் பார்லிமெண்டுக்கும் அடிக்கடி தகராறு ஏற்படலாயிற்று. மேற்படி மன்னனின் எதேச்சாதிகாரம் சகிக்க முடியாமல்தான் அந்தக் காலத்திலிருந்து, அதாவது 1620-ம் வருஷத்திலிருந்து ஏராளமான ஆங்கிலேயர்கள் நாட்டை விட்டு ஓடி அமெரிக்காவில் குடியேறினர்.

முடியிழந்தான், தலையையும் இழந்தான்!

பின்னர் முதலாவது ஜேம்ஸின் மகனான முதலாவது சார்லஸ் பட்டத்துக்கு வந்த பின் இங்கிலாந்தின் நிலைமை இன்னும் அதிக மோசமாகியது. பார்லிமெண்டு அங்கத்தினர்கள் சரித்திரப் பிரசித்திபெற்ற தங்களுடைய 'உரிமைப் பிரகடன'த்தைச் சார்லஸ் மன்னனிடம் சமர்ப்பித்தனர். மன்னனின் அதிகாரத்தை வரையறுத்திருந்த அந்தப் பிரகடனம் சார்லஸுக்கு ஆத்திரத்தை உண்டு பண்ணியது. "எனக்குப் புத்திமதி கூற வந்தவர்கள் எல்லோரையுமே தொலைத்து விடுகிறேன்" என்று கூறி சார்லஸ் மன்னன் பார்லிமெண்டையே கலைத்து விட்டான். அவ்வாறாகச் சில வருஷங்கள் வரையில் சார்லஸ் மன்னனின் கலப்பற்ற எதேச்சாதிகார ஆட்சி நடந்து வந்தது. மன்னனின் பொக்கிஷமும் கரைந்து வந்தது. பார்லிமெண்டு இராமல் தன்னுடைய பொக்கிஷம் மீண்டும் நிறைவதற்கு ஹேது இல்லை என்பதை உணர்ந்த சார்லஸ் திரும்பவும் பார்லிமெண்டைக் கூட்டினான். ஏற்கனவே தங்களை அவமதித்ததற்காக சார்லஸ் மீது வஞ்சம் தீர்க்க வேண்டும் என்று துடித்துக் கொண்டிருந்த பார்லிமெண்டு அங்கத்தினர்களுக்குச் சரியான சந்தர்ப்பம் கிடைத்தது!

மன்னன் மீது எழுந்த ஆத்திரம் இங்கிலாந்தில் உள்நாட்டு யுத்தமாக உருவடைந்தது. பிரபுக்களும் ராணுவத்தில் பெரும் பகுதியினரும் மன்னன் பக்கத்தில் சேர்ந்து கொண்டனர். மேற்படி யுத்தம் பல வருஷங்கள் வரையில் இழுத்துக் கொண்டு போயிற்று. பார்லிமெண்டு கட்சியைச் சேர்ந்தவர்கள் நம்பிக்கை இழந்து சோர்வடைந்த சமயத்தில் அவர்களிடையே ஆலிவர் கிராம்வெல் என்ற சிறந்த தலைவன் தோன்றினான். அணையும் தறுவாயிலிருந்த ஆவேசத் தீ அவனுடைய அபார நாவன்மையினாலும் திறமையினாலும் விடாமுயற்சியினாலும் மீண்டும் கொழுந்து விட்டெரிய ஆரம்பித்தது. கிராம்வெல் வெற்றி பெற்றான். சார்லஸ் மன்னன் கைதியானான். பார்லிமெண்டின் தீர்ப்புக்கு இணங்க சிரச்சேதம் செய்யப்பட்டான்.

அதிலிருந்து பிரிட்டனில் குடியரசு ஏற்பட்டதெனினும், கிராம்வெல் மாண்ட பின் இரண்டொரு வருஷங்களில் குடியரசும் மறைந்தது. அது வரையில் அன்னிய நாடுகளில் அடைக்கலம் புகுந்திருந்த இரண்டாவது சார்லஸ் பட்டத்துக்கு வந்தான். அவன் தலையை இழந்த முதலாவது சார்லஸ் மன்னனின் மகன்தான். இரண்டாம் சார்லஸுக்குப் பிறகு பட்டத்துக்கு வந்த அவனுடைய சகோதரனை இரண்டாம் ஜேம்ஸும் பார்லிமெண்டின் கோபத்துக்குப் பயந்து பிரான்ஸுக்கு ஓடி அடைக்கலம் புக நேர்ந்தது. இவ்வாறாக தட்டுத்தடுமாறிக் கடைசியாகப் பிரிட்டனில் முடியாட்சி ஸ்திரமாயிற்று. பிறகு அந்த முடியாட்சி நாளடைவில் ஜனநாயகத்துக்கு உட்பட்ட ஆட்சியாயிற்று. (தொடரும்)

சுதந்திரத் தலைநகரம்

கல்கி



பஞ்சபாண்டவர்கள் என்றால் பேர்களுக்குத் தெரியாதா, என்ன? அவர்கள்தான்! 'கட்டில் கால்போல் மூன்று பேர்' என்று சொல்லி இரண்டு விரலைக் காட்டி...போதும்! நிறுத்துங்கள்! அந்த இரண்டு பேராவது பாக்கியிருக்கட்டும்! மேற்படி பஞ்ச பாண்டவர்கள் ஒரு சமயம் துரியோதன மகாராஜனிடம் சென்று "எங்களுக்கு ஐந்து ராஜ்யம் வேண்டும்; இல்லாவிட்டால் ஐந்து ஊர் வேண்டும்; அதுவும் இல்லாவிடில் ஐந்து வீடு வேண்டும்!" என்று கேட்டார்கள். "ஐந்து ராஜ்யம் கிடையாது; ஐந்து ஊர் கொடுக்க முடியாது; ஐந்து வீடு வேண்டுமானால் வீட்டு வாடகைக் கண்ட்ரோலரிடம் விண்ணப்பம் போடுங்கள்!" என்றான் துரியோதனன். "வீட்டுக் கண்ட்ரோலரிடம் போவதைவிடக் காட்டுக்குப் போய்த் தொலைகிறோம்!" என்று பஞ்சபாண்டவர்கள் போனார்கள். போன இடத்தில் காண்டவ வனத்தைத் தகனம் செய்து இந்திரப் பிரஸ்தம் என்னும் புது நகரை நிர்மாணித்தார்கள்.

டில்லியில் பஞ்சபாண்டவர்களின் இந்திரப் பிரஸ்தம் இருந்த இடத்திலேதான் இப்போது 'புரானா கிலா' என்னும் புராதன இடிந்த கோட்டை இருப்பதாகச் சொல்கிறார்கள்.

டில்லிக்குப் போயிருந்தபோது 'புரானா கிலா'வைப் பார்க்கப் போயிருந்தேன். இந்திரப்பிரஸ்தத்தை எண்ணிக்கொண்டு போன என்னை அங்கே தோன்றிய காட்சிகள் திகைப்படையச் செய்தன.

நூற்றுக் கணக்கான பஞ்சாப் அகதிகளின் கூடாரங்களை அங்கே கண்டேன். காடு நகரங்களையும் வீடு வாசல்களையும் ஒரே கணத்தில் இழந்து உயிர் பிழைத்தால் போதும் என்று ஓடிவந்தவர்களைக் கண்டேன். சொல்ல முடியாத பயங்கர கோர நிகழ்ச்சிகளையெல்லாம் கண்ணால் பார்த்து விட்டுச் சித்தப் பிரமை கொண்டவர்களைப் போலிருந்த ஸ்திரீ புருஷர்களைக் கண்டேன். முதல் நாள் லட்சாதிபதிகளாயிருந்து விட்டு மறுநாள் பிச்சாதிபதிகளானவர்களை அங்கே கண்டேன். தாயற்றவர்களும் தந்தையற்றவர்களும் அண்ணன் தம்பிகளையும் அக்கா தங்கைகளையும் இழந்தவர்களுமான சின்னஞ் சிறு குழந்தைகள் குதூகலமாய் ஓடி ஆடுவதைக் கண்டேன். ஒருவிதத்தில் அந்தக் குழந்தைகள் பாக்யசாலிகள்! பத்து மாதத்துக்கு முன்பு நடந்ததையெல்லாம் மறந்து விட்டார்கள். இடுப்பிலே துணி இல்லாவிட்டாலும் உண்ண உணவு இல்லாவிட்டாலும் குஷியாக அங்கு மிங்கும் ஓடி விளையாடுகிறார்கள். குழந்தைகள் குளிப்பதற்காகக் கட்டப்பட்டிருக்கும் நீளமான தண்ணீர்த் தொட்டிகளில் இறங்கிக் குதூகலமாகக் குளிக்கிறார்கள். தண்ணீரை வாரி இறைத்து விளையாடுகிறார்கள்.

கொஞ்சம் வயதான குழந்தைகளுக்கெல்லாம் கூடாரங்களுக்குக் கீழே பள்ளிக்கூடங்களும் நடைபெறுகின்றன. பாவம்! அந்தக் குழந்தைகள் ஊரை விட்டு வீட்டை விட்டுப் பல நூறு மைல் ஓடி வந்திருந்தும் உபாத்தியாயர்களும் அவர்களுடைய கைப் பிரம்புகளும் மட்டும் அக்குழந்தைகளை விட்டபாடில்லை.

பஞ்ச பாண்டவர்களுடைய இந்திரப்பிரஸ்த நகரம் இருந்த இடத்தில் இன்று இந்த அகதிகள் இருப்பது ஒரு வகையில் பொருத்தமானது தான். துரியோதன மகாராஜனால் துரத்தப்பட்டு முதன் முதலில் டில்லிக்கு வந்து சேர்ந்த அகதிகள் பஞ்சபாண்டவர்கள் அல்லவா?

• • •

பஞ்ச பாண்டவர்கள் காட்டிய வழியைச் சரித்திர காலத்தில் அநேகர் பின்பற்றினார்கள். இந்தியாவின் பெரும் பகுதியையோ சிறு பகுதியையோ ஆண்ட மன்னர்கள் பலர் இந்திரப் பிரஸ்தத்துக்குச் சுற்றுப்புறப் பிரதேசத்தில் புதிய புதிய தலைநகரங்களைக் கட்டினார்கள். இம்மாதிரி பழைய காலத்து மன்னர்கள் கட்டிய ஏழு தலைநகரங்களின் சின்னங்கள் டில்லி என்று பொதுப்படையான பெயருள்ள விஸ்தாரமான பிரதேசத்தில் இருக்கின்றன. எட்டாவது நகரந்தான் பிரிட்டிஷார் நிர்மாணித்த புதுடில்லி.

மேற்கூறிய பழைய தலைநகரங்களில் மிகப் பழைமையானது பிரிதிவிராஜனுடைய தலைநகரம். உலகத்து மகா காதலர்களின் வரிசையில் முதன்மை ஸ்தானம் பெற்ற பிரிதிவிராஜனைத்தான் சொல்கிறேன்.

டில்லி சுதந்திர இந்தியாவின் தலைநகரமாகி யிருக்கும் இந்த வருஷத்தில் பழைய பிரிதிவிராஜனுடைய தலைநகரத்தைப் பார்க்க வேண்டுமென்று விரும்பி அங்கே போயிருந்தேன்.

'குதுப்-மினார்' என்னும் இந்தியாவிலேயே மிகவும் உயரமான கோபுரம், பிரிதிவிராஜனுடைய நகரம் இருந்த இடம் இதுதான் என்பதை எடுத்துக் காட்டிக் கொண்டு நிற்கிறது.

பிரிதிவிராஜன் தன்னுடைய தலைநகரில் இருபத்து நாலு தேவாலயங்கள் கட்டினான் என்று சரித்திரம் தெரிவிக்கிறது. பிரிதிவிராஜன் போர்க்களத்தில் இறந்துபட்டு வீர சொர்க்கம் அடைந்த பிறகு, கோரி முகம்மதுவும் அவனுக்குப் பின்னால் வந்த பட்டாணி அரசர்களும் உடைத்தல் — நொறுக்கல் — திருப்பணிகளை எவ்வளவோ செய்தார்கள். ஆனாலும் பிரிதிவிராஜனுடைய ஆலயச் சின்னங்களை அவர்களால் அடியோடு அழிக்க முடியவில்லை. ஏறக்குறைய நம் தமிழ்நாட்டு ஆலயங்களைப் போலவே



'புராணு கிலா'வில் பஞ்சாப் அகதிகளின் கூரை வேய்ந்த கூடாரங்கள்



அகதிக் குழந்தைகள் ஆனந்தமாக நீர் விளையாடுகிறார்கள்

பிரிதிவி ராஜனுடைய ஆலயங்கள் அமைந்திருக்க வேண்டும். சிற்ப வேலைப்பாடு பொருந்திய நூற்றுக் கணக்கான ஆலயத் தூண்கள் 'குதுப்-மினார்' கோபுரத்தைச் சுற்றி இன்றைக்கும் காணப்படுகின்றன.


ஆலயங்களை இடித்து எடுத்த கற்களை வைத்துக்கொண்டு மசூதிகளும் சமாதிகளும் மினார்களும் கட்டியிருக்கிறார்கள். சில இடங்களில் ஆலயத் தூண்களை உட்புறத்தில் ஆதாரமாக வைத்துக்கொண்டு மசூதிகளின் சுவர்கள் எழுப்பியிருக்கிறார்கள். அந்தச் சுவர்கள் இடிந்து விழுந்ததும் ஆலயத் தூண்கள் வெளிப்பட்டுத் தோன்றுகின்றன.

கோரி முகம்மது இயன்ற வரையில் அடித்தல்-உடைத்தல் தொண்டு நடத்தியபிறகு டில்லியில் தளபதி குத்புதீன் என்பவனைத் தன்னுடைய பிரதிநிதியாக விட்டுச் சென்றான். கோரி முகம்மது அப்பால் போனவுடனே குத்புதீன் தானே டில்லி சக்கரவர்த்தி என்று பறைசாற்றிவிட்டுச் சிம்மாசனம் ஏறினான். தன்னுடைய வெற்றிக்கு அறிகுறியாக, பிரிதிவி ராஜனுடைய அரண்மனையும் ஆலயமும் இருந்த இடத்தில் குதுப்-மினார் என்னும் கோபுரத்தைக் கட்டத் தொடங்கினான். குத்புதீன் ஆரம்பித்த கோபுரத்தை அவனுடைய வம்சத்தைச் சேர்ந்த அல்டமிஷ் என்பவன் பூர்த்தி செய்தான்.

குதுப் மினார் கோபுரத்தைக் குத்புதீன் கட்டியதாகச் சில சரித்திரக்காரர்களும் அல்டமிஷ் கட்டியதாக வேறு சிலரும் சொல்கிறார்கள். இரண்டு பேருக்கும் பொதுவாக அவன் பாதி இவன் பாதி கட்டியதாகச் சில சமரச சரித்திராசிரியர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். இந்த சாத்திர அபிப்பிராயங்களைத் தவிர இன்னொரு வகை அபிப்பிராயமும் உண்டு என்று இந்தத் தடவை 'குதுப்-மினார்' போயிருந்தபோது தெரியவந்தது.

* * *

குதுப் மினாரையும் அதைச் சுற்றியுள்ள சரித்திரப் பிரசித்தி பெற்ற இடிந்த கட்டடங்களையும் பார்த்துக்கொள்ள அங்கே ஒரு காவலாளி இருக்கிறான். அவன் அதி தீவிர ஹிந்து. அங்கே வருகிறவர்களுக்கெல்லாம் மேற்படி கட்டடங்களைப் பற்றிய உண்மையான விவரங்களை அவன் எடுத்துச் சொல்லி வருகிறான். பிரிதிவி ராஜனுடைய அரண்மனை இது, ஆஸ்தான மண்டபம் இது, அந்தப்புரம் இது என்றெல்லாம் எங்களுக்கு அவன் உணர்ச்சியோடு உருக்கமாகச் சொன்னான். பிறகு பிரிதிவிராஜன் கட்டிய கோயில்கள் இருந்த இடங்களை அவன் காட்டினான். கோயில் தூண்களையும், தூண்களில் பிரதிமைகள் இருந்த இடங்கள் மட்டும் காலி



குதுப்-மினார்

யாக இருப்பதையும் காட்டினான். சந்திர குப்த விக்ரமாதித்யனுடைய பிரசித்தி பெற்ற இரும்பு ஸ்தம்பத்தை வெகு பெருமையுடன் சுட்டிக் காட்டினான். கடைசியாக எங்கே குதுப் மினாரை நாங்கள் பார்க்காமல் விட்டுவிடப் போகிறோமோ என்று அதையும் சுட்டிக் காட்டி "தேக்கா?" என்றான்.

"கூப் தேக்கா!" என்றேன் நான். பிறகு "இந்தக் குதுப்-மினாரை யார் கட்டியது? குத்புதீனா? அல்டமிஷா?" என்று கேட்டேன்.

உடனே அவனுக்குப் பிரமாத கோபம் வந்துவிட்டது. "ஜூட் பாத் ஹை!" என்று ஒரு போடு போட்டான்.

"ஜூட் பாத் ஹை?" என்று நானும் திருப்பிப் போட்டேன்.

"ஜரூர், ஜூட் பாத் ஹை!"

"ஜரூர், ஜூட் பாத் ஹை?"

ஹிந்தி பாஷையில் ஒரு சௌகரியம் உண்டு. வாக்கியத்தின் கடைசி வார்த்தையைக் கொஞ்சம் தூக்கிப் பிடித்துச் சொன்னால் அது கேள்வியாகி விடும். ஆகையால் ஒருவர் சொல்வதை நாம் திருப்பிச் சொல்லிக் கொண்டே சம்பாஷணையை நடத்தி விடலாம்.

பிறகு அந்தக் காவலன் ஹிந்தியில் கூறியதற்கு உண்மையான மொழி பெயர்ப்பைக் கேளுங்கள்:— "குதுப் மினார் குத்புதீனால் கட்டப்பட்டதாக என்பது பொய் வார்த்தையாயிருக்கிறது. அல்டமிஷினால் கட்டப்பட்டதாக என்பதும் பொய்வார்த்தையாயிருக்கிறதுவே தான். குதுப் கோபுரம் உண்மையில் பிரிதிவி ராஜனால் கட்டப்பட்டதாகும். பிரிதிவிராஜனுடைய குமாரியினால் இந்த கோபுரம் தினந்தினம் ஏறப்பட்டதாகும். கோபுரத்தின் உச்சியிலிருந்து பிரிதிவிராஜனுடைய மகள் யமுனா நதியைத் தரிசனத்துக்கு உள்ளாக்கிய பிறகு அவளால் மத்தியான போஜனம் சாப்பாட்டுக்கு உட்பட்டனள்!"

"பிரிதிவிராஜனுடைய குமாரி யமுனையைத் தரிசிப்பதோடு திருப்தி அடைந்தாளா? அல்லது எப்போதாவது யமுனா நதி அவளால் குளிக்கப்படுவதும் உண்டா?" என்று நான் கேட்டேன்.

"சில சமயம் யமுனை குளிக்கப்படுவதும் உண்டு; வருஷத்துக்கு ஒரு தடவை அல்லது இரண்டு தடவை யமுனை ராஜகுமாரியினால் குளித்தல் செய்யப்பட்டாள்!"

"யமுனைக்கு இங்கிருந்து ராஜகுமாரி எப்படிப் போவாள்?" என்று கேட்டேன்.

"இல்லை; இல்லை! இராஜகுமாரி போகமாட்டாள். யமுனைதான் இங்கே வருவாள்!" என்றான்.

"எப்படி வருவாள்?"

"சில சமயம் நடந்து வருவாள்: சில சமயம் குதிரைமேல் வருவாள்."

"அப்புறம்?"

"ராஜகுமாரி குளிப்பதற்கு உள்ளானதும் திரும்பிப் போய்விடுவாள்!"

"யார்?"

"யமுனை!"

"பிரிதிவிராஜனுடைய குமாரி குளிப்பதற்கு எந்த சோப்பை உபயோகித்தாள் என்று நீ அறிந்திருப்பதுண்டா? 'லக்ஸ்' டாய்லட் சோப்பையா? பிரசித்தி பெற்ற சினிமா நட்சத்திரம் ஸ்ரீமதி கனமணி தேவி உபயோகிக்கும் 'ஹமாம்' சோப்பையா?"

"பிரிதிவிராஜனுடைய குமாரி குளிப்பதற்குச் சோப்பு உபயோகிப்பதில்லை. அவள் இமயமலையின் உறைந்த பனிக்கட்டியை உபயோகிப்பாள்."

"பனிக்கட்டி இங்கே எப்படி வரும்?"

"சில சமயம் ஒட்டகையின் மேல் வரப்படுவன்; சில சமயம் டோங்கா வண்டியிலும் வருதலைச் செய்வான்!"

"வழியிலே பனிக்கட்டி கரைந்து போகாமலிருக்குமா?"

"அதெல்லாம் கரைய மாட்டான்; இப்போது மெஷின்களினால் செய்யப் படும் உபயோகமற்ற ஐஸ் கட்டி என்று எண்ணினீரோ! இமயமலையில் உச்சிச் சிகரத்திலிருந்து வரும் குளிர்ந்த பனிக் கட்டி கரையவே கரைய மாட்டான்!"

"அதெல்லாம் இருக்கட்டும்; இந்தக் கோபுரத்தின்மேல் அரபு எழுத்து மாதிரி எழுதியிருக்கிறதே! பிரிதிவிராஜன் கட்டியவனான கோபுரமாயிருந்தால்—?"

"ஜூட் பாத் ஹை! சப் ஜூட் பாத் ஹை! பிரிதிவிராஜன் கட்டிய கோபுரத்தின் மேற்பக்கத்தைச் சுரண்டி விட்டுக் குதுப்தீன் அரபு எழுத்துக்களை எழுதச் செய்து விடப்பட்டவனாயினான்!" என்றான் அந்தக் காவலன்.

இத்துடன் குதுப் மினார் கதையை நிறுத்திக் கொண்டு மேலே செல்கிறேன்.

• • •

குதுப்தீன் தன்னுடைய அரசியல் வாழ்க்கையைக் கோரி மூகம்மதுவின் அடிமையாக ஆரம்பித்தான். அதனால் குதுப்தீன் வம்சத்துக்குச் சரித்திரத்தில் அடிமை வம்சம் என்று பெயர் வழங்குகிறது. குதுப்தீன் வம்சத்துக்குப் பிறகு டில்லியில் கில்ஜி வம்சமும் லோடி வம்சமும் தொடர்ந்தன. இப்ராஹிம் லோடியைப் பானிபட் யுத்தத்தில் தோற்கடித்துப் பாபர் மொகலாய வம்சத்தை ஸ்தாபித்தான். மொகலாய வம்சத்தார் 1857-ல் நடந்த புரட்சிப் போர் வரையில் டில்லியில் நிலைபெற்றிருந்தார்கள்.

ஒவ்வொரு பட்டாணிய வம்சத்தாரும் மொகலாய வம்சத்தாரும் பழைய தலை நகரங்கள் பிடிக்காமல் டில்லிப் பிரதேசத்தில் புதிய புதிய நகரங்களைக் கட்டினார்கள். அரண்மனைகளையும் மசூதிகளையும் கட்டினார்கள். நகரங்களைச் சுற்றிக் கோட்டைகளும் கட்டினார்கள். அதோடு ஒவ்வொரு சுல்தானுக்கும் பாதுஷாவுக்கும் சேனதிபதிக்கும் 'கபர்ஸ்தான்' என்று சொல்லப்படும் சமாதிக் கட்டிடங்களைக் கட்டினார்கள். செத்துப் போனவர்களுக்காகக் கட்டிய கட்டிடங்கள் உயிரோடிருப்பவர்களுக்குக் குடியிருக்க இடமில்லாமல் செய்தன! ஆகவே நகரம் நாலா புறமும் விஸ்தரித்துக் கொண்டே சென்றது.

பிரிட்டிஷ் ஆட்சி ஏற்படுவதற்கு முன்னால் டில்லியில் கட்டப்பட்ட தலை நகரங்களில் இன்றுவரை இடிந்து பாழாகாமல் ஏறக்குறையப் புத்தப் புதியதாகத் தோன்றுவது ஷாஜஹான் கட்டிய நகரமாகும். இதற்கு ஷாஜஹானாபாத் என்று பெயர். சமீபகாலத்தில் ஐ.என்.ஏ. விசாரணையினால் பிரபலமடைந்த செங்கோட்டை மேற்படி ஷாஜஹானாபாத்தில்தான் இருக்கிறது. அதே கோட்டையில்தான் இப்போது காந்தி மகான் கொலை வழக்கும் நடந்து வருகிறது.

• • •

மொகலாய வம்சம் 1857-ல் அடியோடு 'கபர்ஸ்தான்' அடைந்த பிறகு சில காலத்துக்குத் டில்லியின் புகழ் மங்கிக் கிடந்தது. பிறகு யாரோ ஒரு ஆங்கிலேய தீர்க்கதரிசியின் உள்ளத்தில் டில்லியை மறுபடியும் இந்தியாவின் தலைநகரமாக்க வேண்டும் என்ற எண்ணம் உதித்தது. அந்தத் தீர்க்கதரிசி இந்திய சரித்திரத்தில் டில்லி எதனாலே அவ்வளவு முக்கியத்துவம் அடைந்திருக்கிறது என்பதை

குதுப்மினாரை யடுத்த மசூதிச் சுவர்



ஆராய்ந்து பார்த்தார். இமயமலைக்கும் விந்திய மலைக்கும் மத்தியில் உள்ள ஆரியா வர்த்தம் அல்லது ஹிந்துஸ்தானத்துக்குத் தில்லி நகர் அமைந்திருக்கும் இடந்தான் கேந்திரஸ்தானம் என்பதை அவர் தெரிந்து கொண்டார். யமுனைக் கரையில் மேட்டுப் பாங்கான விஸ்தாரமான பிரதேசத்திலே தில்லி அமைந்திருப்பதனால் ஒரு பெரிய நகர நிர்மாணத்துக்கு வேண்டிய பல வசதிகள் அங்கே இருக்கின்றன. ஜீவ நதியாகிய யமுனை நதி எப்போதும் குடிப்பதற்குத் தண்ணீர் கொடுக்கிறது. மேட்டுப் பாங்கான நிலப்பிரதேசமானதையால் தண்ணீர் தங்குவதில்லை; ஆகையால் சுகாதாரத்துக்கு மிகவும் உகந்தது.

தில்லியில் இருந்தபடி, வடமேற்கே பஞ்சாப்பையும், தென் கிழக்கே பீஹார்-வங்காளத்தையும் தெற்கே ராஜபுதனம் மாளவம் முதலிய பிரதேசங்களையும் நன்கு கண்காணித்துக் கொள்ளலாம். அலாவுடீன் கில்ஜி முதல் அவுரங்கஜீப் வரையில் தில்லியிலிருந்து காலாபுறமும் படையெடுத்துச் சென்று தங்களுடைய சாம்ராஜ்யத்தை விஸ்தரிக்கவும் நிர்வகிக்கவும் சாத்தியமா யிருந்தது.

இதை யெல்லாம் அறிந்துதான் அந்த ஆங்கிலேய நிர்க்கதரிசி பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் தலைநகரைக் கல்கத்தாவிலிருந்து தில்லிக்கு மாற்ற வேண்டும் என்றார். 1912-ம் வருஷத்தில் இந்த முடிவு அறிவிக்கப்பட்டது. அதிலிருந்து தில்லி நகரம் மறுபடியும் தலை தூக்கிற்று. ஜனத் தொகை பெருகிற்று. 1921-ம் ஆண்டில் தில்லியின் ஜனத்தொகை ஒரு லட்சமாக இருந்தது. இப்போது தில்லியின் ஜனத்தொகை பத்து லட்சத்துக்கு மேல் போய் விட்டது.

பத்து லட்சம் என்பது பழைய தில்லி நகரிலே மட்டுந் தான். புதிய தில்லி நகரில் சுமார் இரண்டு லட்சம் ஜனங்கள் இப்போது வசிக்கிறார்கள்.

தில்லி நகரில் அரசாண்ட ஒவ்வொரு வம்சத்தாரும் ஒரு புது நகரைக் கட்டினார்கள் அல்லவா? அது போலவே பிரிட்டிஷாரும் புது தில்லி நகரத்தை நிர்மாணம் செய்தார்கள்.

• • •

புது தில்லி நகரின் அமைப்பு வெகு நேர்த்தியானது. நேர்நேரான சாலைகள். சாலைகளுக்கு இருபுறமும் வரிசை வரிசையான மரங்கள். ஒரே அளவாய், ஒரே உயரமாய்ச் சாலைகளின் இருபுறத்திலும் குடை பிடித்ததுபோல் தோன்றும் அரச மர வரிசைகளின் அழகைப் பார்த்துக்கொண்டே இருக்கலாம்.

ஆங்காங்கு ஐந்தாறு சாலைகள் வந்து ஓரிடத்தில் கூடுகின்றன. இந்த மாதிரி சாலைச் சந்திப்புகளில் வட்ட வடிவமான புல் தரைகள் இருக்கின்றன. புது தில்லியில் புதிதாகப் போகிறவர்களுக்குமேற்படி வட்டப் புல் தரைகளில் ஒன்றுக்கொன்று வித்தியாசம் தெரியாது.

விஸ்தாரமான ஒரு கற்பாறை மேட்டில் முக்கியமான சர்க்கார் கட்டிடங்கள் அமைந்திருக்கின்றன. இருபுறமும் செக்ரடேரியட் கட்டிடங்கள். நடு மத்தியில் கவர்னர் ஜெனரல் வசிக்கும் சர்க்கார் மாளிகை. கலை உணர்ச்சி உள்ள

பிருதிவிராஜன் கட்டிய ஆலயத் தூண்கள்



வர்கள் இந்தக் கட்டிடங்களை அவ்வளவு அழகானவை என்று சொல்ல மாட்டார்கள். ஆனால் அவற்றின் கம்பீரத்தைப் பற்றி யாரும் குறைகூற முடியாது.

புது தில்லியை நிர்மாணிக்கப் பிளான் போட்டவர்களும் அதைக் கட்டி முடித்தவர்களும் எத்தனையோ நூற்றாண்டு காலம் புது தில்லி பிரிட்டிஷ் ராஜ்யத்தின் தலை நகராக விளங்கப் போகிறதென்றுதான் எண்ணி யிருப்பார்கள். ஆனால் மனிதர் யாராலும் அறிய முடியாத தெய்வத்தின் சித்தம் வேறு விதமாயிருந்தது. தில்லி நகரில் ஸ்தாபிதமான எட்டாவது சாம்ராஜ்யம் யாரும் எதிர்பாராத வண்ணம் அதி சீக்கிரத்திலேயே முடிவடைந்து விட்டது. ஆனால் இதற்கு முந்தைய சாம்ராஜ்யங்களைப் போலப் போர்கள், படுகொலைகள், பயங்கர இரத்த வெள்ளங்கள் ஆகிய வற்றோடு பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் முடிவடைய வில்லை. அன்பும், ஆனந்தமும், ஐஸ்வாட்டரும் வெள்ளமாய்ப் பெருக்கெடுத்தோட நானது 1948-ம் வருஷம் ஜூன் மாதம் 20-ம் தேதி இரவு பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் அமோகமாக முடிவுற்றது.

* * *

சென்ற 1947-ம் வருஷம் ஆகஸ்டு 15ம் தேதி யன்றே இந்தியா சுதந்திரம் பெற்றது உண்மைதான். அன்றைக்குச் சுதந்திரத் திருநாளை இந்தியா வெங்கும் கொண்டாடியது போல் தில்லியிலும் கொண்டாடினார்கள்.

ஆயினும் லார்ட் மவுண்ட் பாட்டன் கவர்னர்-ஜெனரலாக இருந்து வந்தபடியால் சிலருடைய மனதில் கொஞ்சம் சந்தேகம் இருந்தது. அதிதீவிரவாதிகள் "இன்னும் வெள்ளைக்காரன் போனபாடில்லையே!" என்று சொல்லியும் காட்டினார்கள். இந்த வருஷம் ஜூன் 21ம் தேதி காலை ராஜாஜி புது தில்லி சிம்மாசனத்தில் அமர்ந்து அந்தக் குறையையும் தீர்த்துவைத்தார்.

லார்ட் மவுண்ட்பாட்டனுக்கு விடை கொடுப்பதற்காக ஜூன் 20ம் தேதி இரவு நடந்த மகத்தான பிரிவுபசாரப் பார்ட்டியைக் குறித்து முன்னமே குறிப்பிட்டிருக்கிறேன்.

அந்தப் பார்ட்டிக்கு வந்திருந்தவர்களுக்கெல்லாம் 'ஐஸ்' போட்டுக் குளிர்ந்திருந்த தண்ணீர் தாராளமாய் வழங்கப்பட்டது. எட்டாவது சாம்ராஜ்யத்துக்கு விடை கொடுக்கும்போது எல்லாரும் குளிர்ந்த மனத்தோடு விடை கொடுக்க வேண்டும் அல்லவா?

பெரிய பெரிய கண்ணாடி ஜாடிகளில் ஐஸ் வாட்டர் வைக்கப்பட்டிருந்த இடத்தின் பக்கம் நான் போனேன். ஐஸ்வாட்டர் குடித்த இரண்டு பெரிய உத்தியோகஸ்தர்களின் பேச்சு காதில் விழுந்தது.

"நாளைக்குத் தானே அந்த மனுஷர் உத்தியோகம் ஒப்புக் கொள்ளுகிறார்? இன்றைக்கே பச்சைத் தண்ணீர் வந்துவிட்டதே!" என்றார் ஒருவர்.

"என்ன செய்கிறது? நம்முடைய தலைவிதி!" என்று புலம்பினார் இன்னொருவர்.

இதற்கு முன்னாலெல்லாம் கவர்னர் ஜெனரல் மாளிகையில் விருந்து அல்லது பார்ட்டி என்றால் பல ரகமான மது பானங்கள் வழங்கப்படுமாம். அதைக் குறிப்பிட்டுத் தான் மேற்படி உத்தியோகஸ்தர்கள் அவ்விதம் சோகமாகப் பேசிக் கொண்டார்கள்.

"என்று தணியும் இந்தச் சுதந்திர தாகம்?" என்று பாரதியார் பாடினார் அல்லவா? அதை நினைத்துக்கொண்டு நானும் ஒரு கிளாஸ் குளிர்ந்த தண்ணீரை வாங்கிக் குடித்தேன். தண்ணீர்த் தாகம், சுதந்திரத் தாகம் இரண்டும் தணிந்தன.

* * *

தனி மனிதர்களின் வாழ்க்கையில் எப்படியோ, அப்படியே தேசங்களின் வாழ்க்கையிலும் கஷ்ட சுகங்கள் மாறி மாறி வருகின்றன.

பாரத தேசம் நெடுங்காலமாக அன்னியர் ஆட்சியின் கீழ் வனவாசமும் அக்ஞாத வாசமும் செய்து வந்திருக்கிறது. ஆயிரம் வருஷத்துக்குப் பிறகு இப்போது மீண்டும் சுதந்திரம் பெற்றிருக்கிறது.

இந்தியாவின் இயற்கைத் தலை நகரமான தில்லியில் இந்திய சுதந்திர சாம்ராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இதிகாசமும் சரித்திரமும் போதிக்கும் பாடங்கள் தில்லியின் சுற்றுவட்டாரங்களில் கண்முன்னால் காட்சி அளித்துக் கொண்டிருக்கின்றன; அத்தாட்சியும் கூறுகின்றன. அந்தச் சரித்திரப் பாடங்களின் படிப்பினையை உணர்ந்து இந்திய மக்கள் நடந்து கொள்வார்கள்; அதை உணர்ந்தே இந்திய மக்களின் தலைவர்களும் காரியம் செய்வார்கள்.

ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு சுதந்திர தில்லியில் ஸ்தாபிதமாகியிருக்கும் இந்திய சுதந்திர சாம்ராஜ்யம் ஆயிரம் ஆயிரம் வருஷங்கள் நீடித்து நிலைத்து நிற்கும் என்பது என் நம்பிக்கை.


"நான் விரும்புவது
வாடர்மன்
-தான்"
நான் வாடர்மன் பேனாவை விரும்பி வாங்குவதற்குக் காரணம், அதன் சிறந்த வேலைப்பாடு. நம்பிக்கையான உழைப்பு. நான் எழுதுவதற்கு உகந்தபடி வளைந்து கொடுக்கக்கூடியதோ. உறுதியாகவோ உள்ளதைப் பொறுக்கியெடுக்கக்கூடிய வகையாலேயே சாவப்பட்ட பலதர 14 காரட் நிப்புக்கள். இவை தான். சுலபமாக மை நிரப்பக்கூடிய லீவர் எவ்வளவோ தொல்லைகளைப் போக்குகிறது. ஒரே தடவை அமுக்கி எடுத்தால்போதும் பேனா நிரம்பி விடும். இதுதான் முக்கியமானது. ஒரு தொந்தரவும் இல்லை. பணத்துக்குத் தகுந்த உண்மையான மதிப்பு. வியாபாரியான எனக்கல்லவா தெரியும் இதன் மதிப்பு.
Waterman's
வாடர்மன்
பேனுக்கள், பென்ஸில்கள், மைகள்
வர்ண ஜாலங்கள் தான் இக்காலத்திய நாகரீகம். பெயர்பெற்ற "டாப் வீல்" பாட்டில்களிலுள்ள வாடர்மன் வர்ண மைகளைக் காண்பிக்கும்படி கேளுங்கள். ஒன்பது அழகான வர்ணங்களில் உள்ளன.
வியாபார விவரங்களுக்கு எழுதுங்கள்:—ஸதம் ஏபர்க்ரோம்பி & கம்பெனி, லிமிடெட்.
போர்பஸ் பில்டிங், ஹோம் தெரு, பம்பாய்.
EX 10-3

கம்பர் தரும் காட்சி

டி.கே.சி.

221. வாழிய வள்ளலே!

கணையாழியை அனுமன் கொடுத்த மாத்திரத்தில் சீதையின் உள்ளத்தில் ஒரே ஆனந்தக் கொந்தளிப்பு.

ஆனால் வாயிலிருந்து ஒரு வார்த்தையும் பிறக்கவில்லை.

அவளுடைய மெய்ப் பாடுகளையோ கவிஞர் பார்க்கிறார். அனுமன் பார்க்கிறான். நாமும் பார்க்கிறோம். அந்த நிலையில் இருப்பவளுக்கு முன்னில்லாத புத்துயிர் வந்து விட்டது. சந்தோஷத்தில் தன் பற்கள் தெரியும்படியாக வாயில் ஒரு மலர்ச்சி.

இத்தகைய ளாகி, உயிர்
  எழுற வி ளங்கும்
முத்த நகை யாள்,வி ழியின்
  ஆலி முலை முன் றில்த்
தத்தி யுக, மென்கு தலைத்
  தன்ன, 'உயிர் தந் தாய்,
உத்த ம!'எ னாஇ னைய
  வாச கமு ரைத் தாள்.

[இத்தகையளாகி: மேலே சொன்ன உணர்ச்சிக்கும் மெய்ப்பாட்டுக்கும் உள்ளாகி; உயிர்எழுற: உயிரானது பெருமிதம் அடைந்த தாய்; விளங்கும் முத்த நகையாள்: அழகாய்ப் பிரகாசிக்கும் முத்தும் போன்ற பற்கள் தெரியும்படியாய்; விழியின் ஆலி முலைமுன்றில் தத்தியுக: கண்ணீர்த் துளிகள் மார்பில் விழுந்து அதிலிருந்து துள்ளிக் கீழே விழ; மென்குதலைத் தன்ன: வார்த்தையே மெல்லிய குதலை, அதுவும் தள்ளாடும்படி; உயிர் தந்தாய் உத்தம: உயிரை எனக்குத் தந்தாய் அப்பா, உத்தமனுவே நீ; எனா: என்று சொல்லி; சிறிது நேரம் கழித்து — இனைய வாசகம் உரைத்தாள்: கீழ் வரும் வார்த்தைகளைச் சொன்னாள்.

குறிப்பு: ஆனந்தமும் நன்றியும் செய்யுளில் ஒரு பாவமாக உரு வெடுக்கின்றன. அவளுடைய வார்த்தை தள்ளாடியது என்பதையும் கவியிலுள்ள எதுகைகள் ஒலித்துக் காட்டுகின்றன.]

ராமனுடைய தூதனாய் அனுமன் வந்தான். கணையாழியைக் கொண்டு வந்து கொடுத்தான். அதனால் சீதைக்கு உண்டான ஆனந்தத்தை இப்படி அப்படி என்று சொல்ல முடியுமா? அவள் இதயத்தில் உண்டான நன்றி அப்படியே ஒரே உணர்ச்சிப் பிரவாகமாய் வெளி வருகிறது: அனுமனைப் பார்த்துப் பேசுகிறாள்:

"பாதாளம், வானம், மத்திய உலகம், இந்த மூன்றையும் படைத்தவன் பிரம்மா. அவனையே படைத்தவன் பரப் பிரம்ம மூர்த்தி. அந்த பரப் பிரம்மம் வேறு, ராமன் வேறா? அந்த ராமனுக்கு அல்லவா நீ தூதாய் வந்திருக்கிறாய். நேர் முறையில் கணையாழியோடு வந்து எனக்கு ஒரு உறுதி கொடுத்து உயிரும் கொடுத்தாய்! உனக்குக் கைம்மாறு செய்வது எளிதான காரியமா!"

'மும்மையாம் உலகம்தந் த
  முதல்வற்கு முதல்வன்தூ தாய்ச்,
செம்மையால் உயிர்தந்தாய்க் குச்
  செயல்என்னால் எளியதுண் டோ!
அம்மையாய் அத்த னாய
  அப்பனே அருளின்வாழ் வே
இம்மையே மறுமைதா னும்
  நல்கினை இசையோ(டு)' என்றாள்.

[மும்மையாம் உலகந் தந்த முதல்வற்கு முதல்வன் தூதாய்: ராமனது தூதனாய்; அம்மையாய் அத்தனாய அப்பனே: நீ என்னைப் பெற்ற அப்பன்தான், — எந்தவகைய அப்பன் — தாயும் கடவுளும் ஒன்றாக அமைந்த அப்பன்; அத்தன்: கடவுள்; அருளின் வாழ்வே: அருள் உன்னிடத்தில் தான் குடிகொண்டிருக்கிறது; இம்மையே மறுமைதானும் நல்கினை: இந்த உலக வாழ்க்கையிலேயே மோக்ஷ வாழ்க்கையின் ஆனந்தத்தை அனுபவிக்கச் செய்து விட்டாய்; இசையோடு

என்றான்: நீராப் பழிக்கு உள்ளாய் விடுவேனே என்று அஞ்சி இருந்த எனக்கு யாருக்கும் கிடைக்காத புகழையும் சேர்த்துக் கொடுத்து விட்டாய்—என்று தன் இதயத்தையே கொட்டி விட்டான் சீதை.

[குறிப்பு: முந்திய செய்யுள் குறுவெசந்தத்தில் சீதை பேச இயலாதிருந்ததைக் காட்டியது. இந்தச் செய்யுளோ உணர்ச்சிவேகமானது பெருக்கெடுத்து ஓடும் பாவத்தைக் காட்டுவதாய் நீண்டு ஒலிக்கிறது. இரண்டு செய்யுள்களையும் சேர்த்துப் பாடிப்பார்த்தால் செய்யுள் உருவத்தின் வித்தியாசம் தெரியும்.]

•
• •

சீதை தன் நன்றியைக் கூறிவிட்டுத் தன் இதயங் கொண்ட மட்டும் வாழ்த்துகிறான்.

"உன்னுடைய வலிய பெரிய தோள்கள் தான் உன் வீரத்தை எப்படிக் காட்டுகின்றன. இங்கே எனக்கு யாரும் துணையில்லை. அத்தகைய என் கஷ்டத்தைத் தீர்த்தாய். உலகம் மறக்க முடியாத வள்ளல் நீ."

'பாரிய பணைத்தோள்வீர!
துணையிலேன் பரிவுதீர்த்த
வாரிய வள்ளலே! யான்
மறுவிலா மனத்தேன்என்னில்,—
ஊழியோர் பகலாய் ஓதும்
ஆண்டெலாம் உலகம் ஏழும்
ஏழும்வீ வுற்ற ஞான்றும்
இன்றென இருத்தி' என்றான்.

[பாரிய பணைத்தோள் வீர: வலிமை மிக்க பெரிய தோள் கொண்ட வீரனே; துணையிலேன் பரிவு தீர்த்த: என்னுடைய தீராக் கஷ்டத்தைத் தீர்த்த; வாரிய வள்ளலே: உலகத்தார் என்றென்றும் போற்றும் வள்ளலே; யான் மறு இலா மனத்தேன் என்னில்: என் மனதில் யாதொரு மாசும் இல்லாதிருக்கும் பக்ஷத்தில்—இப்போது சொல்லுவது உறுதியே; ஊழியோர் பகலாய் ஓதும் ஆண்டெலாம்: ஒரு யுகம் ஒரு நாள் என்று எண்ணும்படியாகப் பல்லாண்டு; உலகம் ஏழும் ஏழும் வீவுற்ற ஞான்றும்: உலகங்கள் ஏழும் அதோடு வேறு ஏழு உலகமும் சேர்த்துக் கூறிப் பதினாலு உலகமும் ஒழிந்து போன போதிலும்; இன்றென இருத்தி: நீ இன்று இருப்பது போலவே ஆரோக்கிய திடகாத்திரனாய் இருப்பாயாக; என்றான்: என்று ஓர் உணர்ச்சி வேகத்தில் வாழ்த்துகிறான்.]

வெகு நீண்ட காலம் வாழ்ந்திருக்க வேண்டும் என்ற ஆர்வத்தை 'ஊழி' 'ஏழும்' என்ற நெடிய எதுகைகள் ஒலித்துக் காட்டுகின்றன. அபூர்வமான பாவம் கொண்ட செய்யுள் இது.

No. 1



சிபார்சுக் கடிதம்!

நண்பர் (பணக்கார நண்பர் ஒருவரிடம் சென்று):—நீங்கள் எனக்கு இந்த ஊர் பாங்கு ஏஜெண்டுக்குச் சிபார்சுக் கடிதம் கொடுத்தால் கொஞ்சம் பணம் வாங்கிக் கொள்வேன். ரொம்ப உபகாரமாயிருக்கும்.

பணக்காரர்:—அந்த ஏஜெண்டை உமக்குத் தெரியுமா?

நண்பர்:—தெரியாது!

பணக்காரர்:—பார்த்தீரா! நாம் இவ்வளவு நெருங்கிய நண்பர்களாயிருக்கும்போது, கேவலம் ஒரு மூன்றாம் மனிதனிடம் போய் நீர் கடன் வாங்குவது என்பது எனக்குச் சகிக்கவில்லை. நீர் அவரிடமிருந்து ஒரு சிபார்சுக் கடிதம் வாங்கிக் கொண்டு வாரும், நானே உமக்கு வேண்டிய பணம் தருகிறேன்!

★

நான்கு தடவை தானா?

மாஜிஸ்டிரேட் (மோட்டார் விபத்து நேர்ந்ததன் காரணமாகக் கைது செய்யப்பட்ட டிரைவரைப் பார்த்து):—அப்படியானால் இந்த வருஷம் உன் காரில் விபத்து அடைந்தவர்களின் இந்த நபர் ஐந்தாவது, இல்லையா?

டிரைவர்:—இல்லை, மன்னிக்க வேண்டும். இவர் நான்காவது. ஏனென்றால் ஒரே ஆசாமியின் மேல் இரண்டு தடவை காரை ஏற்றியிருக்கிறேன்.

★

உண்மையான வார்த்தை!

உபாத்தியாயர்:—ராமு, இந்தக் கணக்கை உனக்குக் கிட்டு சொல்லிக் கொடுத்தானா?

ராமு (பயத்துடன்):—இல்லை ஸார்!

உபாத்தியாயர்:—நிச்சயமாகச் சொல்லிக் கொடுக்கவில்லையா?

ராமு:—இல்லவே இல்லை, ஸார்!

உபாத்தியாயர்:— கடைசி தடவையாகக் கேட்கிறேன்! உண்மையைச் சொல்லிவிடு!

ராமு:—அவன் சொல்லிக் கொடுக்கவில்லை, ஸார்! உண்மையாகச் சொல்லுகிறேன். எல்லாக் கணக்கையும் அவனே போட்டுக் கொடுத்தான்!

நிச்சயம்!

"காஷ்மீரில் நடக்கும் சண்டை சமீபத்தில் நிற்காது போலிருக்கிறதே!"

"இல்லை. இன்னும் ஏ நாலு நாளில் முடிந்து விடும்!"

"அதென்ன, அவ்வளவு கணக்காகச் சொல்லுகிறீர்கள்?"

"என் அண்ணா ராணுவத்தில் சேர்ந்திருக்கிறான். அதனால்தான் அவ்வளவு நிச்சயமாகச் சொன்னேன். அவன் எங்கேயும் நாலு நாளைக்கு மேல் வேலை பார்த்ததில்லை!

★

அப்படியா?

அவன்:—நான் சென்ற வருஷம் நடந்த பொருட்காட்சிக்குக் கூட நல்லதாக ஒன்று எழுதி அனுப்பினேன்!

அவள்:—அப்படியா? அதைப் பொருட்காட்சியில் வைத்தார்களா?

அவன்:—ஆமா, எல்லோரும் பார்க்கும்படியான இடத்தில் பொருட் காட்சிச்சாலையின் வாசலிலேயே அதை மாட்டியிருந்தார்கள்!

அவள்:—சபாஷ்! அது என்ன படம்?

அவன்:—படம் இல்லை. 'இடது பக்கம் போக!' என்று ஒரு போர்டு எழுதியிருந்தேன்!

★

குழந்தைகள் மட்டுந்தான்!

ராமு, கிட்டு, ராஜு எல்லோரும் விளையாடிக் கொண்டிருந்தார்கள். ராமுவும் ராஜுவும் வீடு தேடினார்கள். அவர்கள் இருவரும் வீட்டுக்காரனுடைய கிட்டுவினிடம் வந்தார்கள்.

ராமு:—ஸார், இங்கே இடம் காலியாகப் போகிறது என்று கேள்விப்பட்டோம். உள்ளே வந்து பார்க்கலாமா?

கிட்டு:— ஆமா, பார்க்கலாம். ஆனால் வீட்டைப் பார்ப்பதற்கு முன்னால் ஒரு விஷயம் பேச வேண்டியிருக்கிறது. உங்களுக்கு அப்பா, அம்மா இருக்கிறார்களா?

ராமு :— இருக்கிறார்கள்.

கிட்டு :—எங்களுக்கு நிம்மதியாயிருக்கணும். குழந்தைகள் மட்டும் குடித்தனம் வந்தால் பாதகமில்லை. கூட அப்பா அம்மா இருந்தால், வேண்டாம்!

ஆப்ரகம் லிங்கன்

1776-ம் ஆண்டு இங்கிலாந்தின் ஆதிக்கத்திலிருந்து அமெரிக்கரை விடுவித்த பொறுப்பு, செல்வத்தில் திளைத்த வாஷிங்டன் பிரபுவுக்கு வாய்த்தது. அடிமைகளாக இருந்து வந்த ஆப்பிரிக்க நீக்ரோக்களை அமெரிக்கர்களின் கொடுமையிலிருந்து விடுவிக்கும் மாபெரும் பொறுப்பு ஏழைக் குடும்பத்தில் பாட்டாளியின் புதல்வனாகப் பிறந்த ஆப்ரகம் லிங்கனுக்கு வாய்த்தது.

ஆப்பிரிக்கா தேசத்திலிருந்து, நீக்ரோக்களைப் பிடித்து வந்து, ஆடு மாடுகளைப் போல் அமெரிக்கர்களுக்கு விற்றுவந்தார்கள் மேல் நாட்டு வியாபாரிகள். இவ்விதம் அமெரிக்காவில் லக்ஷக் கணக்கான நீக்ரோக்கள் சேர்ந்து விட்டனர். அவர்களை ஆடுகளையும் மாடுகளையும் விடக் கேவலமாக அமெரிக்கர் நடத்தி வந்தனர். மனிதத் தன்மைக்குச் சற்றும் ஏற்காத வகையில் கொடுமைப் படுத்தி வந்தனர். இவ்விதம் விலை கொடுத்து வாங்கிய அடிமைகளைத் தங்கள் உடமையாகவும் சொத்தாகவும் பாவித்து வந்தார்கள்.

ஆகவே, நீக்ரோக்களை விடுதலை செய்து, அவர்கள் சுதந்தரமாக வாழ வழி செய்ய வேண்டும் என்ற கிளர்ச்சி தொடங்கியது. இந்தக் கிளர்ச்சி வாஷிங்டன் காலத்திலேயே தொடங்கியது.

இந்த அடிமை வியாபாரத்துக்கு முடிவு கட்டுவதும், அடிமைகளுக்கு விடுதலை அளிப்பதும் சிரம சாத்தியமான காரியமாக இருந்தது. சரித்திரத்தில் நூற்றுக் கணக்கான ஆண்டுகளாக ஊறிப் போனதால் சிரமமாக இருந்தது. ஆகவே, அடிமை ஒழிப்புக்கு ஆதரவாகப் பொதுஜன அபிப்பிராயம் திரட்டுவது லிங்கனின் வாழ்நாள் முழுதும் செய்ய வேண்டிய காரியமாயிருந்தது. இதற்காக அவர் பட்ட இன்னல்களுக்கு அளவில்லை.

"ஆங்கிலேயர்களுடன் நாம் போர் தொடங்கியபோது, சுதந்திரப் போராட்டம் நிகழ்ந்தபோது 'கடவுளின் இந்த உலகத்தில் தோன்றிய மனிதர் அனைவரும் சமம்' என்று சொல்லிப் போராடினோம். அப்பொழுது அந்த பைபிள் வாக்கு உண்மையிலும் உண்மையாக நமக்குத் தோன்றியது. ஆனால், அதே வாக்கு, இன்று, நீக்ரோக்களை விடுதலை செய்ய வேண்டும் என்று கிளர்ச்சி செய்யும்போது, 'மனிதர் யாவரும் சமம்' என்ற வார்த்தைகள் பொய்யிலும் பெரிய பொய்யாகத் தோன்றுகிறதல்லவா?" என்று இடித்துக் கூறவேண்டியிருந்தது.

மற்றொரு சமயம் ஜட்ஜ் டக்லஸ் என்ற நியாயாதிபதி பொது மேடையில், லிங்கனுடன் வாதம் செய்தார்.

"நீங்களும் நீக்ரோவும் எந்த விதத்தில் சமமோ?" என்று லிங்கனைக் கேலியாகக் கேட்டார்.

அதற்கு லிங்கன் பின் வருமாறு பதில் கூறினார்:—

"வாஸ்தவம்; நானும் ஒரு நீக்ரோவும் சமமல்ல; அவன் நிறம் கறுப்பு என் நிறம் வெளுப்பு. ஆகவே நிற சம்பந்தப்பட்ட மட்டில் நானும் நீக்ரோவும் சமமல்ல. படிப்பு விஷயத்திலும் - அவனும் நானும் சமமல்ல. ஆனால், சாப்பாட்டு விஷயத்தில், பார்க்கப் போனால், அவனும் தன் கையால் உழைத்து தன் வயிற்றுக்கு வேண்டிய சாப்பாட்டைச் சம்பாதித்துக் கொள்கிறான். நானும் என் கையால் உழைத்து எனக்கு வேண்டிய சாப்பாட்டைத் தேடிக் கொள்ளுகிறேன். ஆகவே சாப்பாட்டு விஷயத்தில் அவனும் நானும் ஒன்று; நாங்கள் இருவர் மட்டுமல்ல. ஜட்ஜ் டக்லஸ் கூடத்தான்" என்றார்.



ஆப்ரகம் லிங்கன்

இவ்விதம் எத்தனையோ வாதப் பிரதி வாதங்கள் லிங்கன் பொறுமையுடன் செய்ய வேண்டியிருந்தது. அவர் ஜனாதிபதியாக 1861 ஆம் ஆண்டு ஆனார். உடனே தென் மாகாணங்களில் அமெரிக்க நீக்ரோக்களை வைத்திருந்த அமெரிக்கர்கள் கிளர்ச்சி செய்தனர்.

'ஐக்கிய அமெரிக்கக் குடியரசிலிருந்து விலகி நாங்கள் தனிக் குடியரசு ஸ்தாபிப்போம். அதில் அடிமைகளை எங்கள் இஷ்டம்போல் வைத்திருப்போம்' என்று கிளர்ச்சி செய்தனர். ஆரம்பத்தில் லிங்கன், அவர்களுடன் செய்த அந்தச் சண்டைகளில் தோல்வியுற்று வந்தார். சில தளபதிகள் அவரை ஏமாற்றிவிட்டனர். போர் வீரர்கள் படுமோசமாகச் சண்டை செய்தனர். ஆனால் லிங்கன் தைரியம் இழக்கவில்லை. மிகவும் பொறுமையாகப் போரை தொடர்ந்து நடத்தி வந்ததால் இறுதியில் வெற்றி பெற்றார். லக்ஷக்கணக்கான கறுப்பு நீக்ரோக்களுக்கு விடுதலை யளித்தார்.

1863-ம் ஆண்டு லக்ஷக் கணக்கான நீக்ரோக்களுக்கு விடுதலை யளிப்பதாகத் தெரிவித்தார். அதற்குப் பிறகு ஒரு நாள் ஒரு சிறு ஊரில் அவர் தெரு வழியாக 'கோச்' வண்டியில் ஒரு நண்பருடன் சென்று கொண்டிருந்தார். அப்போது, அந்த ஊர் நீக்ரோக்கள் யாவரும் அந்த வண்டியின் பின்னால் திரண்டு விட்டார்களாம். லிங்கனை வாழ்த்திக்கொண்டே சென்றார்கள். அவரைக் 'கண்கண்ட தெய்வம்' என்று சிலர் கூறினார்கள். சிலருக்கு நன்றியினால் கண்களில் கண்ணீர் பொங்கியது. — 'இந்தக் காட்சியை என்னால் என்றும் மறக்க முடியாது' என்று சொல்லியிருக்கிறார் அந்த நண்பர்.

அடிமை ஒழிப்பு தன் வாழ்க்கையில் வெகு முக்கியமான பணி என்று கருதி செய்து முடித்த பிறகு தனக்கு விரோதிகளாக இருந்தவர்களிடம் மிகப் பிரயாசைப் பட்டு நட்புரிமை கொள்ள முயன்று வந்தார்.

விதி வேறுவிதமாக இருந்தது. ஒரு நாள் லிங்கன் அமைதியாக ஒரு நாடகக் கொட்டகையில், நாடகம் பார்த்துக் கொண்டிருந்தபோது எவனோ வந்து திடீர் என்று அவரைச் சுட்டு விட்டான். அப்படிச் சுட்டவன் லிங்கனிடம் வெறுப்பையும் விரோதத்தையுமே வளர்த்து வந்திருக்க வேண்டும்!

ஏழைக் குடும்பத்தில் தோன்றி ஏழைகளிலும் ஏழைகளான ஆப்பிரிக்க நீக்ரோக்களின் பங்காளனாக இருந்து விடுதலை வாங்கித் தந்த கருணை உள்ளம் படைத்த லிங்கனை அமெரிக்கரும், நீக்ரோக்களும் தம் உள்ளத்தில் இன்றைக்கு நூறு வருஷங்களாகியும் போற்றி வருகிறார்கள்! அந்தத் தியாகியை உலகம் என்றென்றும் போற்றும்!

காலணா வக்கீல்!

வி. வேதாந்தம்

"அதிர்ஷ்டம் முட்டாள்களுக்குச் சாதகமாயிருக்கிறது!" என்கிற பழமொழிக்கொப்ப, யாருடைய சிபார்சினாலோ வக்கீல் சந்தானத்துக்கு ஜட்ஜ் உத்தியோகம் கிடைத்தது. இவரைவிட நல்ல ஸ்திதியில் வக்கீல் தொழில் புரிந்து வந்தவர்களுக்கு இந்த விசித்திரமான அதிர்ஷ்டம் வியப்பை அளித்தது. நாணிக வழக்கறிஞர்கள்கூட, "நம்ம கெட்டிக்காரத்தனத்தில் ஒன்றுமில்லை, ஸார்!" என்று சப்புக் கொட்டினர்.

நாட்கள் ஆக ஆக, ஜட்ஜ் சந்தானத்தின் அசப்பாவமான பேச்சுக்களும், போக்கும் ஒரு வக்கீலுக்காவது பிடிக்கவில்லை. சந்தானமும் தம் பழைய நிலைமையை மறந்து வக்கீல்களை மட்டந்தட்டியும், விரட்டு விரட்டென்று விரட்டியும் வந்தார்.

ஒரு சமயம் கோர்ட் நடந்து கொண்டிருக்கும்போது ஒரு மனுதாரன் தன் விண்ணப்பத்தைக் கோர்ட்டில் சமர்ப்பித்துக் கொள்வதற்காக ஜட்ஜ் சந்தானத்தை நெருங்கினான். சந்தானத்துக்குக் கோபம் வந்துவிட்டது. "டேய், இதைக் கோர்ட்டென்று நினைத்தாயா, என்னவென்று நினைத்தாய்? உன் மனுவை யாராவது ஒரு வக்கீலை வைத்துக் கொடுக்கக் கூடாதா?" என்றார்.

"எஜமான்! நான் ஏழைங்க! பத்தும் எட்டும் கொடுத்து வக்கீல் வைக்க என்னிடம் பணம் இல்லீங்க!" என்றான் அவன்.

"போடா, 'பார் ரூமி'ல போய் யாராவது ஒரு காலணா வக்கீலை அழைத்துக் கொண்டு வந்து கொடடா. போ!" என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டார் சந்தானம்.

பாவம், மனுதாரன் 'பார் ரூமி'ல் போய் நின்று திரு திருவென்று விழித்தான். அங்கே குழுமியிருந்த வக்கீல்கள் விஷயம் என்னவென்று கேட்கவே, "எஜமான், ஒரு மனு கொடுக்கணுங்க! ஜட்ஜய்யா இங்கிருந்து ஒரு காலணா வக்கீலைக் கூட்டிக்கிட்டு வரச் சொன்னாருங்க!" என்றான் மனுதாரன்.

இதைக் கேட்டதும், வக்கீல்களின் முகம் பேய் அறைந்தது மாதிரிக் காட்சி அளித்தது. அவர்களில் ஒருவர் அந்த மனுதாரனை அருகில் அழைத்து, ஏதோ சொல்லி அனுப்பினார். மனுதாரன் மறுபடியும் கோர்ட்டில் ஆஜரானான்.

"எங்கே வக்கீல்?" என்று கேட்டார் சந்தானம்.

"எஜமான்! 'பார் ரூமி'ல் போய்ப் பார்த்தேனுங்க! பத்து ரூபாய்க்குக் குறைந்து ஒருவரும் வரமாட்டாங்களாம். அந்தக் காலணா வக்கீலுங்கள்ளாம் ஜட்ஜ் ஆகிப்போயிட்டாங்களாம்!" என்றான் மனுதாரன்.

சந்தானத்தின் முகத்தில் ஈயாடவில்லை!



அழகுக்கு இயற்கையின் உதவி


டாம்கோ கூந்தல் தேங்கா யெண்ணெயும் ஷாம்பூவும்
வழக்கமாக உபயோகிக்கும் போது, வெறும் புஷ்பங்
களால் கூந்தலைச் சொகுசாக சிங்காரித்துக் கொள்ளுவது,
கூந்தலை சிங்காரிக்கும் இடங்கள் சென்று வாரிக் கொள்
வதை விட உங்கள் அழகைச் சோபிக்கச் செய்யும்.

டாம்கோ கூந்தல் தேங்கா
யெண்ணெயும் ஷாம்பூவும்

தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லிமிடெட்



STAR of INDIA



an outstanding name in the pencil world

பிராண்டும் பென்ஸிலுக்கு அடிக்கடி உடையக்கூடிய முனையும் கூடிவிட்டால், கோபம் வருவதுடன் தெளிவான சிந்தனையும் போய்விடும். ஓர் அற்ப பென்ஸிலும்கூட அபாரமான சிந்தனைக்கு ஏதுவாகலாம். ஸ்டார் ஆப் இந்தியா பென்ஸில்கள் எழுதுவதில் இன்பத்தையும் உன்னத எண்ணங்களையும் உற்பத்தி செய்ய ஏதுவானவை.



ஸ்டார் ஆப் இந்தியா

பென்ஸில் என்றால் மிகவும் உயர்தரமான பென்ஸில் என்பதுதான் அர்த்தம்.

MADRAS PENCIL FACTORY *Madras*.

ADS.MPL

மாந்தருக்குள் ஒரு தெய்வம்

42. போனிக்ஸ் பண்ணை

தென்னாப்பிரிக்காவில் காந்திஜி வசித்த காலத்தில் சில சிறந்த ஆங்கில நண்பர்கள் அவருக்குக் கிடைத்தார்கள். அவர்களில் ஒருவர் மிஸ்டர் வெஸ்டு; இன்னொருவர் மிஸ்டர் போலக். இந்த இரண்டு பேரும் ஜோகானிஸ்பர்க்கில் இருந்த சைவ போஜன சாலையில் காந்திஜிக்குப் பழக்கமானவர்கள்.

இவர்களுள் முதலில் சிநேகமானவர் மிஸ்டர் வெஸ்டு. இவரும் காந்திஜியும் தினந்தோறும் மாலையில் சைவ போஜன சாலையில் சந்திப்பது வழக்கம். கொள்ளை நோய்க்காரர்களுக்குப் பணிவிடை செய்ய ஆரம்பித்ததிலிருந்து காந்திஜி மேற்படி சைவ போஜன சாலைக்குப் போகவில்லை; தம் மூலமாகத் தொற்று நோய் மற்றவர்களிடம் பரவாமலிருக்கும் பொருட்டுத்தான். ஆனால் காந்திஜி வாராதது பற்றி மிஸ்டர் வெஸ்டு கவலை கொண்டார். ஒரு நாள் அதிகாலையில் காந்திஜியின் வீட்டுக்கு வந்து கதவை இடித்தார். அப்போது காந்திஜி வெளியில் உலாவப் புறப்பட்டுக் கொண்டிருந்தார். இருவரும் நடந்து கொண்டே சம்பாஷித்தனர்.

காந்திஜி கொள்ளை நோய்க்காரர்களுக்குப் பணிவிடை செய்து கொண்டிருப்பதை அறிந்ததும் மிஸ்டர் வெஸ்ட், "நானும் உங்களுடன் வந்து நோயாளிகளுக்குத் தொண்டு செய்ய விரும்புகிறேன். என்னை நம்பி வாழ்க்கை நடத்துகிறவர்கள் யாரும் இல்லை என்பது தான் உங்களுக்குத் தெரியுமே?" என்றார்.

"ஆனாலும் உங்களை நான் அபாயத்துக்கு உட்படுத்தப் போவதில்லை. இரண்டொரு நாளில் எனக்கே அந்த வேலையில்லாமற் போய்விடும். ஆனால் முக்கியமான வேறு வேலை ஒன்று இருக்கிறது. அதை நீங்கள் செய்கிறதாயிருந்தால் சொல்கிறேன்" என்றார் காந்திஜி.

"பேஷாகச் செய்கிறேன். சொல்லுங்கள்!" என்றார் மிஸ்டர் வெஸ்ட்.

"நேட்டாலில் இந்தியருக்காக 'இண்டியன் ஒபீனியன்' என்னும் பத்திரிகை நடத்தி வருகிறோம் அல்லவா? பத்திரிகையையும் பத்திரிகை அச்சடிக்கும் அச்சுக் கூடத்தையும் பார்த்துக்கொள்ள ஒருவர் தேவை. இதுவரை ஸ்ரீ மதன்ஜித் அந்தப் பொறுப்பை வகித்து வந்தார். இப்போது அவருக்கு இங்கே வேலை இருக்கிறது. நீங்கள் போக முடியுமா?"

ஜோகானிஸ்பர்க்கில் இருந்த ஒரு அச்சுக் கூடத்துக்கு மிஸ்டர் வெஸ்ட் பாதி சொந்தக்காரர். அச்சுக்கூட அனுபவம் அவருக்கு இருந்தது. சொந்தக் காரியத்தை விட்டு விட்டு டர்பனுக்குப் போகச் சம்மதித்தார். மறுநாளே பிரயாணமானார். அன்று முதல் காந்திஜி தென்னாப்பிரிக்காவில் இருந்த வரையில் காந்திஜியின் சுக துக்கங்களில் எல்லாம் வெஸ்டு பங்காளியாயிருந்து வந்தார்.

* * *

'கூலிச்சேரி விஷயமாகவும் கருமகாமாரி விஷயமாகவும் ஜோகானிஸ்பர்க் நகரசபையார் அலட்சியமாயிருந்ததைக் கண்டித்துக் காந்திஜி பத்திரிகைகளுக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார். 'கிரிடிக்' என்னும் பத்திரிகையில் உதவி ஆசிரியராயிருந்த மிஸ்டர் போலக் மேற்படி கடிதத்தைப் படித்தார். படித்த உடனே அந்தக் கடிதம் எழுதிய

காந்திஜியை நேரில் சந்திக்க வேணும் என்ற விருப்பம் அவருக்கு உண்டாயிற்று.

ஒருநாள் மாலை காந்திஜியைச் சைவ போஜன சாலையில் சந்தித்துப் பேசினார். காந்திஜியிடம் அவருடைய மதிப்பு அதிகமாயிற்று. வாழ்க்கையைப் பற்றிய இருவருடைய கொள்கைகளும் ஒத்திருந்தன. போலக் எளிய வாழ்க்கையில் பற்றுக் கொண்டவர். புத்தி ஒப்புக் கொள்ளும் எந்தக் காரியத்தையும் நடத்தையில் கடைப்பிடிக்கும் உறுதி கொண்டவர். காந்திஜி மேற்கொள்ளும் பொதுக் காரியங்களில் அவருடன் தாமும் ஒத்துழைக்க விரும்புவதாக மிஸ்டர் போலக் கூறினார்.

இதற்கிடையில் டர்பனுக்குச் சென்றிருந்த மிஸ்டர் வெஸ்ட் ஒரு கடிதம் எழுதியிருந்தார். அது 'இந்தியன் ஒபீனியன்' பத்திரிகையையும் அச்சுக் கூடத்தையும் பற்றிக் கவலை உண்டாக்குவதாயிருந்தது.

"நான் எதிர்பார்க்கிறபடி லாபம் வராது; நஷ்டம் வரலாம். கணக்குகள் ஒழுங்கில்லை. நிலுவை பாக்கி ஏராளம். ஆனால் சரியான விவரம் இல்லை. என்னாலியன்ற வரையில் நிலைமையைச் சீர்ப்படுத்த முயல்கிறேன்" என்பது மிஸ்டர் வெஸ்ட் கடிதத்தின் சாராம்சம்.

இதைப் படித்தவுடனே காந்திஜி டர்பனுக்கு நேரில் போக விரும்பினார். இது வரையில் பிறர் பேச்சை நம்பி ஏமாந்து போனோம் என்று உணர்ந்தார். டர்பனுக்குப் பிரயாணப் பட்டார்.

காந்திஜியை ரயிலில் ஏற்றி அனுப்புவதற்கு வந்த மிஸ்டர் போலக் கையில் ஒரு புத்தகம் கொண்டு வந்திருந்தார். ரஸ்கின் என்னும் பிரசித்த ஆங்கில அறிஞர் எழுதிய "Unto this Last" என்னும் புத்தகம் அது. பிரயாணத்தின்போது படிப்பதற்காக அந்தப் புத்தகத்தைக் கொடுத்தார். காந்திஜி அதைப் படிக்கத் தொடங்கிய பிறகு நிறுத்தவே யில்லை. காந்திஜியின் மனப் போக்கை அது பிரதிபலித்தது. மனித வாழ்க்கையின் இலட்சியங்கள் எப்படியிருக்க வேண்டும் என்று தெளிவுபடுத்திக் கூறியது. பின்வரும் சித்தாந்தங்கள் முக்கியமாக அந்த நூலில் கூறப்பட்டிருந்தன :—

1. மனிதனுடைய நன்மை சர்வஜன நன்மையில் அடங்கியதாகும்.

2. வக்கீலின் உழைப்பும், நாவிதனுடைய உழைப்பும் ஒரே பெறுமானமுள்ளவைதான் ஏனெனில் அனைவருக்கும் தங்கள் உழைப்பினால் ஜீவனோபாயம் சம்பாதிக்கும் உரிமை சமமாக உண்டு.

3. உடலை உழைத்து வாழும் வாழ்வே, அதாவது குடியானவனுடைய அல்லது கைத்தொழிலாளியின் வாழ்க்கையே மேன்மையான வாழ்க்கையாகும்.

முதல் இரு சித்தாந்தங்களையும் பற்றிக் காந்திஜி ஏற்கனவே நன்கு அறிந்திருந்தார். ஆனால் மூன்றாவது கொள்கை அவருக்குப் புதிதாக இருந்தது. ஆயினும் அது உண்மை, — மிக முக்கியமான உண்மை, — என்பது இப்போது நன்கு தெளிவாயிற்று. அந்தக் கொள்கைக்கு இணங்கத் தம் வாழ்க்கையைச் செப்பனிடுவது பற்றிச் சிந்திக்கத் தொடங்கினார். அன்றிரவெல்லாம் ரயில் பிரயாணத்தின் போது தூங்காமல் சிந்தனை செய்து கொண்டிருந்தார். சிந்தனை டர்பன் சேர்ந்தவுடனே காரியமாக உருக்கொண்டது.

* * *

ரஸ்கின் புத்தகத்தினால் தம் மனநிலையில் ஏற்பட்ட மாறுதலைப் பற்றிக் காந்திஜி மிஸ்டர் வெஸ்டுக்குச் சொன்னார்.

"நாம் எல்லாரும் ஒரு விவசாயப் பண்ணைக்குப் போய்ப் புதிய வாழ்வு தொடங்கவேண்டும். அச்சுக்கூடத்தை நம்முடன் கொண்டுபோய் விடுவோம். விவசாய வேலை செய்து ஒழிந்த வேளைகளில் அச்சுக்கூட வேலையைப் பார்ப்போம். பண்ணையில் வசிப்ப

"கடவுள் பூமியைப் படைத்தார்; வானத்தைப் படைத்தார்; விரிந்து கிடக்கும் கடலைப் படைத்தார்; ஆனால் அடிமையை மட்டும் படைக்கவில்லை."

—ஜார்ஜ் வாஷிங்டன்.

> "இனிப்பா யிருப்பது சர்க்கரையின் இயற்கை. புளிப்பா யிருப்பது புளியின் இயற்கை. அது போலச் சுதந்திரமா யிருப்பது மனிதனுடைய இயற்கை."
>
> —விக்டர் ஹ்யூகோ.

வர்கள் எல்லாரும் சமமாக மாதம் மூன்று பவுன் சம்பளம் வாங்கிக் கொள்வோம்" என்றார் காந்திஜி. மிஸ்டர் வெஸ்ட் உடனே உற்சாகமாகச் சம்மதித்து விட்டார். ஆனால் அச்சுக்கூடத்தில் வேலை செய்த பன்னிரண்டு தொழிலாளிகளும் என்ன செய்வார்கள்? அவர்கள் மேற்படித் திட்டத்தின்படி வேலை செய்யச் சம்மதிப்பார்களா?

அச்சுக்கூடத் தொழிலாளிகளோடு காந்திஜி கலந்து பேசினார். அவர்களில் இயந்திர வேலைக்காரரான கோவிந்தசாமி என்னும் தமிழர் மட்டும் அந்த யோசனைக்கு முழுதும் இணங்கினார். மற்றவர்கள் அச்சுக்கூடம் எங்கே போனாலும் அங்கே தாங்களும் வருவதாகவும், ஆனால் வழக்கம்போல் சம்பளம் கொடுக்க வேண்டும் என்றும் சொன்னார்கள்.

உடனே காந்திஜி "டர்பனுக்குச் சற்றுப் புறத்தில் ஏதேனும் ஒரு ரயில்வே நிலையத்தை அடுத்த இடத்தில் நிலம் விலைக்குத் தேவை" என்று பத்திரிகைகளில் விளம்பரம் செய்தார். போனிக்ஸ் ஸ்டேஷனுக்குச் சமீபத்தில் நிலம் விற்பனைக்குக் கிடைக்கும் என்று பதில் கிடைத்தது. டர்பனிலிருந்து போனிக்ஸ் 13 மைல். காந்திஜியும் மிஸ்டர் வெஸ்டும் நிலத்தைப் போய்ப் பார்த்தார்கள். நிலம் அவர்களுக்குப் பிடித்திருந்தது. முதலில் இருபது ஏக்கரா நிலமும் பிறகு எண்பது ஏக்கரா நிலமும் வாங்கினார்கள். வாங்கிய நிலத்தில் ஒரு இனிய நீர் ஊற்றும் சில மாமரங்களும் ஆரஞ்சுச் செடிகளும் இருந்தன.

போனிக்ஸ் திட்டத்தைப் பற்றிக் கேள்விப்பட்ட காந்திஜியின் நண்பர் ஸ்ரீ ருஸ்டம்ஜி உற்சாகத்துடன் உதவி செய்ய முன் வந்தார். ஒரு பெரிய கிடங்குக்குக் கூரை போடப்பட்டிருந்த தகரத் தகடுகளையும் மற்றும் கட்டிட சாமான்களையும் கொடுத்தார். போயர் யுத்தத்தின்போது காந்திஜியுடன் தொண்டு செய்த சில தச்சர்களும் கொத்தர்களும் போனிக்ஸுக்கு வந்து அச்சுக்கூடம் வைப்பதற்குக் கொட்டகை போட்டுக் கொடுத்தார்கள். எல்லாரும் உற்சாகத்துடன் வேலை செய்தபடியால் 76 அடி நீளமும் 50 அடி அகலமும் உள்ள தகரக் கொட்டகை ஒரே மாதத்தில் கட்டி முடிந்து விட்டது.

அந்தப் பிரதேசத்தில் ஏராளமாக அடர்ந்த புல் முளைத்துப் படர்ந்து கிடந்தது. பாம்புகள் தாராளமாக அந்தப் புல் புதர்களில் குடிபுகுந்து வசித்து வந்தன. அது வரையில் அங்கே மனித சஞ்சாரமே கிடையாது. கூடாரம் போட்டுக் கொண்டு அதில் வசித்த காந்திஜியும் தச்சர், கொத்தர் முதலிய தொழிலாளிகளும் மிக்க அபாயத்துக்கு உட்பட்டிருந்தார்கள்.

கொட்டகை கட்டி முடிந்ததும் டர்பனிலிருந்து அச்சுக்கூடம் போனிக்ஸுக்குக் கொண்டு வரப்பட்டது. புதிய இடத்துக்கு வந்த பிறகு 'இண்டியன் ஒபீனியன்' முதல் இதழ் தயாரிப்பதில் ஒரு பெரும் நெருக்கடி ஏற்பட்டது.

அந்த நெருக்கடி பற்றியும் அது தீர்ந்த விதத்தைப் பற்றியும் மகாத்மாவின் வாய்மொழியாகவே தெரிந்து கொள்வோம்:—

'ஆரம்பத்தில், பத்திரிகை வெளியாவதற்கு முந்தின இரவுகளில் நாங்கள் எல்லாரும் கண்விழித்து வேலை செய்ய வேண்டியிருந்தது. இளைஞர், விருத்தர் அனைவரும் பத்திரிகை மடிப்பதில் உதவி செய்வார்கள். இரவு பத்து மணியிலிருந்து நடுநிசிக்குள் வேலை முடிவது வழக்கம்.

ஆனால் முதல் இதழ் வெளியாக வேண்டிய தினத்துக்கு முன்னிரவு நாங்கள் பெற்ற அனுபவம் என்றும் மறக்கக் கூடாததொன்றாகும். அச்சுக் கோத்து முடிந்து இயந்திரத்தில் பொருத்தியாகி விட்டது. ஆனால் என்ஜின் வேலை செய்யவில்லை. என்ஜினை அமைத்து ஓட்டித் தருவதற்கு டர்பனிலிருந்து என்ஜினியரை வரவழைத்

இருக்கிறோம். அவரும் வெல்டும் தக்க காலை இடைவரை பார்த்தும் என்ஜினை ஓடச் செய்ய முடியவில்லை. வெட்கத்தில் ஆழ்ந்தவராக கண்ணில் நீர் ததும்ப என்னிடம் வந்து, “என்ஜின் ஓடவில்லை; இனி பத்திரிகை வெளி வராது” என்றார். அவருக்குச் சமாதான மாக நான் கூறியதாவது:—

“அதற்கு நாம் என்ன செய்யலாம்? கண்ணீர் விடுவதால் பயனில்லை. மனிதப் பிரயத்தனத்தில் ஆகக்கூடிய தெல்லாம் செய்து பார்த்து விடுவோம். கைச் சக்கரத்தின் விஷயமென்ன?”

“கைச் சக்கரம் இருக்கிறது. அதைச் சுற்ற ஆட்களுக்கு எங்கே போவது? சுமாராக முடியும் சரி. கலை நாலு பேராய் மாற்றி மாற்றிச் சுற்ற வேண்டும். எமது ஆட்களோ ஏற்கனவே களைத்துப் போயிருக்கிறார்கள்” என்றார் வெல்ட்.

கட்டிட வேலை இன்னும் முழுதும் முடிய வில்லை. ஆதலின் தச்சர்கள் பலருடன் இருந்தார்கள். அவர்கள் அச்சுக்கூடத்திலே படுத்து உறங்கினார்கள். அவர்களைச் சுட்டிக் காட்டி, ‘இந்தத் தச்சர்களை நாம் உபயோகப்படுத்திக் கொள்ளக் கூடாதா? அவர்களும் சேர்ந்தால் இரவு முழுதும் நாம் வேலை செய்யலாம். இந்த உபாயம் ஒன்று பாக்கியிருக்கிறதே!” என்றேன் நான்.

‘தச்சர்களை எழுப்ப எனக்குத் துணிவில்லை. எமது ஆட்களோ ரொம்பக் களைத்துப் போயிருக்கிறார்கள்” என்றார் வெல்ட்.

“அந்தக் கவலை உங்களுக்கு வேண்டாம்; அவர்களுடன் பேசி முடிப்பதற்கு நான் இருக்கிறேன்” என்றேன்.

“அப்படியானால் வேலை நடந்துவிடக் கூடும்” என்றார் வெல்ட்.

தச்சர்களை எழுப்பி அவர்களை இவ்வேலையில் உதவி செய்யும்படிக் கேட்டுக் கொண்டேன். தனியாக அவர்களை வற்புறுத்தவே அவசியமில்லாமலிருந்தது. “அவசரத்தில் உதவி செய்யவில்லையென்றால் நாங்கள் இருந்து என்ன பயன்? நீங்கள் தூங்கப் போங்கள். நாங்கள் அந்த வேலையைப் பார்த்துக் கொள்கிறோம். எங்களுக்கு அது எளியது” என்றார்கள். எங்கள் பக்கத்து ஆட்கள் வேலைக்குத் தயாராய் இருந்தார்கள் என்று சொல்ல வேண்டியதில்லை.

வெல்ட் மிகுந்த ஆனந்தம் கொண்டார். வேலை ஆரம்பித்தபோது அவர் தோத்திரப் பாட்டு ஒன்று பாடத் தொடங்கினார். தச்சர்களைப் பிரித்துவிட்டேன். முறைப்படி மற்றவர்களும் வேலை செய்தார்கள். இன்று காலை ஏழு மணி வரையில் வேலை செய்தோம். ஆனால் இன்னும் வேலை நிறைய பாக்கி யிருக்கிறது. இப்போது மீண்டும் என்ஜினியரை எழுப்பி என்ஜினை நடத்தச் சொல்லிப் பார்க்கலாமென்று மிஸ்டர் வெல்டினிடம் சொன்னேன். இம் முறையேனும் அவர் வெற்றி பெற்றால் வேலை காலத்தில் முடிந்துவிடும்.

அவ்வாறே வெல்ட் அவரை எழுப்பினார். அவர் உடனே என்ஜின் அறைக்குச் சென்றார். என்ன விந்தை! என்ஜினைத் தொட்டவுடனே அது ஓட ஆரம்பித்தது! அச்சுக்கூடம் முழுவதிலும் ஆனந்த கோஷம் கிளம்பியது. “இதன் காரணம் என்ன? நேற்றிரவு நாம எவ்வளவோ முயன்றும் பயன்படாமற் போயிருக்க, இன்று காலை கோளாறு ஒன்றுமே இல்லாததுபோல ஓடத் தொடங்கிவிட்டதே?” என்று நான் கேட்டேன்.

வெல்டோ, என்ஜினியரோ — நன்றாக நினைவில்லை—கூறியதாவது: “இதற்குக் காரணம் கூறுதல் கஷ்டம். இயந்திரங்கள் சில சமயம் நடந்துகொள்வதைப் பார்த்தால் நம்மைப் போலவே அவற்றிற்கும் ஓய்வு தேவை என்று காணப்படுகிறது.”

என்ஜின் வேலை செய்ய மறுத்தது எங்களுக்கு ஏற்பட்ட சோதனை என்றே எனக்குத் தோன்றிற்று. நல்ல சமயத்தில் அது மீண்டும் ஓடத் தொடங்கியது. எங்கள் உண்மையான, மனப்பூர்வமான உழைப்பின் பயன் என்று கருதினேன்.

பத்திரிகைப் பிரசுரக் காலத்தில் தபாலுக்கு அனுப்பவே எல்லோருக்கும் சந்தோஷமாயிருந்தது.

இந்த ஆரம்பப் பிடிவாதமானது பின்னும் பத்திரிகை ஒழுங்காக வெளியாகும் என்பதை உறுதிப்படுத்திற்று. பின்னால் ஒரு காலத்தில் வேண்டுமென்றே நாங்கள் என்ஜினை உபயோகிப்பதை நிறுத்திக் கையினாலும் வேலை செய்தோம். போனிக்ஸ் குடியேற்ற வாசிகள் தார்மீக உச்ச நிலையை எய்தியிருந்த நாட்கள் அந்நாட்களே என்பது என் கருத்து.

எங்களது அபிமானிகளுக்கும்

ஆதரவாளர்களுக்கும்

மனமார்ந்த சுதந்திர தின

வாழ்த்துக்கள்!

★

ராஜா ஸ்னோ, ஹேர் ஆயில், கஸ்தூரி சோப், பிரில்லியன்டைன்

★

மணியம் & கம்பெனி

ராஜா ஸ்னோ பில்டிங்ஸ், பெங்களூர் - 3

பிராஞ்சுகள் : மதுரை, மதராஸ், பம்பாய்

கல்கத்தாவிற்கு வினியோகஸ்தர் :

ஸ்ரீ எஸ். என். ராவ், 81, நேதாஜி ரோடு



தாயுள்ளம்

அம்புஜம்

இரண்டாவது பரிசுக்கதை 1

சோம்பல் முறித்துக் கொண்டு எழுந்தேன். வெகுநேரம் தூங்கிவிட்டே னென்று தெரிந்தது. மத்தியானம் நிகழ்ந் தவையெல்லாம் ஞாபகத்துக்கு வந்தன. ஆம்; அந்த வேதனையிலும் களிப்பிலும் தான் அவ்வளவு நேரம் தூங்கிவிட்டேன்.

சரசரவென்று சமையலறைக்குச் சென்று இடைவேளை 'டிபன்' பண்ண ஆரம்பித்தேன். அடுத்த அறையில் ஏதோ பழைய பெட்டியைக் குடைந்து கொண்டிருந்த கமலி, நான் எழுந்து விட்டதைத் தெரிந்துகொண்டு சமைய லறைக்கு வந்தாள்.

"அடுப்புப் பத்த வைத்தாச்சா, அம்மா?" என்றாள் ஒருவிதக் களிப்புடன்.

'உம்......வாழைக்காய் பஜ்ஜி போடப் போறேன். உங்க அப்பாவுக்குப் பிடிக்குமே! நீ வாழைக்காய் நறுக்கு. நான் மாக் கரைக்கிறேன்."

கமலி சிரிக்க ஆரம்பித்தாள். "ஏண்டி சிரிக்கிறே?" என்றேன்.

"மத்தியானம்தானே அம்மா, அப்பா அப்படி இரைஞ்சுட்டுப் போனார்? எவ்வளவு கடுமையாய்த் திட்டினார்? நீயானுக்கே அப்பாவுக்குப் பிடிக்குமேன்னு வாழைக்காய் பஜ்ஜி போடறேன் என் கிறாய்?" என்று கேலி பண்ணினாள் கமலி.


எனக்கிருந்த களிப்பிலும் வேதனை யிலும் அது பிடிக்கவில்லை. "போடி, உனக்கும் ஒரு நாள் தெரியும். நீயும் புருஷனுடைய குடித்தனம் பண்ணுவையே, அப்பொழுது தெரியும்" என்றேன்.

கமலியின் முகம் திடீரென்று சுருங்கியது. கண்கள் வாடிவிட்டன. உடனே நானும் என் தவறை உணர்ந்தேன். புக்ககத்திற்குப் போகாமல் தாய் வீட்டி லேயே இருக்கும் பெண்ணிடம் அப்படி அறைந்தாற்போல் சொன்னது பிசகு தான். ஆனால் இனி என்ன செய்யலாம்? சொன்னது சொன்னதுதானே?

கமலி பேசாமல் வாழைக்காய் நறுக்க ஆரம்பித்தாள். என் மனம் அவளை எப்படிச் சமாதானப் படுத்துவது என்ற யோசனையில் ஆழ்ந்துவிட்டது. ஒருவித மாகச் சமாளித்துக் கொண்டு "போ, தலை வாரிக்கோ! தோட்டத்திலே மல்லிகையாய்ப் பூத்திருக்கு; வெள்ளிக் கிழமை; தொடுத்துச் சூட்டிக்கோ!" என்றேன்.

"சரி" என்று அவள் எழுந்ததும் சற்று ஆறுதலடைந்தேன். அதற்குள் கோடியகத்துப் பெண் வந்து, "எங்க மாமி கமலத்தை அழைச்சுண்டு வரச் சொன்னா!" என்றாள்

கமலி என்னைப் பார்த்தாள். அவளுக் குப் போக இஷ்டமில்லை "போய் என்னவென்று கேட்டுவிட்டு வா!"



என்றேன். அந்தப் பெண்ணின் மாமி என் ஒன்றுவிட்ட தமக்கை. அவள் எத்தனையோ தடவை கமலையை ஜாடையாகப் பரிகாசம் செய்திருக்கிறாள். கமலி அதனால்தான் உடனே போவதற்குச் சற்றுத் தயங்கினாள். நான் போகச் சொன்னவுடன் வேண்டா வெறுப்புடன் கிளம்பினாள்.

அவள் போனதும் நான் யோசிக்க ஆரம்பித்தேன். எவ்வளவு துடுக்காகவும் கலகலப்பாகவும் இருந்த பெண் இப்பொழுது எப்படி மாறிவிட்டாள்! அவள் முகத்தில் உண்மையான சிரிப்பைக் கண்டு எத்தனை காலங்களாகி விட்டன! இவ்வளவுக்கும் அவளுக்கு என்ன குறை? காலா காலத்தில் கல்யாணம் பண்ணவில்லையா, சீர் செனத்தி செய்து புக்ககத்தில் கொண்டுபோய் விடவில்லையா? பெண்தான் அழகில்லையா, சமர்த்தில்லையா, குறைச்சலா?—எல்லாம் நிறைந்திருக்கும் அவள் ஏன் வாழா வெட்டியாக இருக்க வேண்டும்?

முரட்டுப் பிடிவாதமுள்ள அவள் அப்பாதான் அதற்குக் காரணம் என்று ஊரார் சொல்லுவார்கள். அதுவும் ஓரளவு உண்மைதான். தீபாவளியின் போது மாப்பிள்ளைக்கு வைர மோதிரம் போடுவதாகச் சொல்லிப் பிறகு வாக்குத் தவறி விட்டார். அதற்கான தண்டனையைத்தான் கமலி இப்பொழுது அனுபவித்துக் கொண்டிருக்கிறாள்!

ஆனால் அவரும் வெறுமனே அப்படிச் சொல்லி விடவில்லை. மாப்பிள்ளைக்கு உயர்ந்த சம்பளத்தில் பெரிய வேலை என்று சொல்லி அவர்களை ஏமாற்றியதற்காகவே 'எட்டிக்குப் போட்டி' செய்தார்.

அவர்கள்—பிள்ளையைப் பெற்றவர்கள்—என்ன வேண்டுமானாலும் சொல்லலாம், செய்யலாம். பெண்ணைப் பெற்றவர்கள் அப்படியெல்லாம் ஜம்பமடித்துக் கொண்டால் யாருக்கு நஷ்டம்? பெண்ணின் வாழ்க்கை கெடுகிறதே தவிர அவர்களுக்கு என்ன குறை வந்தது?

அதற்கும் இவர் ஒரு பிரதி உபாயம் பண்ணிப் பார்த்தார். "ஓஹோ அவ்வளவு கர்வமா! ஜீவனாம்சப் பணத்தைக் கக்க வைத்து விடுகிறேன்!" என்று கிளம்பி விட்டார்.

'நமக்கு வேண்டியது நம் பெண்ணின் வாழ்வா அல்லது கேவலம் ஜீவனாம்சக் காசா?" என்று எவ்வளவோ கெஞ்சிக் கூத்தாடிக் கேட்டுக் கொண்ட பிறகுதான் அந்த யோசனையை அவர் கைவிட்டார்.

எங்கே ஜீவனாம்சப் பணம் கிடைத்து விடுமோ, கமலியை அவர்கள் தள்ளி வைத்தது உறுதியாகி விடுமோ என்று எனக்கல்லவா பயம்?

அன்று கமலியே சொன்னாளே, "அவர் பிரியமாய்த்தான் இருக்கார், அம்மா! மாமனாரும் மாமியாரும்தான் ஒரு மாதிரி!" என்று. ஆகவே, கொஞ்சம் பொறுத்து மாப்பிள்ளையே அப்பா, அம்மாவைச் சமாதானம் செய்து பெண்ணை

அழைத்துப் போவானென்ற அசட்டு நம்பிக்கையுடன் நான் இருந்தேன்.

2

எத்தனை நாள்தான் நானும் இப்படி ஆசை வைத்துக் கொண்டிருக்க முடியும்? கமலியும்தான் எத்தனை நாள் இப்படிச் சாகாமல் செத்துக் கொண்டிருக்க முடியும்? தன்னோடொத்த பெண்கள், அத்தி பூத்தாற் போல் கிராமத்திற்கு வரும் போது தாங்கள் வசிக்கும் நகரைப் பற்றியும் தாங்கள் பண்ணும் குடித்தனத்தைப் பற்றியும், எல்லாவற்றிற்கும் மேலாகத் தங்கள் கணவன்மார்களைப் பற்றியும் கதை கதையாக அளப்பதை எத்தனை நாள் பொறுமையுடன் கேட்டு அவள் பொறாமைப்படாமல் இருக்க முடியும்?

காமாட்சி—அவள்தான் என் ஒன்றுவிட்ட தமக்கையின் பெண். சற்று முன் கமலியைக் கூப்பிட்டனுப்பினாளே, அவளுடைய மூன்றாவது பெண். கமலியை விட மூன்று வயது சின்னவள். கல்யாணமானதுமே பம்பாய் போனவள் மூன்று வருஷங்களுக்குப் பின் இப்போதுதான் கிராமத்திற்கு வந்திருக்கிறாள். அப்பப்பா! அவள் அடித்துக் கொள்ளும் பெருமை! அடித்துக் கொள்ளட்டுமே, யார் வேண்டாமென்கிறார்கள்? ஆனால் மற்றவர்களைப் பரிகாசம் பண்ணினால்தான் தன் பெருமை சோபிக்குமென்று அவள் நினைக்கிறாளே, அதுதான் எனக்குக் கஷ்டமாக இருக்கிறது.

''எனக்கு என்னமோ அம்மா, இந்தக் கிராமமே பிடிக்கல்லே! வந்து ஒரு வாரம் தான் ஆகிறது. அதுக்குள்ளே சலிச்சுப் போச்சு. நீ எப்படித்தான் பிறந்ததிலேருந்து இங்கேயே இருக்கியோ!'' என்பாள்.

''நானும் இங்கேயே இருந்துடல்லே. புக்ககத்து ஊரிலே கலங்க மாசம் இருந்துட்டுப் போனாலு வந்திருக்கேன்!'' என்று கமலி சொல்ல முடியுமா? இப்படியே சொல்லிச் சொல்லிக் காமாட்சிக்கே அலுத்து விட்டதோ இல்லை ஒரே விதமாகக் கேலி பண்ணுவதில் ரஸமிருக்காதென்று தோன்றியோ, வேறு விதமாக ஆரம்பித்து விட்டாள்.

''உனக்கு என்னடி அம்மா, பாக்கியசாலி! கேட்பார் ஒருத்தர் இல்லை. இங்கேயே அப்பா அம்மாவோடே. பிறந்த ஊரிலே தெரிஞ்ச மனுஷாளோடே இருக்கே. நான் இங்கே வந்து முழுசா ஒருமாசம் ஆகல்லே. அதுக்குள்ளே 'எப்ப வருவே, எப்ப வருவே'ன்னு நாலு கடிதாசு வந்தாச்சு 'அவர்' கிட்டேருந்து! சொந்த ஊரிலே அப்பா அம்மாவோடே ஒரு மூணு மாசமாவது இருக்கணும்னு ஆசை இருக்காதோ? உன்னைப் போல இருந்தா எவ்வளவோ தேவலை. ஒரு கவலையில்லை ஒரு பொறுப்பில்லை உனக்கு! அன்னை வயிற்றிலே இருந்தாப்பலேயே இருக்கே, பாக்கியசாலி!''

இப்படி மறைவாகப் பரிகாசம் பண்ணுவதைத்தான் கமலியால் பொறுத்துக் கொண்டிருக்க முடியவில்லை. 'அம்மா, நான் ஏன் அம்மா இப்படி இருக்கணும்? என் மேலே என்ன தப்பு?' என்று தொண்டை அடைக்க, அழாத குறையுடன் என்னைக் கேட்டாள்.

இந்தக் கண்ணறாவியை நான்தானே காண்கிறேன்? ''அவளுக்கு ஒண்ணும் குறைச்சலில்லே, அவ பாட்டுக்கு இங்கேயே ராஜாத்தியாட்டமா 'ஜம்'னு இருக்கட்டும். மாமியார் மாமனார் பயமில்லாமே சௌக்கியமாயிருக்கலாம்'' என்று சொல்கிறவர் இதை எங்கே காண்கிறார்? பெண்கள் எங்கே இருப்பதை 'ஜம்' என்று இருப்பதாக நினைக்கிறார்களென்பதை இந்த முரட்டுப் புருஷர் என்ன கண்டார்?



நானும் எவ்வளவு தடவை பயத்தை விட்டு நடுங்கிக் கொண்டே அவரிடம் இதைப் பற்றிச் சொல்லியிருக்கிறேன்! கமலி படும் அவஸ்தையை எத்தனை தடவை வர்ணித்து அதை அவர் மனதில் ஏற்றப் பார்த்திருக்கிறேன்! நான் அதைப் பற்றி அவரிடம் சொல்லச் சொல்ல அவருடைய முரட்டுத்தனம் அதிகமாகி



றதே தவிர மனசு இளகுவதில்லை. ஆகவே கமலி நிரந்தரமாகவே 'வாழாவெட்டி'யாகத்தான் இருக்க வேண்டும் போலும்!

சுமங்கலியாக இருந்தும் அமங்கலி போல் இருக்க வேண்டும் போலும்!

பூ சூட்டிக் கொள்ளுவதற்கும், குங்குமம் இட்டுக் கொள்ளுவதற்குக் கூடச் சற்றுத் தயங்க வேண்டும் போலும்!

தெருவில் தைரியமாகப் போகக் கூடாது; அப்படிக் கட்டாயமாகப் போக வேண்டி வந்தால், நாய் போல் ஒடுங்கிக் கொண்டு அவசர அவசரமாகப் போய்விட வேண்டும்.

எந்தச் சுப காரியத்திற்கும் முந்திக் கொண்டு போய் நிற்கக் கூடாது. யார் வீட்டிலும் 'வெற்றிலைப் பாக்கு வாங்கிக் கொள்ள'ப் போகக் கூடாது. யாருக்கும் சகுனமாக இருக்கக் கூடாது. உரக்கச் சிரிக்கக் கூடாது, பாடக் கூடாது!

அப்பப்பா, என்ன கடுமையான கட்டுப்பாடுகள்! இவ்வளவுக்கும் இவள் செய்த தவறுதான் என்ன? புருஷனால் தள்ளப்பட்டிருக்கிறாள்! அது இவள் தவறா?

3

அன்று நிகழ்ந்த அந்தச் சம்பவத்தை எவ்வளவு முயன்றாலும் மறக்க முடியவில்லை. எதிர் வீட்டு அம்மாமியின் பேரனைத் தொட்டிலில் போடுகிறார்களென்று அழைக்க வந்தார்கள் அவர்கள் வீட்டுப் பெண்கள். எட்டும் ஆறும் வயதான சிறுமிகள். சிறு குழந்தைகள் என்றால் கமலைக்கு எப்போதும் இஷ்டம். அவர்களை இழுத்து வைத்துப் பேச ஆரம்பித்தாள்.

"ஏண்டி, உங்க அக்காளுக்குப் பாப்பா பிறந்திருக்கே? இனிமே உன்னை ஒருத்தரும் கவனிக்க மாட்டா. உங்க அம்மா கூடத்தான்! அப்படித்தானே?"

ஆறு வயதுச் சிறுமிக்கு அழுகை வந்து விடும் போலிருந்தது. இருந்தாலும் சமாளித்துக் கொண்டு "அதெல்லாம் ஒண்ணுமில்லே! என்னையும் எல்லாரும் கவனிப்பா!" என்றாள்.

"எங்கே, இப்போ நான் வந்து பார்க்கத்தானே போறேன்! சின்னப் பாப்பாவைத்தான் எல்லாரும் கொஞ்சுவா!"

"நீயும் எங்க வீட்டுக்கு வரப் போறியா?" என்றாள் சிறுமி சந்தேகத்துடன்.

கமலி சிரித்துக் கொண்டே, "ஏன், வரத்தான் போறேன்! நீ வராதே என்பாய் போலிருக்கே!" என்றாள்.

"ஊஹூம்... நான் அப்படிச் சொல்லலே! வந்து... எங்கம்மா தான் 'அந்த வாழாவெட்டிப் பெண்ணும் வந்து தொலைக்காம இருக்கணும்' அப்படின்னா! நீதானே அந்த வாழாவெட்டிப் பெண்?"

கமலியின் முகம் சிவந்து சுருங்கியது. அவளுக்கு என்னைப் பார்க்கவே வெட்கமாகிவிட்டது. தலை குனிந்து உள்ளே ஓடிவிட்டாள்.

அன்றிலிருந்து அவள் யாருடனும் வலிந்து பேசப் போவதில்லை; யார் வீட்டிற்கும் போவதுமில்லை. வீட்டோடு வீடாக அடைந்து கிடந்தாள். இப்படியே இரண்டு வருஷங்கள் போய் விட்டன. கமலியும் எப்படியோ நாட்களைக் கடத்திவிட்டாள். நானும் 'மாப்பிள்ளை வந்து அழைத்துப் போவான்' என்ற அசட்டு ஆசையுடன் இருக்கிறேன். அவரும் தினம் ஒரு சண்டையும் ரகளையுமாக இருக்கிறார்!

இவ்வாறு நான் கமலியைப் பற்றி என்னவெல்லாமோ எண்ணிக்கொண்டிருக்கையில் திடீரென்று வாசற் கதவு திறக்கும் சத்தம் கேட்டது. அவர்தான் நகரத்திலிருந்து இவ்வளவு சீக்கிரம் திரும்பி விட்டாரோ என்று பயத்துடன் பார்த்தேன். கமலிதான்; மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்க நின்று கொண்டிருந்தாள்.

"ஏண்டி, என்ன?" என்று பதறிப் போய்க் கேட்டேன். அதற்கென்றே

அவன் காத்திருந்தான் போலிருக்கிறது நான் கேட்டதும், "இல்லை, அம்மா! வந்து......வந்து......" என்று தயங்கினான். நான் பயந்து போய்விட்டேன்.

"சொல்லேண்டி சீக்கிரம்!"

"உம்......வந்து......'அவர்' வந்திருக்கார், அம்மா!"

"என்ன!"

என்னால் என் காதுகளை நம்ப முடியவில்லை. பைத்தியம் பிடித்தவள்போல் திண்ணைக்கு ஓடினேன் பின்னாலேயே ஓடிவந்தாள் கமலி.

"இங்கே வரவில்லை, அம்மா! பெரியம்மா வீட்டிலே!" என்றாள் அவள்.

"விஷயத்தை விவரமாய்ச் சொல்லேன்!" என்றேன் புடவையைச் சரிப்படுத்திக் கொண்டே. அவள் தயங்கித் தயங்கிச் சொன்னாள்.

மாப்பிள்ளைக்கு வடக்கே எங்கேயோ உத்தியோகமாகி யிருக்கிறதாம். அது அவர் அப்பாவுக்குத் தெரியாது. அம்மா இந்த உலகத்திலிருந்தே போய் விட்டாளாம்! அதைக்கூட மறைத்து வைத்திருக்கிறார்கள்! யாருக்கும் தெரியாமல் கமலியை அழைத்துக் கொண்டு போக நினைக்கிறாராம். பிற்பாடு அவர்கள் தாங்களாகவே தெரிந்து கொள்ளட்டும் என்று நினைக்கிறாராம். அதைப் பற்றிக் கமலியின் அப்பாவிடம் பேசத்தான் வந்தாராம்.

எனக்குச் சந்தோஷம் தாங்க முடியவில்லை. ஆனால் அடுத்த நிமிஷமே இவருடைய முரட்டுச் சபதம் ஞாபகத்துக்கு வந்தது.

"அவனாகவே வந்து காலில் விழுந்தாலும் கமலியை அவர்கள் வீட்டிற்கு அனுப்பமாட்டேன்!" என்று எவ்வளவு தடவை அவர் கடுமையான உறுதியுடன் சொல்லி யிருக்கிறார்!

இதை நினைத்துப் பார்த்ததும் என் சப்த நாடிகளும் ஒடுங்கிவிட்டன. கைகால சோர்ந்து போய்க் கீழே உட்கார்ந்து விட்டேன்

கமலி என்னையே பார்த்துக் கொண்டிருந்தாள் அப்போது அவள் முகம் இருந்த நிலையில் மனசில் இருந்ததை ஊகிக்க முடியவில்லை. முகத்தில் ஒரு விதத் திகில் கலந்த மகிழ்ச்சி தோன்றியது.

திடீரென்று எனக்கு ஒரு யோசனை உதித்தது. 'இவரிடம் எதற்காகக் கேட்க வேண்டும்? அவர் வீடு திரும்புவதற்குள் நாமே ஏன் கமலியை மாப்பிள்ளையுடன் அனுப்பிவிடக் கூடாது?" என்று நினைத்தேன் அப்படியே தீர்மானம் செய்து கமலிடமும் அதைச் சொன்னேன்.

அவள் அதற்குச் சம்மதிக்கவில்லை. "அப்பா வந்து கேட்டா என்ன அம்மா பதில் சொல்லுவே?" என்று தடுமாறிக் கொண்டே கேட்டாள்.

"நான் ஏதோ சொல்லிக்கொள்கிறேன். நீ சீக்கிரம் புறப்படு, அப்பா வரதுக்குள்ளே ஆகணும் இந்தா பஜ்ஜி, எடுத்துக்கோ! இதோ, காப்பி கலந்து தரேன்!"

நான் உள்ளே சென்று அவசியமான சில துணிமணிகளை எடுத்துச் சிறு மூட்டையாகக் கட்டினேன். பின்னால் கமலி புலம்பிக்கொண்டே வந்தாள்.

"வேண்டாம், அம்மா! அப்பா உன்னைக் கொன்னுப்பிடுவாரே! ஐயோ! எனக்கு என்னமோ பயமா யிருக்கு!"

நான் அவளை லட்சியம் செய்யாமல் கொல்லைப் பக்கம் ஓடினேன் பூத்திருந்த மல்லிகைப் பூக்களைப் பறித்தும் பிடுங்கியுமாக அள்ளிக் கொண்டு வந்து அவசர அவசரமாக ஒரு மாலை தொடுத்தேன். கமலியின் தலையை ஒருவிதமாக ஒதுக்கிவிட்டுப் பூவைச் சூட்டினேன்.

"அம்மா, இப்படித் தெரியாத்தனமாகப் போனா, அப்புறம் இந்த ஊருக்கே வர முடியாதோ? அப்போ உங்களையெல்லாம் பார்க்கவே முடியாதோ? ஐயோ,



அம்மா! நான் போகலேம்மா! ஊஹூம் ......போகவே மாட்டேன்!"

கமலி கீழே உட்கார்ந்து விட்டாள். எனக்குக் கோபம் வந்தது.

"அசட்டுப் பெண்ணே, இதுக்காகத் தானேடி இத்தனை நாள் ஏங்கிண்டு இருந்தே! நானும் காத்திண்டு இருந்தேன்! இப்போ வேண்டாம் என்கிறாயே? நீ என்ன, சின்னக் குழந்தையா இப்படிப் பயப்பட?" என்று இரைந்து கொண்டே அவளுக்குக் காப்பி கொடுத்தேன். அவள் ஒரு பஜ்ஜியை எடுத்துக் கொண்டு காப்பியையும் எடுத்துக் கொண்டு உட்கார்ந்தாள்.

அதற்குள் பாதையில் பஸ் சத்தம் கேட்டது. ஆச்சு, இன்னும் பத்து நிமிஷத்தில் அவர் வீட்டுக்கு வந்து விடுவார். அதற்குள் கமலி போய்விட வேண்டும்!

நான் ஓடிப்போய் அவள் கையிலிருந்த காப்பியைப் பிடுங்கினேன். "போடி! போ, சீக்கிரம்!" என்று அவசரப் படுத்தினேன்.

"பெண்ணும் மாப்பிள்ளையுமா வாங்கோ; அப்போ நன்றா உபசாரம் பண்றேன். இப்போ கையிலே எடுத்ததைப் பிடுங்கறேனே!"

இதைச் சொன்னதும் பீறிட்டுக் கொண்டு வந்த அழுகையை என்னால் அடக்க முடியவில்லை. கமலியும் விம்மி விம்மி அழுதாள், என்னைக் கட்டிக் கொண்டு.

நான் மெல்ல அவள் பிடியிலிருந்து என்னை விடுவித்துக் கொண்டேன். கமலி என்னையே விழித்துப் பார்த்துக் கொண்டு நின்றாள்.

"உம்" என்றேன்.

அவளும் புறப்பட்டு விட்டாள். இருவருமாகக் கொல்லைப் பக்கத்துக் கதவண்டை வந்து நின்றோம்.

கண்ணீரைக் கூடத் துடைத்துக்கொள்ளாமல் கமலி, பைத்தியம் போல் பிரமித்து நின்றாள்.

"போ, அம்மா, சமத்தாயிரு! கடவுள் கிருபையிருந்தால் எப்படியாவது எப்போவாவது பார்த்துக்கலாம். தைரியப் படாமல் சமத்தாப் போய்விட்டு வா!" என்றேன், பொங்கி வந்த அழுகையை அடக்கிக் கொண்டு.

"'போய்விட்டு வா' என்கிறாயே அம்மா? நான் இனிமே எப்போ இங்கே வரப் போறேன்!" என்று விம்மினாள் கமலி.

இனிமேல் தாமதிப்பது சரியில்லை என்று எனக்குத் தோன்றிற்று. சற்றுக் கடுமையான குரலில், "சீக்கிரம் போயேன்டி, என்னென்னமோ சொல்லிண்டு நிற்கிறாயே! இப்போ வந்துடுவார், அப்பா! அதுக்குள்ளே நீ இந்தத் தெருவைத் தாண்டியாகணும்! ...... உம், கிளம்பு!" என்றேன்.

"போறேன், அம்மா! அப்பாவை எப்போ பார்க்கிறது? கடிதாசாவது போட முடியுமா, என்னம்மா!" என்றாள்.

நான் தலையை அசைத்தேன். இனிமே ஒரு வார்த்தை கூடப் பேச முடியாமற் போயிருந்தது.

அவள் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே போனாள். அந்தக் குளத்தைத் தாண்டியதும் அவள் தலை மறைந்து விட்டது.

நான் இங்கிருந்து பார்த்தபடியே நின்றேன். என்ன ஆச்சரியம்! பெற்று வளர்த்த பெண்ணை, நேற்று வந்த அந்நியனோடு, முன் பின் தெரியாதவனோடு, அவள் அப்பாவுக்குக் கூட அறிவிக்காமல் எப்படி அனுப்பி விட்டேன்! அவளும் தைரியமாகக் கிளம்பி விட்டாளே, தன்னந் தனியே அவனுடன்! அவன் 'கை பிடித்த கணவன் அல்லவா? அவன்தானே அவளுக்கு எல்லோரையும் விட மேலான உறவினன்!

பெண்ணாகப் பிறந்த அவளும், மற்ற பெண்களைப் போல் புருஷனுடன் வாழ்வதற்குப் போகிறாள் என்பதை நினைத்துப் பார்த்ததும் என் மனம் ஒருவாறு சமாதானம் அடைந்தது. அவள் சுகமாக வாழ்வதைக் கண்ணால் காண முடியாவிட்டாலும் கற்பனை செய்து பார்த்து மகிழ்ந்தது என் தாயுள்ளம்!

சுதந்திரம் விலை மதிக்க முடியாதது; பெறுவதற்கரிய பொக்கிஷம்.

சுதந்திரம் எனது பிறப்புரிமை.

சுதந்திரத்தை மற்றவர்கள் கொடுத்து வாங்க முடியாது; அப்படி வாங்கும் சுதந்திரம் நீண்ட நாள் நிலைக்கவும் நிலைக்காது.

சுதந்திரத்துக்காக ஒவ்வொரு தேசமும் எவ்வளவோ தியாகம் செய்திருக்கிறது; எவ்வளவோ இரத்தத்தைச் சிந்தியிருக்கிறது. சுதந்திரத்துக்காக எவ்வளவு தியாகம் செய்தாலும் எவ்வளவு இரத்தத்தைச் சிந்தினாலும் தகும்.

— லோகமான்ய திலகர்.

மைக்கேல் காலின்ஸ்

அன்று காலை நகரம் முழுவதுமே திமிலோகப் பட்டது. அந்தப் பெரிய மைதானத்தில் வரிசை வரிசையாகக் கைதிகள் நிறுத்தி வைக்கப் பட்டிருந்தனர். உண்மையில் அவர்கள் கைதிகளா? இல்லை. இல்லை. அடிமைத் தளையில் சிக்கி அவல வாழ்க்கை நடத்தும் எத்தனை எத்தனையோ மக்களின் சுதந்திரத்துக்காக உயிரையே அர்ப்பணம் செய்யத் தயாரா யிருந்த தேசத் தொண்டர்கள்.

நகரப் போலீஸ் ஒற்றர்கள் வளைய வளைய வந்து அந்தக் கைதிகளைப் பார்வையிட்டனர். சிலரைப் பொறுக்கி யெடுத்தனர். எதற்காகப் பொறுக்கி யெடுத்தார்கள்? அந்தக் கைதிகளுக்கு விடுதலையளிப்பதற்காகவா? இல்லை. 'பொறுக்கி யெடுப்பது' என்றால் துப்பாக்கிக் குண்டுக்கு இரையாகுவது என்பது ஆங்கிலப் போலீஸ் அகராதியிலுள்ள பொருளாகும்.

கைதிகளுக்கு மத்தியில் புன்சிரிப்புத் தவழ நின்று கொண்டிருந்த ஓர் இளைஞன் மீது போலீஸாரின் கவனம் சென்றது. அவனை உற்றுப் பார்த்தனர். ஆனால் அவனைப் 'பொறுக்கியெடுக்க' அவர்களுக்கு மனம் வரவில்லை.

அந்த வாலிபன் மட்டும் போலீசாரால் 'பொறுக்கி எடுக்கப் பட்டிருந்தால்' அயர்லாந்தின் சரித்திரமே வேறு விதமாக மாறிப் போயிருக்கும். உரிமைப் போர், சுதந்திர உணர்ச்சி முதலியவைகளை மக்களிடையே பரப்பி, அயர்லாந்தின் சரித்திரத்துக்கே ஓர் உன்னத எழுச்சியைத் தந்த வீர சிங்கத்தை அந்தத் தேசம் இழந்து விட்டிருக்கும்.

அன்று போலீஸாரால் பொறுக்கப் படாமல் உயிரோடு விடப்பட்டவன் தான் இன்று அகில உலகமும் போற்றும் மைக்கேல் காலின்ஸ்.

• • •

ஒன்றல்ல. இரண்டல்ல: ஏழு நூற்றாண்டுகளாக அயர்லாந்து தன் சகோதர தேசமாகிய இங்கிலாந்தினால் அடக்கி ஒடுக்கி ஆளப்பட்டு வந்தது. ஆனால் எத்தனையோ ராஜதந்திர முறைகளைக் கையாண்டும் இங்கிலாந்தினால் அயர்லாந்தை அடியோடு நசுக்கி விட முடியவில்லை. காரணம், அந் நாடு அடிமைத் தளையில் கட்டுண்டிருந்தாலும், ஒவ்வொரு தலைமுறையிலும் அயர்லாந்து மக்களுள் தேசபக்த வீரர்கள் உதித்து, இடைவிடாமல் அடிமைத் தளையை அறுப்பதில் முனைந்ததுதான். அத்தகைய தேச பக்த வீரர்களுள் மைக்கேல் காலின்ஸ் இணையற்றவனாவான்.

1917 முதல் 1921 வரையில் விடாமல் நடந்த ஐரிஷ் புரட்சி யுத்த காண்டத்தில் அவன் கதாநாயகனாக விளங்கினான். சின்னஞ்சிறு வயதிலிருந்தே அவனுக்குத் தாய் நாட்டுக்காகச் சொல்லொணாக் கஷ்டங்களுக்குள்ளாகிப் பல தியாகங்கள் புரிந்த உல்ப்டோன் எம்மெட் முதலிய தேச பக்த வீரர்களைப் பற்றிய பாடல்களைக் கேட்பதில் அலாதிப் பிரியம். தபால் ஆபீஸில் குமாஸ்தா உத்தியோகத்திலிருந்த அவனுக்குக் கேவலம் கால் முத்திரை குத்தும் 'தப்திப்' என்னும் ஓசையைக் கேட்கப் பிடிக்கவில்லை. அதற்குமாறாக அந்நிய ஆட்சிக்கே முத்திரை குத்தி நாட்டை விட்டு வெளியேற்ற வேண்டும் என்னும் ஆவலால் துடித்தான். கடைசியில் அவன் வேலை பார்த்து வந்த தபால் காரியாலயம் தான் அயர்லாந்தின் சுதந்திரப் போரைப் பிரகடனம் செய்து நடத்துவதற்குரிய ராணுவக் காரியாலயமாயிற்று.

கலகத் தீயைப் பற்ற வைத்து விட்டால், ஜெர்மன் ஆயுத உதவியைப் பலமாகக் கொண்டு அந்நிய ஆட்சியின் வேரைக் கெல்லி யெறிந்து விடலாம் என்று தேசபக்தர்கள் எதிர்பார்த்தனர். தியாக புத்தியும், வீரமும், விடுதலையார்வமும் மிகுந்திருந்தாலும் ராணுவ தந்திரக் குறைவினால் அது அசாத்தியமாகி விட்டது. பல தொண்டர்களை அரசாங்கம் கொடூரமாகச் சுட்டுத் தள்ளியது. அடக்குமுறையும் ஆதிக்க வெறியும் எங்கும் தாண்டவமாடின. தாற்காலிகமாக போராட்டம் சீர்கலையிற்று. இந்தத் தோல்வி காலின்ஸின் உள்ளத்தில் பெரும் புயலைக் கிளப்பி அவனைத் தேச விடுதலைப் போரில் இன்னும் ஆர்வங்கொள்ளச் செய்தது. கொந்தளித்துப் பெருகி வந்த சுதந்திரப் புரட்சிப் பெருவெள்ளத்தில் [illegible] நின்ற காலின்ஸைப் பிடித்துக் கொடுப்பவருக்

குப் பதினையிரம் பவுன் பரிசளிப்பதாக அரசாங்கம் விளம்பரம் செய்தது.

'சோரன் உறங்கி விழும் கள்ளிரவில்', சுதந்திர வெறி என்னும் தீ ஒளியில், மைக்கேல் காலின்ஸ் சிறையிலடைக்கப்பட்ட தோழர்களைத் தன் சூழ்ச்சித் திறமையினால் இரவோடு இரவாக வெளியேற்றி யிருக்கிறான். கொத்து வேலை செய்யும் ஏழைக் குடும்பத்தில் பிறந்த காலின்ஸ் போருக்கும் புகழுக்கும் பதியில் ஒரு பெரிய புரட்சிக்குத் தலைமை தாங்கி நடத்தினான்; அடிமைத் தளையையும் அந்நிய ஆதிக்கச் சின்னங்களையும் அடியோடு அழித்து அயர்லாந்தில் சுதந்திரக் கோயிலை நிர்மாணித்த பெருமை மைக்கேல் காலின்ஸைச் சேர்ந்ததாகும். உலக சரித்திரத்தில் என்றென்றும் அவனுக்கு ஓர் இடமுண்டு.

சுதந்திரப் போரின் பிரதி பலனாக அயர்லாந்து அமைதியிழந்து ஐந்து வருஷ காலம் தத்தளித்தது. ஆங்கில அரசாங்கம் எல்லையற்ற பலாத்காரத்தைக் கையாண்டு வந்தது. தடை யுத்தரவுகளுக்குக் கணக்கில்லை. ராணுவச் சட்டப்படி கொடூர தண்டனைகளுக்கும் குறைச்சலில்லை. மாபெருந் தலைவர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகள் எத்தனையோ! நசுக்கப்பட்ட பத்திரிகைகளோ எண்ணிலடங்கா!

● ● ●

இந்தப் போராட்டத்துக்குப் பிறகு பிரிட்டிஷ் அரசாங்கம் சில நிபந்தனைகளுக்கு உட்படுத்தி அயர்லாந்துக்குக் குடியேற்ற நாட்டு அந்தஸ்து கொடுக்க வேண்டும் என்ற அபிப்பிராயத்தை வெளியிட்டது.

இங்கிலாந்துடன் சம்பந்தம் வைத்துக் கொள்ளாமல் அயர்லாந்து தனிக் குடியரசாகி விட வேண்டும் என்று பூரண சுயேச்சையை ஆதரிப்பவர்கள் விரும்பினார்கள். உடன்படிக்கையை ஆதரித்த காலின்ஸுக்கும் மற்ற நண்பர்களுக்கும் இடையே வேற்றுமை வளரத் தொடங்கியது. மூன்றரை வருஷ காலமாகக் காலின்ஸ் தன் சக்திக்கு மீறிய மலை போன்ற வேலைகளைத் தாங்கி வெற்றிகரமாக முடித்திருக்கிறான். ஆனால் அப்போதிருந்த நிலைமை வேறு. முன்பு தேசமே அவன் பக்கம் நின்றது. இப்போதோ அவன் நண்பர்களிடையே பிளவு ஏற்பட்டு விட்டது. இதனால் அவன் தன்னுடன் மாறுபட்ட தோழர்கள் பலருடன் போராட வேண்டியிருந்தது. அதற்காக அவன் ஒரு சுற்றுப் பிரயாணம் தொடங்கிக் காரில் ஊரூராகச் சென்றான்

நண்பர்களுடன் ஒரு நாள் காரில் வேகமாகப் போய்க் கொண்டிருந்தான் காலின்ஸ். திடீரென்று அவனுக்குப் பின்னால் சென்றுகொண்டிருந்த காரிலிருந்து குண்டுகள் பறந்தன. காலின்ஸ் காரிலிருந்து வெளியே குதித்துத் தானும் போரில் கலந்து கொண்டு பகைவர்களைச் சுட்டான். காலின்ஸின் தோழர் ஜெனரல் டால்டனும் மெய்க்காப்பாளர்களும் பகைவர்களைப் பன்முறை சுட்டனர். பகைவர் சிதறி ஓடினர்.

அப்பொழுது "டால்டன்!" என்று ஓர் ஓலக் குரல் கேட்டது. டால்டன் பதறி ஓடி வந்தார். மற்ற தோழர்களும் வந்தனர். காலின்ஸ் பூமியில் விழுந்து கிடந்தான். அவன் தலையின் பின்புறத்தைத் துப்பாக்கிக் குண்டு துளைத்திருந்தது. இரத்தம் ஆறாகப் பெருகியது. காலின்ஸை உயிரினும் மேலாக மதித்த நண்பர்கள் இருதயம் வெடித்துச் சோகம் தாங்க மாட்டாமல் கதறினர். அவர்கள் பெருக்கிய கண்ணீர் காலின்ஸின் உதிரப் பிரவாகத்தோடு கலந்து ஐக்கியமாயிற்று.

மறுநாள் நாட்டுமக்கள் எல்லோரும் கூடித் தங்கள் நாட்டின் சுதந்திரச் சிற்பிக்கு, அஞ்சா நெஞ்சம் படைத்த தேச பக்த வீரனுக்கு இறுதி மரியாதையைச் செலுத்தினர். இருபதாம் நூற்றாண்டில் எந்த ஐரிஷ்காரனுக்கும் அத்தகைய மரியாதையும் அன்பும் செலுத்தப்படவேயில்லை.

வாழ்விலும் வீரனாய், சாவிலும் வீரனாய் விளங்கிய காலின்ஸ் இறந்துவிட்டான் என்று சொல்லுவது தவறாகும். உயிருடன் இருந்தபோது அயர்லாந்துக்கு மட்டும் அவன் உரியவனாக இருந்தான். அமரத்துவம் அடைந்த பிறகு உலகத்துக்கே உரியவனாகி எல்லோருடைய உள்ளத்திலும் அவன் உறைகிறான்!

●●● "என் தாய்த் திருநாடே, உன் பொருட்டு நான் கந்தையை அணிவேன்; கூழை உண்பேன். உனக்குச் சேவை செய்வதைக் காட்டிலும் சிறந்த பாக்கியம் வேறு என்ன இருக்கிறது?" —மாஜினி.

இந்தியாவின் புகழ்



லோத்ரா

கர்ப்பாசய ரோக நிவாரணி

கேஸரி குடீரம் லிட்., மதராஸ்

EASTERNS 394

ஒரிஸ்ஸா, நிஜாம் சமஸ்தானம், ஆந்திர ஜில்லாக்கள், தமிழ் நாடு, முதலிய இடங்களுக்கு ஏஜண்டுகள் :


சீதாராமா ஜெனரல் ஸ்டோர்ஸ்

பேர்ஹாம்பூர் - செகந்திராபாத்
பெஜவாடா - மதுரை



அழகிய கூந்தல்!
நம்ப முடியவில்லையே!

அழகிய கூந்தலே உங்களுடைய வசீகரத்தை அதிகப்படுத்த வல்லது. நறுமணம் கமழும் "ஜேம்ஸ் அம்லா ஹேர் ஆயில்" சிறந்தது. தலையில் வைத்துத் தேயுங்கள். கூந்தல் செவ்வையாக மழமழப்பாகவும், பளபளப்பாகவும் ஆகிறதென்று பாருங்கள். பொடுகுகளை நீக்கி கூந்தலை வளரச் செய்கிறது.



ஜேம்ஸ்
அம்லா ஹேர் ஆயில்

ஜேம்ஸ் பெர்பியூமரி கம்பெனி
சென்னை.

லோகமான்ய திலகர்

ரா. விழிநாதன்

1920 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 31-ந் தேதி. மாலைக் கதிரவனின் முகம் மங்கியது. அவனுக்கு என்ன துயரமோ? பம்பாய் சௌபாத்தி கடற்கரையில் பிரம்மாண்டமான கூட்டம்! அந்தக் கூட்டத்தின் மத்தியில் மகாத்மா காந்தி தலையைத் தொங்க விட்டுக் கொண்டு வருத்தத்துடன் மிகவும் மெதுவாக நடந்து வருகின்றாரே, ஏன்?

அவர் பின்னாலே வருகிறவர்கள் யார்? மௌலானா ஷௌகத் அலி, லாலா லஜபதி ராய், கார்படே, சகோதரி சரளா தேவி முதலியவர்கள் அல்லவா வருகிறார்கள்!

ஏன் எல்லாருடைய முகமும் இப்படி வாட்டமுற்றிருக்கிறது?

அப்படிப்பட்ட என்ன துக்க சம்பவம் நடந்து விட்டது!

அட! பின்னால் ஏதோ சவ யாத்திரை அல்லவா வருகிறாற்போலிருக்கிறது! மக்களின் மனதை மாபெரும் துயரத்துக்குள்ளாக்கி விட்டு, பூதவுடலை நீத்துச் சென்ற அந்த மகான் யாரோ? என்ன? லோகமான்ய திலகரா? ஆ ஆ! அவரா இறந்து விட்டார்! 'சுதந்திரம் எமது பிறப்புரிமை! நாம் அதை அடைந்தே தீருவோம்' என்று வீர கர்ஜனை புரிந்த தீரர் திலகரா சுதந்திரத்தைக் காணக் கொடுத்து வைக்காமல் மாயமாய் மறைந்தார்?

ஆம்! கீதா ரஹஸ்யம் போன்ற மாபெரும் இலக்கியங்களை அளித்த அந்தப் பெரியார் தான் மாயக்கண்ணனின் திருவடிகளைச் சேர்ந்து விட்டார்!

நாட்டு மக்களை விழித்துக் கொள்ளும்படி உபதேசம் செய்து விட்டு, தாம் தூங்கிவிட்டார்!

அவருடைய கனவு பலித்து விட்டது. ஆனால் அவர் அதைக் காணக் கொடுத்து வைக்கவில்லை.

• • •

சத்ரபதி சிவாஜி, மகாதேவ கோவிந்த ரானடே, கோபால கிருஷ்ண கோகலே போன்ற வீரர்களையும் பேரறிஞர்களையும் அளித்த மகாராஷ்டிர தேசம் தான் லோகமான்ய திலகரையும் நாட்டுக்களித்தது.

ரத்னகிரியில் பிறந்த லோகமான்ய பாலகங்காதர திலகர் லா காலேஜில் படித்துக் கொண்டிருந்த பொழுது, அவரும் அவருடைய நண்பர் ஆகர்காரும் பொது மக்களுக்கு ஊழியம் செய்வதில் தங்கள் வாழ்நாட்களைக் கழிக்க வேண்டும் என்று திட்டம் போட்டுக் கொண்டனர்.

படிப்பு முடிந்ததும், ஸ்ரீ விஷ்ணு சாஸ்திரி சிப்ளூன்கரின் உதவியோடு 'நியூ இங்கிலீஷ் ஸ்கூல்' என்று ஒரு பள்ளியைத் திறந்தார்கள். பிறகு 'தக்ஷிண சிக்ஷா சமிதி' என்ற சங்கம் ஸ்தாபித்து அதன் ஆதரவில் 'பர்குஸன் காலேஜ்' ஆரம்பித்தனர்.

மக்களிடையே கல்வியையும் ஒற்றுமையையும் பரப்புவதற்குப் பள்ளியும் பத்திரிகையும் இன்றியமையாத சாதனங்கள் என்பதை உணர்ந்திருந்த திலகரும், ஆகர்கரும், 'கேசரி' என்ற மராட்டிப் பத்திரிகையையும், 'மராட்டா' என்ற ஆங்கிலப் பத்திரிகையையும் ஆரம்பித்து நடத்தினார்கள். இரண்டு பத்திரிகைகளும் மகாராஷ்டிர மக்களை விழிப்புறச் செய்வதில் ஈடு இணையற்ற கைங்கரியம் செய்திருக்கின்றன.



கோல்ஹாப்பூர் சமஸ்தானத்தைப் பற்றிக் கேஸரியிலும் மராட்டாவிலும் ஆணித்தரமான அபிப்பிராயங்கள் கொண்ட பல கட்டுரைகள் வந்தன. அதன் காரணமாக திலகரும், ஆகர்கரும் நான்கு மாதச் சிறைத் தண்டனை அனுபவிக்க நேர்ந்தது.

திலகரும் ஆகர்கரும் ஆத்ம நண்பர்களாக இருந்த பொழுதிலும், இருவருக்கும் கடுத்த அபிப்பிராய பேதம் இருந்து வந்தது. ஆகர்கர் பால்ய விவாகம், விதவா விவாகம், தீண்டாமை ஒழிப்பு முதலியவற்

வைச் சட்ட பூர்வமாக ஒழிக்க வேண்டும் என்ற கட்சியைச் சேர்ந்தவர். ஆனால் திலகரோ இந்தச் சீர்திருத்தங்கள் எல்லாம் அவசிய மானவை என்பதை ஒப்புக்கொண்ட போதிலும் தொன்று தொட்டு வந்த பழக்கங்களில் மக்களுக்கு எதிரிடையாகப் புரட்சிகரமான, சட்டபூர்வமான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளக் கூடாது என்ற அபிப்பிராயம் கொண்டவர். இருவருக்கும் அபிப்பிராய பேதம் வலுத்துவிடவே ஆகர்கர் கேசரியிலிருந்து விலகும்படி யாயிற்று.

திலகர் 'சீர்திருத்தவாதி' என்ற போர்வையைப் போர்த்திக் கொண்டு மக்களிடையே தனிப்பட்ட மனிதராக இருக்க விரும்பவில்லை. மக்களுடைய மனதை யறிந்து, வழிகாட்டி என்ற முறையில் தான் முன்னேற விரும்பினார். மக்களோடு மக்களாக வாழ்ந்து, மக்களின் மனதில் இடம் பெற்றதனால்தான் அவர் 'லோகமான்யர்' ஆக முடிந்தது.

ரத்னகிரியின் கமிஷனராக இருந்த 'ராபர்டு' என்ற ஆங்கிலேயர் மீது ஏராளமான லஞ்சம் வாங்கியதாகக் குற்றம் சாட்டப்பட்டது. அவர் திலகருக்கு ஆப்த நண்பர். திலகர் அவருக்காகப் பரிந்து பேசவில்லை. தன் மனதுக்கு நியாயம் என்று பட்டதை நேர்மையுடன் எடுத்துரைத்த அவருடைய தீரத்தைக் கண்டு, மக்கள் மிகவும் பாராட்டினர்.

மக்களை விழிப்புறச் செய்வதற்கு உற்சவங்கள் சிறந்த சாதனம் என்பதை உணர்ந்த திலகர் கணபதி உற்சவத்தையும் சிவாஜி உற்சவத்தையும் ஆரம்பித்து நடத்தி வந்தார்.

1896ல் மகாராஷ்டிரத்தைப் பஞ்சமும் பிளேக்கும் படாதபாடு படுத்தி வைத்து விட்டன. அது போதாது என்று அதிகாரிகள் வேறு மக்களை வாட்டத் தொடங்கினர். சில வெறிபிடித்த ஆங்கிலேய சிப்பாய்கள் ஒழுக்கற்ற முறையில் நடந்து கொண்டார்கள். உண்மையை உரைப்பதற்குச் சிறிதும் தயங்காத திலகர், சர்க்காரின் கடமையைப் பற்றிக் காரசாரமான பல கட்டுரைகள் எழுதினார்.

அதே சமயத்தில் சாபேகர் என்பவன் பிளேக் கமிட்டியார் செய்யும் அட்டூழியங்களைச் சகிக்கமாட்டாமல் அதன் தலைவர் 'ரேண்ட்' என்பவரைக் கொலை செய்து விட்டான். அதற்காக அவன் கைது செய்யப்பட்டு மரண தண்டனையும் அடைந்தான்.

அந்தக் கொலை இந்தியாவில் மிகுந்த பரபரப்பை உண்டுபண்ணியது. திலகரின் ஆவேசம் மிக்க மொழிகள்தான் இத்தகைய செய்கைகளுக் கெல்லாம் காரணம் என்று சர்க்கார் அவர்மீது வழக்குத் தொடர்ந்தது. அந்த வழக்கின் காரணமாக அவர் பதினெட்டு மாதம் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டி வந்தது.

சூரத்தில் நடந்த காங்கிரஸின் பொழுது காங்கிரஸில் மாபெரும் பிளவு ஏற்பட்டது. தீவிர வாதிகள், மிதவாதிகள் இருவரும் தனித்தனியே பிரிந்து விட்டனர். பத்து வருஷகாலம் தீவிரவாதிகள் காங்கிரஸ் மகாசபைக்குள் இடம் பெறவில்லை. லக்னோவில் நடந்த காங்கிரஸின் பொழுதுதான் பிளவுபட்ட இரு கட்சிகளும் சமரசம் செய்துகொண்டன. தீவிரவாதித் திலகர் இதன் மத்தியில் செய்த அற்புத தீரச் செயல்கள் எத்தனையோ?

ஆங்கில ஆதிக்க வெறி கொண்ட லார்டு கர்ஸான் தன் காலத்தில் வங்காளப் பிரிவினையை அமலுக்குக் கொண்டு வந்தான்; விழிப்புற்ற மக்களை அடக்கியாள அவன் செய்த சூழ்ச்சி அது. மக்களின் எண்ணத்துக்கு மாறாக நடந்து கொண்டதன் பயனாக எத்தனையோ அதிகாரிகளின் தலைகள் தரையில் உருண்டன.

திலகர் தம் பத்திரிகையில் காரசாரமாகப் பல கட்டுரைகள் எழுதினார். அந்தக் கட்டுரைகள் ராஜத் துரோகமானவை என்று குற்றம் சாட்டப்பட்டு வழக்கும் தொடரப்பட்டது. சர்க்கார் ஆங்கிலேயர்களின் ஆட்சியை நிலை நாட்ட வேண்டும் என்ற எண்ணத்தில் ஒருதலைப் பட்சமான தீர்ப்பளித்தது. திலகருக்கு ஆறு வருஷச் சிறைத் தண்டனையும் ஆயிரம் ரூபாய் அபராதமும் விதித்தது. அந்தத் தண்டனையை எதிர்த்துப் பெரிய கிளர்ச்சியும் நடந்தது.

ஆறு வருஷகாலம் மாண்டலேயில் சிறைவாசம் செய்துவிட்டு வந்த பின்னர் திலகர் அன்னிபெஸண்ட் ஆரம்பித்த ஹோம்ரூல் இயக்கத்தில் பங்கெடுத்துக் கொண்டு, அதை வெகு திறமையுடன் நடத்தினார். அந்த இயக்கத்தின் பொழுதுதான், அவர் 'சுயராஜ்யம் நமது பிறப்புரிமை. நாம் அதை அடைந்தே தீருவோம்' என்ற தாரக மந்திரத்தை நமக்கு உபதேசித்தார்.

அவருடைய அந்தத் தாரக மந்திரம் தான் நமக்குச் சுதந்திரத்தை அளித்தது.

வாழ்க சுதந்திரம்! வாழ்க திலகர் நாமம்!

தோழர் லெனின்

பகீரதன்

"ருஷ்யப் பொது உடைமைக் கட்சியின் இமயமலையைப் பார்க்கப் போகிறோம். உலக மகா மேதைகளில் ஒருவரைப் பார்க்கப் போகிறோம். அறிவிலும் ஆற்றலிலும் மட்டுமா? உருவத்திலும் தான். ஆஜானுபாகுவான ஒரு கம்பீர புருஷரைப் பார்க்கப் போகிறோம் என்ற ஆவலுடன் ஒரு பொதுக் கூட்டத்தில் உட்கார்ந்திருந்தேன். கூட்டம் ஆரம்பிக்க வேண்டிய நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது. என் மனசு 'சடக் சடக்' கென்று சந்தோஷ மிகுதியால் அடித்துக் கொண்டது. கூட்டத்துக்கு வந்திருந்த பிரதிநிதிகளின் மத்தியில் இது வரையில் சாதாரணமாகப் பேசிக் கொண்டிருந்த ஒருவர் எழுந்திருந்து மேடையின் பக்கம் சென்றார். தலைவரின் வருகையைப் பற்றிச் சொல்லப் போகிறார் என்று நினைத்துக் கொண்டிருக்கும்போதே 'தோழர்களே!'......என்று பேச ஆரம்பித்து விட்டார்.

"என் அருகில் இருந்தவரைப் பார்த்து 'இவர் யார்?' என்று கேட்டேன்.

'இவர்தான் புரட்சித் தலைவர் லெனின்' என்று சொன்னார்.

"எனக்கு ஒரே ஆச்சரியமாகப் போய் விட்டது. திடீரென்று என் தலையில் ஏதோ தாக்கிக் கால் வழியாக பூமியில் இறங்கியது போல என் உடலில் ஒரு அதிர்ச்சி ஏற்பட்டது. நான் ஏமாந்தே போனேன். புரட்சித் தலைவர் லெனின் மிகச் சாதாரண மனிதரைப் போலவே இருந்தார். சாதாரணமாக ஒரு மனிதன் இருக்க வேண்டிய உயரத்துக்குக் கொஞ்சம் குறைவாகவே இருந்தார். படாடோபமில்லாத ஒரு ஏழைத் தொழிலாளியைப்போல உடை அணிந்திருந்தார்" என்று இன்றைய ஸோவியத் ருஷ்யாவின் தலைவர் ஸ்டாலின் தாம் முதல் முதலாக லெனினை ஒரு மகாநாட்டில் சந்தித்ததைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்.

ருஷ்யாவில் முடியாட்சியை ஒழித்துக் குடி ஆட்சியை ஸ்தாபித்த மூல புருஷரும் போல்ஷிவிக் கட்சியின் தலைவருமான லெனினின் பூர்வாசிரம நாமதேயம் விளாடிமிர் இலியிச் உலியனாவ். அந்தப் பெயர் அவருக்குப் பிடிக்காததால் லெனின் என்ற எளிய பெயரைத் தாமே வைத்துக் கொண்டார். நாட்டிலே பிறக்கும் எல்லாக் குழந்தைகளையும் போலவே 1870-ம் ஆண்டு விளாடிமீர் இலியச் உலியனாவ் பிறந்தார். அவருக்குப் பதினேழு வயதிருக்கும் போது அவருடைய சகோதரர் ருஷ்ய சக்ரவர்த்தியைக் கொல்லச் சதி செய்ததற்காக மரண தண்டனை விதிக்கப் பட்டு மாண்டார். ஆகையால் அவர் பள்ளிக்கூடத்தில் படிக்கும் போதே அரசியலில் கவனம் செலுத்தினார்.

பள்ளிக் கூடத்தில் எல்லாவற்றிலும் முதல் மாணவன் லெனின் தான். பள்ளிக் கூட வாழ்க்கை முடிந்து காலேஜ் வாழ்க்கை ஆரம்பமாயிற்று. கூடவே அவருக்குக் கஷ்டமும் ஆரம்பமாயிற்று. மாணவர் இயக்கம் ஒன்றில் ஈடுபட்டதற்காக லெனின் காலேஜிலிருந்து நீக்கப்பட்டார். காலேஜுக்குக் கட்ட வேண்டிய ரூபாய்கள் எல்லாம் மிச்சமாயிற்று என்று தனியாகவே படித்துச் சட்டப் பரீட்சையில் முதல் மாணவனாகத் தேறினார். ஒழிந்த நேரங்களில் எல்லாம் பொது உடைமைத் தத்துவத்தின் வேதம் போன்ற காரல் மார்க்ஸின் நூல்களைக் கவனமாகப் படித்து வந்தார்.

அதன் காரணமாக லெனினுடைய மனம் தொழிலாளர்களின் முன்னேற்றத்துக்காக வேலை செய்யத் தொடங்கியது. பொது மக்களுக்கு அரசியலில் எந்தவிதமான பங்கையும் கொடுக்காமல் தன் இஷ்டப்படி ஆண்டு வந்த அரசாங்கம் லெனினுடைய வேலையைக் கவனித்து அவருக்குப் பதினாறு மாசம் சிறைவாசப் பரிசு கொடுத்தது. லெனின் உடலைத்தான் அவர்களால் கைது செய்து சிறைப்படுத்த முடிந்ததே ஒழிய அவருடைய உணர்ச்சியையும் கருத்தையும் யாரால் சிறைப்படுத்த முடியும்? லெனின் சிறையில் இருந்தபடியே தொழிலாளர்களுக்குத் தம்முடைய தொண்டை விடாமல் செய்து கொண்டு வந்தார். இவற்றைக் கண்டு பீதித்த முடியாட்சியின் அதிகாரிகள் அவரை சைபீரியாவுக்கு நாடு கடத்திவிட்டனர்.

ருஷ்யாவை விட்டு வெளியே சென்று விட்டபோதிலும், லெனின் ருஷ்யத் தொழி

ளாளர்களையும் ஏழை மக்களையும் மறக்கவில்லை.

முதல் புரட்சி இயக்கத்தைத் தாமே நேரில் நின்று நடத்துவதற்காக 1905-ம் ஆண்டு லெனின் ருஷ்யா திரும்பினார். ஆனால் அந்த இயக்கம் தோற்றுவிட்டது. தோல்வியைக் கண்டு அவர் மனம் தளரவில்லை. 'புலி கொஞ்சம் பின் தங்கிப் பதுங்குவது வேகமாக முன்னே பாய்வதற்குத்தான்'' என்று தம் கட்சியின் தோல்வியைப் பற்றிச் சொல்லிவிட்டு 1907-ம் ஆண்டு மீண்டும் ருஷ்யாவை விட்டு வெளியேறினார். வெளிநாட்டில் இருந்துகொண்டே தம் கட்சியைப் பலப்படுத்துவதற்காக உழைத்துவந்தார்.

1917-ம் வருஷம் நவம்பர் மாதம் ஏழாம் தேதி ருஷ்யாவின் கொடுங்கோல் முடியாட்சியின் கடைசி மன்னரான ஸாரின் அரசாங்கம் வீழ்ச்சியுற்றது. லெனின் ருஷ்யா திரும்பினார். லெனினும் ஸ்டாலினும் சேர்ந்து இரண்டாவது புரட்சி இயக்கத்தை நடத்தி ருஷ்யாவில் ஸோவியத் அரசாங்கத்தை ஏற்படுத்தினார்கள். அந்தப் பொது உடைமை அரசாங்கத்தின் முதல் தலைவராகத் தோழர் லெனின் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

லெனின் சிரித்தால் உதடுமட்டும் அசையாது; உடல் குலுங்கக் குலுங்கச் சிரிப்பார். அவருடன் வாதத்திலே கலந்து கொள்வது பழக்கப்படாத சிங்கத்தினிடம் அதன் குகையிலேயே மாட்டிக் கொள்வதுபோலத்தான். பொதுக் கூட்டங்களிலே லெனின் பேசும்போது அவருடைய பேச்சு எளிமையாயும் தெளிவாகவும் இருக்கும். அங்க சேஷ்டைகள் செய்யமாட்டார். அலங்கார வார்த்தைகளோ அடுக்குச் சொற்களோ அவருக்குப் பிடிக்காது. எந்தச் சிக்கலான விஷயங்களையும் சிக்கலில்லாமல் சொல்லுவார். சங்கீதத்திலே அபாரப் பிரியம் உடையவர் என்று அவருடன் நெருங்கிப் பழகிய நண்பர்கள் கூறுகிறார்கள்.

சுமார் 175 விதமான ஜாதிகளும், 180 விதமான பாஷைகளும் பத்துப் பன்னிரண்டு விதமான மதங்களுமுடைய ருஷ்ய நாட்டு மக்களை ஒன்றுபட்ட சமுதாயமாக



மாற்றவேண்டும் என்பதற்காக லெனின் இரவும் பகலும் உழைத்தார். தம் வாழ்நாளில் பெரும் பகுதியை அஞ்ஞாத வாசத்திலே கழித்தார். அந்தக் காலங்களில் அவர் பட்ட கஷ்டங்களை எல்லாம் பொறுமையுடன் சகித்தார். கடைசியில் மன்னர் ஆட்சியை ஒழித்து மக்கள் ஆட்சியை ஏற்படுத்தினார். குடியானவர்களும் தொழிலாளர்களும் ஒற்றுமையாக இருந்தால்தான் தேசம் உருப்படும் என்று நினைத்து அவர்களை ஒன்று சேர வைத்தார். ஒன்று சேர்ந்த குடியானவர்களும் தொழிலாளர்களும் மற்றுமுள்ள ஏழை மக்களும் மனம் கசிந்து உருகும்படி தம்முடைய 54-வது வயதிலே மறைந்தார்.

லெனின் மறைந்து விட்டாரா? இல்லை. அவருடைய பூதவுடலும் மறையவில்லை; புகழுடலும் மறையவில்லை. தங்களுக்கு சுதந்திரத்தையும் சம ஆட்சியையும் வாங்கித் தந்த தங்கள் தலைவரை, புது உலக சிற்பியை ருஷ்ய மக்கள் இந்த உலகைவிட்டு அனுப்ப இஷ்டப்படவில்லை போலும்!

பெட்ரோகிராட் என்ற பெரிய நகரத்தின் பெயரை மாற்றி லெனின் கிராட் என்று பெயர் சூட்டினார்கள். அந்த நகரின் மத்தியிலே உயரமான மேடை மீது உயர்ந்த ரஸாயன முறையினால் தயார் செய்த ஒரு கண்ணாடிப் பெட்டியில் தோழர் லெனினின் உடலை அவர் உட்கார்ந்திருப்பது போல வைத்துக் காப்பாற்றி வருகின்றனர். உலகிலே இது வரையில் வாழ்ந்து மறைந்து போன மன்னர்களுக்கும், மகான்களுக்கும், தலைவர்களுக்கும் கிடைக்காத ஒரு தனி கௌரவத்தைத் தங்கள் தலைவருக்குச் செலுத்தி வருகிறார்கள். லெனின் உயிரோடு இருக்கும் போது ருஷ்ய மக்களுக்காக அல்லும் பகலும் உழைத்தார். அதே ருஷ்ய மக்களுக்காக வேண்டி லெனின்கிராட் நகரத்தின் கண்ணாடிப் பெட்டியிலே அமைதியாக உட்கார்ந்து ஓய்வெடுத்துக் கொண்டிருக்கிறார்.

நமது தேசம் சுதந்திரம் பெற்ற இந்த முதல் வருஷச் சுதந்திர திருநாளில் உலக மக்களின் சுதந்திரத்துக்காக உழைத்து உயிர் விட்ட தோழர் லெனினையும் அவர் வாழ்க்கையையும் நினைவூட்டிக் கொள்வோம்.



"அப்பா! என்னையும் யானை மேல் ஏற்றி உட்காரவை, அப்பா!"

"அதெல்லாம் கூடாது. இந்தா, இந்தப் பொம்மைகளை வைத்துக்கொண்டு விளையாடு. யானைமேல் உட்கார்ந்தால் என்ன செய்யும், தெரியுமா? தும்பிக்கையால் தூக்கி உன்னைக் கீழே எறிந்துவிடும்."

"நானாவை மட்டும் தூக்கி எறியாதோ?"

"அவன் ஆண் பிள்ளை. தூக்கி எறியாது. அது ஏதாவது விஷமம் செய்தால் அவன் அதை அடக்கி விடுவான்"

"எனக்கும் அதை அடக்கத் தெரியும். இந்த அங்குசத்தைக் கழுத்தில் வைத்து அழுத்தினால் தானாக அடங்கி விடுகிறது! என்னை யானையின்மேல் ஏற்றி வை, அப்பா" என்று பிடிவாதம் பிடித்தாள் ந்து வயதுச் சிறுமி.

"நானா, சற்று இவளையும் உன் யானைமீது ஏற்றி உட்கார வைத்துக் கொள்ளேன்!"

நானா அவருடைய வார்த்தைகளைக் காதில் வாங்கிக் கொள்ளாமல் யானையைக் கடத்தலானான்.

யானை நகர நகர சிறுமிக்கு ஆத்திரமும் பிடிவாதமும் அதிகரித்தது. கைகால்களை உதைத்துக் கொண்டு அழ ஆரம்பித்தாள்.

தகப்பனார் எவ்வளவோ சமாதானப் படுத்திப் பார்த்தார். ஆனால் அவள் கேட்டால் தானே? தகப்பனார் குழந்தையினுடைய தொந்தரவு பொறுக்க மாட்டாமல், "நீ கெட்ட கேட்டுக்கு உனக்கு ஒரு யானை வேறு வேண்டுமாக்கும்!" என்று கடிந்து கொண்டார்.

குழந்தை அழுகையை நிறுத்தி விட்டு "ஒன்றல்ல, ஒன்பது யானை வேண்டும்" என்று கணீரென்று பதில் அளித்தது.

அந்தக் குழந்தையின் சாதுரியமான பதிலைக் கேட்டு எல்லோரும் ஆனந்தம் அடைந்தார்கள் என்பதைச் சொல்லவும் வேண்டுமா என்ன?

பக்கத்தில் உட்கார்ந்து இந்த வேடிக்கையைப் பார்த்துக் கொண்டிருந்த பாஜிராவ் பேஷ்வா, "தாயற்ற குழந்தையை ஏன் இப்படிக் கடிந்து கொள்ளுகிறாய்? இங்கே வா, அம்மா நான் உன்னை யானைமேல் ஏற்றி வைக்கிறேன்" என்று அன்புடன் அழைத்தார்.

அன்று முதல் மனு பாய் என்ற அந்தக் குழந்தை பாஜிராவ் பேஷ்வாவின் ஸ்வீகாரப் புதல்வன் நானாவுடன், கத்தி, கேடயம், ஈட்டி முதலிய ஆயுதங்களை விளையாட்டுச் சாமானாக வைத்துக் கொண்டு வளரத் தொடங்கியது. விளையும் பயிர் முளையிலே தெரியும் என்ற பழமொழி எவ்வளவு உண்மையானது! கொஞ்ச காலத்தில் வில் வித்தை, வாள் வீச்சு, யானையேற்றம், குதிரையேற்றம் முதலிய வித்தைகளில் நல்ல பயிற்சியும் பெற்றாள்.

அந்தக் குழந்தையின் தந்தைதான் மோரோ பந்த் என்பவர். தாயின் பெயர் பாகீரதீ பாய். பாஜிராவ் பேஷ்வாவின் சகோதரர் சிமாஜி ஆபா சாஹேப்பிடம் மோரோ பந்த் வேலைபார்த்து வந்தார். சிமாஜி ஆபா சாஹேப் காலமானதும் கான்பூரின் பேஷ்வாவான பாஜிராவிடம் வந்து சேர்ந்தார். குழந்தைக்கு மூன்று வயது ஆவதற்குள் தாயார் இறந்து விட்டாள்.

தாயில்லாக் குழந்தையான மனுபாயை மோரோ பந்த் மிகவும் பிரியமாக வளர்த்து வந்தார். ஒரு நாள் ஒரு ஜோதிடர் அந்தக் குழந்தையின் ஜாதகத்தைப் பார்த்து விட்டு, "இவள் ராணியாவாள்" என்று சொன்னார். கேட்டவர்கள் எல்லோரும் 'பிராமணப் பெண் ஒருத்தி ராணியாக ஆவதாவது?' என்று சிரித்தார்களாம். ஆனால் ஜோதிடர் சொன்ன முகூர்த்தம் தானோ என்னவோ! ஏழாவது வயதில் ஜான்ஸியின் மகாராஜாவின் குமாரர் கங்காதரராவுடன் அவளுக்குக் கல்யாணம் நடந்தது. ஜான்ஸிக்கு வந்த பின்னர் மனுபாய் லக்ஷ்மி பாய் என்று அழைக்கப் பட்டாள்.

1851-ல் அவர்களுக்கு ஒரு ஆண் மகவு பிறந்தது. ஆனால் அது மூன்று மாதம் மட்டுமே உயிர் வாழ்ந்து இறைவனடி சேர்ந்தது. மகாராஜா கங்காதர ராவ் குழந்தை இறந்த துக்கத்தில் வியாதியாய்ப் படுத்தவர் அப்புறம் எழுந்திருக்கவில்லை. ஹிந்து தர்மத்தில் பற்றுள்ளவரான மகாராஜா கங்காதர ராவ் சாவதற்கு முன் தினம் தம் தாயாதிகளில் ஒருவரான வாசுதேவ கேவால்கர் என்பவரின் பிள்ளை ஆனந்த ராவை ஸ்வீகாரம் எடுத்துக் கொண்டார். ஸ்வீகாரத்துக்குப் பிறகு அந்தப் பிள்ளைக்குத் 'தாமோதர கங்காதர்' என்று பெயர் சூட்டப்பட்டது.

'பட்ட காலிலே படும் கெட்ட குடியே கெடும்' என்பது பொய்யாமொழி போலும். லக்ஷ்மி பாய்க்குப் பிள்ளை இறந்த துக்கம் மாறுவதற்குள்ளேயே, பதியும் இறந்து விட்டார். போதாக் குறைக்கு வாணிபம் வேண்டிவந்த ஆங்கிலேயர்கள், ஆட்சியையும் நடத்தத் திட்டம் போட்டு விட்டனர். மகாராஜா கங்காதர ராவின்' தலை சாய்ந்ததும், ஆங்கிலேயர்களின் பிரதிநிதியான லார்டு டெல்ஹௌஸி 'கங்காதர ராவின் ஸ்வீகாரம் சட்டப்படிச் செல்லாது' என்று சொல்லி ஜான்ஸியின் கஜானாவைப் பூட்டித் தன் சைனியத்தையும காவலுக்கு வைத்து விட்டான். அது மட்டும் அல்ல. மகாராணி லக்ஷ்மிபாய்க்கு, ஜீவனாம்சம் கொடுப்பதுபோல் மாதம் ஐயாயிரம் ரூபாய் பென்ஷன் மட்டுமே அளிக்கப்படும் என்றும் சொன்னான். மகாராணிக்கு அதில் சிறிதும் விருப்பம் இல்லை. இருந்தாலும் அவள் என்ன செய்ய முடியும்? உலக வியவகாரங்களில் ஈடுபடாமல், பூஜை புனஸ்காரங்களில் மனதைச் செலுத்தினாள்.

இம்மாதிரிச் சந்தர்ப்பத்தில்தான் சுதந்திரத்துக்கு வித்தை விதைத்த சிப்பாய்க் கலகம் மூண்டது. சுதந்திரமிழந்து அடிமை வாழ்வு வாழ்ந்து வந்த மக்களுக்குச் சுதந்திரத்தின் மதிப்புத் தெரிய வந்தது. பழைய துருப் பிடித்த கத்திகள் எல்லாம் பளபள வென்று சாணை பிடிக்கப்பட்டு எதிரிகளின் கழுத்தைச் சீவுவதில் மும்முரமாக ஈடுபட்டன. ஆங்கிலேயர்களை நாட்டை விட்டு அடியோடு துரத்தி விட வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டு இயக்கம் வலுத்தது. ஆங்கிலேயர்கள் அரசாட்சி புரிந்த இடங்கள் எல்லாம் ஒரே ரணகளமாக மாறி விட்டன.

இந்தச் சமயத்தில் ஆங்கிலேயர்கள் தற்காப்பை உத்தேசித்து ஜான்ஸியை விட்டு வெளியேறினர். ஆகவே மகாராணி லட்சுமிபாய் தானே ஆட்சிப் பொறுப்பை ஏற்று நடத்தலானாள். அவளுடைய உள்ளத்தில் ஆங்கிலேயர்களுக்குத் துரோகம் இழைக்க வேண்டும் என்ற எண்ணம் சிறிதும் ஏற்படவில்லை. ஆங்கிலேயர்களுடன் நட்புரிமைகொண்டு தன் ராஜ்யத்தை நன்கு நிர்வகிக்க வேண்டும் என்றுதான் அவள் விரும்பினாள்.

ஒரு பெண், ஆண்களைப்போல அரசாளுவதா? இது ஜான்ஸி ராஜ வம்சத்தைச் சேர்ந்த சதாசிவ ராவ் என்பவனுக்கும் ஓர்ச்சா சமஸ்தானத்தின் திவானை



* * * * * * * * * * * * * * * * *

'' ஒரு தேசத்தை மற்றொரு தேசம் அடிமைப் படுத்துவதைப் போன்ற கொடுமை உலகத்தில் வேறு எதுவும் இல்லை. பெரிய வல்லரசுகள் சிறு நாடுகளின் சுதந்தரத்தில் தலையிடுவதை நிறுத்தும்வரை உலகத்தில் க்ஷேமமோ அமைதியோ ஏற்படாது.''

— ஆப்ரகாம் லிங்கன்.

* * * * * * * * * * * * * * * * * *

நத்தேகான் என்பவனுக்கும் பிடிக்கவில்லை. ராணியின் ராஜ்யத்தைப் பிடுங்கிக் கொண்டு விடவேண்டும் என்ற பேராசை எழுந்தது. ஆகவே அவ்விருவரும் ராணியின் மேல் போர் தொடுத்தனர். ஆனால் ராணியின் வீரத்துக்கும் தீரத்துக்கும் எதிரே அவர்களால் கணம்கூட நிலைத்து நிற்க முடியவில்லை. அவமானப்பட்டுச் சீரழிந்து ஓடும்படித்தான் ஆயிற்று!

சிப்பாய்க் கலகத்தை ஒரு வியாஜமாக வைத்துக்கொண்டு அவர்கள் 'ராணிதான் இந்தக் கலகத்துக்கெல்லாம் மூல காரணம்' என்று சொல்லி ஆங்கிலேயர்களின் மனதைக் கலைத்துவிட்டனர்.

ஆகவே ஆங்கிலேயர்களின் மாபெரும் சேனை ஜான்ஸியை முற்றுகை யிட்டது. ராணி தன் சேனை வீரர்களுக்கு உற்சாகமும் ஊக்கமும் ஊட்டித் தீவிரமாகப் போரில் இறங்கினான். அந்த வீர ராணியின் தாக்குதலைத் தாளாமல் விசாலமான ஆங்கில சேனையே திக்குமுக்காடிப் பின் வாங்க ஆரம்பித்தது. ராணிக்கு வெற்றி கிட்டியது. ஆனால் அடுத்த கணமே ஜெனரல் ஸ்மித்தின் சேனை ஜான்ஸியை மறுபடியும் தாக்கிற்று.

ராணியின் பெண் சைனியம் கோபம் பொங்கி யெழுந்த பெண் புலியைப்போல ஆங்கிலேயர்களை எதிர்த்து நின்றது.

ஆனால் அடுத்தபடியாக, யுத்தத்தில் மகா நிபுணனான ஹ்யூரோஸ் தன் பெரும் சேனையுடன் ஜான்ஸிக் கோட்டைக்குள் நுழைய முயன்றான். ராணியின் சேனை பதினொரு நாட்கள்வரை வெகு தீரமாக அதை எதிர்த்து நின்றது. யுத்தக் கலையின் நுணுக்கங்களை உணர்ந்த ராணி, சந்தர்ப்பத்துக்குத் தகுந்தபடி வீரர்களைத் தட்டிக்கொடுத்தும், குஷிப் படுத்தியும், அதட்டிப் பயமுறுத்த வேண்டிய இடங்களில் பயமுறுத்தியும் வேலை வாங்கினான். அந்தப் பதினொரு நாட்கள் நடந்த அந்த யுத்தத்தில் இரண்டு தரப்புச் சைனியங்களிலும் எத்தனையோ பேர் வீர சுவர்க்கம் எய்தினர்.

ராணியின் சைனியத்தில் சிப்பாய்களின் எண்ணிக்கை குறைந்து விடவே, போர் வீரர்களுக்குச் சோர்வு தட்டியது. ராணி 'நீங்களும் ஆண்பிள்ளைகளா? ஆண்பிள்ளைகள் என்று சொல்லிக் கொண்டு வெளியே வர உங்களுக்கு வெட்கமில்லையா? நாடு பறிபோகிறது. இந்தச் சமயம் இப்படிச் சோர்ந்து உட்கார்ந்தால் என்ன அர்த்தம்? உங்களால் முடியவில்லையென்றால் புடவையைக் கட்டிக்கொண்டு வீட்டுக்குள் உட்கார்ந்திருங்கள். பெண்களாகிய நாங்கள் போரிட்டு வெற்றியுடன் திரும்பி வருகிறோம்!'' என்று இவ்வாறெல்லாம் சொல்லி அவர்களுக்கு உற்சாக மூட்டினான்.

என்ன வீர தீரத்துடன் சண்டை போட்டுத்தான் என்ன? ஆங்கிலேயர்களின் சேனை ஜான்ஸிக் கோட்டைக்குள் நுழைந்துவிட்டது.

ராணி முதலில் தற்கொலை செய்து கொண்டு விடலாம் என்று எண்ணினான். ஆனால் 'அது பாவம்' என்றெண்ணி இரவுக்கிரவே ஆங்கிலேயர்களின் சேனையை ஏமாற்றிவிட்டு மறுபடியும் போருக்கு ஆள் திரட்டும் எண்ணத்துடன் 'கால்பி'க்குப் புறப்பட்டு விட்டான். ராணி தப்பி ஓடிவிட்டான் என்ற விஷயம் தெரிந்ததும், ஆங்கிலேயர்கள் அவளைப் பிடிப்பதற்காகக் 'கால்பி'க்குச் சைனியத்தை அனுப்பினர்.

ராணி அங்குபோய்ச் சேர்ந்ததும் சோரதருமாகத் தன் வீரர்களுக்கு உற்சாக மூட்டிப் போருக்குத் தயார் செய்து விட்டான். கடும்போர் மூண்டது. ராணி குதிரைமீது ஏறி மின்னல் வேகத்தில் எதிரிகளைத் தாக்கி அலற வைத்தான். ஆங்கிலேய சேனை பின் வாங்கி ஓட ஆரம்பித்தது. மகாராணி தோற்றவர்களை விரட்டி யடிப்பதில் முனைந்தான்.

தன் மானத்தையும், நாட்டையும் காத்துக் கொள்ளுவதற்காக வீரப்போர் நிகழ்த்திய ஜான்ஸியின் மகாராணி லக்ஷ்மி பாய்க்கு அப்பொழுது என்ன வயது தெரியுமா? இருபத்துமூன்று தான். அந்தச் சின்னப் பிராயத்திலேயே, அவளை முன் நின்று எதிர்த்து எந்த வீரனும் வெற்றி கொள்ள முடியவில்லை. ஆங்கிலேயன் ஒருவன் அவளுக்குத் தெரியாமல் பின்னால் வந்து வஞ்சகமாக அவள் முதுகில் கத்தியால் குத்திவிட்டான்.

1835-ம் ஆண்டு பிறந்து, அநேக வீர தீரச் செயல்கள் செய்து 1857-ம் ஆண்டில் வீர சுவர்க்கம் எய்திய ராணி லக்ஷ்மி பாயினுடைய ஞாபகம் இந்திய மக்களுடைய இதயத்தில் என்றென்றும் நிலை பெற்று விளங்கு மென்பதில் ஐயமில்லை.





நேர் வகிடானாலும் சரி, கோணல் வகிடானாலும் சரி, வாரி எடுத்து இளம்பிறை வடிவாகக் கட்டினாலும் சரி—கூந்தலை எவ்விதமாக ஜோடித்த போதிலும், தலை நிறைந்த கூந்தலில்லாமல், இச்சிங்காரக் கட்டுகளெல்லாம் சோபிக்க மாட்டா, ஆகையால் கேசவர்த்தினியைக் கொண்டு கூந்தலையும் கூந்தலழகையும் இப்போதே பெருக்கிக் கொள்ளுங்கள். தலையை விதவிதமாய் அலங்கரித்துக் கொள்ளுங்கள்.

அழகு என்பது உடன் பிறந்ததே. ஆனால் கூந்தலழகோ சுபாவமாக அமையாவிடினும், **கேசவர்த்தினியால்** கிட்டுவதே.

கவனக் குறைவாலோ அல்லது வேறு காரணத்தாலோ இழந்த கூந்தலுக்குப் பதில் இளங் கூந்தலைப் பெறுங்கள். சிறு வயது முதல் கேசவர்த்தினியை உபயோகிப்பதால், கூந்தல் ஆரோக்யத்தையும் அழகையும் தவறாமல் ஒருங்கே அடையுங்கள்.

கேசவர்த்தினி

கூந்தலைப் பாதுகாப்பது விருத்தி செய்வது அழகு படுத்துவது

விலை அணா 14

(மேற் செலவு வேறு)

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்

தயாரிப்பவர் :

தென் இந்திய ரஸாயனசாலை

ஆர். எஸ். புரம், கோயமுத்தூர்



மதராஸ் ஏஜண்டு :

புஷ்பவனம் ஸ்டோர்ஸ்


பைகிராப்ஸ் ரோடு

திருவல்லிக்கேணி :: மதராஸ்

கோவை, நீலகிரி, ஜில்லாக்களு
க்கும் பாலக்காடுக்கு ஏஜண்டு :

B. பாலபட்டாபி

வைசியாள் தெரு, கோயமுத்தூர்



சாப்பிடுங்கள்
ஸிரோலின்
'ரோச்'
இருமலுக்கும் ஜலதோஷத்திற்கும்



அவளுடைய பொக்கிஷம்
பண்டிட் டி. கோபாலாசார்லுவின்
அருணா
கர்ப்பாசயரோக நிவாரணி
ஆயுர்வேதாஸ்ரமம் லிமிடெட், மதராஸ் 17.



Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116-119, Sladens Garden, Poonamalle High Road, Kilpauk Madras

கல்கி



KALKI ஆகஸ்டு 15, 1948 8 அணா


REGD. No. M. 4392
MKC
LION BRAND
BANIANS
SLIP-OVERS
PULL-OVERS
SWEATERS
UNDERWEARS
LADIES' BLOUSES
Madura Knitting Co. Madura. S. India